ஆளும் தமிழ்

பதிப்பாசிரியர்

முனைவர் சிலம்பு நா. செல்வராசு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies

ஆளும் தமிழ்

(இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற அறக்கட்டளைப் பொழிவுகள்)

பதிப்பாசிரியர்

முனைவர் சிலம்பு நா. செல்வராசு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சி.ஐ.டி. வளாகம், தரமணி, சென்னை - 600 113

Bibliographical Data

Title	:	**Āḷum Tamiḻ**
Author	:	**Dr. Cilampu N. SElvaraj**
Publisher	:	**International Institute of Tamil Studies,** C.I.T. Campus, Tharamani, Chennai - 600 113.
Copyright	:	All India University Tamil Teachers Association
Publication No.	:	**335**
Language	:	**Tamil**
Date of Publication	:	**1999**
Edition	:	**First**
Paper used	:	**TNPL 70 GSM Super Printing**
Size of the book	:	**1/8 Demy**
Printing types	:	**10 Points**
No.of pages	:	**X + 122 Page**
Price	:	**Rs. 28/-**
No. of Copies	:	**1200**
Wrapper Design	:	**V. Karunanithy**
Printed by	:	***The PARKAR*** 293, Ahamed Complex 2nd Floor, Royapettah High Road, Chennai 14.
Subject	:	**Articles on Tamilology**

முனைவர் ச. சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை – 600 113.

அணிந்துரை

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் தமிழியல் ஆராய்ச்சி வளர்ச்சி; ஆராய்ச்சியாளரை ஊக்கப்படுத்துதல் என்ற இரு நிலைகளில் தம் செயற்பாடுகளை வடிவமைத்துக் கொண்டிருக்கிறது. இச்செயற்பாடுகளில் ஒன்று அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நிகழ்த்துதல்; தொடர்நிகழ்வு அவற்றை நூலாக்கம் செய்தல். இப்போது இங்கு வெளியிடப்படும் '**ஆளும் தமிழ்**' இந்த விளைச்சலின் ஓர் அறுவடை.

'*ஆளும் தமிழ்*' ஆறு அறக்கட்டளைகளின் தொகுப்பு. 1997, 1998, 1999-ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த, நிகழ்த்தப் பெறுகின்ற அறக்கட்டளைகள் இவை. 1997-இல் பேராசிரியர் க. ஆறுமுகம், கவிஞர் தமிழ்நாடன், அறிஞர் இரா. கலைக்கோவன் நிகழ்த்திய சொற்பொழிவுகள்; 1998-இல் பேராசிரியர் இரா. சாரங்கபாணி நிகழ்த்திய சொற்பொழிவு; 1999-இல் பேராசிரியர் அ.அ. மணவாளன், பேராசிரியர் ஆ. சிவலிங்கனார் ஆகியோரால் நிகழ்த்தப் பெறுகின்ற சொற்பொழிவுகள் ஆகியன இடம் பெறுகின்றன.

'*இலக்கிய உயிர்*' என்ற தனது சொற்பொழிவில் க. ஆறுமுகம் இலக்கியத்தின் உயிர் எது என்று விளக்கும் நோக்கில் தம் பொழிவை அமைத்துள்ளார். இலக்கியத்தில் பொதுவாக உணர்வுகளே உயிராக அமையும் திறத்தைக் காலம் தோறும் கவிதைகள் வாயிலாகக் கவினுறக் காட்டி இறுதியில், '**இதுவரை நாம் கண்ட உணர்வுகளாகிய இலக்கிய உயிர் அனைத்திற்கும் முடிமணியாகத் திகழும் இவ்வுலக ஒருமை உணர்வே தமிழ் இலக்கியம் அனைத்திற்கும் உரிய இலக்கிய உயிர் என உணர்ந்து இன்புறுவோம்**' என்று முடிக்கும் தன்மை இலக்கியத்தின் உயிர் எது என்று அவர் கருதுவதைச் சிறப்பாக அடையாளம் காட்டுகிறது.

'*தமிழ் – தமிழர் – தமிழ்நாடு : உணர்தலும் வாழ்தலும்*' என்ற தனது சொற்பொழிவில் தமிழ்நாடன் தமிழ்நாட்டில் தமிழின் நிலை; தமிழரின் நிலை குறித்துத் தனது கவலையை வெளியிட்டு இருக்கிறார். உண்மை தெரிகிறது. ஆனால் வழி தெரியாத நிலையை அவர் விளக்குகிறார். இறுதியாக அவர் கூறுவன ஒவ்வொரு தமிழனும் விரைந்து சிந்திக்க வேண்டிய எதிர்பார்ப்புகள் ***1. தமிழ்மொழி, முதன்மைப்படுத்தப்பட வேண்டும், 2. தமிழர் வாழ்வு நலம்பட வேண்டும், 3. தமிழ்நாடு வளமான நாடாதல் வேண்டும்.***

'*அப்பரும் அவிநயமும்*' என்பது இரா. கலைக்கோவன் அவர்களது பொழிவு. இவர் முதலில் அவிநயம் என்பதனை விளக்குகிறார். நாட்டிய சாத்திரத்தில் ஆகார்ய, ஆங்கிக, வாசிக, சாத்விக என்று இது நான்கு வகைகளாகச் சுட்டப்படும் தன்மையை விளக்குகிறார். தொடர்ந்து அவிநயத்தை அப்பரின் திருமுறைகளில் வைத்து விளக்கம் செய்வது அரிய ஆய்வு.

'குறளுக்கு இயல்புரை காண்பது எப்படி?' என்பது இரா. சாரங்கபாணியின் பொழிவு. குறளின் சொற்பிரிப்பு முறை, பாட வேறுபாடு, கொண்டு கூட்டும் போக்கு. கால மரபு கருதாமை, தம் கொள்கைத் திணிப்பு, இலக்கணப் புறக்கணிப்பு, பிற இலக்கியக் கருத்தைக் குறளில் ஏற்றிக் கூற விளைதல் என்ற பல காரணங்கள் பல உரைகள் எழக் காரணம் என்று இயம்பி, பின்னர் ஒவ்வொன்றையும் விளக்கிச் செல்கின்றார். **கூடிய வரையில் குறளுக்குக் குறளைக் கொண்டே உரை காண்பதும் விளக்கம் தருதலும் நலம் பயக்கும்** என்பது இவரது எண்ணம்.

'பலர் நோக்கில் தொல்காப்பியம்' என்பது ஆ. சிவலிங்கனார் சொற்பொழிவு. தொல்காப்பியம் தமிழ் இலக்கண நூல், வாழ்வியல் நூல், பாவியல் நூல், வழு அமைப்பு நூல், தனித்தமிழ் இலக்கண நூல் என இன்றுவரையும் அறிஞர் பொருமக்கள் கருதும் கருத்துகளை எல்லாம் விளக்கி, முடிவாக, தனித்தமிழ் இலக்கண நூல் என்பதே பொருத்தமானது என்று தனது கருத்தை இயம்புகிறார்.

'தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பின் பங்களிப்பு' என்பது அ.அ. மணவாளன் அவர்களது சொற்பொழிவு. 24 நூற்றாண்டு கால வரலாற்றினை உடையதாக விளங்குகிற தமிழ் இலக்கிய வரலாற்று வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு எந்த அளவிற்கு உதவியுள்ளது என்று விளக்கும் தன்மையில் அமைகின்றது இந்தப் பொழிவு. நம் தமிழ் மொழியில் மொழி பெயர்ப்புப்பணி எப்போது தொடங்கியது என்பது தெரியவில்லையாயினும் தொல்காப்பியர் காலத்திலேயே மொழிபெயர்ப்புப் நடைபெற்றது என்று கூறி, ஆசிரியர் தொல்காப்பியத்தில் இருந்து தொடங்கிக் காலந்தோறும் மொழிபெயர்ப்பு. தமிழ் இலக்கியத்தில் நடைபெற்று வந்துள்ள திறத்தைச் சீரியதாக விளக்குகிறார். முடிவுரையாக இவர் கூறும் **'இலக்கியப் பண்பாட்டு பரிமாற்றத்திற்கு மொழிபெயர்ப்பு ஒரு சிறந்த மொழியியல் கருவி. முன்னணியில் நிற்கும் உலக நாகரிகங்கள் பல இதனைப் பயன்படுத்தி வந்துள்ளன. தமிழ் நாகரிகமும் இதன் பின்னடையாமல் வளர்ந்துள்ளது என்னும் செய்தி தமிழர்களின் இலக்கிய மரபுக்கு மெருகூட்டுவதாக அமைகிறது'** என்னும் செய்தியில் ஒவ்வொரு தமிழனும் பெருமைப்படலாம்.

இந்த அறக்கட்டளைச் சொற்பொழிவுகளைத் தொகுத்து வெளியிட அனுமதி நல்கிய அனைத்திந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத் தலைவர் முனைவர் தமிழண்ணல் அவர்களுக்கும் செயலர்/பொருளர் முனைவர் க.ப. அறவாணன் அவர்களுக்கும், இந்நூலைப் பதிப்பித்த முனைவர் சிலம்பு நா. செல்வராசு அவர்களுக்கும் நன்றி என்றும் உரித்து.

நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி - பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு. த. இரா. சீனிவாசன் இ.ஆ.ப. அவர்களுக்கும் எங்கள் நன்றி.

இந்நூலினை நல்ல முறையில் நூலாக்கம் செய்து தந்த பார்க்கர் கம்ப்யூட்டர்ஸ் நிறுவனத்தார்க்கு எங்கள் நன்றி.

இயக்குநர்

கட்டளைத் தமிழ்

க.ப. அறவாணன்

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், இருபத்தொன்பது மாநாட்டுக் கருத்தரங்குகளை நிகழ்த்தி இப்பொழுது முப்பதாவது மாநாட்டுக் கருத்தரங்கை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. முப்பது மாநாடுகளை இமாலயச் சாதனையாகத்தான் கருதவேண்டும். இந்நிகழ்வுகளுக்குப் பின்னே உள்ள அறிவுச் சக்திகளையும் உழைப்புச் சக்திகளையும் பின்னோக்கிப் பார்ப்பதின் மூலமாகப் புதிய உந்து சக்திகளை நாம் பெற முடியும். பேராசிரியர் தெ.பொ.மீ, பேராசிரியர் வ.சுப. மாணிக்கம், பேராசிரியர் தா.ஏ. ஞானமூர்த்தி, பேராசிரியர் ச. அகத்தியலிங்கம், பேராசிரியர் செ.வை. சண்முகம் முதலான அனைவர்தம் உழைப்பும் அறிவுந்தான் இம்மன்றத்தின் பெரு வளர்ச்சிக்கு உரமும் உறுதியும் ஆயின.

புதிய தலைமுறை இம்மன்றத்தின் நிர்வாகத்தை ஏற்ற பின் எட்டு மாநாட்டுக் கருத்தரங்குகள் சிறப்புடன் நிகழ்ந்தேறின; ஒன்பதாவது மாநாட்டுக் கருத்தரங்கு மிகு சிறப்புடன் நிகழ்த்தத் திட்டமிடப்பட்டு அத்திட்ட விளைச்சலின் ஒரு பகுதியாக இந்த நூல் உங்கள் முன்னே வடிவெடுத்துள்ளது.

மன்றத்தின் செயற்பாடுகள் இப்பொழுது பன்முகப்படுத்தப் பெற்றுள்ளன. பன்முகமும் தமிழியல் ஆராய்ச்சி வளர்ச்சியை நோக்கியே ஒருமுகப்படுத்தப் பெற்றுள்ளது. அறக்கட்டளைப் பொழிவுகள், அறக்கட்டளைப் போட்டிகள், நூலாசிரியப் பேராளர்க்குப் பாராட்டுகள், பரிசுகள், தமிழ் சான்ற பிறதுறை வல்லுநர்க்குப் பாராட்டுகள் முதலியன மன்றப் புதுச்செயற்பாடுகளுள் சில.

1993-இல் கோவை பாரதியார் பல்கலைக்கழகத் தமிழியல் துறை முதல் அறக்கட்டளையை மன்றத்தில் நிறுவியது. அதனைத் தொடர்ந்து சேலம் வேலூர் கந்தசாமி கண்டர் கல்லூரி அறக்கட்டளை ஒன்றை நிறுவியது. தொடர்ந்து புதுவைத் தமிழியல் அறம் அறக்கட்டளை, மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார் அறக்கட்டளை, தமிழவேள் கலைஞர் அறக்கட்டளை, தமிழவேள் ச. மெய்யப்பன் அறக்கட்டளை, காந்தி கிராமம் குருவம்மாள் அறக்கட்டளை ஆகிய அறக்கட்டளைகள் நிறுவப் பெற்றுள்ளன. முன்னிரண்டு அறக்கட்டளைகள் சார்பாக அறக்கட்டளைப் பொழிவுகளும், ஏனைய அறக்கட்டளைகள் சார்பாகக் கட்டுரைப் போட்டிகளும் நிகழ்ந்து வருகின்றன.

அறிஞர் கோவை ஞானி
பேராசிரியர் வா.செ. குழந்தைசாமி
பேராசிரியர் ச. முத்துக்குமரன்
பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியன்

அறிஞர் கொடுமுடி சண்முகன்
பேராசிரியர் க. ஆறுமுகம்
கவிஞர் தமிழ்நாடன்
அறிஞர் இரா. கலைக்கோவன்
பேராசிரியர் இரா. சாரங்கபாணி
பேராசிரியர் சிலம்பொலி சு. செல்லப்பன்
பேராசிரியர் தி.பி. சித்தலிங்கையா

ஆகியோர் இதுகாறும் மன்ற மாநாட்டுக் கருத்தரங்குகளில் அறக்கட்டளைச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளனர். மன்றத்தின் முப்பதாம் மாநாட்டுக் கருத்தரங்கில்

பேராசிரியர் ஆ. சிவலிங்கனார்
பேராசிரியர் அ.அ. மணவாளன்

ஆகியோர் அறக்கட்டளைப் பொழிவு நிகழ்த்த இசைந்துள்ளனர். அறிஞர் கோவை ஞானி அவர்களின் பொழிவு வெள்ளிவிழா ஆண்டு (1994) ஆய்வுக் கோவைத் தொகுதி ஒன்றின் முகப்பில் தமிழியக்கம் எனும் தலைப்பில் வெளியிடப்பெற்றது. பின்னர் 1996-இல் அறிவியலும் தமிழ் வளர்ச்சியும் எனும் தலைப்பில் அறக்கட்டளைப் பொழிவுகளின் முதல் தொகுதி வெளியானது. முப்பதாம் மாநாட்டுக் கருத்தரங்கில் (1999) அறக்கட்டளைப் பொழிவுகளின் இரண்டாம் தொகுதி ஆளும் தமிழ் எனும் பெயரில் வெளியாகிறது.

தலை சிறந்த அறிஞர் பெருமக்களால் நிகழ்த்தப் பெற்ற இப்பொழிவுகள் அனைத்தும் தத்தம் துறை சார்ந்த அறிவோடு அன்னோரால் தமிழ்க் கட்டளையில் உரைத்து நோக்கி மெருகேற்றப் பெற்றுள்ளன.

மொழிபெயர்ப்பு, இலக்கணம், இலக்கியம், தமிழியம், கலையியம் ஆகிய துறை சார்ந்த கட்டுரைகள் இந்நூலில் அரங்கேற்றப்பட்டுள்ளன. பொழிவுகளைச் செவிகளில் சேர்ப்பதும் அவை காற்றோடு காற்றாகக் கலப்பதும் தமிழுக்கு அணிசெய்யா; பொழிவுகளை விழிகளில் பாய்ச்சுவது நெஞ்சில் நிற்கவும் நினைவை நீட்டவும் செய்யும். நல்லன செய்தோரையும் ஏற்பன எழுதியோரையும் நன்றி கூர்தலுக்குப் பொருந்திய வழியாக அது அமையும்.

இதுகாறும் கட்டளைப் பொழிவுகளை நிகழ்த்திய அறிஞர் வல்லார்க்கும் கட்டளைகளைக் கட்டமைத்த கடமை வள்ளார்க்கும் மன்றம் கை குவித்து நன்றி சொல்கிறது. அறக்கொடைப் பொழிவுகளை நூலாக்கத் திட்டமிட்டு நூல் வெளியீட்டைச் செய்துள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் இராமர் இளங்கோ அவர்கள் மன்ற வரலாற்றில் நின்றவராகிறார்.

“பெருமை முயற்சி தரும்” (வள்ளுவம் 611)

அன்பன்
க.ப. அறவாணன்

உள்ளே ...

1999

அ.அ. மணவாளன்

தமிழிலக்கிய வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பின் பங்களிப்பு

ஆ. சிவலிங்கனார்

பலர் நோக்கில் தொல்காப்பியம்

1998

இரா. சாரங்கபாணி

குறளுக்கு இயல்புரை காண்பது எப்படி?

1997

க. ஆறுமுகம்

இலக்கிய உயிர்

தமிழ் நாடன்

தமிழ்-தமிழர்-தமிழ்நாடு : உணர்தலும் வாழ்தலும்

இரா. கலைக்கோவன்

அப்பரும் அவிநயமும்

பொழிவாளர்

பேராசிரியர் அ.அ. மணவாளன்
எம் 3/6, இரண்டாம் அவென்யூ
இந்திரா நகர்,
சென்னை - 600 020.

பேராசிரியர் ஆ. சிவலிங்கனார்
30, முருகன் கோயில் சன்னதித் தெரு,
கதிர்காமம்,
புதுச்சேரி - 605 009.

பேராசிரியர் இரா. சாரங்கபாணி
330, குறளில்லம்,
மாரியப்பா நகர்,.
அண்ணாமலை நகர் - 608 002.

பேராசிரியர் க. ஆறுமுகம்
இந்திய மொழித்துறை மேனாள் தலைவர்
தில்லிப் பல்கலைக்கழகம்
புதுதில்லி

கவிஞர் தமிழ் நாடன்
192, மேட்டுத் தெரு,
தாதகர்பட்டி,
சேலம் - 636 006.

மருத்துவர் இரா. கலைக்கோவன்
மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்,
48, புத்தூர் நெடுஞ்சாலை,
திருச்சிராப்பள்ளி - 620 017.

தமிழிலக்கிய வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பின் பங்களிப்பு*

அ.அ. மணவாளன்

தொல்காப்பியத்தை உள்ளடக்கிய தமிழிலக்கிய மரபு ஏறக்குறைய 24 நூற்றாண்டுக் கால வரலாற்றினை உடையதாக விளங்குகிறது. இலக்கிய மரபு எனக் கூறினும் இலக்கண மரபும் இதனுள் அடங்கும். இந்த நீண்ட நெடிய வளமான தமிழிலக்கிய வரலாற்று வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு எந்த அளவிற்கு உதவியுள்ளது என்பதை ஆராய்வதாக இந்த அறக்கட்டளைச் சொற்பொழிவு அமைக்கப் பட்டுள்ளது. அதாவது மானுட வாழ்வியல் கருத்துகள், இலக்கிய வகைமை, பாடுபொருள், உத்தி, இலக்கண அமைப்பு ஆகியவற்றைப் பற்றிய படைப்புகள் தமிழில் இயற்றப்படும் பொழுது எந்த அளவிற்கு வேற்றுப் பண்பாட்டு அல்லது வேற்றுமொழிக் கருத்துகள், பாடுபொருள் போன்றன உதவியுள்ளன என்பதை ஆராய முற்படுகிறது. தமிழ் மொழியின் சொற்களஞ்சியம், நடை, தொடரமைப்பு போன்ற மொழியியல் கூறுகளுக்கு மொழிபெயர்ப்பின் பங்களிப்பு எவ்வளவினது என்பதும் இவ்ஆய்வுக்கு உட்பட்டதுதான். எனினும் இந்த அறக்கட்டளைச் சொற்பொழிவில் அது மேற்கொள்ளப் பெறவில்லை.

ஒரு மொழியில் கூறப்பட்ட பொருளை மற்றொரு மொழியில் பெயர்த்துக் கூறும் மொழியியல் செய்கை மொழிபெயர்ப்பு என்று அழைக்கப்படுகிறது. வாய்மொழியாகக் கூறப்படும் செய்தியை மொழி மாற்றியமைப்பதை வாய்மொழி மொழிபெயர்ப்பு என்று கூறுவர். கருத்துப் பரிமாற்ற வரலாற்றில் முதலில் தொழிற்படுவது வாய்மொழி மொழிபெயர்ப்புதான். வணிகர், படை வீரர், அறிஞர், தூதர், பாணர் போன்ற மொழிபெயர்தேயப் பணிகளில் ஈடுபடுவோர்தாம் மொழிபெயர்ப்பின் தொடக்கநிலைப் பணியாளர்கள் எனலாம். ஒரு நாட்டிலிருந்து வேறொரு நாட்டிற்கு வாய்மொழியாகக் கருத்துப் பரிமாற்றம் நடைபெறுவது இவர்களால்தான். இத்தகையோரின் வழியாகப் பரிமாறப்பட்ட செய்திகள் வேற்றுமொழிப் பண்பாட்டிற்குத் தேவைப்படுமானால் அவை அம்மொழியில் முதலில் வாய்மொழிச் செய்தியாகவும், பின்னர் அவற்றின் வரிவடிவ மூலங்களை எழுத்துச் செய்தியாகவும் பெயர்த்துப் பயன்படுத்தப்பெறும். இவ்வாறு பண்பாட்டுப் பரிமாற்றம் முதலில் வாய்மொழி பெயர்ப்பாகவும், பின்னர் எழுத்துப் பெயர்ப்பாகவும் நடைபெறுவதை வரலாறு நமக்குக் காட்டுகிறது.

---

* கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை அறக்கட்டளைப் பொழிவு, * உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், * 1999 மேத்திங்கள்

இத்தகைய பண்பாட்டுப் பரிமாற்றத்திற்கு உட்படாத மொழியோ, நாகரிகமோ உலகில் எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

தொல்காப்பியம்

நம் தமிழ் மொழியில் முதன் முதலாக மொழிபெயர்ப்புப் பணி எப்பொழுது தொடங்கியது என்று நம்மால் அறிய இயலவில்லை. நமக்குக் கிடைத்துள்ள நூல்களுள் மிகவும் தொன்மையானது தொல்காப்பியம். நூல் முதல், வழி என இருவகைத்து; அவற்றுள் வழிநூல் நால்வகையாக இயற்றப்படும் என்னும் தொல்காப்பியர் கருத்தைத்

> தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழிபெயர்த்து
> அதற்பட யாத்தலொடு அனைமர பினவே (98)

என வரும் மரபியல் நூற்பாவால் அறிகிறோம். முதனூலைத் தொகுத்துரைத்தல், விரித்துரைத்தல், முதனூலுள் சிலவற்றைத் தொகுத்தும் சிலவற்றை விரித்தும் உரைத்தல், பிறமொழிப் பனுவலைத் தமிழ் மொழிக்கேற்ப மொழிபெயர்த்து உரைத்தல் என்னும் நால்வகையாக வழிநூல்கள் இயற்றப்படும் மரபின என்பது இந்நூற்பாவின் கருத்து. இளம்பூரணர் முதலாக உரையாசிரியர்கள் பலரும் நான்காவது வழிநூல் வகையினை மேற்கண்டவாறு பிறமொழிப் பனுவலைத் தமிழில் மொழிபெயர்த்தல் என்றே விளக்கியுள்ளனர். இக்காலக் காண்டிகை உரைகாரரான பாலசுந்தரனார் மட்டும்,

> தமிழக எல்லைக்கப்பால் வாழ்நரும் செந்தமிழ்ப் பனுவலின்
> திறனறிந்து பயன்கொள்ள முதனூலை அவர்தம் மொழியிற்
> பெயர்த்து நெறி விளங்க யாத்துச் செய்தல்

என்று பொருள் கொள்கிறார். தொகுத்தல் முதலான மூன்றும் முதனூலை நோக்கி நின்றமை போலவே மொழிபெயர்த்து யாத்தலும் அதனையே நோக்கி நிற்பதாகக் கொண்டு இப்பொருள் கூறப்பட்டுள்ளது. தொல்காப்பியர் கருத்து இவ் இரண்டனுள் எதுவாயினும், மொழிபெயர்ப்புப் பணி தமிழ் இலக்கிய உலகில் அவர் காலத்தேயே நடவா நின்றது என்பது உறுதிப்படுகிறது. மேலும், "அவ்வாற்றான் தமிழ் நூல்கள் பல சமஸ்கிருதத்திலும் சமஸ்கிருத நூல்கள் பல தமிழிலும் ஆசிரியர் காலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தமை விளங்கும்" என்னும் பாலசுந்தரனாரின் கூற்று இக்கருத்தை வலுப்படுத்தலின், இவ் இரண்டில் எது சரியான உரை என்னும் ஆராய்ச்சி இங்குத் தேவைப்படவில்லை.

இலக்கியம் கண்டதற்கு எழுந்த இலக்கணமாதலின் தொல்காப்பியர் காலத்தோ, அதற்கு முன்னரோ, மொழிபெயர்ப்பு நூல்கள் தமிழில் இருந்திருக்க வேண்டும். அவை எவை என்று நம்மால் இப்போது அறிய இயலவில்லை. அவை வழக்கு வீழ்ந்திருக்கலாம்.

அதனால்தான் போலும் இளம்பூரணர் முதலானோரும் இதற்கு எடுத்துக் காட்டுகள் தரவில்லை. புத்துரை கண்ட பாலசுந்தரனாரும் எடுத்துக்காட்டுகள் தரவில்லை.

மேலும் சொல்லதிகாரத்துள் தமிழ்ச் செய்யுட்குரிய நால்வகைச் சொற்களுள் ஒன்றாக வடமொழிச் சொற்களையும் கூறியிருப்பதை நோக்குமிடத்து அவர்காலத்திற்கு முன்னரேயே வடமொழித் தொடர்பு இலக்கியப்படும் அளவிற்கு இருந்துள்ளது எனத் தெரியலாம். ஆனந்தம், தாரம், தேவர், சூத்திரம், வைசிகன் போன்ற சொற்களைத் தொல்காப்பியரே தம் நூலுள் எடுத்தாண்டிருப்பது இதனை அரண் செய்யக் காண்கிறோம். இனித் தமிழ் அகப்பொருள் மரபில் நிகழும் களவு மணம் பற்றிக் கூறுமிடத்து மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள் என்று வடவாரிய மணமுறைகளைக் குறிப்பிடுவதால் அக்காலத் தமிழ்ச் சமுதாயத்தில் வடமொழி நூல்கள் நன்கு அறிமுகமாகி இருந்தன என்னும் உண்மையும் புலனாகிறது. மேலும் எழுத்துக்களின் பிறப்பும், மாத்திரையும் கூறுமிடத்து,

அகத் தெழு வளியிசை அரில்தப நாடி
அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே.
அஃதிவண் நுவலாது எழுந்து புறத்திசைக்கும்
மெய்தெரி வளியிசை அளவுநுவன் றிசினே (102-103)

என வடமொழி இலக்கணம் கூறுவதற்கும் தாம் கூறுவதற்கும் உள்ள வேறுபாட்டினைப் புலப்படுத்துகிறார். ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என்னும் பாயிரத் தொடரும் இங்குச் சிந்திக்கத்தக்கது. "இவ் ஐந்திர நூலைத் தமிழகத்துத் தமிழ்ச் சான்றோர் பலரே வடமொழியில் இயற்றியிருத்தல் வேண்டும்" எனவரும் பாலசுந்தரனாரின் கூற்று ஐந்திரம் இந்திரன் என்னும் வடமொழியாளனால் இயற்றப்பட்டதன்று என்னும் கருத்தை முன் வைக்கிறது. தமிழறிஞர்கள் வடமொழியில் இந்நூலை இயற்றினர்; தொல்காப்பியர் இதனை முற்றும் கற்றுத் தெளிந்தவர் என்னும் செய்தியால் (பாலசுந்தரனார் - எழுத்து 60-64) தொல்காப்பியர் காலத் தமிழ்ச் சமுதாயத்தில், வடமொழி நூல்கள் மூலமாகவோ மொழிபெயர்ப்பாகவோ வழக்கில் இருந்தன என்பது பெறப்படுகிறது.

எனவே மொழிபெயர்ப்பு என்னும் வழிநூல் வகையைக் கூறிய தொல்காப்பியர் காலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள் இன்ன எனத் தெரியாவிடினும், வடமொழிச் சொற்களின் இலக்கியப் பயன்பாட்டையும் வடமொழி இலக்கணங்களிற் கூறப்படும் கருத்துகளையும் தொல்காப்பியரே எடுத்துக் கூறுகின்ற காரணத்தால் அவர் காலத்திற்கு முன்னரே மொழிபெயர்ப்பு இலக்கியம் தமிழகத்தே வழங்கி வந்தது என்பதும், அவ்வாறு மொழிபெயர்க்கப்பட்ட

மொழிகளுள் வடமொழி பேரிடம் பெற்றிருந்தது என்பதும் தெற்றென விளங்குகின்றன. வடமொழி எனப் பொதுப்படக் கூறியிருப்பினும் அக்கால நிலையில் பிராகிருதம், பாலி என்னும் வடபுல மொழிகளும் அதனுள் அடங்கும் என்பதும் இங்கு நினைக்கத்தக்கது.

மொழிபெயர்ப்பின் தொழிற்பாடும் பங்களிப்பும் இல்லாத மொழியோ, நாகரிகமோ உலகில் இல்லையெனினும், கி.மு. நான்கு அல்லது மூன்றாம் நூற்றாண்டளவில் மொழிபெயர்ப்பினை ஓர் இலக்கிய வகையாக எடுத்துக் கூறி, மொழிபெயர்ப்பு முறைகள் சிலவற்றையும் இலக்கணமாக வரையறுத்துக் கூறிய ஓர் இலக்கணியாகத் தொல்காப்பியரைத் தவிர வேறு எவரையும் உலக அளவில் காண இயலவில்லை. தமிழ்க் கவிதையியலின் பரந்துபட்ட தொலைநோக்குப் பார்வைக்கு இதனையும் ஒரு சான்றாகக் காட்டலாம்.

மொழிபெயர்ப்பு வகைகள்

மொழிபெயர்க்கப்படும் பொருண்மையையும் நோக்கத்தையும் கொண்டு பயன்பாட்டு மொழிபெயர்ப்பு, இலக்கிய அல்லது முருகியல் மொழிபெயர்ப்பு, இனப்பண்பாட்டு மொழிபெயர்ப்பு, மொழியியல் மொழிபெயர்ப்பு என மொழிபெயர்ப்பை நான்கு வகையாகப் பகுக்கலாம் (பிரிசிலின் 1976:3). இவற்றுள் பயன்பாட்டு மொழிபெயர்ப்பாவது ஒரு சமுதாயத்தின் அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படும் பொருள் நூல்கள், செய்திகள் போன்றனவற்றை மொழி பெயர்த்தலைக் குறிக்கும். வரலாறு, புவியியல், பொருளாதாரம், அரசியல், சட்டம், நிர்வாகம், வாணிபம், போக்குவரத்து போன்ற துறைநூல்களும், அறிவியல் துறைகளைச் சார்ந்த நூல்களும் இதில் அடங்கும். உலகில் இடையறாது நடைபெறும் மொழிபெயர்ப்புகளுள் சற்றொப்ப 85 விழுக்காடு இவ்வகையைச் சார்ந்தனவாகும். இலக்கிய மொழிபெயர்ப்பாவது கவிதை, காப்பியம், நாடகம், நாவல், சிறுகதை, கட்டுரை, நாட்டுப்புறப் பாடல்கள் போன்ற இலக்கியப் பாங்குடையனவற்றை மொழிபெயர்ப்பதாகும். ஏறக்குறைய 10 விழுக்காட்டு மொழிபெயர்ப்புகள் இவ்வகையைச் சார்ந்தன.

மூலமொழியில் காணப்படும் இன, பண்பாட்டு மற்றும் மொழிமரபுகளை மாற்றாமல் பெறு மொழியில் பெயர்த்து எழுதும் ஒருவகைச் சிறப்புமுறை இனப்பண்பாட்டு மொழிபெயர்ப்பு என்று கூறப்படுகிறது. ஏறக்குறைய நான்கு விழுக்காட்டு மொழிபெயர்ப்புகள் இவ்வகையைச் சார்ந்தனவாகும். இருமொழிகளுக்கு இடையே காணப்படும் தொடரியல் ஒற்றுமை வேற்றுமைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட தொடரியல் வாய்பாடுகளைக் கொண்டு செய்யப்படும் மொழிபெயர்ப்பு மொழியியல் மொழிபெயர்ப்பு என்று கூறப்படும். எந்திர மொழிபெயர்ப்புகள் இந்த வகையைச் சார்ந்தன. சுமார் ஒரு விழுக்காட்டுக்கும் குறைவாக இத்தகைய மொழி பெயர்ப்புகள் செய்யப்படுகின்றன.

இந்த நான்கு வகைகளுள் முதல் மூன்று வகையான மொழிபெயர்ப்புகள் தமிழில் காலந்தோறும் எழுந்துள்ளன. நான்காவது வகையான மொழியியல் மொழிபெயர்ப்பு தமிழில் இன்னும் சோதனை அளவிலேயே உள்ளது.

பயன்பாட்டு மொழிபெயர்ப்பைப் பொறுத்தவரையில் சங்ககாலம் முதற்கொண்டே தமிழில் செய்யப்பட்டு வந்துள்ளது எனக் கூறலாம். பொன்மலி பாடலி என்று பண்டைய வடநாட்டுப் பாடலிபுத்திர நகரத்தைப் பற்றியும், வளங்கெழு நந்தர் என நந்தர்களின் செல்வச் சிறப்பையும், மனுநீதி நூலின் செய்திகள் பற்றியும், சாணக்கியரின் பொருள் நூல் பற்றியும், வேள்விகள் இயற்றும் முறைகள் பற்றியும், காணக் கிடக்கும் சங்க இலக்கியக் குறிப்புகளால் அக்காலத்தில் இவை பற்றிய குறிப்புகளும், நூல்களும் தமிழில் இருந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. சங்ககாலத்தை அடுத்து வரும் பல்லவர், சோழர், நாயக்கர், மொகலாயர் காலங்களில் அரசியல், சமயம், தத்துவம், சிற்பம், ஓவியம், கட்டடம், விலங்கியல், மருத்துவம், சோதிடம், வானியல், கனவு, போர் முறைகள் போன்ற பல்வேறு துறைகளைப் பற்றிய நூல்கள் மூலமாகவும், மொழிபெயர்ப்பாகவும் தமிழில் தோன்றியிருக்க வேண்டும் எனவும் கருத இடமுண்டு. இவற்றுள் பல இன்று வழக்கில் இல்லை. சமயம், தத்துவம், மருத்துவம், சோதிடம், கனவு, கட்டடம் போன்ற துறை சார்ந்த மொழிபெயர்ப்புகள் இன்றும் வழக்கில் இருக்கக் காணலாம். இவற்றுள் சில தமிழறிஞர்களாலேயே முதலில் வடமொழியிற் செய்யப் பெற்றுப் பின்னர்த் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டும் இருக்கலாம். சிற்பக்கலை, கட்டடக்கலை, இசை, சோதிடம், கோள்நிலை, குதிரைநூல் போன்ற விலங்கியல் நூல்களை இதற்குரிய சான்றுகளாகக் காட்டலாம்.

ஐரோப்பியர்கள் வருகைக்குப் பிறகு பயன்பாட்டு மொழி பெயர்ப்பு நூல்கள் ஏராளமாக எழத் தொடங்கின. அச்சுக் கலையும் ஐரோப்பியக் கல்வியும் இவ்வளர்ச்சிக்குப் பெரிதும் துணைநின்றன. இந்திய விடுதலைக்குப் பின்னர் கற்றோர் தொகை மிகுதியானமையாலும், பன்னாட்டுத் தொடர்புகள் மிகுந்து வருவதனாலும், மொழிக் கோட்பாட்டினாலும், பயன்பாட்டு மொழிபெயர்ப்புகள் ஆயிரக்கணக்கில் தமிழில் தோன்றிப் பயன்பட்டு வருவதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

இந்த நூற்றாண்டில் 1980 ஆம் ஆண்டு வரை மட்டும் சுமார் 1800 பயன்பாட்டு மொழிபெயர்ப்பு நூல்கள் தமிழில் தோன்றியுள்ளன. இவை தவிரத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் சார்பில் 1200க்கும் மேற்பட்ட நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டுப் பாடநூல்களாகக் கல்வி நிறுவனங்களில் பயிலப்பட்டு வருகின்றன. வானொலியும் தொலைக்காட்சியும், ஒவ்வொரு தமிழ்ச் செய்தித்தாள் நிறுவனமும் பருவ இதழ் நிறுவனங்களும் இத்தகைய பயன்பாட்டு மொழிபெயர்ப்பை நாளும் செய்து வருகின்றன. இவற்றால் தமிழ் மொழிக்கு நூற்றுக்கணக்கான புதிய சொல்லாக்கங்களும், சொல் வழக்குகளும்

வந்த வண்ணம் உள்ளன. இவ்வாறு பயன்பாட்டு மொழிபெயர்ப்பு வகை பண்டு தொட்டே தமிழுக்குப் பெரிதும் வளம் சேர்த்துள்ளது என்று கூறலாம்.

இனப் பண்பாட்டு மொழிபெயர்ப்பு என்னும் வகை ஐரோப்பிய வருகைக்கு முன்னர்த் தமிழில் தோன்றியதற்கான சான்றுகள் காணப்படவில்லை. அதன் பின்னரும் மிகுதியாக எழவில்லை. இத்தகைய மொழிபெயர்ப்பின் நோக்கம் வெறும் செய்திப் பரிமாற்றம் மட்டும் இல்லை. மூலமொழிப் பண்பாட்டைப் பெறுமொழி மக்களிடையே பரப்புதல் என்னும் நோக்கம் இதில் மிகுதியாகக் காணப்படுகிறது. எனவேதான், மூலமொழிப் பண்பாடு சிதையாமல் இம்மொழிபெயர்ப்பு செய்யப்படுகிறது. இதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாக விவிலிய மொழிபெயர்ப்பைக் கூறலாம். (18ஆம் நூற்றாண்டு முதலே பைபிள் மொழிபெயர்ப்புகள் தமிழில் வந்த வண்ணம் உள்ளன) அண்மையில் வெளிவந்த கலீல் கிப்ரானின் கவிதை மொழிபெயர்ப்புகளும் இத்தகைய இனப் பண்பாட்டு மொழிபெயர்ப்பாக அமைந்துள்ளதைக் காணலாம். பண்பாட்டுப் பரப்பலை நோக்கமாக உடையதாயினும், அனைத்துலகப் பண்பாட்டு ஆராய்ச்சிக்கு இத்தகைய மொழிபெயர்ப்புகள் பெரிதும் உதவி செய்யும் என்பதில் ஐயமில்லை.

இலக்கிய மொழிபெயர்ப்பு: சங்க இலக்கியம்

மேலே குறிப்பிட்டவாறு, தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே இலக்கிய மொழிபெயர்ப்பு தமிழிலக்கிய வளர்ச்சிக்கு உதவியுள்ளது. எனினும் அக்காலத்தே தோன்றிய மொழிபெயர்ப்பு நூல்களை அறியும் வாய்ப்பு இல்லை என்பதும் மேலே கூறப்பட்டது. சங்க இலக்கியம் என அறியப்படும் எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, ஆகிய இருதொகை நூல்களில் காணப்படும் பெயர்கள், வருணனைகள், உவமைகள் ஆகியவற்றை நோக்குமிடத்து அக்காலத்தில் பிறமொழி நூல்கள் தமிழர்க்கு நன்கு அறிமுகமாகி இருந்தன என்னும் உண்மை புலனாகிறது. மொழிபெயர்ப்பு வழியாகப் புலவர்க்கும் பிறர்க்கும் இவை அறிமுகமாயின என்பது வெளிப்படை சில சான்றுகள். (இவற்றின் முழு விவரங்கள் பின்னிணைப்பு ஒன்றில் தரப்பட்டுள்ளன)

புலவர் பெயர்கள்

இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் (மலைபடு), இளம்போதியார் (நற். 72), உருத்திரன் (குறுந். 274), உலோச்சனார், கேசவனார் (பரி. 14), கோதமனார் (புறம். 366), கோவர்த்தனார் (குறுந். 66, 194), செல்லூர்க் கோசிகன் கண்ணனார் (அகம். 66), தாமோதரன் (குறுந். 92) போன்றன.

பாடலில் இடம்பெற்றோர் பெயர்கள்

அக்குரன் (பதிற். 14), அகலிகை (பரி. 19), நந்தர் (அகம். 265), நந்தன் (அகம். 251), மோரியர் (அகம். 69, 251, 281), யவனர் (அகம். 149, நெடுநல். 101), வடவர் (அகம். 340) போன்றன.

பிறமொழிப் பண்பாட்டுக்குரிய பெயர்கள் தமிழ்மக்களின் பெயர்களாக அமைந்திருப்பது தமிழ்ச் சமுதாயத்தில் பரவி அவை பெற்றிருந்த செல்வாக்கினை உணர்த்துகிறது. பாடலில் இடம் பெற்றுள்ள பிறமொழிப் பெயர்கள் அவர்களைப் பற்றித் தமிழ்மக்கள் நன்கு அறிந்திருந்தனர் என்பதைக் காட்டுகின்றன.

பிறமொழி நூல்கள்

பாட்டும் தொகையுமாகிய சங்க இலக்கியங்களில் மேற்சுட்டிய மக்கட் பெயர்களேயன்றி, வடமொழி இலக்கியங்களிற் காணப்பெறும் நிகழ்ச்சிகளும் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக இராமாயண நிகழ்ச்சிகள் பரிபாடல், அகநானூறு மற்றும் புறநானூற்றுப் பாடல்களிலும், பாரதக் கதை நிகழ்ச்சிகள் புறநானூறு, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கலித்தொகை ஆகிய சங்கப் பாடல்களிலும் திருமாலோடு தொடர்புடைய பாகவதக் கதை நிகழ்ச்சிகள் அகநானூறு, புறநானூறு, நற்றிணை, திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, கலித்தொகை, பரிபாடல் ஆகியவற்றிலும் வருணணைனைகளாகவும், உவமைகளாகவும் இடம் பெற்றுள்ளன. மேலும் வடபுலக் கதைகளோடு சிவபெருமானைத் தொடர்புறுத்திக் கூறும் நிகழ்ச்சிகளும் அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, முருகாற்றுப்படை, மதுரைக் காஞ்சி ஆகிய நூல்களில் கூறப்படுகின்றன.

இரண்டு செய்திகள் இதன் தொடர்பில் நாம் கவனிக்கத்தக்கன. ஒன்று, இராமாயண, பாரத, பாகவதக் கதைகள் சங்க இலக்கியங்களில் பாடுபொருள்களாகக் கையாளப் பெறவில்லை; மாறாக உவமைகளாக வருணிக்கப்படுகின்றன என்பது. உவமைகளாக இவை இடம் பெறுவதால் தமிழ்ப்பண்பாட்டில், தமிழ்ச் சமுதாய மக்களின் வாழ்க்கை முறையில் இவை ஏற்கனவே அறிமுகமானவை, தன்மயப்படுத்தப் பெற்றவை என்பது விளங்கும். இத்தகைய அறிமுகம் தத்தம் தாய்மொழி வழியாக நடைபெறுதலே வழக்கு. இரண்டாவது, மேற்கூறிய வடபுல இலக்கியங்களிற் காணப்பெறாத, தொன்மக் கதைகள் சிலவும், குறிப்பாகச் சிவபெருமானைக் குறித்தவை, சங்க இலக்கியங்களிற் காணப்படுகின்றன. எனவே மேற்சுட்டிய வடமொழிப் பெருநூல்களும், சில தொன்மங்களும் மொழிபெயர்ப்பு வடிவத்தில் சங்க காலத்தில் வழங்கி வந்திருக்க வேண்டும் என்பது பெறப்படுகிறது. இவற்றுள் சில எழுத்துப் பெயர்ப்பாக இல்லாமல், வாய்மொழிப் பெயர்ப்பாக இலக்கியப்

பாணர்களால் அறிஞர்களிடையேயும் மக்களிடையேயும் அறிமுகப்படுத்தப்பட்டும் இருக்கலாம்.

சங்க இலக்கியங்களுட் காணப்பெறும் சில இதிகாச, புராணக் கூறுகள் இன்றுள்ள வடமொழி மூலங்களிற் காணப்பெறவில்லை. குறிப்பாக இராமாயண நிகழ்ச்சிகள் சிலவும், கண்ணன், பலராமன் பற்றிய பாகவதக் கதைகள் சிலவும் முறையே வான்மிகத்திலும் சுக பாகவதத்திலும் காணப் பெறவில்லை. எனவே வடமொழி தவிர்ந்த பிராகிருதம், பாலி ஆகிய பிறமொழி நூல்களும் மொழிபெயர்ப்பாக அன்றைய தமிழகத்தில் வழங்கியிருக்கக் கூடும் எனக் கருதத் தோன்றுகிறது. வடமொழி பாகவதத்தை விடச் (கி.பி. ஆறாம் நூற்றாண்டு) சங்க இலக்கியப் பாடல்கள் காலத்தால் முந்தியன என்பதும், வான்மிகத்தை விடப் பௌத்த இராமாயணங்கள் காலத்தால் முந்தியன என்பதும் பாலியும் பிராகிருதமும் கி.மு.விலேயே தமிழர்க்கு அறிமுகமான மொழிகள் என்பதும் இங்கு நினைவில் கொள்ளத்தக்கன.

இனி, வைதிகச் சமயங்கட்கு மாறான பௌத்தமும் சமணமும் மிகுதியாகவும் வலிமையுடனும் தமிழகத்தே இருந்தமையை அகநானூறு (123) (166), புறநானூறு, மதுரைக்காஞ்சி (461-467); (475-488), பட்டினப்பாலை (52-55) ஆகிய நூல்கள் குறிப்பிடுகின்றன. இப்புறச் சமயத்தோர் வடவர்களாக இருந்தனர் என்பது கருத்தன்று. பாலியும், பிராகிருதமும் இவர்களால் பயன்படுத்தப்பெற்றன என்பதே இங்குக் கருத வேண்டியது.

கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக்
கல்லா இளைஞர் கவளம் கைப்ப (முல்லை. 35-36),

எனவும்,

நெடுஞ்சுழிப்பட்ட கடுங்கண் வேழத்து
உரவுச்சினம் தணித்துப் பெருவெளிற் பிணிமார்
விரவுமொழி பயிற்றும் பாகர் ஓதை (மலைபடு. 325-327)

எனவும் கூறப்படுவதை நோக்க அக்காலத்தே தம் தொழிலுக்காக வடமொழியும் பிறவும் பயின்றவர்கள் இருந்தனர் என்பது தெளிவாகிறது. மூவேந்தரும் பிறமொழி நாடுகளைக் கைப்பற்றி ஆண்டனர் என்பதை,

வில் அலைத்து உண்ணும் வல்லாண் வாழ்க்கைத்
தமிழ்கெழு மூவர் காக்கும்
மொழிபெயர் தேஎத்த பல்மலை இறந்தே

என வரும் அகநானூற்றுப் பாடற் பகுதி (31) விளக்குகிறது. எனவே தமிழ் மன்னர் படையில் பல்மொழி பேசும் மக்களும் இருந்தனர் என்பதைப்

பல்நூறு அடுக்கிய வேறுபடு பைஞ்ஞிலம்
இடம்கெட ஈண்டிய வியன்கண் பாசறை

என்னும் புறப்பாடற் பகுதியாலும் (62), இவர்களைப் பதினெண் பாடைமக்களாகிய படைத் தொகுதி என்று பழைய உரைகாரர் குறிப்பிடுவதாலும் அறியலாம். அரசரும் படைவீரர்களும், பல்வேறு தொழில் செய்மொழியாளரோடு கலந்து வாழ்ந்தனர் என்பதை,

மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம் பெயர் மாக்கள் கலந்தினிது உறையும்
முட்டாச் சிறப்பின் பட்டினம்

எனவரும் பட்டினப்பாலைப் (216-218) பகுதியால் அறிகிறோம். இவையெல்லாம் சங்ககாலத் தமிழகத்தில் பிறமொழி பயின்ற தமிழர்களும், பிறமொழி பேசும் அயல்நாட்டாரும் அரசு, படை, அறிவுப்புலம், தொழில், உறையுள் எனப் பல்வேறு நிலைகளிலும் இனிது கலந்து வாழ்ந்து வந்தனர் என்னும் செய்தியைத் தெளிவிக்கின்றன.

சங்கம் மருவிய காலம்

கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தை இலக்கியத் தொடர்ச்சியின் அடிப்படையில் சங்கம் மருவிய காலம் என்பர். இந்தக் கால கட்டத்தில் தோன்றிய நூல்களாகத் திருக்குறள், சிலப்பதிகாரம் மணிமேகலை, பிற பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், சூடாமணி, பெருங்காப்பியம் ஆகியவை எண்ணப்படுகின்றன.

மதுராபுரிச் சங்கம் வைத்தும், மாபாரதம் தமிழ்ப்படுத்தும் என்று கூறும் சின்னமனூர்ச் செப்பேட்டால் மதுரையில் இருந்த சங்கத்தில் (கடைச் சங்கத்தினின்றும் வேறானது) மகாபாரதம் மொழிபெயர்க்கப் பட்டது என்னும் செய்தி புலனாகிறது. யாரால் இந்த மொழியாக்கம் செய்யப்பட்டது என்னும் விவரம் தெரியவில்லையேனும் இக்கால கட்டத்தில் இலக்கிய மொழிபெயர்ப்புப் பணி மதுரையில் நடந்தது என்பதை இந்த வரலாற்றுக் குறிப்பு உறுதிப்படுத்துகிறது. பாரதம் பாடிய பெருந்தேவனார் என்று சங்கத் தொகுப்புகளிற் காணப்படும் பெருந்தேவனாராக இம்மொழி பெயர்ப்பாளர் இருக்கலாம் என்று யூகிக்க இடமுண்டு. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய மொழி பெயர்ப்பான பாரத வெண்பாவைப் பாடிய பெருந்தேவனார் இவரின் வேறானவர் என்று வரலாற்றாசிரியர்கள் முன்னரே குறிப்பிட்டுள்ளனர். (எஸ். கிருஷ்ணசுவாமி ஐயங்கார், முன்னுரை, பெருந்தேவனார் பாரதம் பாரதவெண்பா, ப.ஆ, அ. கோபாலையன், சென்னை, 1925). இராமாயண வெண்பா, இராம சரிதை, இராமாயண அகவல் என்னும் மொழிபெயர்ப்பு நூல்களும் இக்கால கட்டத்தையடுத்து இயற்றப்பட்டதாக உரையாசிரியர் குறிப்புகளால் அறிகிறோம்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் காலத்தால் முந்தியது திருக்குறள். இரட்டைக் காப்பியங்களுக்கும் முந்தியதாக இதனைக் கருதலாம். சங்ககால வாழ்வியற் பார்வை பற்பல மாற்றங்களைப் பெற்று நின்ற சூழலில் திருக்குறள் தோன்றியதாகக் கருதலாம். சில கோணங்களில் பார்க்குமிடத்துச் சங்ககால வாழ்வியற் கோட்பாடுகளின் திறனாய்வாகவும் (விமரிசனமாகவும்) இதனைக் கருதலாம். வாழ்க்கைக் கூறுகள் முழுவதையும் உள்ளடக்கிய நூலாதலின் பல்வேறு துறை சார்ந்த நூல்களைத் திருவள்ளுவர் கற்றிருத்தல் வேண்டும். அவை தமிழில் எழுந்தனவாகவும் இருக்கலாம்; பிறமொழிகளில் தோன்றியனவாகவும் இருக்கலாம்; நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை என்னும் குறள் தொடர் இதனை விளக்கும். இந்திரன் (25), காமன் (1197), நரகம் (255, 835), தாமரைக்கண்ணன் (1103), திங்களைப் பாம்பு பற்றுதல் (1146), திருமால் உலகளத்தல் (610) போன்ற வடமரபு சான்ற தொன்மங்கள் சில குறளில் இடம் பெற்றுள்ளன. இதனால் அவர் காலத்தே இத்தொன்மங்கள் பற்றிய நூல்கள் தமிழில் வழங்கியிருக்கக் கூடும் அல்லது அவற்றை மூல மொழியில் அறியும் வாய்ப்பு வள்ளுவருக்கு ஏற்பட்டிருப்பின் அவரே தமிழ் மரபிற்கேற்ப மொழியாக்கம் செய்திருக்கவும் கூடும். தாமரைக் கண்ணன், அடியளந்தான், இருள் (நரகம்), அளறு, புத்தேள் உலகு போன்றவற்றை இத்தொடர்பில் காட்டலாம்.

நாடு, மொழி, இனம், மதம் என்னும் செயற்கைச் சுவர்கள் எல்லாவற்றையும் கடந்து பொது மானுட வாழ்வியல் நூலாக விளங்கும் திருக்குறள் தமிழிலேயே தோன்றிய முழுமுதல் நூல். இது ஒரு மொழிபெயர்ப்பு நூலன்று. எந்த ஒரு நூலையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதுமன்று; யாருடைய சொற்பொழிவையும் கேட்டு எழுதப்பட்டதுமன்று. பலருக்கும் இயைந்த, உடன்பாடான கருத்துகள் இதனுள் காணப்படுவது திருவள்ளுவரின் கொங்குதேர் வாழ்க்கைத் திறனை விளக்குவதேயன்றிப் பிறிதில்லை. யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை; நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை என்னும் அவரது வாக்குகள் இதனை மெய்ப்பிக்கும். அவர் தமிழினம் பெற்ற தலை சிறந்த தவமகன் என்பதன்றி அவரைப் பற்றி வேறெதுவும் அறியாத நிலையில், அவருக்கு மயிலாப்பூரில் கோயில் எடுத்துச் சாந்தோமில் அடகு வைப்பது முறையாகாது. குமரி முனையில் நிறுவப்படும் அவரது சிலைக்கும் தென்குமரித் திருவள்ளுவர் சிலை என்று பெயரிடின் நலம். இல்லையேல் கன்னியாகுமரியைப் பிறிதொன்றின் மரூஉவாகக் கூறித் திருவள்ளுவரை நாடு கடத்தும் அபாயம் ஏற்படலாம்.

உலகிலேயே சமயம் சாராத, அற நூல் ஒன்றை அருளிய, தமக்கும், தம் நூலுக்கும் தாமே பெயர் சூட்டிப் பெருமைப்படாத, பேரருளாளராகிய அவருக்குத் தமிழர்களாவது நன்றியுடையவர்களாக

நடந்து கொள்வதுதான் நாம் அவருக்குச் செய்யும் குறைந்த அளவு தொண்டு என்று கருதுகிறேன்.

திருக்குறள் தவிர்ந்த ஏனைய கீழ்க்கணக்கு நூல்களில் பிற பண்பாட்டுக் கருத்துகளும், கதைகளும், தொன்மங்களும், பிறமொழிச் சொற்களும் ஏராளமாகக் காணப்படுகின்றன. வடசொற்களை மிகுதியாகப் பெய்து எழுதும் மரபு இவற்றுடன் தொடங்குகிறது எனலாம். மகாபாரத, இராமாயணக் கதைகளுடன் திருமாலின் அவதாரக் கதைகளும் இவற்றுள் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் முன்னைய நூல்களுள் காணாத புராணக்கதைகள் பலவும் இவற்றில் இடம் பெறுகின்றன. சுமார் 400 ஆண்டுக் கால இடைவெளியில் முன்பின்னாக இவை இயற்றப்பெற்றிருக்கலாம் எனக் கருதத் தோன்றுகிறது. வடக்கே புராணங்களின் தொடக்க காலமும் (கி.பி. 4 ஆம் நூற்.) இவற்றில் பெரும்பாலானவற்றின் காலமும் ஒன்றாக இருக்கலாம் என்றும் கருத இடமுண்டு. சான்றாகச் சில பெயர்களும் சொற்களும்:

நான்மணிக்கடிகை	:	தத்துவம், பாவம், உவாத்தி, சேனாபதி, ஆசாரம்.....
ஏலாதி	:	பண்டிதர், சோகம், ஔரதன், பௌநற்பவன், புத்திரி, புத்ரன், வைசிரவண்ணன், உலோபம், ஆசாரியன்.....
இனியவை நாற்பது	:	பிரமதேவன் வணக்கம் (பிற் சாளுக்கியர் வழக்கு), மயூரி, மானிடவர், தானியம்.
ஐந்திணை ஐம்பது	:	உதிரம்
ஐந்திணை எழுபது	:	கணபதி
நாலடியார்	:	அயிராணி, தாரம் (மனைவி)
திரிகடுகம்	:	அருந்ததி, பல்சவை (சபை), சீலம், தவசி, சலவர்.
சிறுபஞ்சமூலம்	:	உதாரம், சேவகம், மேதை, போகம், ஞானம், பண்டாரம், யோகம், விதி, தருக்கம், சமையம், சிட்டன், சுவர்க்கம், பத்தினி, பஞ்சதந்திரக்கதை.

இந்நூல்களுள் திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஆசாரக்கோவை என்னும் மூன்றும் மொழிபெயர்ப்பு நூல்களாகக் கருதப்படுகின்றன. சில நேர் மொழிபெயர்ப்பாகவும், சில தழுவல்களாகவும் இருக்கலாம்.

ஆரெயில் மூன்றும் அழித்தான் அடி ஏத்தி
ஆரிடத்துத் தானறிந்த மாத்திரையான், ஆசாரம்
யாரும் அறிய, அறனாய மற்றவற்றை
ஆசாரக் கோவை எனத் தொகுத்தான் - தீராத்
திருவாயில் ஆய திறல்வண் கயத்தூர்ப்
பெருவாயின் முள்ளி என்பான்.

எனவரும் சிறப்புப் பாயிரப் பகுதியால் ஆசாரக்கோவை வடமொழி ஸ்மிருதிக் கருத்துகளைத் தொகுத்தளிக்கிறது என்பது புலனாகிறது. இலக்கண விளக்க உரைகாரர் வழிநூல் வகைகளுள் ஒன்றாகிய மொழிபெயர்த்தலுக்கு இந்நூலை உதாரணமாகக் காட்டியுள்ளார்.

இந்நூல்களுள் கூறப்படும் கருத்துகளுள் பெரும்பாலானவை வடபுலப் பண்பாட்டு ஒழுகலாறுகளாகக் காணப்படுகின்றன. அந்தக் காலகட்டத்தில் இவை தமிழுக்குப் புதுவரவாகவே இருந்திருக்கக்கூடும். இவற்றின் பெயர்களே புதுமையானவை. பாதி தமிழும் பாதி வடமொழியுமாக அமைந்தவை: திரி+கடுகம்; சிறு+பஞ்சமூலம்; ஆசாரம்+கோவை. உள்ளடக்கம் இருமொழிப் பண்பாட்டுக்கும் உரியன அல்லது தேவையானவை என்னும் செய்தி பெயர்களாலேயே உணர்த்த விரும்பினார்கள் போலும். மொழியியல் நோக்கில் காணும்போது, இத்தகைய பெயர்த்தொடர் அமைப்பு (மணிப்பிரவாளப் புணர்ப்பு) எப்பொழுது முதலில் தமிழில் தோன்றியது என்று அறிய இயலவில்லை. மூதானந்தம், தபுதார நிலை என்னும் இருமொழித் தொடரமைப்பு தொல்காப்பியத்திலேயே காணப்படுவதால் இவ்வினா மேலும் சிக்கலாகிறது. எனவே பல கோணங்களில் அறிஞரின் ஆழ்ந்த சிந்தனைக்கு உரியதாக இச்சிக்கல் அமைகிறது. (கீழ்க்கணக்கு நூல்களில் காணப்படும் பிறமொழிக் கருத்துகளும் கதைகளும் பின்னிணைப்பு இரண்டில் தரப்பட்டுள்ளன).

சிலப்பதிகாரம்

தமிழில் தோன்றிய முதற்காப்பியமாகிய சிலப்பதிகாரம் திருக்குறளுக்குப் பின்னர் இயற்றப்பட்டதாகக் கொள்ளப்படுகிறது. அதனையடுத்துத் தோன்றியது மணிமேகலை. இவ்விரு காப்பியங்களும் தமிழகக் குடிமக்களைத் தலைமை மாந்தர்களாகவும் பெரும்பாலும் தமிழகத்தே நடைபெறும் நிகழ்ச்சிகளைக் களனாகவும் கொண்டவை. ஏறக்குறைய கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கும் ஐந்தாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் தோன்றியவை. இந்தக் கால கட்டத்தில் வடமொழிக் காப்பியங்கள் தமிழர்க்கு அறிமுகமாகி இருப்பினும், தலைமை மாந்தர், பாடுபொருள், உத்திகள் போன்ற காப்பியக்கூறுகள் அனைத்தும் இளங்கோவடிகள் மற்றும் சாத்தனாரால் படைத்து மொழியப்பட்டனவாக விளங்குகின்றன. வடமொழிக் காப்பிய அமைப்பை இவை பின்பற்றவில்லை. முதற்காப்பியங்களான இவை

காலத்தால் மட்டுமின்றிக் காப்பியப் பண்புகளாலும் முதன்மையான காப்பியங்களாகவே விளங்குகின்றன.

எனினும் சிலம்பு, மணிமேகலை என்னும் இரு முதல் தமிழ்க் காப்பியங்களில் காணப்படாத வடபுலக் கதைகளே இல்லை என்னும் அளவிற்கு இவற்றுள் சங்க இலக்கியங்களிற் கேட்டுமிராத பல்வேறு கருத்துகளும், பெயர்களும், கதைகளும் பிறமொழியிலிருந்து கையாளப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் கூறும் நூல்கள் தமிழில் இருந்தனவா என்று அறிய இயலவில்லை. மூல நூல்களில் இருந்தே இவை நேரடியாக இக்கவிஞர்களால் எடுத்தாளப்பட்டிருக்கவும் கூடும். எவ்வாறாயினும் சரி, பிறமொழிக் கருத்துகள் சிலம்பிலும், மணிமேகலையிலும் குடியேறியுள்ளன என்பதே இங்கு அறியவேண்டிய செய்தி. சான்றாகச் சிலவற்றைக் கூறலாம்.

> சுவர்க்கம், நரலோகம் (1:21), போதிலார் திருவினாள் (1:26), தீதிலா வடமீன் (1:27, 5:229), மாமுது பார்ப்பான் (பிரமன்) (1:52-53), உத்தரகுரு (2:10), மயன் (2:12), உருவிலாளன் (2:44, 5:224), இந்திரசிறுவன் சாபம் (3:2, 3, 119), தேவர் கோன் ஏவலின் போந்த காவற் பூதம் (5:66, 67), இமையவர் உறையும் இமயப் பிடர்த்தலை (5:97), கொற்றப் பந்தர், பட்டிமண்டபம், தோரணவாயில் (5:99-104), பூதச் சதுக்கம் (5:134), இந்திரனை நீராட்டுதல் (5:168), வால்வளை மேனி வாலியோன் கோவில் (5:171), நால்வகைத் தேவர் மூவறுகணங்கள் (5:176), நாளங்காடிப்பூதம், ஐவகை மன்றம் (6:1-15), உருப்பசி சாபம் பெற்றமை (6:18-25), தேவபாணி (6:35-37), மொழிபெயர் தேஎத்தோர் ஒழியா விளக்கம் (6:143), வசந்த மாலை (6:171), வாசித்தல் (7:20), மதுரகீதம் (8:24), தேவந்தியின் முற்பிறப்பு வரலாறு (9:5-33), மணிவண்ணன் கோட்டம் (10:10), இந்திர விகாரம் ஏழு (10:14), ஐவகை நின்ற அருகத்தானம் (10:18), காவுந்தி ஐயை (10:45), பஞ்சமந்திரம் - அ சி ஆ உ சா (10:100), சாரணர் - அருக வணக்கம் (10:171-212), காமனும் தேவியும் போலும் இவர் (10:221), கவுந்தி அடிகள் சாபம் (10:233, 245), கந்தன் பள்ளிக் கடவுளர் - நிக்கந்தன் பள்ளியின் முனிவர்கள் (11:5), இந்திரனின் ஆரம் பூண்ட பாண்டியன் (11:24, 25); புண்ணிய சரவணம், பவகாரணி, இட்டசித்தி (11:64-65), வரோத்தமை (11:115), ஐந்தெழுத்து மந்திரம், எட்டெழுத்து மந்திரம் (11:128, 129), கப்பத்து இந்திரன் காட்டிய நூல் (11:154), பாய்கலைப் பாவை மந்திரம் (11:196-97), வனசாரிணி (11:198), புண்ணியம் (13:2), கோசிகமாணி (13:53), மதுராபதித் தெய்வம் (கட்டு 1:13), நூற்றுவர்கன்னர் (26:149, 163).

இவை தவிர, மகாபாரதம், இராமாயணம் தொடர்பான செய்திகளும், கொற்றவையின் மேல் ஏற்றிக் கூறப்படும் சிவனது திருவிளையாடல்கள்,

கண்ணன் திருவிளையாடல்கள் போன்றனவும், பார்ப்பினி கீரிப் பிள்ளையைக் கொன்ற கதையும், வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை போன்ற காதைகளில் கூறப்படும் பல செய்திகளும் வேற்று மொழியில் இருந்து பெறப்பட்டவையாகக் காணப்படுகின்றன.

சிலப்பதிகாரம் பற்றி அண்மையில் வெளிவந்த ஆய்வு ஒன்று, சிலப்பதிகார வேட்டுவ வரியிற் காணப்படும் கொற்றவை தொடர்பான போற்றி மொழிகள் பல வடமொழி லலிதா சகஸ்ர நாமப் பகுதியின் மொழியாக்கங்கள் என்று கூறுகிறது. 32 சிலப்பதிகாரத் தொடர்களுக்கு இணையான லலிதா சகஸ்ரநாமத் தொடர்புகளை எடுத்துக் காட்டி (பக். 28-32),

> இத்தகைய புகழ்த் தொடர்கள் தமிழிலேயே இருந்திருக்கக் கூடாதா என்ற வினா தோன்றுதல் இயல்பு. அதை மறுக்கும் முறையில் பல பல மந்திரங்கள் உண்மையிலேயே தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன என்பதை நடுநிலையோடு இவற்றைப் படிப்பவர்கள் புரிந்து கொள்ள முடியும்.

என்று பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் கூறுவது சிந்திக்கத் தக்கது (இளங்கோ அடிகள் சமயம் எது?) சென்னை; கங்கை புத்தக நிலையம், 1996) தமிழிலிருந்தும் இவை வடமொழிக்குச் சென்றிருக்கலாம் அல்லவா என்ற வேட்கை வினா நம் உள்ளத்தில் எழினும்,

கவுரி	(வேட்டு 67)	கௌரீ	(ல. ஸஹ. 635)
சமரி	(67)	தைத்யஹந்த்ரீ	(599)
ஐயை-சயமகள்	(69)	ஜயா	(377)
சங்கரி	(20-3)	சாங்கரி	(126)
அந்தரி	(20-3)	பராகாசா	(782)
சடாமுடி	(20-3)	கபர்த்தனீ	(793)

எனவரும் சொற்கள் தமிழ் அமைப்போடு தொடர்பற்றனவாகக் காணப்படுதலின் ஏக்கமே எஞ்சுகிறது.

மணிமேகலை

இதுபோன்றே ஏராளமான பிறமொழிக் கதைகள் மணிமேகலையிலும் எடுத்தாளப்படுகின்றன: (இவற்றின் விவரங்கள் பின்னிணைப்பு மூன்றில் தரப்பட்டுள்ளன).

பக்தி இலக்கியம்

பக்தி இலக்கியம் என்னும் தொடர் காரணி இடுகுறி. அதாவது, காரணம் பற்றிய பொழுது பக்தி உணர்வை வெளிப்படுத்தும் எல்லாப் பாடல்களுக்கும் நூல்களுக்கும் செல்லுமாயினும் இலக்கிய வரலாற்றாய்வாளர்கள் பக்தி இயக்கத்தின் வெளிப்பாடாகத் தோன்றிய

தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் ஆகிய தொகுதிகளை மட்டுமே குறிப்பதாக இத்தொடரைக் கொள்ளுகின்றனர். இயக்கப் பாடல்களாகிய இவை பாடல் முறை, பாடல் அமைப்பு ஆகியவற்றால் தனித்தன்மை உடையனவாகலின் தமிழிலக்கியத்தில் இவை தனித்த ஓர் இலக்கிய வகைமைக்கு உரியனவாகக் கருதப்படுகின்றன. இந்நிலையில் இதனைத் தமிழ் அகப்பொருள் இலக்கியத்தோடு ஒப்பிடலாம். காதல் உணர்வினைப் பாடுவனவெல்லாம் அகப்பாடல்கள் ஆகா என்பது வெளிப்படை. பாடுபொருளால் இவை அப்பெயரினைப் பெறவில்லை. பாடல் முறைமை, பாடல் அமைப்பு, வெளிப்பாட்டு உத்தி, அகமாந்தர்க்குரிய ஒழுகலாறுகள் ஆகிய இலக்கண வரையறைகளால் இவை அகப்பாடல்கள் எனப்படுகின்றன. இக்காரணங்களால்தான் இது தமிழர்க்கே உரிய மரபு என்று போற்றப்படுகிறது. அவ்வாறே பக்தி இலக்கியங்கள் எனப்படுவன பாடுபொருளால் அப்பெயரைப் பெறவில்லை. நாமறிந்தவரை உலக இலக்கியங்களில் இயக்கப்பாடல்களாகத் தோன்றிய (கி.பி. 6-9 ஆம் நூற்றாண்டுகளில்) பிறமொழி இலக்கியங்களைக் காண இயலவில்லை. அதுபோன்றே மானுடப் பொதுமையாகிய காதலைப் பாடினும் தமிழ் அகப்பொருள் இலக்கியம் போன்று கிறித்துவுக்கு முன்னரே இலக்கண வரையறை செய்யப்பெற்ற பிறமொழி இலக்கியங்களையும் காண இயலவில்லை.

இத்தகைய பக்தி இலக்கியங்கள் புறச் சமயங்கள் எனப்படும் பௌத்த, சமணங்களை எதிர்த்து எழுந்தனவாகலின், அவற்றுக்கு எதிரான வைதிகச் சமயங்களாகிய சைவ, வைணவங்கள் தொடர்பான நூற்றுக்கணக்கான தொன்மக் கதைகளையும் புராண நிகழ்ச்சிகளையும் பாடுகின்றன. இவற்றுள் பெரும்பாலானவை தமிழ்ப் பண்பாட்டு மரபில் இல்லாதன; வடபுல மொழிகளிற் காணப்படுவன. மொழிபெயர்ப்பாக இவை தமிழிலக்கியத்தில் எடுத்தாளப்பட்டுள்ளன. வைதிகச் சமயங்களைப் பொறுத்தவரை இந்த வேற்றுமொழிச் செய்திகள் இன்றளவும் தொடர்ந்து தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்று வருகின்றன. இறைமறுப்பு இலக்கியங்களும் எதிர்மறை முகத்தான் இவற்றை எடுத்தாள்வதைக் காணலாம். பிறமொழிக் கதைகள், நிகழ்ச்சிகளைத் தவிர, பக்தி இலக்கியங்கள் அதுவரை இல்லாத அளவிற்கு மிகுதியான வடமொழிச் சொற்களைப் பயன்படுத்துகின்றன. அவற்றுள்ளும் தேவார திருவாசகங்களில் நாலாயிரத்தைவிட அதிகமான வடசொற்கள் பயன்படுத்தப் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (பிறமொழித் தொன்மங்கள், கதைகள் பற்றிய விவரங்கள் பின்னிணைப்பு நான்கில் தரப்பட்டுள்ளன).

இலக்கணங்கள் மொழிபெயர்ப்பு

இலக்கியம் மட்டுமின்றித் தமிழ் இலக்கணமும் மொழிபெயர்ப்பால் பயனடைந்துள்ளது. வீரசோழியம், நன்னூல்,

தண்டியலங்காரம், மாறனலங்காரம், குவலயானந்தம், இலக்கணக் கொத்து, பிரபந்த தீபம், பிரபந்த தீபிகை முதலான சில பாட்டியல் நூல்கள், பத்தொன்பதாம் நூற்றாண்டிற்குப் பின்னர்த் தோன்றிய தமிழ் உரைநடை இலக்கணங்கள் (வாக்கிய அமைப்பு, நிறுத்தற்குறிகள், பத்தி அமைப்பு போல்வன) ஆகியவற்றை இதற்குரிய சான்றுகளாகக் காட்டலாம்.

தமிழ்க் காப்பியங்கள்

நமக்குக் கிடைத்துள்ள தரவுகளின்படி, காப்பிய வகையில்தான் அதிகமான மொழிபெயர்ப்புகள் பெரும்பாலும் தழுவல்களாக மலர்ந்துள்ளன. தமிழ்க் காப்பிய வளத்திற்கு இவை பெரிதும் துணை நின்றுள்ளன என்பது வெள்ளிடைமலை.

தமிழ்க் காப்பியங்களுள் சிலம்பும், மணிமேகலையும், முற்காலத்திலும், பெரியபுராணமும், திருவிளையாடற்புராணமும் பிற்காலத்திலும் தோன்றிய தனித்தமிழ்க் காப்பியங்கள் எனலாம். உள்ளடக்கம், உருவம் இரண்டிலும் தொன்மங்கள் தவிரப் பெரும்பாலும் தமிழே மூலமாக உடையன இவை. ஏனைய தமிழ்க் காப்பியங்கள் எல்லாம், மொழி பெயர்ப்புகளே அல்லது பிறமொழித் தழுவல்களே என்று கூறின் மிகையாகாது.

சூளாமணி, யசோதர காவியம், பெருங்கதை, உதயண குமார காவியம், சீவக சிந்தாமணி, நீலகேசி, குண்டலகேசி, வளையாபதி, சைன இராமாயணம், ஸ்ரீபுராணம், கம்பராமாயணம், கந்தபுராணம், அருள்நிலை விசாகரின் பாரதம், ஒட்டக் கூத்தரின் உத்தர ராமாயணம், அரசகேசரியின் ரகுவம்சம், நாரதசரிதை, வில்லிபாரதம், நளவெண்பா, அதிவீரராம பாண்டியரின் இலிங்க புராணம், அரிச்சந்திர புராணம், இன்னும் பல்வேறு சைன, இந்து மதப் புராணங்கள்; சீறாப் புராணம், சின்ன சீறா, முகம்மதியர் காவியம், தேம்பாவணி, இரட்சணிய யாத்ரிகம், கிறிஸ்தாயனம், சுவிசேஷ புராணம், இந்த நூற்றாண்டில் மொழிபெயர்க்கப்பெற்ற ஹோமரின் இலியதம், ஒதீசியம், மில்டனின் சுவர்க்க நீக்கம், பாரதசக்தி மகாகாவியம், காந்தி காவியம், இயேசு காவியம் எனத் தமிழ்க் காப்பிய உலகில் நிகழ்ந்துள்ள மொழி பெயர்ப்புப் பட்டியல் மிக நீண்டு ஓடுவதைக் காணலாம்.

புராண இலக்கியங்கள்

பிற்காலச் சோழர் காலம் முதற்கொண்டு தமிழில் அறுநூற்றுக்கும் மேற்பட்ட புராணங்கள் இயற்றப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பாலானவை தலபுராணங்கள். தலபுராணங்களாயினும் பிறவாயினும் எல்லாமே பிறமொழிக் கதைகளை அல்லது நிகழ்ச்சிகளைக் கொண்டனவாகவே காணப்படுகின்றன. சில நேரடி மொழிபெயர்ப்புகளாகவும் அமைந்துள்ளன. இவற்றுள் பெரும்

பாலானவை இன்று வழக்கில் பயிலவில்லையாயினும் புராண இலக்கியம் என்னும் இலக்கிய வகைமை 17, 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் செழித்து வளர்ந்தமைக்கு மொழிபெயர்ப்பு பெரிதும் உதவியது என்பதே இங்குக் குறிப்பிடத்தக்கது. பரவலாக அறியப்பட்ட சில புராணங்கள்:

> அசுவமேத யாக புராணம், அம்பர் புராணம், இலிங்க புராணம், ஏகாதசி புராணம், கடம்பவன புராணம், கருட புராணம், கூர்ம புராணம், ததீசிப் புராணம், தந்திவர்ம புராணம், நஞ்சுண்ட புராணம், பாகவத புராணம், மார்க்கண்டேய புராணம், மேரு மந்தர புராணம், விநாயகர் புராணம், க்ஷத்திரிய புராணம்.

சிற்றிலக்கியங்கள்

புராணங்களைப் போலவே சிற்றிலக்கியங்களும் நாயக்கர் காலம் முதலாகத் தோன்றித் தமிழிலக்கியத்தை வளம்பெறச் செய்துள்ளன. நூற்றுக்கும் மேற்பட்ட சிற்றிலக்கிய வகைகளில் ஆயிரக்கணக்கான சிற்றிலக்கியங்கள் தோன்றியுள்ளன; இன்றளவும் தோன்றிவருகின்றன. இவற்றின் மொழிநடையில் பிறமொழி வழக்குகளும் சொற்களும் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளமை வெளிப்படை. வெளிநாட்டுச் சமயங்கள் இங்குக் கால்கொண்டு பரவிய நிலையில் பல்வேறு புறச்சமய, புறப்பண்பாட்டு இலக்கியங்கள் மொழிபெயர்ப்பாகவும் தழுவலாகவும் இயற்றப்படலாயின. பெருவழக்காக நிலவிவந்த சிற்றிலக்கிய வகைமைகளில் இத்தகைய நூல்கள் படைக்கப்பட்டன. எடுத்துக்காட்டாகச் சிலவற்றைச் சுட்டலாம்.

கும்மி (மொத்தப் படைப்புகள் - 99)
அர்ச் அன்னம்மாள் பிரசங்கக் கும்மி
ஆரிய தேசாபிமானக் கும்மி
இராமாயணக் கும்மி
நபிபுல்லாக் கும்மி
மகாபாரதக் கும்மி
மார்க்கண்டன் கும்மி

குறவஞ்சி (53)
சரபேந்திர பூபாலக் குறவஞ்சி
டெல்லி குறவஞ்சி
துரோபதைக் குறவஞ்சி
பிசுபில் குறவஞ்சி
பெத்லகேம் குறவஞ்சி
ரிஷிவந்தியக் குறவஞ்சி

பரணி (17)
கஞ்சவதைப் பரணி
அஞ்ஞவதைப் பரணி

பாசவதைப் பரணி
மோகவதைப் பரணி

பிள்ளைத்தமிழ் (159)

உமறொலியுல்லா பிள்ளைத்தமிழ்
நத்தகறொலி ஆண்டவர் பிள்ளைத்தமிழ்
நபிநாயகம் பிள்ளைத்தமிழ்
முகைதீன் ஆண்டவர் பிள்ளைத்தமிழ்

அம்மானை (58)

அசுவமேத அம்மானை
அந்தோணியார் அம்மானை
கித்தேரியம்மாள் அம்மானை
சீறா அம்மானை
தேவமாதா அம்மானை
நபியவதார அம்மானை
நளச்சக்கரவர்த்தி அம்மானை
பாகவத அம்மானை
மகாபாரத அம்மானை

சதகம் (113)

அர்ச் தேவமாதா சதகம்
அரபிச் சதகம்
இராமாயண சதகம்
இறசூல் சதகம்
ஏசுநாதர் சதகம்
கோவிந்த சதகம்
சன்மார்க்க சதகம்
மதனமாநகர் தோத்திரச் சதகம்
முகைதீன் சதகம்
வைராக்கிய சதகம்

இதுபோன்றே கலம்பகம், உலா, தூது என்னும் சிற்றிலக்கிய வகைகளிலும் பல மொழிபெயர்ப்பு நூல்கள் தோன்றியுள்ளன. இத்தகைய மொழிபெயர்ப்பு நூல்கள் எல்லாம் பெரும்பாலும் சைவம், வைணவம், இசுலாம், கிறித்துவம் என்னும் சமயங்களைச் சார்ந்தனவாகவே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாட்டுப்புற இலக்கியம்

ஏட்டிலக்கியங்கள் மட்டுமின்றி வாய்மொழி இலக்கியமாகிய நாட்டுப்புற இலக்கிய வகையும் மொழிபெயர்ப்பால் வளர்ச்சி அடைந்திருக்கக் காண்கிறோம் : சில சான்றுகள்:

(அ) அரேபிய பழமொழிகள், இப்ரூ பழமொழிகள், ஆங்கிலப் பழமொழிகள் மற்றும் பல்வேறு உலகப் பழமொழித் தொகுதிகள்.

(ஆ) விவிலியக் கதைகள், காசிம் படைப்போர் முதலிய பல படைப்போர் நூல்கள்.

(இ) கிரேக்கப் புராணக்கதைகள், ஈசாப் கதைகள், பாரசீகக் கதைகள், அரேபியக் கதைகள், சிந்துபாத் கதைகள், ராபின்ஹூட் கதைகள், ரஷ்ய நாடோடிக் கதைகள்.

(ஈ) பஞ்சதந்திரக் கதைகள், விக்கிரமாதித்தன் கதைகள், தெனாலிராமன் கதைகள், மரியாதைராமன் கதைகள், நாலுமந்திரி கதை, மயிலிராவணன் கதை, சிவாஜி கதைகள், பீர்பால் கதைகள், தான்சேன் கதைகள் மற்றும் வடபுல மாநிலங்களில் உள்ள பல்வேறு நாடோடிக் கதைகள் என நூற்றுக்கணக்கான கதைத் தொகுதிகள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுப் பாமர மக்கள் மற்றும் குழந்தைகளின் ஆர்வப் பசிக்கு விருந்தாகி வருகின்றன.

19, 20 ஆம் நூற்றாண்டுகளில் மொழிபெயர்ப்புகள்

மெகாலேயின் கல்விக் கொள்கையின் விளைவாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தே இருமொழி, மும்மொழித் தமிழ் அறிஞர்கள் பலர் தோன்றத் தொடங்கிப் பாடநூல்களுக்காகவும், பொதுமக்களின் இலக்கிய நுகர்வுக்காவும் ஆங்கிலம் முதலிய ஐரோப்பிய மொழிகளிலிருந்து ஏராளமான மொழிபெயர்ப்புகளைச் செய்தனர். 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மலர்ந்த இந்திய மறுமலர்ச்சி இயக்கத்தின் காரணமாக அந்நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும், இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் வடமொழி, இந்தி, வங்காளம், மராத்தி போன்ற வட இந்திய மொழிகளிலிருந்தும் பல இலக்கிய நூல்கள், சமயஞ் சார்ந்த காப்பிய நூல்கள் தமிழில் எழத் தொடங்கின.

தமிழ் உரைநடை செப்பமடைந்து இலக்கிய வடிவம் பெறத் தொடங்கியதும் பிற நாட்டுக் கவிதைகள், நாவல்கள், நாடகங்கள், துப்பறியும் கதைகள், சிறுகதைகள், பயணக்கதைகள் எனப் பல வகையான இலக்கிய மொழிபெயர்ப்புகள் வெளிவரலாயின. இவை பற்றிய புள்ளி விவரங்கள் முழுமையாகக் கிடைக்கவில்லை. இந்த இலக்கிய வகைகள் பற்றி இந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுந்துள்ள சிறு சிறு வரலாறுகள், ஆய்வேடுகள் போன்றவற்றில் இவை தொகுக்கப்பட்டுள்ளனவேனும் இவற்றையெல்லாம் ஒருங்கு தொகுக்கும் பணி முழுமையாக மேற்கொள்ளப் பெறவில்லை. இத்தகைய மொழி-பெயர்ப்புப் பணிகள் 1950 வரை சுறுசுறுப்பாக நடைபெற்று வந்தன.

கி.பி. 1800 முதல் 1950 வரையிலான இந்தக் காலக்கட்டத்தை மொழிபெயர்ப்புக் காலம் என்றே குறிப்பிடலாம். அப்போது தோன்றிய மொழிபெயர்ப்புகளில் மட்டுமின்றித் தமிழில் தோன்றிய மூல நூல்கள் பலவற்றிலும் பிறமொழி இலக்கிய மற்றும் பண்பாட்டுச் சாயல்கள் கருத்துகளாகவும், இலக்கிய வடிவங்களாகவும் தன்மயமாக்கப் பெற்ற வாழ்வியல் பார்வைகளாகவும், இடம்பெற்றிருக்கக் காணலாம். மகாகவி பாரதியார், சுத்தானந்த பாரதியார், வி.கே.சூ; வ.ரா, மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை போன்றோர் படைப்புகளை இந்நிலையில் சான்றுகளாகச் சுட்டலாம்.

விடுதலைக்குப் பின்னர் உள்நாட்டு மொழிபெயர்ப்புகள் தொடர்ந்து மிகுதியான எண்ணிக்கையில் வெளிவந்தன. மேல்நாடு கீழ்நாடு என்னும் பாகுபாடின்றி இலக்கிய மொழிபெயர்ப்புகள் வெளிவருவதற்குச் சுதேசமித்திரன், மஞ்சரி, சூரியர், குமுதம், கலைமகள் போன்ற பல்வேறு இதழ்களும், சாகித்ய அகாதெமி, நேஷனல் புக் ட்ரஸ்ட், இந்தியப் பண்பாட்டுத் துறை போன்ற மைய அரசின் நிறுவனங்களும் உதவி வருகின்றன. சாகித்திய அகாதெமி மட்டும் இதுவரை 187 இலக்கிய மொழிபெயர்ப்புகளைத் தமிழில் வெளியிட்டுள்ளது. ஏனைய இரண்டு நிறுவனங்களும் நூற்றுக்கும் மேற்பட்ட மொழிபெயர்ப்புகளைக் கொண்டுவந்துள்ளன. இவை தவிர, தென்னிந்திய புத்தக நிறுவனம், யுனெஸ்கோ, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், நியூ செஞ்சுரி புக் அவுஸ் போன்ற நிறுவனங்களும் மொழிபெயர்ப்பு நூல்கள் பலவற்றைத் தமிழில் வெளியிட்டுள்ளன.

இருபதாம் நூற்றாண்டின் இன்றியமையாத இலக்கிய வடிவங்களாகிய புதுக்கவிதை, ஹைக்கூ, நாவல், சிறுகதை, நாடகம், கடித இலக்கியம், பயண இலக்கியம், தன் வரலாற்று நூல்கள் ஆகியன வடிவத்தால் பிறமொழிகளுக்கு உரியன. அதாவது, பிற மொழிகளில் தோன்றிய இவ்வகை இலக்கியங்களால் தோற்றமும் செல்வாக்கும் பெற்றன என்பது கருத்து. இவற்றுள் நாடகம் தவிர்ந்த ஏனையவற்றின் பெயர்களே மொழிபெயர்ப்புகள்தாம். இவற்றுள் ஓரிரண்டு விதிவிலக்குகளைத் தவிர, பெரும்பாலானவை கருத்தாலோ, வடிவத்தாலோ, உத்திகளாலோ, சொல்லாட்சியாலோ, வாழ்க்கைப் பார்வையாலோ, பிறமொழிப் பண்பாட்டின் சாயலைப் பெற்றுள்ளன என்பது விவாதத்திற்கு அப்பாற்பட்ட செய்தி. இவற்றுள் பலவற்றின் வெற்றிக்கு இந்தச் சாயல் காரணமல்ல எனினும், இந்தச் சாயலில்லாமல் அவை உருவாக்கப்படவில்லை என்பதே இங்குக் குறிக்கப்படும் செய்தி. மரபுக் கவிதையும், மரபிலக்கிய வகைகளாக இந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியனவும் இதற்கு விதிவிலக்கல்ல.

1983 இல் வெளிவந்த மொழிபெயர்ப்பு நூற்றொகை (ச. சிவகாமி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை) என்னும்

நூல் அதுவரை 4234 நூல்கள் பிறமொழிகளிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ள செய்தியைப் புள்ளி விவரங்களுடன் தருகிறது. கடின உழைப்பின் பயனாக இந்த நூலாசிரியர்க்குக் கிடைத்த மேற்சுட்டிய தகவல்கள் தவிர மேலும் பல நூல்கள் மொழிபெயர்க்கப் பட்டிருக்கலாம். இந்நூலுக்குப் பிறகும் பல வெளிவந்த வண்ணம் உள்ளன. தமிழ்மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கு மிகவும் உகந்த அறிகுறியாக இதனைக் கொள்ளலாம்.

இலக்கிய ஆய்வும் மொழிபெயர்ப்பும்

இலக்கியப் படைப்புக்கு மட்டுமின்றி இலக்கிய ஆய்வுக்கும் மொழிபெயர்ப்பு தன் பங்களிப்பைச் செய்துள்ளது என்பது தமிழாராய்ச்சியின் வரலாறு காட்டுகிற உண்மை. இடைக்காலத்தில் தோன்றித் தமிழிலக்கியக் காப்பிற்கும் விளக்கத்திற்கும் பெருந் தொண்டாற்றியுள்ள தமிழ் உரையாசிரியப் பெருமக்களின் உரைகளைச் சற்று ஊன்றி நோக்கின் இவ் உண்மை தெளிவாகும். பெயர் அறியப்படாத அரும்பத உரைகாரர்கள், பழைய உரைகாரர்கள் ஆகியோரைத் தவிர, பரிமேலழகர், அடியார்க்கு நல்லார், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பிற்காலத்துத் தோன்றிய சிவஞானமுனிவர் போன்றோர் தமிழ்க் கலைக்களஞ்சியங்களாக விளங்கிய பேரறிஞர்கள். இவர்களுடைய தன்னலமற்ற தொண்டினால்தான் இன்று நாம் நம் பழந்தமிழ் இலக்கியப் பண்பாட்டையும் சிறப்பையும் நுட்பத்தையும் உணர்ந்து மகிழ்கிறோம். இவர்களுடைய ஆராய்ச்சிக்கு வேற்றுமொழிக் கருத்துகளும், சிந்தனைகளும், மொழியறிவும், பிறதுறை அறிவும் பெரிதும் பயன்பட்டுள்ளன என்பது வெள்ளிடைமலை.

இருபதாம் நூற்றாண்டின் தமிழ்த் திறனாய்வுலகும் இதற்கு விதிவிலக்கன்று. இன்றைய தமிழாராய்ச்சி, தமிழ் மரபில் தோன்றியுள்ள இலக்கியக் கோட்பாடுகளை மட்டும் கருத்திற்கொண்டு செயற்படவில்லை என்பது கண்கூடு. இந்த நூற்றாண்டு நெடுகப் பல்வேறு மொழிகளிற் காணப்படும் இலக்கியக் கோட்பாடுகள், மரபுகள், திறனாய்வுப் பார்வைகள், உளவியல், சமூகவியல், தொல்படிமவியல், அமைப்பியல் மற்றும் மீயமைப்பியல் போன்ற அணுகுமுறைகள், மற்றும் இலக்கிய ஆய்வுநெறிமுறைகள் பற்றிய நூல்களும், கட்டுரைகளும் மொழி பெயர்க்கப்பட்டுத் தமிழில் வந்தவண்ணம் உள்ளன. சில நல்ல தமிழ்த் திறனாய்வாளர்களை இவை உருவாக்கியுள்ளன.

. மேலைநாட்டுத் திறனாய்வு முறைகளும் பார்வைகளும் தமிழிலக்கிய ஆய்வுக்குப் பயன்படுத்தப் பெறுவதைக் கண்டிக்கும் தனியார்வக் குரல்கள் அவ்வப்போது ஒலித்துக் கொண்டிருப்பதையும் நாம் கேட்கத்தான் செய்கிறோம். இக் குரல்களின் அக்கறையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலைநாட்டுக் கோட்பாடுகளின் அடிப்படையில் நம் படைப்புகளை ஆராய்ந்து குற்றம் காணக்கூடாது என்னும் நல்ல உள்ளமே இந்தக் குரல்களின் உட்கிடக்கை.

இலக்கியப் படைப்புகள் பண்பாட்டுப் பயிர்கள். அந்தந்த மண்ணின் மணம் அவற்றுள் இருப்பதுதான் இயற்கை. பிற மண்ணின் மணம் இவற்றுள் இல்லையே என ஏங்குவதோ கண்டிப்பதோ தேவையற்றது. பலவற்றை ஒப்பிட்டுப் பார்ப்பது தவறன்று; ஆனால் ஒப்பீட்டின் விளைவாக மதிப்பீடு செய்வது ஆராய்ச்சியின் நோக்கமாக இருத்தலாகாது. ஒப்பீடு நம் பார்வையை ஆழமாக்கும்; விரிவடையச் செய்யும் என்பது உண்மையே. எனினும் ஒப்பியல் திறனாய்வு மதிப்பீடு செய்வதை விரும்புவதில்லை. காமம் செப்பாது கண்டது மொழிவதோடு நின்றுவிடும். மிக உயர்ந்தன, சிறந்தன என்று சிலவற்றை ஓகோவெனப் புகழ்தலும் செய்யாது; ஒருகால் செய்யினும்; பிறவற்றைக் கண்டிப்பாக இகழாது.

ஆய்வுக்கு உட்படாதன

இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், தென் ஆப்பிரிக்கா, பிஜித் தீவுகள் போன்ற வெளிநாட்டுத் தமிழிலக்கிய முயற்சிகளில் மொழிபெயர்ப்பு எந்த அளவிற்குத் தன் பங்களிப்பைச் செய்துள்ளது என்னும் ஆய்வு இங்கு நடைபெறவில்லை. போதுமான தகவல்களை இந் நாடுகளிலிருந்து திரட்ட இயலவில்லை. கிடைத்த சிலவும் முழுமையாக இல்லை. இக்குறைபாட்டை இன்றைய நிலையில் தவிர்க்க இயலவில்லை.

தொகுப்புரை

மொழிபெயர்ப்பின் பங்களிப்பு பற்றித் தமிழிலக்கிய வரலாற்றைச் சுருக்கமாகப் பார்த்த இந்தப் பருந்துப் பார்வையின் விளைவாகச் சில செய்திகள் புலனாகின்றன.

(அ) கால அடிப்படையில் காணுமிடத்துத் தொல்காப்பியர் காலந்தொட்டு இன்றுவரை மொழிபெயர்ப்பு, தமிழிலக்கிய வளர்ச்சிக்குத் தொடர்ந்து துணை நின்றுள்ளது.

(ஆ) கற்றோரின் எண்ணிக்கை மிகுதல், அச்சு இயந்திர வாய்ப்புகள் பெருகல், பன்மொழி அறிஞர்களின் பெருக்கம் ஆகிய காரணங்களால் கி.பி. 1800 முதல் இன்று வரையிலான காலகட்டத்தில்தான் எண்ணிக்கையில் மிகுதியான மொழிபெயர்ப்புகள் தோன்றியுள்ளன.

(இ) வகைமை அடிப்படையில் நோக்குமிடத்துக் காப்பியம், சில குறிப்பிட்ட சிற்றிலக்கிய வகைகள், தமிழ் உரைநடை செம்மைப்பட்ட பின்னர் நாவல், சிறுகதை, நாடகம், பயண இலக்கியம், நாட்டுப்புற இயல்புடைய கதைகள், இலக்கிய ஆய்வு நெறிமுறைகள் மற்றும் திறனாய்வு நூல்கள் ஆகியன மொழிபெயர்க்கப்பட்டுள்ளமையை அறிகிறோம்.

(ஈ) முதற்காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றை அடுத்துத் தமிழில் தனிக்காப்பியங்கள் இன்றுவரை தோன்றாமைக்குரிய காரணம் விளங்கவில்லை. தமிழர்களைத் தலைமக்களாகக் கொண்ட ஓரிரு காப்பிய முயற்சிகள் மேற்கொள்ளப் பெற்றிருப்பினும் அவை பரவலான வரவேற்பினைப் பெறாமையால் அறிமுகமாகவில்லை.

முதல்நூல், தழுவல், மொழிபெயர்ப்பு என்னும் முத்திறப்படைப்புகளுள் தான் கொண்ட இலக்கியச் செவ்வியின் காரணமாக எதுவும் புகழ்பெற முடியும் என்பது வரலாற்று உண்மை. பிற மொழி வடிவங்களாயினும் நாவல், சிறுகதை, புதுக்கவிதை என்னும் வகைமைகளில் புகழ்பெற்ற தனித்தமிழ் இலக்கியங்கள் பல தோன்றியிருக்கக் காண்கிறோம். ஆனால் காப்பிய வகைமை இந்த வகையில் சிறவாமைக்குரிய படைப்புக் காரணம் யாது என்பது வினாவாகவே நிற்கிறது.

(உ) மூலநூல் என்று ஒன்று இல்லை. மிகத் தொன்மை யானவை என்று இன்று நாம் கருதுவனவும் அவற்றுக்கு முன்னிருந்த நூல்களை அடியொற்றியே அமைந்தவை தாம். எனவே மொழிபெயர்ப்பு என்ற காரணத்தாலேயே ஒரு நூலின் சிறப்பு குறைவதோ மிகுவதோ இல்லை. இலக்கியப் பண்பாட்டுப் பரிமாற்றத்துக்கு மொழிபெயர்ப்பு ஒரு சிறந்த மொழியியற் கருவி. முன்னணியில் நிற்கும் உலக நாகரிகங்கள் பல இதனைப் பயன்படுத்தி வளர்ந்துள்ளன. தமிழ் நாகரிகமும் இதில் பின்னடையாமல் வளர்ந்துள்ளது என்னும் செய்தி தமிழர்களின் இலக்கிய மரபுக்கு மெருகூட்டுவதாக அமைகிறது.

* * *

பார்வை நூல்கள்

கலித்தொகை, பாகனேரி தமிழ்ச்சங்க வெளியீடு, 1943.

சங்க இலக்கியம் (பாட்டும்) தொகையும்),. (ப.ஆ.) எஸ். வையாபுரிப் பிள்ளை, சென்னை : சமாஜப் பதிப்பு, 1967 (1940).

சண்முகம் பிள்ளை, மு. **சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும்**, சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1996.

சிலப்பதிகாரம், (வேங்கடசாமி நாட்டார் உரை), பாகனேரி தமிழ்ச் சங்க வெளியீடு, 1956, (1942).

தேவாரம் (அடங்கல் முறை), சென்னை, கங்கை புத்தக நிலையம், 1998.

தொல்காப்பியம் - எழுத்து - இளம்பூரணம், சென்னை, கழகம், 1955.

தொல்காப்பியம் - சொல் - சேனாவரையம், சுன்னாகம், கணேசையர் பதிப்பு, 1955.

தொல்காப்பியம் - பொருள் - இளம்பூரணம், சென்னை, கழகம், 1956.

நாலாயிர திவ்வியப் பிரபந்தம், (ப.ஆ) கி. வேங்கிடசாமி ரெட்டியார், சென்னை : திருவேங்கடத்தான் திருமன்றம், 1973.

பதினெண்கீழ்க்கணக்கு, தொகுதி I & II, சென்னை, மர்ரே எஸ். ராஜம், பதிப்பு, 1959.

பழனியம்மாள், ப. **தமிழில் சதக இலக்கியங்கள்**, மதுரை, 1992.

பாட்டும் தொகையும், சென்னை, மர்ரே எஸ். ராஜம், பதிப்பு, 1957.

பாலசுந்தரம், ச. தொல். ஆராய்ச்சிக் காண்டிகையுரை பொருளதிகாரம், தஞ்சாவூர், 1991.

பாலசுந்தரம், ச. தொல். **ஆராய்ச்சிக் காண்டிகையுரை - எழுத்ததிகாரம்**, தஞ்சாவூர், 1991.

பெருந்தேவனார் பாரதம் என்னும் பாரத வெண்பா, (ப.ஆ) அ. கோபாலையர், சென்னை : கோபாலக்கிருஷ்ணக் கோன், 1934.

மணிமேகலை, (ப.ஆ) உ.வே. சாமிநாதையர், சென்னை, 1965 (1898).

முத்துராசன், கு. **பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் - ஓர் ஆய்வு**, தர்மபுரி, 1992.

வரதராசன், மு. **தமிழ் இலக்கிய வரலாறு**, சாகித்திய அகாதெமி வெளியீடு, 1998, (1972).

Brislin, Richard, W. (ed.) **Translation. Applications and Research.** New York : Gardner Press, 1976.

Sisir Kumar Das (ed.) **A History of Indian Literature 1800 - 1910.** New Delhi : Sahitya Akademi 1991.

Sivakami, S. (ed.) **Bibliography on Translations**, Chennai : IITS, 1983.

பின்னிணைப்பு - ஒன்று (சங்க இலக்கியம்)

I. 1.புலவர் பெயர்கள்

ஆமூர்க் கவுதமன் சாதேவனார்
- அகம் 159.
ஆரிய அரசன் யாழ்ப்பிரமதத்தன்
- குறுந். 184.
இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்
- மலைபடு
இளம்போதியார் - நற். 72
உருத்திரன் - குறுந். 274.
உலோச்சனார் - நற். 11
ஓத ஞானி - குறுந். 227
கருவூர்ப் பவுத்திரன்
- குறுந். 162
கேசவனார் - பரி. 14.
கோதமனார் - புறம். 366
கோவர்த்தனார் - குறுந். 66,194
சத்திநாதனார் - குறுந். 119
செல்லூர்க் கோசிகன் கண்ணனார் - அகம். 66
தாமோதரன் - குறுந். 92.
நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனார் - நற். 382.
நெய்தற் கார்க்கியர்
- குறுந். 55
நெய்தற் கார்க்கியன்
- குறுந். 212
பதுமனார் - குறுந். 6
பாலைக் கௌதமனார்
- பதிற்.3ஆம் பத்து
பிரமசாரி - நற். 34
பிரமனார் - புறம் 357
மதுரைக் கவுணியன் பூதத்தனார்
- அகம். 74
மாதீர்த்தன் - குறுந். 113
மார்க்கண்டேயனார்
- புறம். 365
மோதாசனார் - குறுந். 229
வடம வண்ணக்கன் தாமோதரன்
- குறுந். 85
வான்மீகியார் - புறம். 358

I. 2. பாடப்பட்டோர்

அக்குரன் - பதிற். 14
ஆரிய அரசன் பிரகத்தன்
- குறிஞ்சிப்
ஆரியர் - அகம் 276, 336 386, 396, 398
இயக்கன் - புறம். 71
இராமன் - அகம். 70
ஈர் ஐம்பதின்மர் - பெரும். 415
ஐவர் - பெரும். 417
சோழன் இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளி - புறம் 16, 125
நந்தர் - அகம். 265
நந்தன் - அகம் 251
நெடியோன் - புறம் 9,114,241
பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி
- புறம் 6, 9, 12, 15, 64
மாநிதிக் கிழவன் - அகம். 66
மிலேச்சர் - முல்லைப். 66
மோரியர் - அகம் 69, 251, 281
யவனர் - நெடுநல். 101, அகம். 149
வட வடுகர் - புறம். 378
வடவர் - அகம். 340
வடுகர் - நற். 212, குறுந். 11, அகம். 107, 213, 253, 281, 295, 375, 381
வாலியோன் - நற். 32
வேளாவிக்கோமான் பதுமன் தேவி
- பதிற்.-ப. 4, 8

I. 3.இதிகாசப் பாகவதக் கதைகளும் பெயர்களும்

அக்கினி - பரி. 5: 55-58

அகத்தியன் - மது. 40-42; - பரி. 11:11

அகலிகை - பரி. 19:50-52

அசுவத்தாமன் - கலித்.பாலை. 101:27-32

அருந்ததி (வடமீன்) - கலித். பாலை 2-21

ஆதிசேடன் - பரி.தி. 1:58-59, உலகைத் தாங்குதல், பரி.ப.1: 74-75- கடல் கடைய நாண் ஆனமை. பரி.தி.1:64-71- சிவன் வில்லுக்கு நாண் ஆனமை - பரி.தி.1:76-78.

இந்திரன் - பரி. 5:58 - 60; 9:2-4, 19:50-52, பரி.தி. 2:96-97; கலி. 105: 15

இராம காதை - அகம்.70:13-16; புறம். 378: 18-21, (தனுஷ்-கோடியில் இராமன் தன் கை அவித்துப் பறவைகளின் ஒலியை அடக்கியது; சீதையின் அணி-கலன்களைக் குரங்குகள் அணிந்-தமை; சீதையை இராவணன் கவர்ந்து சென்றது).

இராவணன் - கலித். 38:1-5, இராவணன் கயிலை மலையை எடுத்தமை.

உருப்பசி, திலோத்தமை - கலித். 109:17

கவுதமன் - பரி. 19:50-52

காமன் பரி. 3: 81-82; கலித். 26: 3, 140: 8.

சிவன் - கலித். 38: 1-5, அகம். 181:16-19; புறம். 1:12-13; ஆதிரையான்-கலித். 150:20; புறம் 56:1-2 உமையுடன் இருத்தல் முருகு- 153; புறம் 1: 7-8; ஊர்தி பரி. 8:2: கலித். 150: 13, புறம் 1: 3-4, கங்கை கொண்டமை பரி. 9: 5-7,; கலி. க.வா. 1:2 - கறைக் கண்டன் பதி.க.வா. 9-10- கறை மிடற்றன் பரி. 8:125-127; கலி. க.வா 1:3-4; 105:13; 142:24-28 புறம். 1:5-6; 55:1-5; 56: 1-2- காட்டில் ஆடுதல், பதி. க.வா. 3-4- காபாலம் ஆடுதல் கலி. க.வா. 1-11-13- கொடி-முரு. 151-152; கலி. 26:5 புறம் : 1:3.4; 56:1-2 - கொடு கொட்டி ஆடுதல் கலி. க.வா 1:5-7; சடையன் பதி.க.வா.5; அகம். க.வா: 1:9-10- சூலப்படை உடையான் பதி.க.வா.11-12, அக.க.வா: 1:5-6: - நெற்றிக்கண் அக.க.வா. 1:5-6-, புறம். 155: 1-5; பாண்டரங்கம் ஆடுதல் கலி.க.வா. 1: 8-10 பிறைசூடி. பதி.க.வா. 9; கலி. 103:15; 142: 24-28; 150:17; அக. க. வா. 1-11, புறம். 1:8-9; 55:1-5 புலித்தோல் ஆடையன் அக.க. வா. 1; 14-15 - மழுப்படை கொண்டிருத்தல் மது. 453-455 முக்கண் கொண்டமை முரு. 153; கலி. 104: 11-12 - முப்புரம் அழித்தல் முரு. 154; பதி.க.வா.3; பரி.தி. 1:76-78; பரி.5:22-27; கலி க.வா. 1:2; 2:1-8; புற.55:1-2.

திட்டத்துய்மன் - கலித். 101:27-32

திருமால் - பரி. 3:12-14 81-82, 4:47, 67-69; பரி.தி.1:3-5; புற. 58:14-16; 198:9- அமரர்க்கு அமுதம் அளித்தமை பரி. 3:33-34 - அரவணைக் கிடத்தல் பெரு. 371-373 - அரவின் பிடியிலிருந்து மதியை விடுவித்தல் கலி. 104: 37-38 -

அவுணரை அழித்தல் மது. 590-591 - அன்னமாய் வந்தமை பரி. 3:25-26 - இராமாவதாரம் அக. 70-13-16; புறம் 378:18-21 - இருவர் தாதை பரி. 1:31- உந்தித் தாமரை - பரி. 3:91-94, 4:60-61 - ஊர்தி. பரி. 3:16 - எல்லா நிலங்களையும் காட்டினமை மது. 763 - கடல் கடைதல் பரி. தி. 1:64-71 கன்று கொண்டு விளவு எறிந்தமை முல். தனி 1:3; கேசியைக் கொன்றமை பரி. 3:31-32-கொடி முரு.150-151; பரி.1:11,60 2:60; 3:17-18; 4:36-40; 8:2; 13:4, 38, 39, 41; புற. 56.56 சக்கரபாணி நற். க.வா.7; பரி 1:61 - சங்கு கலி 105:9 - சூரியனைத் தந்தது புற.174: 1-5 - திரிவிக்கிரமாவதாரம் முல். 1-3; பரி.3; 54-56; கலி. 124:1-3 - திருமகள் கேள்வன் பரி. 3:90 - திருமறு மார்பன் பெரு.29-30; பரி: 1-7-8; 38-39, 2:30-31, 4:59, கலி. 104:9-10; 108:55-56; 145; 64-திருவோணத் திருவிழா மது. 590-591 - நரசிங்காவதாரம் பரி. 4.12-21 - நான்முகனைப் பயந்தமை பெரு. 402-404 - பரசுராமாவதாரம் அக. 220:3-9 - பலராமனுக்கு இளையான் பரி. 2:20-23 - பலராமாவதாரம் பரி. 1:1-5; 2:20-23; 13:33; கலி. 26:1, 36:1, 104:7-8, 105:11; புற. 56:3-4; பாற்கடலில் அரவணைத் துயில்தல் பரி. 13:26-29; கலி. 105:71-72; 123:3-4; மணிகள் பரி. 1-8-9; மல்லரைச் சாய்த்தல் கலி. 52.5; 134; 1-3 - மாலை பரி. 4:58; அக. 175:14-15 - வராகாவதாரம் பரி. 2:16-17; 3:23-24; 4:22-24; 13:34-36.

தொடுகடல் (சகரர் அகழ்ந்த கடல்) - புற. 6:3.

பலராமன் - பரி. 1.1-5; 2:20-23; 13.33; கலி.26:1; 36:1; 104:7-8; 105:11; புற. 56:3-4

பாரதக் கதைகள் - அரக்கு இல்லில் தீ. கலி. 25:1-4; அருச்சுனன் சிறு.238 -241 கன்னன் சூரியனது புதல்வன் கலி. 108:13; துச்சாதன்ன் துரௌபதியின் கூந்தலைப் பிடித்து இழுத்தல். கலி.101: 18-20 - பாண்டவர் பெரு 415-417 - பாரதப் போர்க் களம் கலி. 104:57-59; புற. 2: 13-16 - பீமன் சிறு. 238-241 - பீமன் அரக்கு இல்லிலிருந்து ஐவரைக் காத்தல் கலி. 25.7-8- பீமன் துச்சாதனன் நெஞ்சத்தைப் பிளந்து வஞ்சினம் முடித்தமை கலி. 101: 18-20 - பீமன் துரியோதனன் துடையை முறித்தது கலி. 52: 2-3

பிரகலாதன் - பரி. 4.12-21

பிரமன் - பரி. 3-12-14; 8:3; பரி.தி.8:7-8 - தாமரையில் தோன்றியவன் முரு. 164-165

முருகன் - முரு. 107-108; 116-117; 206-211; 264; தனி 1-2; மது. 181; கலி. 105:17; அக. 120:1, 266:20-21 - அசுரரை அழித்தல் குறு. 1:1-3- ஆடு பெற்றமை பரி. 5:61-62, ஆறெழுத்து மறை முரு. 186-187 - ஊர்தி புற

56:7-8; கிரவுஞ்ச மலையைப் பிளந்தமை முரு. 266-267; தனி 1:1-2 குறுந்.க.வா. 3-5, பரி. 5:9-10; 19:101-103: 21: 8-9 குன்றம் அக. 149; 14-16; கொடி முரு. 38-39; 122; குறு.க.வா. 3-5; பரி. 17; 48-49; அக. 149: 14-16; புற. 56: 7-8; கொற்றவை சிறுவன் முரு 258-259; பெரு. 457-459 - கோழிக் கொடி பெற்றமை பரி.5:55-58 - சிவகுமாரன் முரு. 256-259 தனி. 3; கலி. 83:13-15; சூரனை வென்றமை முரு. 45-46; 275; தனி. 1,2; பெரு. 457-459; பதி. 11:3-6; பரி. 5:1-7; 9:70-71; 14-18; 18:3-4; 19:101-103; 21:8-9; 26-29; கலி 27:15-16; 93:25-26; 104:13; அக.59-10-12; செந்தில் நகர் புற. 55:18-19; தெய்வயானை கணவன் முரு. 4-6; 175-176; பரி. 9:8-11, தேவசேனாபதி முரு. 260; தேவர் துயர் தீர்த்தல் முரு. தனி 1-2 - பகைவரை அழித்தல் முரு. 98-100; பதி. 26:12; பரி. 21:66-67 - பிறப்பு முரு. 253-255; பரி.5: 12, 27-54; 8:12-13; 125-127; 9:5-7; மயில் ஊர்தி பரி. 17:48-49; 21:2 - மயில் பெற்றமை பரி. 5:58-60; மாமரத்தை அழித்தது முரு. 59-61; பரி. 5:1-7; 9:70-71; 18:3-4; 19:101-103; 21:8-9, 28-29, கலி. 27:15-16; 104:13 மாலை முரு. 10-11, 43-44; பெரு. 75; பரி. 21:10-11; யானை முரு. 81-82, 247; குறு. 1:1-3; பரி. 17:48-49 வள்ளி திருமணம் முரு. 100-102; பரி. 9:8-11 14:21-22 19:5-7, 95; பரி. தி. 8:7-8.

மொழிபெயர் தேயம் - குறுந். 11:7; அக. 81:14-15; 211:7-8; 215:1-2; 295:13-17

யவனர் - பெரு. 316-319; முல். 59-61; நெடு 101-104; பதி.ப.2:7-9; அகம்.149:7-13; புறம்.56:18-21

வடபுலத்து அரசர் -புறம். 31:9-17

வடபுல மன்னர் - புற. 52:5-6

வடவர் - நெடு. 51-52; பட். 276; அக. 340:16-18.

I. 4. உவமைகள்*

புலியுரு வேய்ப்பப் பூத்த வேங்கை மரத்தைப் புலியெனத் தவறாக நினைத்து மதயானை தன் கோட்டாற் குத்துகிறது. குத்திய கோட்டினை எடுக்க இயலாமல் மலைப்பக்கம் முழுவதும் கேட்கும்படி அலறுகிறது. இக்காட்சி சிவபெருமான் உமையம்மையோடு வீற்றிருந்த கயிலைமலையைப் பத்துத் தலைகளை உடைய இராவணன் பெயர்க்க முயன்று முடியாமல் கதறியது போல உள்ளது என்பது குறிஞ்சிக் கலியில் (கலி - 38:1-9) வரும் உவமையாகும்.

நம்பி மூத்த பிரானைப் போல் வெண்கடம்பும், பருதியஞ் செல்வனைப் போல் செருந்தியும், காமனைப் போல் காஞ்சியும், சாமனைப் போல் ஞாழலும், ஆனேற்றுக் கொடியோன் போல் இலவமும் உள்ளன என்று பாலைக்கலி (கலி. 26:1-5) கூறுகிறது.

பலராமனின் பானிற வண்ணம்போல் வெள்ளையும், திருமாலைப் போல் காரியும், முக்கண்ணனுடைய மேனியைப் போல் குராலும், முருகனின் நிறம் போல் சேயும் உள்ளன என்று முல்லைக் கலி (கலி. 104:7-14) கூறுகிறது.

திருமாலின் சங்கு போல் சுரிநெற்றிக் காரியும், நம்பி மூத்த பிரானின் மார்பு மாலை போல் செம்மறு வெள்ளையும், சிவபெருமானின் மிடற்றணி போல் ஏந்திமிற் குராலும், வச்சிரத்தோனின் ஆயிரங்கண்ணேய்க்கும் பல்பொறிப் புகரும், முருகனுடைய வெண்துகில் போல் வெண்காற் சேயும் உள்ளன என்று முல்லைக்கலி (105:9-18) கூறுகிறது.

நம்பி மூத்த பிரானுடைய துழாய் மாலை போன்ற மயில்கள் மரா. மரத்தின் உயர்ந்த இடத்தில் தங்கும் என்று பாலைக்கலி (36:1-2) கூறுகிறது.

கணிச்சியோன் சூடிய பிறைக்கண் சிவந்தமாலை போல் ஏறுகளின் குருதிக் கோட்டொடு குடர் வலந்தன. (முல்லை. 103:40-45)

சுரிநெற்றிக் காரி பொதுவனைச் சாடிக் குடர் சொரியக் குத்தி குலைப்பதன் தோற்றம், எருமையை ஏறுகின்ற கூற்றவனுடைய நெஞ்சைப் பிளந்து அவன் குடலைக் கூளிக்கு இடுகின்ற உருத்திரனைப் போலிருந்தது என்பர். (முல்லை. 101:21-26)

காற்றைப் போல் வந்த கதழ்விடைக் காரி ஏற்றை வலியடங்கத் தழுவி அதன்மேல் தோன்றி நின்ற பொதுவன் எருமையை ஏறுகின்ற யமனுடைய நெஞ்சைப் பிளந்து அவனுயிரை வாங்கின இறைவனைப்

---

* சென்னைப் பல்கலை கழக மொழித்துறை எம்.பில். மாணவர் செல்வி ந. தேவியால் தொகுக்கப்பெற்றவை.

போன்றிருந்தாள் (137) என்றும் வருகின்ற முல்லைக்கலி உவமைகளில் பொதுவனைக் குத்தும் ஏற்றினுக்கும், ஏற்றினை அடக்கும் பொதுவனுக்கும் சிவபெருமான் உவமையாவதைக் காணலாம். (103:40-45)

அவுணரை அழிப்பதற்காக முப்புரங்களையும் எரிக்கச் சிவந்த சிவபெருமானின் முகம்போல் கதிரவன் சுடுகின்றான் என்று பாலைக்கலியிலும் (2:4-5)

சிவபெருமான் திரிபுரத்தை எரிக்க எழுந்த எரிபோல் பகலவன் காய்கிறான் என்று நெய்தற்கலியிலும் (150:1-3)

சிவபெருமானின் முகமும், முகத்திலிருந்து பிறந்த தீப்பொறியும் உவமையாக்கப்படுகின்றன.

ஓவாத வேகமோடு உருத்து வந்த சிவந்த எற்றினைத் தழுவி வெற்றிக் கொண்ட காயாம்பூங் கண்ணிப் பொதுவனின் தோற்றம், பகைவர் விடுத்த கூந்தற் குதிரையை வாயைப் பிளந்து கொன்று நின்ற மாயோனைப் போன்றிருந்தது என்றும் (முல்லை. 103:50-55)

பால்நிற வெள்ளை யெருத்தத்துப் பாய்ந்தானைக் குத்தும் இளங்காரித் தோற்றம், பான்மதி சேர்ந்த அரவினைக் கோள்விடுக்கும் திருமாலைப் போன்றிருந்தது என்றும் குறிக்கிறது முல்லைக் கலி. (104: 35-38).

களிறுகள் உள்ளேயிருக்க முளிகழை யுயர்மலை தீப்பிடித்துக் கொண்டது, துரியோதனின் சூழ்ச்சியினால் பாண்டவர்கள் உள்ளேயிருந்த அரக்குமாளிகை தீப்பற்றியது போலிருந்தது என்றும், இனங்காக்கும் எழில் வேழம் அழலவை மிதித்துத் தன் யானைகளைக் காத்தது வீமசேனன் அரக்கு மாளிகையிலிருந்து (தர்மபுத்திரர்) அறமகன் முதலியோரைக் காப்பாற்றியது போலிருந்தது என்றும் பாலைக்கலி கூறும். (25:3-11)

யானை ஒன்றுதன் எழில் மருப்பால் புலியைக் குத்திக் கொன்ற காட்சி, வீமன் துரியோதனனின் தொடையிலே குத்திக் கொன்றது போலவும், வெற்றி பெற்ற யானை பெருமிதத்துடன் தன் கூட்டத்தில் கலந்து மகிழ்ந்த காட்சி (கம்சனின் ஏவலால்) வந்த மல்லரை மறஞ்சாய்ந்த மால் மகிழ்ந்தது போலவும் இருந்தன என்று குறிஞ்சிக் கலியில் (52:1-6) உவமைகள் காட்டப் பெற்றுள்ளன.

தன்மீது பாய்ந்த பொதுவனைச் சாக்குத்திக் குலைக்கும் புன்குருக்கண் ஏற்றின் தோற்றம் திரௌபதையின் கூந்தலைத் தொட்ட துச்சாதனனின் நெஞ்சைப் பிளந்து நேரார் நடுவில் தன் வஞ்சினம் வாய்த்து நின்ற வீமனைப் போன்றிருந்தது என்றும், (முல்லை. 101:16-20)

இதே போல் பொதுவனைக் குத்திய வெள்ளை ஏற்றின் தோற்றம் துரோணரைக் கொன்ற திட்டதுய்மனைத் தன் தோளால் திருகும் அசுவத்தாமனைப் போன்றிருந்தது என்றும் முல்லைக் கலி (101:27-32) கூறுகிறது.

பின்னிணைப்பு - இரண்டு
பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிற் காணப்பெறும் பிறமொழிக் கருத்துகளும் கதைகளும்

திருக்குறள்

அறக்கடவுள் - அதி. 8.7; 13.10; 21.4
அணங்கு தெய்வம் - 109.1
இந்திரன் - 3.5
காமன் - 120.7
கூற்றுவன் - 27:9, 77:5, 90:4, 109.5
நரகம் பற்றியகுறிப்பு - 13.1, 25.3, 26.5, 84.5
தாமரைக் கண்ணன் - 111.3
திங்களைப் பாம்பு பற்றுதல் - 115.6
திருமால் உலகளத்தல் - 61.10
திருமகள் - 9.4; 17.7, 52.9, 62.7, 92.10
தேவர் - 108:3
பிரமன் படைத்த உலகம் - 107.2
புத்தேள் உலகு - 29:10
பேய்த் தொடர்பானது - 57.5
பேய் - 85.10

நாலடியார்

சந்திரனைப் பாம்பு பற்றியமை - ஒருபுடை பாம்பு
பாம்பு மதியத்தை இளம்பிறை
நிலவாய் மாறின் சேராமை - பகைவர் பணிவிடம்
திருமாலைத் தேவர்கள் வணங்கியமை - அங்கண் விசும்பின் அமரர்
கற்பில் சிறந்த அயிராணி - அரும்பெறற் கற்பின்
சிவன் முக்கண்ணுடைமை - கண்மூன் றுடையானும்

நான்மணிக்கடிகை

திருமால் முகம், சக்கரம், கண் - மதிமன்னு மாயவன்
திருமால் உலகத்தை வயிற்றில் வைத்தமை - படியை மடியகத்
திருமால் மூவுலகும் அளந்தமை - படியை மடியகத்
திருமால் கோவர்த்தனமலையைத் தாங்கினமை - படியை மடியகத்
திருமால் பானாசுரனது மதிலை அழித்தமை - படியை மடியகத்
ஊழிகள் ஆண்டுகளால் கணக்கெடுக்கப் படுகின்றமை - ஊழியும் யாண்டெண்ணி

கார் நாற்பது

திருமால் மார்பில் மாலை - பொருகடல் வண்ணன்
பலராமன் நிறம் வெண்மை - நாஞ்சில் வலவன்

களவழி நாற்பது

சந்திரனைப் பாம்பு பற்றியமை - இருநிலம் சேர்ந்த
கருடன் பற்றிய குறிப்பு - எவ்வாயும் ஓடி

இன்னா நாற்பது

சிவன் முக்கண் கொண்டமை	- முக்கண் பகவன்
பலராமனது பனைக்கொடி	- முக்கண் பகவன்
திருமாலது சக்கரப்படை	- முக்கண் பகவன்
முருகனுடைய வேற்படை	- முக்கண் பகவன்

இனியவை நாற்பது

முக்கண்ணன்	- கண்மூன்றுடையான்
துழாய் மாலையுடைய திருமால்	- கண்மூன்றுடையான்
நான்முகன் பிரமன் பற்றிய குறிப்பு	- கண்மூன்றுடையான்

ஐந்திணை ஐம்பது

மல்லரை வென்ற மாயோன்	- மல்லர்க் கடந்தான்
முருகன் கடம்பமலர் சூடியமை	- மல்லர்க் கடந்தான்
சிவன் முப்புரம் எரித்தமை	- மல்லர்க் கடந்தான்

திணைமாலை நூற்றைம்பது

திருமால் சக்கரத்தால் பகைவர் செலுத்திய களிறு எறிந்தமை	- பாழிபோல் மாயவன்தன்
ஐம்படைத்தாலி - திருமால் அஞ்சு ஆயுதம் (சங்கு, சக்கரம், வில், வாள், தண்டு என்ற ஐந்து வடிவத்தையும் அமைத்துச் செய்த அணிகலம்)	- வல்வருங் காணாய்
சூரியன் ஒற்றைச் சக்கரத்தேர் உடையவன்	- உருவேற் கண்ணாய்
முருகன் சூரபன்மாவை வீழ்த்தியமை	- கருங்கடல் மாந்திய
சக்கரம் உடைய திருமால், பலராமன் பற்றிய குறிப்பு	- இருள்பரந் தாழியான்

பழமொழி

பசுவை மேய்த்த நெடுமால்	- பல்லார் அவை நடுவண்
திங்களைப் பாம்பு தீண்டுதல்	- அங்கண் விசும்பின்
துரியோதனனுக்குப் பலராமன் பாரதப் போரில் உதவாமை	- பாப்புக் கொடியாற்கு
சூதாடியமை, பாரதப்போர் நடந்தமை	- பாரதத் துள்ளும்
நாரண அஸ்திரம் பற்றி குறிப்பு	- காழார மார்ப
சீதையைக் கவர்ந்ததால் இராவணன் போரில் இறந்து போனமை	- ஆற்றப் பெரியார்
யமுனை நதியிடத்தில் திருமாலையும் நப்பின்னை தன் அழகில் மயங்கச் செய்தமை	- விழும் இழை நல்லார்
கருட ஊர்தி உடைய திருமால்	- சுற்றத்தார் நட்டார்
திருமால் உலகம் அளந்தமை	- சுற்றத்தார் நட்டார்

வீடணன் இலங்கை அரசைப் பெற்றமை	- பொலந்தார் இராமன்
மனுநீதிச் சோழன் கதை	- சாலமறைத்தோம்பிச்
அரக்கு மாளிகையில் பாண்டவர்கள் தப்பினமை	- குரைத்துக் கொளப்பட்டார்
வாமன அவதாரத்தில் உலகு அளந்தமை	- ஆஅம் எனக்
உமையொரு பாகம்	- ஒட்டியகாதல்
சிவன் கட்டங்கக் கொடி கொண்டமை	- ஒட்டியகாதல்

சிறுபஞ்சமூலம்

திருமகள் பற்றிய குறிப்பு	- பேண் அடக்கம் பேணாப்
சுவர்க்கம், வீடு, ஞானம்	- இல்லியார் நல்லறம்
கங்கைக் கரைப் பூசை	- உண் இடத்தும் ஒன்னார்

திரிகடுகம்

திருமால் உலகளந்தமை	- கண்ணகல் ஞாலம் (க. வாழ்த்து-காப்புச் செய்யுள்)
திருமால் வஞ்ச வண்டியை உடைத்தமை	- கண்ணகல் ஞாலம் (க. வாழ்த்து-காப்புச் செய்யுள்)
திருமால் காயாம் பூமேனி நிறம்	- கண்ணகல் ஞாலம் (க. வாழ்த்து-காப்புச் செய்யுள்)
அருந்ததி கற்பு	- அருந்ததிக் கற்பினார்

ஐந்திணை எழுபது

சிவன் மகன் கணபதி	- எண்ணும் பொருளினிதே

இன்னிலை

முருகன் தந்தை சிவன்	- வேலன் தரீஇய
உமையை ஒரு பாகத்தில் வைத்தமை	- வேலன் தரீஇய
கொன்றை மலர் அணிந்தமை	- வேலன் தரீஇய
மழு ஏந்தியமை	- வேலன் தரீஇய
காலனைக் காலால் உதைத்தமை	- வேலன் தரீஇய

பின்னிணைப்பு - மூன்று
சிலப்பதிகாரத்திற் காணப்பெறும் பிறமொழிக் கதைகள்

இராமன் கதை	- புறஞ்சேரியிறுத்த காதை, 63-65
இராமன் கதை	- ஊர்காண் காதை, 46-48
நளன் கதை	- ஊர்காண் காதை, 50-57
ஆயர்பாடியில் கண்ணன் பிறந்த கதை	- கொலைக்களக் காதை, 46-47
கண்ணன் நப்பின்னையை மணந்த கதை	- கொலைக்களக் காதை, 48-51
கன்றின் வடிவாக வந்த அசுரன் கதை	- ஆய்ச்சியர் குரவை - பாட்டு 1
பாற்கடல் கடைந்த வரலாறு	- ஆய்ச்சியர் குரவை - பாட்டு 2
கண்ணன் குருந்த மரத்தை வெட்டிய கதை	- ஆய்ச்சியர் குரவை - பாட்டு 3
கண்ணன் நப்பின்னையின் துணியை ஒளித்த கதை	- ஆய்ச்சியர் குரவை-பாட்டு 1,2,3
கண்ணன் கதிரைத் திகிரியால் மறைத்த கதை	- ஒன்றன் பகுதி - 1
கண்ணன் குருந்து ஒடித்த கதை	- உள்வரி வாழ்த்து - 1
திருப்பாற்கடல் கடைந்த வரலாறு	- வாழ்த்து - 5
கண்ணன் உலகை உண்ட கதை	- முன்னிலைப் பரவல் - 2
திருப்பாற்கடல் கடைந்த வரலாறு	- பரவல் - 1
கண்ணன் யசோதையார் கடைக் கயிற்றால் கட்டுண்ட கதை	- முன்னிலைப் பரவல் - 1
கண்ணன் வெண்ணெய் உண்ட கதை	- பரவல் - 2
வாமன அவதாரக் கதை	- பரவல் - 3
கண்ணன் பஞ்சபாண்டவர்க்காகத் தூது சென்றது	- பரவல் - 3
வாமன அவதாரக் கதை	- படர்க்கைப் பரவல் - 1
இராமாவதாரக் கதை	- படர்க்கைப் பரவல் - 1
கஞ்சனை வென்ற கதை	- படர்க்கைப் பரவல் - 3
பஞ்சவருக்குத் தூது சென்ற கதை	- படர்க்கைப் பரவல் - 3
மயிடா சூரனைக் கொற்றவை கொன்ற கதை	- வழக்குரை காதை, 34-35
இறைவனை ஆடல்கண்டருளிய பத்ரகாளி கதை	- வழக்குரை காதை, 37-38
தாருகனைக் கொன்ற கொற்றவை கதை	- வழக்குரை காதை, 38-40
செவ்வேள் அவுணரைக் கொன்றது	- கட்டுரை காதை, 188-190
முருகன் சூரனாகிய மாமரத்தை வெட்டியது	- குன்றக்குரவை - பாட்டுமடை 7
முருகன் கார்த்திகை பெண்களிடம் வளர்ந்தது	- குன்றக்குரவை - பாட்டுமடை 9
முருகன் கிரவுஞ்ச மலையைப் பிளந்தது	- குன்றக்குரவை - பாட்டுமடை 9

மணிமேகலையிற் காணப்பெறும் பிறமொழிக் கதைகள்

கதைப்பெயர்	காதை	பாடலடிகள்
நாளங்காடிப் பூத கதை	விழாவறை காதை	19-20
இந்திர விழா தோன்றியது	ஊரலர் உரைத்த காதை	1-3
சம்பாதி சிறகிழந்த கதை	மலர்வனம் புக்க காதை	33-34
கவேரன் தவம் இருந்தது	மலர்வனம் புக்க காதை	35-36
பிரத்யும்நன் பேடிவடிவம்	மலர்வனம் புக்க காதை	123-124
அருச்சனன் பேடிவடிவம் எடுத்தது	மலர்வனம் புக்க காதை	146-147
திருமகள் கொல்லிப்பாவை உருவெடுத்தது	மணிமேகலா தெய்வம் தோன்றிய காதை	4
முருகன் கிரவுஞ்ச மலையைத் தகர்த்தது	மணிமேகலா தெய்வம் தோன்றிய காதை	13-14
காவிரியின் பிறப்புக் கதை	பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை	52-53
சூரியன் தோன்றிய கதை	அறவாணர்த் தொழுத காதை	72-76
அசலன் கதை	ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை	43
சிருங்கி கதை	ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை	43
விருஞ்சி கதை	ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை	44
கேச கம்பளன் கதை	ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை	44-45
அகத்தியர், வசிட்டர் பிறப்பு	ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை	94-96
தேவர்கள் அமுதுண்டு ஒளித்தது	பாத்திரம் கொண்டு பிச்சை புக்க காதை	51-52
சேது பந்தனம்	உலகறவி புக்க காதை	9-12
அகலிகை கதை	உதயகுமாரன் அம்பலம் புக்க காதை	90-91
சுவாகையின் கதை	உதயகுமாரன் அம்பலம் புக்க காதை	92-97
வாமன அவதாரம்	சிறைக்கோட்டம் அறக் கோட்டமாக்கிய காதை	51-54
மயவன் குரவை ஆடியது	சிறைக்கோட்டம் அறக் கோட்டமாக்கிய காதை	65-66
பரசுராமன் கதை	சிறை செய் காதை	24-25
அகத்தியர் சாபம்	ஆபுத்திரனாடு அடைந்த காதை	7-14
இராமன் கதை	சமயக்கணக்கர்தம் திறம் கேட்ட காதை	53-54

பின்னிணைப்பு - நான்கு
தேவாரத்தில் இடம்பெறும் தொன்மக் கதைகள்*
(அடைப்புக்குறிக்குள் உள்ள எண்கள் திருமுறைகளின் எண்கள்)

1. உமையை ஒரு பாகத்தே வைத்தமை (1, 2, 3, 4, 5, 6)
2. சந்திரனைத் தலையில் சூடியமை (1, 2, 3, 4, 5, 6)
3. நஞ்சுண்டமை (1, 2, 3, 4, 5, 6, 7, 8)
4. மூன்றாவது கண்ணைத் தோற்றுவித்தமை (1, 2, 3, 4, 5, 6, 7)
5. ஆலமர் செல்வனாக இருந்து அறம் உரைத்தமை (1, 2, 3, 4, 5, 6, 7)
6. வேதத்தைத் தோற்றுவித்தமை; வேதத்தின் பொருளானமை; வேதத்தை ஓதியமை; வேதப்பொருள் செய்தமை (1, 2, 3, 4, 5, 6, 7)
7. எண்மூர்த்தி ஆகியமை (1, 2, 3, 4, 5, 6, 7)
8. பார்த்தனுக்குப் பாசுபதம் அளித்தமை (1, 2, 3, 4, 5, 6, 7)
9. இராவணன் கயிலையை எடுத்தபோது ஆணவம் அடக்கி அருள் புரிந்தமை (1, 2, 3, 4, 5, 6, 7)
10. கொக்கிறகு சூடியமை (1, 2, 3, 4, 5, 6, 7)
11. ஆதிரைநாள் உகந்தமை (1, 2, 3, 4, 5, 6, 7)
12. முப்புரம் எரித்தமை, மூவர்க்கருள் புரிந்தமை (1, 2, 3, 4, 5, 6, 7)
13. கொடுகொட்டி ஆடியமை (2, 3, 4, 5, 6, 7)
14. யானையை உரித்தமை, போர்த்தமை (1, 2, 3, 4, 5, 6, 7)
15. காலனைக் காலால் உதைத்தமை (1, 2, 3, 4, 5, 6, 7)
16. காமனை எரித்தமை, உருவிலாளானானமை (1, 2, 3, 4, 5, 6, 7)
17. தக்கனது வேள்வியைத் தகர்த்தமை, தேவர்களைத் தண்டித்தமை (1, 2, 3, 4, 5, 6, 7)
18. சலந்தரனைப் பிளந்தமை (1, 2, 3, 4, 6)
19. அந்தகனைச் சூலத்தால் குத்தியமை (1, 3, 4, 5, 6, 7)
20. பிரமனது தலையைக் கொய்தமை (1, 2, 3, 4, 5, 6, 7)
21. பிரமகபாலம் ஏந்தியமை, பலி ஏற்றமை (1, 2, 3, 4, 5, 6, 7)
22. பூதஞ்சூழ இருந்தமை (1, 2, 3, 4, 5, 6, 7)
23. பாம்பை அணிந்தமை (1, 2, 3, 4, 5, 6, 7)
24. கோவண உடை உடுத்தமை (1, 2, 3, 4, 5, 6, 7)
25. முயலகனை அடக்கியமை (4, 6, 7)
26. தமருகதத்தை ஏந்தியமை (1, 4, 6, 7)
27. மழு ஏந்தியமை (1, 2, 3, 4, 5, 6, 7)
28. மான் ஏந்தியமை (1, 2, 3, 4, 5, 6, 7)
29. மான்தோல் உடுத்தமை (1, 2, 3, 4, 5, 6)
30. சிங்கத்தை உரித்தமை, உடுத்தியமை (3, 7)

---

* சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித்துறை எம்.பில். மாணவர் நா. சேதுராமனால் தொகுக்கப் பெற்றவை

31. புலியை உரித்தமை, உடுத்தமை (1, 2, 3, 4, 5, 6, 7)
32. அனலைக் கையில் ஏந்தியமை (1, 2, 3, 4, 5, 6, 7)
33. சூலத்தைத் தரித்தமை (1, 2, 3, 4, 5, 6, 7)
34. திருமாலும் பிரமனும் அடிமுடி தேடி-யமை, சிவன் அழலுருவாகக் காட்சி யளித்தமை (1, 2, 3, 4, 5, 6, 7)
? . ஆமை ஓடு அணிந்தமை (1, 2, 3, 4, 5, 6, 7)
்6. பன்றிக் கொம்பு, பல், முள் அணிந்தமை (1, 2, 3, 4, 5, 6, 7)
37. மாலை ஒரு பாகத்தே கொண்டமை (1, 2, 3, 4, 5, 6, 7)
38. பிரமனையும் ஒரு பாகத்தே கொண்டமை (3, 5)
39. மூவராயும், மூவரில், முதல்வராயும் இருக்கின்றமை (1, 2, 3, 4, 5, 6, 7)
40. எலும்பு மாலையை அணிந்தமை (1, 2, 3, 4, 5, 6, 7)
41. நீறு பூசியமை (1, 2, 3, 4, 5, 6, 7)
42. வீணை வாசித்தமை (1, 2, 3, 4, 5, 6, 7)
43. சுடுகாட்டில் நடனமாடியமை (1, 2, 3, 4, 5, 6, 7)
44. பாண்டரங்கம் ஆடியமை (2, 3, 4, 5, 6, 7)
45. தில்லையில் நடனமாடியமை (1, 2, 4, 5, 6, 7)
46. விடைக்கொடி, விடை ஊர்தி உடையமை (1, 2, 3, 4, 5, 6, 7)
47. கொன்றை அணிந்தமை (1, 2, 4, 5, 6, 7)
48. பால விருத்தரான திருவிளையாடல் (1, 4, 5, 6, 7)
49. கணபதி தோன்றியமை, கணபதியின் தந்தை சிவன் (1, 2, 3, 4, 5, 6, 7)
50. உமை மணாளன் (1, 2, 3, 4, 5, 6, 7)
51. உமை தழுவ இறைவன் குழைந்தமை (2, 3, 5, 6)
52. உமை தழுவியமை, புணர்ந்தமை (1, 2, 3, 4, 6)
53. உமை ஊடியமை, இறைவன் ஊடல் தவிர்த்தமை - (2, 4, 6)
54. உமை காண நடன மாடியமை; ஆடல் கண்டு உமை மகிழ்ந்தமை (2, 4, 6, 7)
55. உமை பாடி ஆட நடனமாடியமை (2, 3, 4)
56. சீவன், இமயராசனின் மருமகன் (2, 3, 6)
57. கங்கை மணாளன் (4, 6, 7)
58. காளி காண நடனாமாடியமை, காளியோடு நடனமாடியமை (1, 3, 4, 5, 6)

திருமால் பற்றிய தொன்மக் கதைகள்

1. திருமால் பாம்பணைமேல் துயில் கொண்டமை (1, 2, 3, 4, 5, 6, 7)
2. திருமால் கருட ஊர்தி, கருடக் கொடியைக் கொண்டமை (2, 3, 6)

3. திருமகளின் கணவன் திருமால் (1, 2, 3, 4, 5, 7)
4. திருமால் திருத்துழாய் அணிந்தமை (1)
5. திருமால் சங்கு வைத்திருந்தமை (1, 3, 7)
6. திருமால் திருவோண நாள் உகந்தமை (4)
7. சக்கரம் வேண்டித் திருமால் சிவனை வழிபட்டமை (1, 5)
8. சிவன், திருமாலுக்குச் சக்கரம் அளித்தமை (1, 2, 3, 4, 5, 6, 7)
9. மேகவுருக் கொண்டு திருமால் சிவனைத் தாங்கியமை (4)
10. சிவன் திருமாலுக்குக் குருவாய் நின்று அருளியமை (3)
11. சிவன் திருமாலைப் படைத்தமை (6)
12. ஊழிவெள்ளத்தில் திருமால் ஆலின் மேல் கிடந்தமை (4)
13. திருமால், வெள்ளைப் பன்றி உருவெடுத்துக் கடலில் மூழ்கின உலகினைக் காத்து இறைவனைப் பூசித்தமை (1, 2, 3, 6)
14. இரணியன் என்ற அசுரனைக் கொன்ற சாபம் தீரத் திருமால் வழிபட்டமை (1, 3)
15. திருமால் நரசிம்ம அவதாரம் எடுத்து இரணியன் உடலைக் கிழித்தமை (4, 6)
16. திருமால் வாமன அவதாரம் எடுத்து மூன்று உலகம் அளந்தமை (1, 2, 3, 4, 5, 6)
17. திருமால் வாமன அவதாரத்தில் சிவனைப் பூசித்தமை (1, 3)
18. திருமால் பரசுராம அவதாரத்தில் சிவனை வழிபட்டமை (7)
19. திருமால் இராமாவதாரத்தில் கோயில் கட்டிச் சிவனை வழிபட்டமை.
    அலைவளர் - பதிகம் - சம்பந்தர்
    பாசமும் - பதிகம் - அப்பர்
    இவ்விரண்டிலும் இடம் பெறுகிறது.
20. இராமன் சேதுபந்தனம் செய்தமை (3, 4, 6)
21. இராமன் இராவணின் உயிரைப் போக்கியமை (3, 6)
22. இராமனுக்கு ஏற்பட்ட பழியைப் போக்கியமை (6)

கண்ணன் அவதாரத்தில் நிகழ்ந்த தொன்மக் கதைகள்

1. பேய் முலை உண்டு உயிர் போக்கியமை (5)
2. ஏறு அடர்த்தமை (4)
3. குருந்தொசித்தமை (2, 4, 6)
4. குரவைக் கூத்தாடியமை (5)
5. கோவர்த்தன கிரியைத் தாங்கினமை, மழையைக் காத்தமை (1, 2, 3, 4)
6. புள் வாயைப் பிளந்தமை (பகன்) (1, 7)

7. மருத மரங்களை உதைத்தமை (1, 7)
8. கன்று குணிலாக எறிந்து விளங்கனி கொண்டமை (1, 3)
9. யானைக் கொம்பு ஒடித்தமை (1, 7)
10. மண்ணினை உண்டு உமிழ்ந்தமை (7)
11. கருடனைச் செற்றமை (2, 6)

பிரமன் பற்றிய தொன்மக் கதைகள்

1. சிவன் பிரமனைப் படைத்தமை (2, 6)
2. பிரமன் திருமாலின் உந்தியில் தோன்றியமை, திருமாலின் புதல்வன் (1, 3)
3. பிரமன் தாமரை மலரில் வீற்றிருந்தமை (1, 2, 3, 4, 5, 6, 7)
4. பிரமன், பிரமபுரத்தில் சிவனை வழிபட்டமை (1, 2, 3)

பிற தொன்மக் கதைகள்

1. நந்திக்கு அருள் செய்தமை; நந்தீசன் மாணிக்கவாசகனாகப் பிறந்தமை (2, 6)
2. இந்திரன் மூங்கிலில் மறைந்திருந்து வழிபட்டமை (1, 2, 3)
3. இந்திரனும் வெள்ளானையும் வெண்காட்டில் வழிபட்டுப் பேறடைந்தமை (2, 3)
4. குபேரன் சிவபிரானின் தோழனானமை (1, 2, 6)
5. சிலம்பன் என்ற அசுரன் தலைவடிவாய் இராகு என்ற பெயர் தாங்கிச் சிவனை வழிபட்டமை (1, 2, 3)
6. உபமன்னியு முனிவருக்காகப் பாற்கடல் ஈந்தமை (2, 4, 5, 6)
7. மச்சகந்தியைப் புணர்ந்த பராசரர் சிவனை வழிபட்டுக் கொச்சை நீங்கியமை (1, 3)
8. சண்டிகேசருக்கு அருளியமை (1, 2, 3, 4, 5, 6)
9. கண்ணப்பருக்கு அருளியமை (3, 4, 6)
10. நமிநந்தியடிகள் விளக்கிட்டமை (1, 4, 6)
11. பகீரதன் தவம் செய்தமை, சிவன் கங்கையை உலகிற்குத் தந்தமை சகரர்களை உய்வித்தமை (3, 4, 6, 7)
12. சிலந்திக்கு அருள் புரிந்தமை; சிலந்தி கோச்செங்கணனாகப் பிறந்தமை, கோயில் கட்டியமை (1, 2, 3, 4, 6)
13. சடாயு, சம்பாதி பற்றிய செய்திகள் கள்ளார்ந்த பதிகம் முழுவதிலும் காணப்படுகின்
14. ஊழி வெள்ளத்தில் பிரமபுரம் மிதந்த (1, 2, 3)
15. முதுகுன்றம் ஊழி வெள்ளத்தில் மிதந்தமை (1, 3)
16. வெண்காட்டில் முக்குளம் உண்டானமை (2)
17. இராவணன் குபேரனது புட்பகத் தேரைப் பறித்துக் கொண்டமை (1, 4, 6)
18. இராவணன் சீதையைக் கவர்ந்தமை (3)

பலர் நோக்கில் தொல்காப்பியம்*

ஆ. சிவலிங்கனார்

தொல்காப்பியம், ஒரு பழம் பெருந்தமிழ் இலக்கணநூல் என்று யாவராலும் அறிந்து போற்றப் பெற்று வருவது. தமிழின் எழுத்து, சொல், பொருள் இலக்கணங்களைக் கூறுவதால் இலக்கணநூல் என்று கொள்வது பொதுநிலை. சிறப்பு நிலையில் பலர் பலவாறாகத் தொல்காப்பியத்தைக் கண்டு வருகின்றனர். அதனால், அவர்கள் அந்நூலுக்குத் தனித்தனிப் பெயரிட்டுக் கூறி வருகின்றனர். அவை பற்றி இங்கு நோக்குவோம்.

தமிழ் இலக்கண நூல்

தொல்காப்பிய உரையாசிரியர்களாகிய இளம்பூரணர், நச்சினார்க்கினியர் முதலிய உரையாளர்கள், தொல்காப்பியம் ஒரு இலக்கண நூல் என்ற நோக்கிலேயே உரை எழுதினர். அவர்களுக்குக் கிடைத்த ஆதாரம், பனம்பாரனாரின் தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம் ஆகும். அப்பாயிரம்,

"வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலம்தொகுத் தோனே போக்கறு பனுவல்;
நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து
அறம்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற்கு அரில்தபத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப் பியன்எனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே.."

என்பதாகும்.

பல்புகழ் நிறுத்த படிமையோனாகிய தொல்காப்பியன், நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையில், அதங்கோட்டாசான் கேட்ப எழுத்திலக்கணத்தை முன்வைத்துச் சொல்லிலக்கணம் பொருள்

* சேலம் வேலூர் கந்தசாமி கண்டர் கல்லூரி அறக்கட்டளைப் பொழிவு
* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் * 1999 மேத் திங்கள்

இலக்கணங்களைத் தமிழ்கூறு நல்லுலகத்தின் வழக்கும் செய்யுளும் காரணமாகப் பழந்தமிழ் நூல்களைப் பார்த்து முறைப்பட ஆராய்ந்து, தன் நூலுள் தொகுத்துக் கூறினான் என்பது பாயிரப் பாடல் கருத்து.

இதன்மூலம் அறியப்படும் செய்தி, தொல்காப்பியமானது தமிழகத்தின் எழுத்து, சொல், பொருள் இலக்கணங்களைக் கூறுவது என்பதாம். எனவே, சிறப்புப் பாயிரமானது தொல்காப்பியம் ஒரு தமிழ் இலக்கண நூல் என்று கூறுகிறது எனலாம்.

இப்பாயிரத்து வரும் புலம் தொகுத்தோன் என்பதற்கு இளம்பூரணர்,

அவ்விலக்கணங்களைத் தொகுத்துக் கூறினான் என்றார். நச்சினார்க்கினியரும் புலம் என்பது இலக்கணங்களை என்றார். மாதவச் சிவஞான முனிவரும், தமது பாயிர விருத்தியில் புலம் என்பதற்கு நூல் எனப் பொருள் கூறினும், இலக்கணம் கூறுவதே தொல்காப்பியம் என்ற கருத்தினர் ஆனார். அரசஞ் சண்முகனாரும், தமது சண்முக விருத்தியில், தொல்காப்பியம் இலக்கணம் கூறும் நூலே என்ற கருத்தைப் புலப்படுத்தியுள்ளார்.

எனவே, உரையாசிரியர் யாவரும் தொல்காப்பியம் தமிழ் இலக்கண நூல் என்றே கொண்டனர் என்பது புலப்படும். இன்று வரை யாவரும் ஒப்புவது இக்கருத்தாகும்.

இனித் தொல்காப்பிய எழுத்ததிகாரம் எழுத்திலக்கணம் கூறுவது என்பதிலும், சொல்லதிகாரம் சொல்லிலக்கணம் கூறுவது என்பதிலும் யாருக்கும் ஐயமில்லை. ஆனால் பொருளதிகாரம் கூறுவது என்ன என்பதில் பலர் பல கருத்துடையாராயினர்.

தொல்காப்பியம் வாழ்வியல் நூல்

வெள்ளை வாரணனார், ஆளவந்தார் போல்வர் பொருளதிகாரம் ஒரு வாழ்வியல் நூல் என்பர்.

> "இவ்வுலகத்துள்ள காட்சிப் பொருள் கருத்துப்பொருள் ஆகிய எல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்து, அவற்றை முதல், கரு உரியென மூவகைப் படுத்துணர்த்தி, இவ்வுலகத்து வாழ்வாங்கு வாழும் வாழ்க்கை முறையினை வகுத்துரைப்பது பொருள் இலக்கணம் எனப்படும். இப்பகுதி தமிழுக்கே சிறப்புரிமையுடையதாகும். நிலமும் காலமும் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத அடிப்படைப் பொருள்கள்" (தொல்காப்பியம் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, 1978).

என வெள்ளைவாரணர் கூறுவதும்,

> தொல்காப்பியர் இவ்வாழ்வியற் கூறுகளைத் தம் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தின் மூன்றாம் பகுதியாகிய

பொருளதிகாரத்தில் கூறியுள்ளார் அவர் தாம் கூறும் வாழ்வியற் கூறுகளில் ஒன்றாகிய அக வாழ்க்கையைப் பொருளதிகார அகத்திணையியல், களவியல், கற்பியல் என்ற மூன்றியல்களில் கூறுகின்றார் என ஆளவந்தார், தொல்காப்பியக் களவியல் உரைவள நூலின் முன்னர்க் கூறுவதும் காணலாம்.

அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல்களிற் கூறிய செய்திகள் வாழ்வுச் செய்திகள் என்பதில் ஐயமில்லை. அவற்றை ஒரு நிரல்படுத்திப் பிற்காலத்தில் ஒரு தொடர்கதை போல் கொண்டு கோவை நூலாக அமைத்தனர் என்பதை அறியும்போது, பொருளதிகாரம் வாழ்வியல் நூல் என்று கூறுவதில் தவறு ஏதும் இல்லை.

> "இது வழக்கு நூலாதலின் பெரும்பான்மையும் நால்வகை வருணத்தார்க்கும் உரிய இல்லறம் உணர்த்திப் பின் துறவறமும் சிறுபான்மை கூறுப. அப்பொருள்கள் இவ்வதிகாரத்துட் காண்க. பிரிதல் நிமித்தம் கூறவே இன்பநிலை யின்மையும் கூறிக் காமம் சான்ற என்னும் கற்பியற் சூத்திரத்தால் (192) துறவறமும் கூறினார். வெட்சி முதலா வாகையீறாக அறனும் பொருளும் பயக்கும் அரசியல் கூறி, அவற்றது நிலையின்மை காஞ்சியுட் கூறவே, அறனும் பொருளும் அவற்றது நிலையின்மையும் கூறினார். இங்ஙனம் இந்நிலையாமையானும் பிறவற்றானும் வீட்டிற்குக் காரணம் கூறினார். இங்ஙனம் கூறவே, இவ்வாசிரியர் பெரிதும் பயன் தருவதோர் இலக்கணமே கூறினார் ஆயிற்று. இதனாற் செய்த புலனெறி வழக்கினை யுணர்ந்தோர் இம்மை மறுமை வழுவாமல் செம்மை நெறியால் துறைபோவர் ஆதலின்..."

என நச்சினார்க்கினியர் பொருளதிகார உரைமுகப்பில் கூறினார். ஆதலின் அவரும் பொருளதிகாரம் வாழ்வியல் பற்றிக் கூறுவது என்ற கருத்தினர் என அறியலாம்.

தொல்காப்பியம் பாவியல்நூல்

திருச்சித் தேசியக் கல்லூரி ஈசுவரன் என்பார், தொல்காப்பியர் ஓர் பாவியல் பேராசான் என்ற தலைப்பில், இந்தியப் பல்கலைக்கழக இருபத் தொன்பதாம் கருத்தரங்க ஆய்வுக் கோவையில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். தொல்காப்பியப் பொருளதிகாரம் பாவியல் நூல் என்ற கருத்துப்பட சில விளக்கங்களுடன் எழுதியுள்ளார். (1) .வெண்பா ஆசிரியம் முதலிய பாவகை அமைத்து (2) அவை அறம் பொருள் இன்பம் பொருளாக வரும் எனக்கூறி (செய். 105) வஞ்சிப்பாவிலும் கலிப்பாவிலும் புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, அவையடக்கியல் செவியறிவுறூஉ ஆகியவை வாரா (செய். 109, 110) என்றும் கூறிச் செய்யுள் உறுப்புகளுள் பயன் என்பதையும் கூறித் (செய்-1) தலைவன் முதலான

பாத்திரங்களின் இயல்பு முதலியனவற்றையும் செய்யுளில் அமைக்கு-மாறும் கூறியிருத்தலின் பொருளதிகாரம் பாவியல் பற்றியதாகக் கொண்டு தொல்காப்பியர் பாவியல் ஆசான் என்றார்.

முனைவர் ச. அகத்தியலிங்கம் அவர்கள், புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதிய பார்வையில் தொல்காப்பியப் பொருளதிகாரம் என்னும் தலைப்பில் 11, 12 மே 1998ல் நடத்திய கருத்தரங்கில் "தொல்காப்பியர் ஒரு பாவியல் பெருநூல், தொல்காப்பியர் ஒரு பாவியல் பேராசான்" என்ற தலைப்பில் நீண்டதொரு கட்டுரை, படித்துள்ளார்கள். மேலை நாட்டார் கருத்துகளுடன் தொல்காப்பியர் கருத்துக்களை ஒப்பிட்டுப் பொருளதிகாரம் ஒரு பாவியல் நூல் என்று வலியுறுத்தியுள்ளார்கள். ஆனால் அவர்கள் வாழ்வியல் நூல் என்பாரை மறுத்துள்ளார்கள். மறுப்பில் எந்தக் காரணமும் கூறப்படவில்லை. வாழ்வியல் நூல் ஆகாது என்பதற்கான காரணங்கள் காட்டியிருக்க வேண்டும் காட்டவில்லை. மாறாகப் பாவியல் நூல் என்பதற்கான காரணங்களே காட்டப்பட்டன.

யானும் (சிவலிங்கனார்) பொருளதிகாரம் பாவியல் கூறுவது என்ற கருத்தினனே. சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடாகிய (1997) தொல்காப்பியச் செய்யுளியல் உரைவள நூலில் செய்யுளியல் முதற்சூத்திரத்தில்,

> "உலக ஒழுக்கங்களைச் செய்யுளில் கூறுங்கால் எப்படிக் கூறி அமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தவே தொல்காப்பியம் இயற்றப்பட்டது."

என்றெழுதியுள்ளேன். எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் செய்யுளில் அமைத்தற்கென்றே இலக்கணம் கூறுகின்றன என்பதும் கொள்ளல் வேண்டும். உலக வாழ்வியற் கூறுகளைச் செய்யுளில் அமைப்பதாயின் எவ்வாறு அமைத்தல் வேண்டும் என்பதே பொருளதிகாரத்தின் நோக்கம் என்னலாம். அதனால்தான் பொருள் பற்றியனவான அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்பனவற்றை முன்னரும், அப்பொருள் நிகழ்ச்சியில் ஏற்படும் மெய்ப்பாட்டை மெய்ப்பாட்டியல் எனப் பின்னரும், பொருள் நிகழ்ச்சிப் பேச்சுகளில் வரும் செய்திகளுக்கு விளக்கத்துக்காக வரும் உவமம் பற்றிய உவமவியலை அதன் பின்னரும், அவற்றைத் தன்கண் அடக்கிவரும் செய்யுள் பற்றிச் செய்யுளியல் என அதன் பின்னரும் அமைத்தார் தொல்காப்பியர். யாவும் மரபு வழுவாமல் வரவேண்டும் என்பதற்காக மரபியலை யீற்றிலும் அமைத்தார்.

எனவே செய்யுள் செய்வோன், பாடுபொருளாக, குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐந்து நிலமக்கள் ஒழுகலாறு பற்றிப் பாடும்போது, உலகநடைமுறையைப் பின்பற்றாமல், புணர்தல், பிரிதல், இரங்கல், இருத்தல், ஊடல் இவற்றின் நிமித்தம் என்னும்

ஒழுக்கங்களை அவற்றுக்கு முறையே உரியவாக்கிக் கூதிர் முதலிய காலங்களையும் உரியனவாக்கி அவ்வந் நிலங்களுக்கும் தெய்வம் உணா முதலிய அனுபவப் பொருள்களையும் உரிமைப்படுத்தி, அவை பற்றியே பாடுதல் வேண்டும் என வரையறை செய்வது பொருளதிகாரம் அதனால் செய்யுள் இயற்றுவதற்கு வரையறை செய்யவே பொருளதிகாரம் தோன்றியது என்பதால் அது பாவியல் நூலாகும் என்பதில் ஐயம் இல்லை.

பொருளதிகாரம் மட்டில் பாவியல் பற்றியதன்று. எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் பாவியல் பற்றியனவே என்னலாம். எழுத்ததிகாரத்தில் வரும் ஐகார ஔகாரங்கள் தனி எழுத்துகளாக இன்றி அய், அவ் எனக் கூட்டெழுத்துகளாக வரும் என்பது செய்யுளை நோக்கியதேயாம். செய்யுளில் எதுகை மோனைகளுக்கு ஐ-அய் எனவும் ஔ-அவ் எனவும் வரும் என்பதை,

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
அய்யர் யாத்தனர் கரணம் என்ப
அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்.

இவற்றுள் பொய் என்பதற்கேற்ப அடுத்த அடியில் அய்(ஐ) என வந்ததும், செவ்வியான் எனப்பின் வருவதற்கேற்ப முதலில் அவ்விய என வந்ததும் காண்க.

புணரியலில் கூறப்படும் புணர்ச்சி விதிகள் பெரும்பாலும் செய்யுட்கே உரியன. பேச்சு வழக்கில் சிறுபான்மையே வரும். முருகன் கண்டான் என்பது எழுவாய்த் தொடர். இது இரண்டாம் வேற்றுமைத் தொடராக வரவேண்டுமானால் முருகற் கண்டான் என னகரம் றகரமாகத் திரிதல் வேண்டும் என்பது விதி. இது செய்யுட்கேயுரியது. உலக வழக்கில் வாழைபழம் என ஒருவன் சொன்னால் எள்ளுவாரில்லை; ஆனால் செய்யுளில் வந்தால் புலவர் எள்ளுவர். அவனுக்கு அதை கொடு என்றால் யாரும் தவறு என்று திருத்துவதில்லை. செய்யுளில் அத்தொடர் வருவதாயின் அவனுக்கதைக் கொடு என வருதல் வேண்டும். எனவே, எழுத்ததிகார இலக்கணம் யாவும் சிறப்பாகப் புணர்ச்சி விதிகள் செய்யுளுக்குரியன என்பதில் ஐயமில்லை.

இனிச் சொல்லதிகாரத்துக் கூறப்பட்டன யாவும் செய்யுட் குரியனவே. உலக வழக்குக்கும் உரியவாயினும் மாறாகக் கூறினும் தள்ளுவாரில்லை. பால் மயக்கம், திணை மயக்கம், எண் மயக்கம், இட மயக்கம், கால மயக்கம் யாவும் கூடா என்பன போலும் விதிகள் வழக்குக்கும் உரியவாயினும் செய்யுட்குச் சிறப்பாகவுரியவாம். இயற்சொல் முதலிய நான்கும் செய்யுட்கு வரலாம் என்பதும், கொண்டு கூட்டு முதலிய பொருள் கோள்கள் கூறுவதும் செய்யுட்குரியனவே.

எனவே தொல்காப்பியமே ஒரு பாவியல் நூல் என்பதில் ஐயம் இல்லை.

இனி இதையே, இப்படியும் கூறலாம். அதாவது இலக்கிய இலக்கண நூல் என்னலாம். ஓர் இலக்கியம் படைப்பதாயின், அதற்கு அகம் புறம் என்னும் பொருள்களை வைத்து, அவற்றுக்குரிய செய்யுள்கள் இன்னின்ன என வரையறுத்து, அப்பொருள்களை உவமை வாயிலாக விளக்கும்போது மரபு மீறாமல் படைக்க வேண்டும் என்பதுவே பொருளதிகாரத்தின் உட்கோளாக இருத்தலின், இலக்கிய இலக்கண நூல் தொல்காப்பியம் என்பதில் தவறில்லை. இலக்கியப் படைப்பிற்கு இலக்கணக் கொள்கையமைத்தலே தொல்காப்பியத்தின் நோக்கம் என்பர் (இந்திரா ஆய்வுக் கோவை. பக்கம் 109)

தொல்காப்பியம் வழுவமைப்பு நூல்*

தொல்காப்பியம் ஒரு வாழ்வியல் நூல், பாவியல் நூல் என்போர் யாவரும் பொருளதிகாரத்தைக் கொண்டே அவ்வாறு கூறினர். ஆனால் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்னும் மூன்றதிகாரங்களைக் கொண்டு அது ஒரு வழுவமைப்பு நூல் என்னலாம்.

தொல்காப்பியர் தமிழ் கூறு நல்லுலகத்தில் வழங்கிய எழுத்து சொல், பொருள் (நடைமுறை) ஆகியவற்றை உலக வழக்கையும் செய்யுள் வழக்கையும் அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்தும், தமக்கு முந்து நூல்களைக் கண்டு ஒப்பு நோக்கியும், அவை மயங்காதபடி முறைப்பட எண்ணித் தொல்காப்பியம் என்ற நூலைச் செய்தார் எனப் பனம்பாரனார் கூறினார். அவர் கூற்றிலிருந்து, தொல்காப்பியர் காலத்தில் உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும், எழுத்து, சொல், பொருள் ஆகியவை மயங்கு நிலையில் தவறுடையனவாகவும் இருந்துள்ளன என்பது பெறப்படும். அதனால் அவர் நூல் செய்தற்கான காரணம் எழுத்து சொல் பொருள்களில் ஏற்பட்ட தவறுகளைப் போக்கவும், திருத்தவும் எண்ணியதே என்னலாம். அதனால் தொல்காப்பியம் ஒரு வழுவமைப்பு நூல் என்று கூறலாம். அதற்கேற்பவே தொல்காப்பிய அமைப்பு முறையும் அமைந்துள்ளது.

1. முதல் சூத்திரம்

தொல்காப்பியத்தின் முதல் சூத்திரம்

> எழுத்தெனப் படுப
> அகரமுதல னகர இறுவாய்
> முப்பஃதென்ப
> சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே

---

* இக்கருத்து என்னால், சென்னை உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 20-6-1980இல் நடைபெற்ற கருத்தரங்கில் கூறப்பட்டது; செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 55 பரல் 5இல் (1981) வெளிவந்தது.

என்பது. இதில் எழுத்தெனப் படுப அகரமுதல னகர இறுவாய் முப்பஃ-தென்பதே குறிப்பிடப்பட வேண்டுவதாம். அவ்வாறு குறிப்பிடப்படின் தனியெழுத்துக்களாகிய சார்பெழுத்துகள் மூன்றும் விடுபடும். அச் சார்பெழுத்துக்களையும் சேர்த்து முப்பத்து மூன்று என்றால் சிறப்பில்லாச் சார்பெழுத்துக்கள் சிறப்புடைய எழுத்துக்களாக எண்ணப்பட்டுவிடும். எனவே எழுத்து எத்துணை எனக் கூறவந்த ஆசிரியர்க்கு நூல் தொடங்கும்போதே எழுத்தைப் பற்றிய மயக்கம் நேர்ந்துவிட்டது. அதனால் ஆசிரியர் சார்ந்துவரல் மரபின் மூன்றலங்கடை முப்பஃது என்ப எனச் சுற்றி வளைத்துக் கூறினார். முப்பது என்றால் சார்பெழுத்துகளும் சிறப்பெழுத்துகளாகும் என்ற குற்றமும் நேரும் ஆகலின், அவ்வாறு கூறினார். எனவே, இம்முதல் நூற்பாவே இந்நூலானது பெரிதும் வழுவினைப் பற்றியதாகவே அமையும் என்பதைக் குறிப்பால் உணர வைக்கின்றது எனலாம்.

2. இறுதிச் சூத்திரம்

இனி இந்நூலின் இறுதி நூற்பாவும் வழுவமைப்பு பற்றியதே என்பதையும் காணலாம். "ஒத்த காட்சி யுத்திவகை விரிப்பின்" எனத் தொடங்கி முப்பத்திரண்டு உத்திகள் கூறுகிறது. அந்நூற்பா. அவ்-வுத்திகளிற் பல, வழுக்கள் தொடர்பானவையே. 'உத்தி' என்பது 'அறிவை உய்த்துக் காணப்படுவது' என்ற பொருளுடையது. எனவே, வெளிப்படையாக இல்லாமல் அறிவினால் கூர்ந்துணருமாறு அமைவதும் ஒருவகையில் வழுவேயாம். மொழிந்த பொருளோ டொன்ற அவ்வயின் மொழியாததனை முட்டின்று முடித்தல், வந்தது கொண்டு வாராதது உணர்தல், வாராததனால் வந்தது முடித்தல், தலை தடுமாற்றம். உடம்பொடு புணர்த்தல், அறியாது உடம்படல், பொருள் இடையிடுதல், தந்து புணர்ந்துரைத்தல், ஞாபகம் கூறல், உய்த்துக் கொண்டுணர்தல் ஆகிய உத்திகள் எல்லாம் வழுவின் தொடர்பாவனவே என்பதில் ஐயமில்லை. அவ்வழுக்கள் உய்த்துணர்ந்து அமைத்துக் கொள்ளப் படுதலின் இறுதி நூற்பாவும் வழுவமைப்பு நூற்பாவாகும் என்பதில் ஐயமில்லை.

உத்திகள் யாவும் வழுவின்பாற் படுவனவே என்பது பேராசிரியர் கருத்தாம். இதை அவர், ஒத்த காட்சியின் உத்திவகை என்ற தொடர்க்கு,

> முற்கூறிய குற்றங்களோடு ஒப்பத்தோன்றும்
> தோற்றத்தினை யுடையவாகிய உத்திக் கூறு

என உரை எழுதியதால் உணரலாம். ஒத்த காட்சியின் உத்தி வகை என்ற நூற்பாவின் முன் நூற்பா, கூறியது கூறல் முதலிய பத்துக் குற்றங்களைக் கூறியதாகும். அதனால் ஒத்தகாட்சி என்பதற்கு முற்படக் கூறிய குற்றங்களோடு ஒப்பத்தோன்றும் தோற்றம் என உரை யெழுதினார் அவர்.

இளம்பூரணரும் அது (உத்தி) சூத்திரத்தின் பாற் கிடப்பதோர் பொருள் வேறுபாடு காட்டுவது என்று உத்தி என்பதற்கு விளக்கம் கூறுமுகத்தான் வழுவின்பாற் படுவனவே உத்திகள் என்ற கருத்தினர் ஆனார் எனக் கொள்ளலாம்.

எனவே, தொல்காப்பியத்தின் முதல் நூற்பா வழுவை நினைவு படுத்துவதும், இறுதி நூற்பா வழுவை அமைப்பதும் நோக்கின் இவற்றின் இடைப்பட்ட நூற்பாக்களிற் பலவும் வழுவின் தொடர்பாகவே கூறப்பட்டன எனவும் அறியலாம்.

3. எழுத்ததிகாரத்தில் வழுவமைப்பு

எழுத்ததிகாரத்தில் உயிர் எழுத்துக்கள் மெய்யெழுத்துக்கள் எனப் பெயர் வைத்த குறியீடுகளும், மகரக் குறுக்கம், அளபெடை முதலியனவும், புணர்மொழிகளிற் காணப்படும் எழுத்து மாற்றங்களும், சாரியைப் பேறும், அச்சாரியைகளின் திரிபுகளும் பிறவும் வழுவமைப்புகளாகவே கருதப்படுவன.

4. சொல்லதிகாரத்தில் வழுவமைப்பு

சொல்லதிகாரத்தில் முதல் இயலாகிய கிளவியாக்கம் என்பது, வழுக்களைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையால் அப்பெயர் பெற்றது எனச் சேனாவரையர் கூறியதற்கேற்ப வழுக்களும், அவை வாராமற் காத்தலும், வரின் அமைத்துக் கொள்ளுமாறும் கூறுதலைக் காணலாம். வேற்றுமை மயங்கியல் என்பது தன் பெயராலேயே வழுவின் தொடர்பானது என்பதைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறது. எச்சவியலில் வரும் பொருள்கோள்கள், தொகைகள், கால மயக்கங்கள், எச்சத் திரிபுகள் முதலிய எல்லாம் வழுவைப் பற்றியனவே என்பதில் ஐயமில்லை.

5. பொருளதிகாரத்தில் வழுவமைப்பு

இனிப் பொருளதிகாரத்தில் அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் ஆகியவை உலகின் நடைமுறைகளை ஒழுங்குபடுத்திக் காட்ட வந்தன என்பதால் அவற்றிற் கூறப்பட்ட செய்திகளும் வழுவின் தொடர்புடையனவே. எல்லாவொழுக்கமும் எல்லா நிலத்தும் நடைபெறுவனவே யென்றாலும் பாடல் சான்ற புலனெறி வழக்கிற்காகக் குறிஞ்சிக்குப் புணர்தலும், முல்லைக்கு இருத்தலும் என்பன போல ஒரு நிலத்துக்கு ஓர் ஒழுக்கமாக அமைத்ததும் நினைத்துப் பார்க்கின் வழுவேயாம்.

"திணைமயக் குறுதலும் கடிநிலை யிலவே"

"உரிப்பொரு ளல்லன மயங்கவும் பெறுமே"

"எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாராவாயினும்"
வந்த நிலத்தின் பயத்த வாகும்.

என்பன போல்வனவெல்லாம் வழுவமைப்புகளே. களவொழுக்கம் என்பது தன் பெயராலேயே வழுவுடையது என்பதைக் காட்டி நிற்கிறது. அவ்வொழுக்கத்தில் உடன்போக்கு முதலியனவும் வழுவேயாம். கற்பிலும் பரத்தையர்ப் பிரிவு முதலிய வழுக்களும் அமைப்புகளும் உண்டு. புறத்திணையிலும் வெட்சியாகிய ஆநிரை கோடல் வழுவான செய்தியன்றோ? உவமம் கூறிய இயலிலும் பொருளே உவமம் செய்தலும் தடுமாறு வரலும் போல்வன வழுவமைப்பல்லவோ? இறுதியியலாகிய மரபியலிலும் வழுவமைப்புகள் உண்டு. பறவையின் ஆணுக்குரிய சேவல் என்ற பெயரால் குதிரையுள் ஆணினைக் கூறலும் கடியப்படாது என்பது கூறப்பட்டது காணலாம்.

பொதுவாக எல்லா இயல்களிலும் தனித்தனியாகவும், நூலின் முடிவில் பொதுவாகவும் வந்த புறனடைச் சூத்திரங்கள் யாவும் வழுவமைப்புகளே.

எனவே, தொல்காப்பிய நூல், ஒரு வழுவமைப்பு நூல் என்பதில் ஐயமில்லை. வழுவற்றன கூறியே வழு என்பவை யாவை என்றும், தள்ளப்பட வேண்டும் அல்லது அமைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்றும் கூறவேண்டுமாதலின் தொல்காப்பியத்தில் வழுவற்றனவும் உடன் கூறப்பட்டன என்னலாம்.

தனித்தமிழ் இலக்கணநூல்

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல் உலகத்தில் வழக்கையும் செய்யுளையும் அடிப்படையாகக் கொண்டு எழுத்துச் சொற் பொருள்களை ஆராய்ந்தபோது அவ்வுலகத்தில், வழக்கும் செய்யுளும் எழுத்துச் சொற்பொருள்களும் செந்தமிழ்க்கே யுரியனவாகவும், அவையியல்பாகவே உரியனவாகவும் இருந்தமை அறியப்பட்டது. அதனால் அவ்வுலகம் செந்தமிழ் இயற்கை சிவணிய நிலம் எனப்பட்டது. பிறமொழியின் தாக்குதல் எழுத்தாலும் சொல்லாலும் பொருளாலும் வழக்கிலும் செய்யுளிலும் இல்லை. எழுத்தால் இல்லை என்பதை எழுத்தெனப்படுப அகரமுதல் னகர இறுவாய் முப்பஃ தென்ப என்ற வரையறையால் உணரலாம். ஆரியத்துக்கு எழுத்து முப்பதின் மேற்பட்டன. சொல்லால் தாக்குதல் இல்லை என்பதைத் தொல்காப்பியர் பொதுவாகவும் சிறப்பாகவும் எடுத்துச் சொல்லிய இலக்கணங்கள் யாவும் தமிழ்ச் சொற்களுக்கே என்பதை யாவரும் அறிவர். வடசொல் பற்றிக் கூறும்போது, அது, தமிழில் எவ்வாறு வழங்க வேண்டும் என்பதை வடசொற் கிளவி வடவெழுத்தொரீஇ எழுத்தொடு புணர்ந்த சொல்லாகுமே என்பதால் தெரிவித்தார். அச்சொல்லும் பெயர்ச்சொல்லேயன்றிப் பிற சொற்கள் ஆகா. பொருளும் தமிழக நடைமுறைப் பொருளே என்பதைச் சிவஞான முனிவர் வடநூற் பொருள்களின் வேறுபடுத்திக் காட்டி நிறுவியது கொண்டு உணரலாம் (சிறப்புப் பாயிர உரைவளம் பக். 73).

தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம், தொல்காப்பியமானது, எழுத்து சொல் பொருள் யாப்பு அணி எனும் ஐந்திறங்கள் அமைந்த தனித்தமிழ் இலக்கணநூல் என்று கூறவும், உரையாளர் யாவரும் ஆரிய வழக்கையும் உடன் கூறியதாகக் கொண்டு அதற்கேற்பச் சில சூத்திரங்களுக்கு உரை எழுதியுள்ளனர். நாவலர் சோமசுந்தர பாரதியார் ஒருவரே அச்சூத்திரங்களுக்குத் தமிழ் வழக்கு உரையெழுதியவர். பேராசிரியர் வெள்ளை வாரணனார் அவர்கள் சில சூத்திரங்களை இடைச் செருகல் என்று கூறினார். தொல்காப்பியத்தில் எச்சூத்திரமும் இடைச் செருகல் இல்லை. எச் சொற்களும் ஆரியச் சொற்கள் இல்லை.

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டம் காணும் காலை
மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே (களவியல்-1)

இச்சூத்திரத்தில் வந்த மறையோர் தேஎம் என்பதற்கு ஆரியப் பார்ப்பனர் வேதம் என்றும், மன்றல் எட்டு என்பதற்கு அவர் கூறும் பிரமம்,. பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், அசுரம், இராக்கதம், பைசாசம், கந்தருவம் என்பன என்றும், அவற்றுள் தமிழ்க் களவு மணம் என்பது கந்தருவத்தோடு ஒத்தது என்றும் உரையாளர் யாவரும் எழுதினர். பாரதியார் களவியற்கு உரை எழுதிலர் ஆதலின் அவர் கருத்தை முழுமையாக அறியக் கூடவில்லை எனினும் அகத்திணையியல் உரையில் அவருக்கு அக்கருத்து உடன்பாடு இல்லை என உணரலாம்.

இச்சூத்திரத்துக்குத் தமிழ்வழி உரை காண்பதே சிறந்ததாம். ‘மறையோர் தேஎம்’ என்றது தமிழ் அந்தணர் நூல் என்றும், யாழ்த்துணைமையோர் என்பதற்கு, ‘யாழ்ப்பாணர்’ என்றும் பொருள்கொண்டு, மன்றல் எட்டு என்பதற்குப் பின்வருவனவற்றைக் கொள்ளல் வேண்டும்.

அந்தணர் (பார்ப்பார்) அரசர் வணிகர் வேளாளர் என மக்கள் தத்தம் சிறப்புத் தொழில் காரணமாக அக்காலத்தும் வேறுபட்ட பிரிவினராகவே இருந்தனர். அப்பிரிவு தொழில் அடிப்படையில் அன்றி இக்காலச் சாதி அடிப்படையில் அமைந்ததன்று. அப்பிரிவினர் தத்தம் மக்களுக்குத் தத்தம் பிரிவுகளிலேயே மணம் முடித்தனர். காரணம் தொழிலில் உதவுதல் எளிது என்பதாம். அந்த வகையில் குலமுறைத் திருமணம் நான்கு, ஏறு தழுவல் முதலிய வீரம் புரிந்தவனுக்கு மணந்து கொடுப்பது ஏறுதழுவல் திருமணமாம். ஒருவன் ஒருத்தியைக் கண்டு விரும்பி அவள் விருப்பம் அறியாமலே தக்கார் மூலம் அவளை மணப்பதும், சாமம் சாலா இளமையோளை மணப்பதும் கைக்கிளைத் திருமணமாம். வயதில் மூத்தாளை மணப்பதும், தான் விரும்பியவளை அடைய முடியாவிடின் மடலேறுதல், தன் காமத்தைப் பிறர்க்குப் புலப்படச் செய்தல் முதலியவற்றால் ஊர்ப் பெருமக்கள் துணையால்

மணப்பதும் பெருந்திணை மணமாம். வெவ்வேறு திசைகளிலிருந்து வரும் யாழோர் (யாழ்ப்பாணர்) ஒரு பொழிலகத்துத் தங்க, அவருள் ஒரு கூட்டத்தாருள் ஓர் இளைஞனும், பிறிதோர் கூட்டத்து ஓர் இளையளும் தனித்து எதிர்ப்பட்டுத் தம்முன் மனத்தாலோ உடம்பாலோ கூடிப் பின்னர்ப் பெற்றோர் முறையாக மணந்து கொடுக்க மணப்பது யாழோர் கூட்டம் எனப்படும். இது குலமணத்துள் அடங்கும்.

இவ்வெட்டனுள் ஒருவன், ஒருத்தியை அவள் தன் குலத் தாளாயினும் வேற்றுக் குலத்தாளாயினும் யாழோர் போலத் தனித்து ஓரிடத்தில் கூடிப் பின்னர் மணப்பது களவு மணம் எனப்படும். இக்களவு மணம் யாழோர் மணம் போல் அமைதலின் இதனை யாழோர் கூட்டத்திலேயே அடக்குவர். அதனால் மணம் எட்டாகும்.

ஆரிய மணங்களுள் பிரமம் என்பது, ஒத்த கோத்திரத்தானாய் நாற்பத்தெட்டியாண்டு பிரமச்சரியம் காத்தவனுக்குப் பன்னீராட்டைப் பிராயத்தாளை இரண்டாம் பூப்பு எய்துமுன்னர் மணந்து கொடுப்பது ஆதலின், ஆடவனுக்குப் பதினாறும் மகளுக்குப் பன்னிரண்டாண்டும் கூறும் இலக்கணத்தொடு பொருந்திய குலமுறை மணத்துக்கு மாறுபட்டது. பிரசாபத்தியம் ஆரிடம் தெய்வம் என்பன பரிசம் வழங்கும் குலமுறை மணங்களைப் போல்வன. தலைமகள் தன்னினும் தமரினும் பெறாது வலிதிற் பற்றி மணக்கும் இராக்கதமும், மூத்தோர் களித்தோர் துயின்றோர்ப் புணர்தலும், ஆடைமாறிப் புணர்தலும் ஆன பைசாசம் என்பதும் தமிழரால் மணம் என ஏற்கப்படாதன. கந்தருவர் குமாரனும் கன்னியும் தம்முள் எதிர்ப்பட்டுக் கண்டு கூடிப் பிரிவது கந்தருவ மணம் என்பர் ஆரியர். கூடிய கந்தருவர் பின்னர் இல்லறம் நிகழ்த்தல் என்பது விதியில்லையாதலின், தமிழ்க்களவு மணத்தோடு சேர்க்க இயலாது. "கந்தருவர்க்குக் கற்பின்றி அமையவும் பெறும். ஈண்டுக் கற்பின்றிக் களவே அமையாது என்றற்குத் துறையமை" என்றார் என நச்சினார்க்கினியர் கூறுவது நோக்கத்தக்கது. எனவே, எவ்வகையிலும் ஆரியச் சார்பாக மேற்சூத்திரத்துக்குப் பொருள் உரைத்தல் தவறாம். கற்பொழுக்கம் எனப்படும் இல்லற ஒழுக்கத்துக்கு உரியவாறு அமையும் திருமணமே மணம் எனத் தமிழரால் கூறப்பட்டது. புணர்ச்சி ஒன்றையே கருதுவது ஆரிய மணம்.

இனிச் சில சூத்திரங்களுக்கு ஆரியச் சார்பு உரையும் தமிழ்ச் சார்பு உரையும் காணலாம்.

1. ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன (அகத்திணையியல் 28)

இச்சூத்திரம் ஓதல் காரணமாகவும் அரசர்க்குத் தூது காரணமாகவும் பிரியும் பிரிவுகளுக்கு உரியார் யாவர் என்கின்றது. அவரை உயர்ந்தோர் என்கின்றது.

'உயர்ந்தோராவார் அந்தணரும் அரசரும்' என இளம்பூரணரும், அந்தணரும் அரசரும் வணிகரும் என நச்சினார்க்கினியரும் கூறினர்.

இருவரும் ஆரிய வழக்கைப் பற்றி அதாவது சாதி பற்றி உயர்வு தாழ்வு கூறினர். இச்சூத்திரத்துக்குப் பாரதியார் கூறும் உரையே பொருந்தும்.

> "அடியோர், வினைவலர், ஒருவர்க்கு ஏவலர், ஏவல் மரபின் ஏனோர் இந்நால்வரும் பிறர் ஏவலை எதிர்பார்த்து வாழ்பவர் ஆதலின், ஓதலும் தூதுமாகிய உயர்ந்தோர் தொழில் ஏற்றற்கு உரிமை கொள்ளார்; அவர் ஒழிந்த நால்நிலத் தமிழ்க்குடி மக்களே அவற்றை மேற்கொள்ளுதற்குத் தகுதியுடையோர் ஆதலின் இவை கொள்ளுதற்குத் தகுதியுடையோர் ஆதலின் இவை அவ்வுயர்ந்தோர் மேலன என்று விளக்கப்பட்டன."

என்பர். எனவே உயர்ந்தோர் ஆவார் அடியோர் பாங்கும் வினைவலபாங்கும் ஆகிய ஏவலர் ஒழியப் பிறர் என்பதே பொருந்தும்.

2. உயர்ந்தோர்க் குரிய ஓத்தினான (அகத். 33)

இச்சூத்திரத்துக்கு இளம்பூரணர் உயர்ந்தோராகிய வணிகர்க்கு வேதம் ஓதல் காரணமாகப் பிரியும் பிரிவும் உரித்து எனப் பொருள் கூறினார். அவர் ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன எனும் சூத்திரத்தில் அந்தணரும் அரசரும் கூறப்பட்டமையின், இச்சூத்திரத்தில் வணிகர் கூறப்பட்டனர் எனக் கொண்டு ஓதற் பிரிவு அந்தணர் அரசர் வணிகர் மூவர்க்கும் உரியது என்றார்.

நச்சினார்க்கினியர், வேத நூல்களும் தமிழ் நூல்களும் அந்தணர் அரசர் வணிகர் உயர்ந்த வேளாளர் எனும் நால்வர்க்கும் உரிய என்பர்.

பாடப்படுவது பாட்டு என வந்தது போல ஓதப்படுவது ஓத்து என வந்தது. ஓத்து - நூல். நூலில் கூறப்படும் ஒழுக்கம் ஓத்தின் ஆன எனப்பட்டது. அவ்வொழுக்கம் உயர்குடிப் பிறப்பினர்க்கு உரியது என்பதே இச்சூத்திரப்பொருள் என்னலாம். அடியோரும் வினைவலரும் தமக்கென ஒரு நெறியுடையர் அல்லர். உயர்ந்தோர் வழி ஒழுகுபவர். ஆதலில் தம் விருப்பப்படி ஒழுகல் இல்லை. எனவே இச்சூத்திரம் நூல்விதி ஒழுகற்குரியார் யார் என்பது கூறுகின்றது என்னலாம்.

3. மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க் காகிய காலமும் உண்டே (கற்பியல் 3)

இளம்பூரணர் இச்சூத்திரத்துக்கு, "மேற்குலத்தாராகிய அந்தணர் அரசர் வணிகர் என்னும் மூன்று வருணத்தார்க்கும் புணர்த்த கரணம் கீழோராகிய வேளாண் மாந்தர்க்கும் ஆகிய காலமும் உண்டு என்றவாறு" என உரை எழுதினார்.

நச்சினார்க்கினியரும் இவர் கருத்தினரே. இவர்த இருவரும் மேலோராவார் அந்தணர் அரசர் வணிகர் என்றும் கீழோராவார் வேளாளர் என்று கொண்டனர்.

இச்சூத்திரத்துக்கு இவ்வாறன்றி, "அந்தணராகிய மேலோர், அரசர், வணிகர், வேளாளர் என்ற மூவர் ஆகிய நால்வருக்கும் விதித்த கரணம், அடியோர் பாங்கு வினைவல பாங்கு முதலிய கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டு" என்று கொள்வதே சிறக்கும்.

எல்லாவுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுபவர் ஆதலின் அந்தணர் மேலோர் எனப்பட்டனர். அந்நால்வரின் கீழிருந்து குடிமக்களாய் ஏவல் செய்து வாழ்தலின் அடியோர் பாங்கும் வினைவல பாங்கும் கீழோர் எனப்பட்டனர்.

மேலோராகிய அந்தணர் தமக்கேயன்றி மற்றை அரசர் வணிகர் வேளாளர் ஆகிய மூவர்க்கும் புணர்த்தகரணம் கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டு என்று பொருள் உரைப்பினும் ஆம். அப்போது மேலோர் என்பது எண்ணு முறையில் மேல் நிற்பவர் என்னும் பொருளது.

4. அந்தணாளர்க்கு அரசுவரை வின்றே (மரபியல் 75)

இச்சூத்திரத்துக்கு, அந்தணர்க்கு அரசு நீக்குநிலையில்லை; எனவே அந்தணரும் அரசர் ஆகலாம் என்று பொருள் கொள்வர் சிலர். இது தவறு. அந்தணர்க்கு அரசுரிமையில்லையாதலின் இச்சூத்திரம் இடைச் செருகல் என்பர்.

வரைவு என்பதற்கு நீக்குதல் சேர்த்தல் என்னும் இருபொருள் உண்டு. அந்தணர்களுக்கு அரசாட்சியுரிமை சேர்த்தல் இல்லை என்று பொருள். கொள்ளின் இடைச் செருகல் எனக் கொள்வதற்கு இடம் இல்லை. அவன் அவளை வரைந்து கொண்டான் என்பதில் அப்பொருள் காண்க.

4. அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும் (புறத்திணையியல் 20)

என்பனவற்றுக்கு உரைக்கப்படும் உரைகளும் பொருத்தம் இல்லை.

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம் என்பதற்கு ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் அறுவகைப்பட்ட அந்தணர் என்பர். பார்ப்பன வகை என்றதால் ஓதும் பார்ப்பான், ஓதுவிக்கும் பார்ப்பான் முதலியவாகப் பார்ப்பனர் அறுவகையினர் என்பதாகும். இப்படி வகை கூறுவது தவறு.

ஐவகை மரபின் அரசர் பக்கம் என்பதற்கு ஓதலும் வேட்டலும் ஈதலும், படை வழங்குதலும், குடியோம்புதலும் ஆகிய அரசர் பக்கம் என்று இளம்பூரணரும், ஓதலும் வேட்டலும், ஈதலும் காத்தலும் தண்டம்

செய்தலும் ஆகிய அரசர் பக்கம் என நச்சினார்க்கினியரும் கூறினர். ஓதல் முதலியன தொழில்களேயன்றி வகை எனப்படா.

இருமூன்று மரபின் ஏனோர் பக்கம் என்பதற்கு இளம்பூரணர், வணிகர் பக்கமாக ஓதல், வேட்டல், ஈதல், உழவு, வாணிகம், நிரையோம்பல் எனவும் வேளாண் மாந்தர் பக்கமாக உழவு, உழவொழிந்த தொழில், விருந்தோம்பல், பகடு புரந்தருதல், வழிபாடு, வேதம் ஒழிந்த கல்வி எனவும் கூறுவர்.

நச்சினார்க்கினியர், வணிகர் பக்கத்துக்கு இளம்பூரணர் கூறியவாறே கூறி வேளாளர்க்கு வேதம் ஒழிந்தன ஓதலும், ஈதலும், உழவும், நிரையோம்பலும், வாணிகமும், வழிபாடும் என அறுவகை என்பர்.

அந்தணர் முதலிய நால்வர்க்கும் ஓதல் முதலிய தொழில்கள் உரியன. அவரவர்க்கு அவையவை இலக்கணம். வகை என்பதற்கில்லை. அதனால் பின்வருமாறு கொள்வதே வகை என்பதற்கு ஏற்கும்:

அறுவகைப்பட்ட பார்ப்பனர் : ஓதல் அந்தணர், வேள்வி அந்தணர், முனிவர் அந்தணர், ஆறறி அந்தணர், ஏவல் அந்தணர், வெறியாட்டந்தணர்.

ஐவகைப்பட்ட அரசர் : பேரரசர், சிற்றரசர், குறுநில மன்னர், அமைச்சர், படைத்தலைவர்.

வணிகர் அறுவர் : கூலவாணிகர், அறுவை வாணிகர், பொன் வாணிகர், நறும்பொருள் வாணிகர், உப்பு வாணிகர், பல்பொருள் வாணிகர்.

வேளாளர் அறுவர் : நால்நில உழவர்கள், மட்களம் செய்வோர், இசை வேளாளர்.

இப்படிக்கூறின் சிறக்கும்.

முடிப்புரை

இளம்பூரணர்போலும் உரையாசிரியர்கள் தொல்காப்பியத்தில் ஆரியக் கோட்பாடுகளைப் புகுத்தி உரை காண்பதற்கு என்ன காரணம்?

இக்காலத்தில் ஆங்கிலம் கற்ற தமிழ்ப் பேரறிஞர்கள் மேலைநாட்டு மொழியியல் நூல்களைக் கற்று அவற்றின்படி நம் தமிழ் மொழி அமைந்துளதா என ஒப்பிட்டுக்காண முயன்று ஒத்திருந்தால் ஒத்துளது என்றும், இல்லை என்றால் தமிழ்க்குக் குறைவந்துவிட்டது போலக் கொண்டு சமாதானங்கள் கூறியும் எழுதுகின்றனர். உரையாளர்களும் ஆரிய வேத வழக்கைக் கற்றுத் தொல்காப்பியம் தனித்தமிழ் நூல் என்று கொள்ளாமல் வேதத்துடன் அதாவது ஆரிய

வழக்குடன் ஒப்பிட்டுக் கண்டு உரை எழுதினர் ஆவர். தொல்காப்பியத்தையும் சங்க இலக்கியங்களையும் அடிப்படையாகக் கொண்டு தமிழுக்கென ஒரு மொழியியல் அமைத்து அதன்படி மேலைநாட்டு மொழிகள் காணப்படுகின்றனவா எனக்காணின் தமிழ் மேலும் உயர்வு பெறும்.

பொதுவாகத் தொல்காப்பியம் ஒரு தனித்தமிழ் இலக்கண நூல் எனக் கொள்வதே நன்று. அதில் வாழ்வியல், பாவியல், வழுவமைதி முதலியன அமைந்துள்ளன என்னலாம்.

பிற்காலத்தார் கோவை என ஒரு நூல்வகை அமைத்து அதில் களவு கற்பு ஒழுக்கங்களை நிரல்பட நாடக வழக்குக்கு ஏற்ப அமைத்ததற்கும் தொல்காப்பியப் பொருளதிகாரம் இடம் கொடுத்ததாதலின் பொருளதிகாரம் நாடகக் குறிப்பு நூல் என்றும் கூறலாம்.

பார்வை நூல்கள்

தொல்காப்பிய உரைவளம், சிறப்புப் பாயிரம், அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், செய்யுளியல், மரபியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.113.

தொல்காப்பியம் - வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 1978. இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், ஆய்வுக் கோவை 1998.

தொல்காப்பியம் ஒரு பாவியல் பெருநூல் கட்டுரை, புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் 1998.

செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 55 பரல் 5 1981.

குறளுக்கு இயல்புரை காண்பது எப்படி?

இரா. சாரங்கபாணி

குறளுக்கு இதுகாறும் அறிஞர் பலரால் எழுதப் பெற்ற உரைகள் வெளிவந்துள்ளன. அவற்றை நோக்கின், ஒரு குறளுக்கு வேறுபட்ட உரைகள் சில அமைந்திருத்தல் காணலாம். திருவள்ளுவர் பல உரைக்கு இடனாகத் தம் நூலை இயற்றியிருப்பார் என எண்ணுதற்கில்லை. அங்ஙனமாயின் பல உரை எழக் காரணங்கள் யாவை என ஆராய்ந்து பார்த்தால் குறளின் சொற்பிரிப்பு முறை, பாட வேறுபாடு, கொண்டு கூட்டும் போக்கு, காலமரபு கருதாமை, தம் கொள்கைத் திணிப்பு, இலக்கணப் புறக்கணிப்பு, பிற இலக்கியக் கருத்தைக் குறளில் ஏற்றிக் கூற விழைதல் முதலியவற்றைக் காரணங்களாகச் சுட்டலாம். ஆகவே, முற்கூறிய காரணங்களைக் கருத்தினில் இருத்திக் குறட்பாக்களைப் பன்முறை ஓதியுணர்ந்து நூலின் அடிப்படைக் கொள்கைகட்கு முரணாது உரைகாண்டல் வேண்டும்.

நாம் காணும் உரையாசிரியர்கள் உரைகளுள் சில பொருத்தமாகக் காணப்படினும், சில முரண்பட உள்ளன. குறள்காலச் சொல்லாட்சியையும் குறளின் நடைப் போக்கினையும் ஊன்றி நோக்காமையால் சில குறளுக்கு உரைகள் இயல்பாக அமையவில்லை. கூடியவரையில் குறளுக்குக் குறளைக் கொண்டே உரைகாண்டலும் விளக்கந்தருதலும் நலம்பயக்கும்.

அறத்திற்கு இலக்கணம் கூறும்போது, 'அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்' எனப் பரிமேலழகர் உரைப்பாயிரத்தில் கூறுவது பொருந்தாது. 'மனத்துக்கண் மாசில னாதல் அறன்' என்றும் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் நான்கையும் விலக்க மனம் தூயதாம் என்றும் அறத்திற்கு இலக்கணம் கூறுவது குறளடிப்படையில் கூறுவதாகும். அறன் வலியுறுத்தல் அதிகாரத்தில் மணக்குடவர் கூறும் குறள் முறைவைப்பு பொருத்தமாக உள்ளது. 'அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல்' 39ஆம் குறளாகவும் 'மனத்துக்கண் மாசிலனாதல்' 40ஆம் குறளாகவும் கொண்டு அவர் அழுக்காறு முதலிய நான்கையும் கடிய மனம் தூயதாம் என எழுதியிருப்பது அறத்திற்குக் கூறும் இலக்கணம்போல் உள்ளது.

செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும் (412)

'சிறிது ஈயப்படும்' என்பதற்குப் பரிமேலழகர் குறள் வழிநின்று விளக்கந்தருவர். பெரிதாய வழித் தேடல் துன்பமேயன்றி, நோயும் காமமும் பெருகுதலாற் 'சிறிது' என்றார் என அவர் கூறுவது நல்ல

---

* சேலம் வேலூர் கந்தசாமி கண்டர் கல்லூரி அறக்கட்டளைப் பொழிவு * காந்தி கிராம கிராமியப் பல்கலைக் கழகம் * 24.08.1998

விளக்கமாகும். 'கழிபேரிரையான்கண் நோய் நிற்கும்' எனக் குறள் கூறுதல் காண்க.

வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண் (1179)

இக்குறளுக்குப் பரிதியார், 'நாயகர் வாராக்காலும், நித்திரையில்லை: வந்தாலும் கலவியினால் நித்திரையில்லை' என்று உரை செய்வர். ஆனால், மணக்குடவர், 'வாராத காலத்துப் புணர்ச்சி வேட்கையால் துஞ்சா; வந்த காலத்துப் பிரிவார் என்று அஞ்சித்துஞ்சா; அவ்விரண்டிடத்தும் மிக்க துன்பமுற்றன கண்' என்று உரை காண்பர். இவ்வுரை பெறாஅமை அஞ்சும் பெறிற் பிரிவஞ்சும், அறாஅ இடும்பைத் தென் நெஞ்சு (1295) என்ற குறள் அடிப்படையில் எழுந்ததாகும்.

கடாஅ உருவொடு கண்ணஞ்சாது யாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று (585)

இக்குறளில் வரும் 'கடா அஉரு' என்பதற்கு, ஐயுறாத வடிவு என்று பொருள். அதனை விளக்கப்பரிமேலழகர், ஐயுறாத வடிவாவன - பார்ப்பார் வணிகர் முதலாயினார் வடிவு என்று சாதியடிப்படையில் உரை வகுப்பர். ஆனால், அடுத்த குறளிலே துறந்தார் படிவத்தராகி (586) என்ற குறிப்புள்ளது. பரிமேலழகர் ஐயுறாத வடிவுக்குத் துறவியைக் குறிப்பிடவில்லை காளிங்கர் அதற்கு அறவோர் வேடமும் துறவோர் வேடமும் வறியோர் வேடமும் பிறவுமாகிய நல்லுருவு கொண்டு என எழுதியிருத்தல் குறளடிப்படையில் எழுந்த நல்லுரையாகும்.

குறளின் போக்கறிந்து இங்ஙனம் உரை எழுதியது போலவே, சில குறளுக்கு உவமைக் குறிப்பை நன்குணர்ந்து பொருள் விளக்கம் செய்துள்ளனர்.

அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு. (135)

இக்குறளுக்குப் பரிமேலழகர் விளக்கம் வரையும்போது உவமையான் ஒழுக்கமில்லாதவன் சுற்றத்திற்கும் உயர்ச்சியில்லை என்பது பெற்றாம். என்னை?, கொடுப்பதழுக்கறுப்பான் சுற்றமும் நல்கூர்தலின் என எழுதியுள்ளார். கொடுப்பதழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக்கெடும் (166) என்னும் குறளை நினைந்தெழுதிய சிறப்புரை ஏற்கத் தகுவதே.

முதலிலார்க் கூதிய மில்லை; மதலையாம்
சார்பிலார்க் கில்லை நிலை (449)

இக்குறள் எடுத்துக்காட்டுவமை. முதற்பொருள் இல்லாதார்க்கு ஊதியம் இல்லாதது போலப் பெரியாரின் துணையில்லாதார்க்கு நிலை இல்லை என்பது பொருள். உவமைக் கருத்தின் குறிப்பறிந்து பரிப்பெருமாள் பெரியாரைத் துணையாகக் கொள்ளாதார்க்கு வருங்குற்றம் கூறுகின்றார் ஆதலின், முற்படப் பொருட்கேடு உண்டாகும் என்று கூறினார் எனக் கூறியிருத்தல் நயமான பகுதியாகும். பெரியாரின் துணையில்லார்க்குப் பொருளிழப்பு நேரும் என்பது உய்த்துணர்ந்தெழுதிய நற்கருத்து.

சொற்பிரிப்பு :

குறளிலுள்ள புணர்மொழிகளைப் பிரிக்கும்போது பொருட் சிறப்புணர்ந்து ஆழ்ந்து நோக்கிப் பிரிக்க வேண்டும். குறளைப் பதிப்பித்தவர்களிற் சிலர் உண்மைப் பொருள் சிதையுமாறு சொற்களைப் பிரித்துள்ளனர். அதனால் குறள் தன் இயல்பாய பொருளை இழந்து விடுகிறது.

விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உண்ணின்று உடற்றும் பசி (13)

இக்குறளில் வரும் விண்ணின்று என்பதனை விண்+நின்று என்றும் விண்+இன்று என்றும் பிரித்தும் உண்ணின்று என்பதனை உள்+நின்று என்றும் உண்+இன்று என்றும் பிரித்தும் வெவ்வேறு பொருள் கூறுவர். உள், நின்று எனப் பிரித்தே பதிப்பித்தால் நிலை நின்று என்று பொருள் கூறவே இடமுண்டு. உண், இன்று எனப் பிரிக்கவும் உணவு இல்லாமையால் எனப் பொருள் கொள்ளவும் இடமில்லை. உண் - முதனிலைத் தொழிலாகு பெயர். உணவைக் குறிக்கும். ஆகவே மூலத்தைப் பிரிக்காமல் சேர்த்துப் போட்டால்தான் உரிய பொருளுக்கேற்பச் சொல்லைப் பிரித்துத் தேர்ந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும். ஒரு பொருளுக்கேற்பச் சொல்லைப் பிரிப்பதால் வேறொரு பொருளை இழக்க நேரிடுகிறது.

முன்னுறக் காவா திழுக்கியான் தன்பிழை
பின்னூ றிரங்கி விடும். (535)

பின் ஊறு இரங்கிவிடும் எனப் பிரித்துப் பின் அத்துன்பம் வந்துற்ற காலத்துக் காக்கலாகாமையின், அத்தவற்றினை நினைந்து இரங்குவான் என்று பரிமேலழகர் பொருள் கூறுவர். அவர் ஊறு என்பதனை ஏழாம் உருபு தொக்கதாகக் கொண்டு ஊற்றின்கண் என விரிப்பர். பின் நூறு இரங்கிவிடும் எனப் பிரித்து நூறு வகையால் இரங்கத் தகும் எனக் காளிங்கரும் ஒன்று நூறாகத் துன்பம் தந்து இரங்கிவிடும் எனப் பரிதியும் உரை வரைந்துள்ளனர். பத்தடுத்த தீமைத்தே (450) எழுபது கோடியுறும் (639), பத்தடுத்த கோடி யுறும் (817) என்னும் குறளாட்சிகள் பின் நூறு இரங்கிவிடும் எனப் பிரித்துக் கொள்ளும் பொருளுக்குத் துணை செய்கின்றன.

நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவ
னாடொறும் நாடு கெடும். (553)

நாள்தொறும் நாடு கெடும் எனப் பிரித்து, நாள்தோறும் நாடு இழக்கும் எனப் பொருள் கூறுவர் பரிமேலழகர். ஆள்தொறும் நாடுகெடும் எனப் பிரித்து, ஆளுந்தோறும் நாடு கெட்டுக் கொண்டேயிருக்கும் எனப் புதுவதாகப் பொருளுரைத்தவர் நாவலர் ச. சோமசுந்தர பாரதியாராவர்.

வழுத்தினாள் தும்மினே னாக வழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று (1317)

இக்குறளிலுள்ள வழித்தழுதாள் என்ற தொடரில் வழித்து என்பதை இயல்பாகக் கொள்ளாமல், வகரத்தை உடம்படுமெய்யாகக் கொண்டு, அழித்தழுதாள் எனப் பிரித்துப் பரிமேலழகர் உள்ளிட்ட பலரும் உரை எழுதியுள்ளனர். அழித்து என்பதற்கு மறுபடியும் என்றும் நீக்கி என்றும் பொருள் கண்டுள்ளனர். வழித்தழுதாள் என மூலத்திலுள்ளபடி இயல்பாகக் கொண்டு வடிகின்ற கண்ணீரைத் துடைத்து (வழித்து) அழுதாள் எனப் பொருள்கோடலே இயல்பானது. அங்ஙனம் கொண்டால் வழுத்தினாள் .... வழித்தழுதாள் என மோனை நயமும் உண்டு.

அறத்திற்கே அன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை. (76)

இக்குறளில் என்ப, அறியார் என்னும் இருசொல்லும் புணரும்போது வகர உடம்படுமெய் பெற்று என்பவறியார் என வந்துள்ளது. வறியார் என்பதில் வகரத்தை உடம்படு மெய்யாகக் கருதாது வறியார் என்பதே சொல்லாகக் கொண்டு வறியவரது பாவச் செயலுக்கும் அன்பே காரணம் என்றும் பொருள் கூறியுள்ளனர். இவ்வுரை இயல்பானதன்று. அறியார் என்று பிரித்துக் கொள்வதே இயல்பான உரை கொள்ள ஏற்றதாகும். மேலும், அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார் என்று கொண்டால் மோனை நயமும் மிகும். சொற்களைப் பிரிக்கும்போது எங்ஙனம் பிரித்தால் பொருட் சிறப்பிருக்கும், யாப்பினிமை தோன்றும் எனக் கருத்திற்கொண்டு பிரிக்க வேண்டும்.

பாடவேறுபாடு

பரிமேலழகர் கொண்ட குறள் மூலபாடமே எங்கும் வழக்கிற் காணப்பெறுகின்றது. அதனிலும் சிறந்த பாடமிருப்பினும், அது வழக்கில் ஆட்சியில்லை.

தினற்பொருட்டாற் <u>கொல்லா</u> துலகெனின் யாரும்
விலைப் பொருட்டால் ஊன்தருவார் இல் (256)

கொல்லாது எனப் பரிமேலழகர் கொண்ட பாடத்தினும் கொள்ளாது என மணக்குடவர் கொண்ட பாடமே தக்கது. பின்வரும் ஊன்தருவார் இல் என்பதிலுள்ள தருதல் என்னும் சொல்லுக்குக் கொள்ளாது என்னும் சொல்லே பொருட்பொருத்தமுற இயைதல் காணலாம்.

காலாழ் களரின் நரியடும் கண்ணஞ்சா
<u>வேலாண் முகத்த</u> களிறு (500)

இக்குறளில் <u>வேலாண்</u>முகத்த என்பது பரிமேலழகர் பாடம். <u>வேலாழ்</u> முகத்த என்பது காளிங்கர் பாடம் வேலாள் முகத்த களிறு என்பதற்கு வேலாட்களைக் கோத்த கோட்டவுமாய களிறுகள் எனப் பரிமேலழகர் உரை செய்வர். 'வேலாழ் முகத்த களிறு' எனக் கொண்ட பாடத்தை, வேற்படை குளித்த முகத்தவாயின் அதுவும் நரியடுதற்கு ஏதுவாய் முடிதலின், அது பாடமன்மையறிக எனப் பரிமேலழகர் மறுப்பர்.

களிறு களரியிடத்துக் காலாழும் பொழுது முகத்தில் வேலுடையதாகப் பரிமேலழகர் பொருள் கொள்வது போல் கொள்ளாது, வேலாழ்முகம் என்ற வினைத்தொகையை இறந்த கால வினைத் தொகையாகக் கொண்டு வேலாழ்ந்தமையால் வடுவுடைய முகம் எனக் காளிங்கர் பொருள் கொள்வதுபோல் கொள்ளின், பரிமேலழகர் மறுப்புக்கு இடமில்லை. மேலும், 'காலாழ்' என்னும் சொல்லுக்கு 'வேலாழ்' என்னும் அப்பாடம் எதுகை நயம் சிறக்க அமைகின்றது.

எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணா செய்யாமை தலை. (317)

'மனத்தானாம்' பரிமேலழகர் பாடம். மனத்தானும் மணக்குடவர் பாடம். 'மனத்தானும்' என்னும் பாடம் மொழியானும் மெய்யானும் மாணா செய்யாமை தலை என்னும் கருத்தைத் தருதலின், பொருள் நயமும் 'எனைத்தானும்' என்பதற்கேற்ப வருதலின் எதுகை நயமும் சிறந்து நிற்பதறியலாம்.

அறிகொன் றறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன் (638)

இதற்கு அறிந்து சொல்லியாரது அறிவையும் அழித்து அரசன் தானும் அறியானே யாயினும், அக்குற்ற நோக்கி ஒழியாது அவனுக்கு உறுதியாயின கூறுதல் அமைச்சனுக்கு முறைமை என்று பரிமேலழகர் உரை வரைந்துள்ளார். பரிதி எல்லாம் அறிவுள்ள ராசா அறிகிற தறுவாயில் அறியாதபோது உறுதியாக மந்திரி சொல்லக்கடவன் என உரை கூறியுள்ளார். இப்பொழுதுள்ள மூலத்துக்கும் 'எல்லாம் அறிவுள்ள ராசா' என்னும் பரிதி உரைக்கும் தொடர்பு இருப்பதாகத் தோன்றவில்லை. பரிதி கொண்ட மூலபாடம் வேறாக இருக்குமோ என எண்ணத் தோன்றுகிறது. எல்லாம் அறிவுள்ள ராசா என்னும் உரைக்கு அறிகோன் என்று பாடமிருக்கலாம். இப்பாடம் வேறு ஏட்டில் காணப்படுமேல் ஏற்கத்தக்கதே.

கொண்டு கூட்டு முறை

சில குறளுக்குச் சொற்களைக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ள வேண்டியுள்ளது. அங்ஙனம் கொள்ளுங்கால் சிலரது கொண்டு கூட்டு பொருத்தமாக உள்ளது. சிலரது கொண்டு கூட்டு குறளுக்குப் பொருத்தமுறத் தோன்றவில்லை.

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி (137)

இக்குறளில் பழி என்னும் சொற்குமுன் வரும். 'எய்தா' என்ற சொல்லை மேன்மைக்கு முன் இயைத்து ஒழுக்கத்தாலே தமக்கு எய்தாத மேம்பாட்டை எய்துவர் என மணக்குடவர் உரைப்பது ஏற்பதற்குரியதே.

மருவுக மாசற்றார் கேண்மை ஒன்றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு (800)

ஒன்றீத்தும் என்பதைச் சிங்க நோக்காகக் கொண்டு ஒன்று ஈத்தும் மருவுக மாசற்றார் கேண்மை எனப் பரிதி பொருள் காண்பர். குற்றமற்றார் நட்பு வேண்டினது கொடுத்தும் கூட்டிக் கொள்க; பொல்லாதார் நட்புச் சில கொடுத்தும் கைவிடுக என்பது பரிதி உரை. குடிப்பிறந்து தன்கட் பழி நாணுவானைக் கொடுத்துங் கொளல் வேண்டும் நட்பு (804) என வருதலின், பரிதி 'ஒன்றீத்தும் மருவுக' என மூன்றும் கொண்டு கூட்டியது இயல்பேயாம்.

கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும் (166)

இக்குறளுக்குச் சிலர் நிரல் நிறைப் பொருள் காண்பர். அதன்படிக் கண்டால் அழுக்கறுப்பான் உடுப்பது இன்றிக் கெடுவான்; அவன் சுற்றம் உண்பது இன்றிக் கெடும் என்று பொருள்படும். இப்பொருள் சிறப்பில்லை. ஏனெனில் அழுக்கறுப்பானுக்கு உண்பதும் அவன் சுற்றத்துக்கு உடுப்பதும் கிடைக்கும் எனவும் பொருள் கொள்ள வாய்ப்புண்டு ஆதலின் என்பது.

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை (76)

இக்குறளில் வரும் 'என்ப அறியார்' என்பதனை மறத்திற்கும் அஃதே துணை என்ற தொடருக்குப்பின் கூட்டி மறத்திற்கும் அஃதே துணை என்ப அறியார் என இயைத்துப் பொருள் கூறுவர். இக்கொண்டு கூட்டும் கூறிய பொருளும் பொருத்தமாகப் படவில்லை. ஆகவே சிறப்பான, பொருந்துவதான பொருள்படுமாறு கொண்டு கூட்டுதலே ஏற்கத் தகுவதாகும்.

கால மரபு கருதுதல்

பெய்யெனப் பெய்யும் மழை (55) என்பதற்குப் பெய்யென்னும் பருவகாலத்தே பெய்யும் மழையைப் போல்வாள் எனச் சிலர் பொருள் காண்பர். அருமழை தரல் வேண்டின் தருகிற்கும் பெருமையளே (39:6) என்று கலித்தொகையும் வான்தரு கற்பின் மனையுறை மகளிர் (15:77) என்று மணிமேகலையும் கூறுவதால், கற்புடை மகளிர் பெய்யென்றால் மழை பெய்யும் என்ற சங்ககால நம்பிக்கையைக் குறள் கூறுவதாகக் கொள்வதில் இழுக்கில்லை.

இன்னாது இரக்கப்படுதல் (224) என்பதற்கு இரக்கம் காட்டுதல் நல்லதல்ல என்று நாமக்கல் கவிஞர் உரை காண்பர். செயப்பட்டார் சால்பின் வரைத்து (105) என்பது போல, இரக்கப்படுதலைச் செயப்பாட்டு வினையாகக் கொள்ள வேண்டும். இரக்கப்படுதலை, வருத்தப்படுதல் என்பது போலத் தன்வினையாகக் கொண்டு இரங்குதல் என்று பொருள் கூறுதல் பிற்கால வழக்காகும். இரக்கப்படுதல் என்று தன்வினைப் பொருள் கொள்ளின், அக்கால நடையில் இரங்குதல் என்றே வள்ளுவர் ஆட்சி செய்திருப்பர். ஆகவே, குறளுரை செய்யக் கால மரபு இன்றியமையாதது எனக் கருதி அக்காலச் சொல்வழக்கு, நம்பிக்கை முதலியவற்றை மனங்கொள்ள வேண்டும்.

கொள்கைத் திணிப்பு

சமயச் சார்பு, கட்சிச் சார்பு முதலியவற்றை முன்னிறுத்தி, உரை காண்பதால் குறளுக்கு இயல்புரை அமையவில்லை. 'நல்வினை மேற்சென்று செய்யப்படும்' (335) என்னும் குறளில் நல்வினை என்பதற்குச் சிவபெருமானை வணங்குதல் என்று சிலர் விளக்கம் அளித்துள்ளனர். அறனாக்கம் வேண்டாதான் (163) என்றவிடத்து அரனாக்கம் என்றும் மாண்டார் நீராடி (278) என்றவிடத்து நீராடி என்றும் பாடவேறுபாடு கண்டு சமயப்பற்றைக் காட்டுவர்.

ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும் (133)

இக்குறளுக்குப் பரிமேலழகர் எல்லார்க்குந் தத்தம் வருணத்திற்கேற்ற ஒழுக்கமுடைமை குலனுடைமையாம். அவ்வொழுக்கத்தின் தவறுதல் அவ்வருணத்தின் தாழ்ந்த வருணமாய்விடும் என்று சாதியடிப்படையில் உரை கூறியுள்ளார். 'உயர்திணை என்மனார் மக்கட்சுட்டே, அஃறிணை என்மனார் அவரல பிறவே' என்னும் தொல்காப்பிய அடிப்படையைக் கொண்டது அக்குறள். ஆகவே, இழிந்த பிறப்பாய் விடும் என்பதற்கு அஃறிணையாகி விடும் என்று கூறுவதே இயல்பான உரையாகும். 'மரம் போல்வர் மக்கட் பண்பில்லா தவர்' (997) 'தலையின் இழிந்த மயிரனையர்' (964) முதலிய குறளாட்சி காண்க.

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து (396)

இக்குறளுக்கு மறுபிறப்பில் நம்பிக்கை யில்லாதவர்கள் தம் கருத்தை ஏற்றி உரைகண்டுள்ளனர்.

புலவர் குழந்தை 'ஒருவனுக்கு ஓரிடத்தில் தான் கற்ற கல்வியானது பலவிடங்களிலும் சென்று உதவுதலை யுடையது. எழுமை என்னும் பெயர் பல என்னும் பொருளது ஒருவன் ஓரிடத்திலிருந்து கற்கிறான். அவனால் செய்யப்பட்ட நூற்கள் பல இடங்களிலும் (உலகெல்லாம்) பரவி அவனைச் சிறப்பிக்கின்றன' என உரை விளக்கம் செய்வர். முனைவர் சி. இலக்குவனார் ஒருவர்க்குத் திரிவுபடாத ஒருமை உள்ளத்தோடு அவர் கற்ற கல்வி மிகுதியும் உறுதி தருதலையுடையது எனக் கூறுவர்.

இம்மைப் பிறப்பிற் பிரியலன் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள் (1315)

என்னும் குறள் குறிப்பாக, ஆனால் தெளிவுபட மறுபிறப்பை உணர்த்தும் ஆகவே, மறுபிறப்புத் தொடர்பின்றி அக்குறளுக்கு உரை வரைதல் தத்தம் கொள்கை முனைப்பு என்றே கருதத் தோன்றுகிறது. அவை இயல்புரை ஆகா. கொலைவினையராகிய மாக்கள் (329) என்ற குறளுக்குப் பரிமேலழகர் 'கொலை வினையர்' என்றதனால் வேள்விக்கட் கொலையன்மை யறிக என்று எழுதியதும் கொள்கை முனைப்-பினாலேயாம்.

இலக்கணங் கருதாமை

கோளிற் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை (9)

இக்குறளில் வரும் தலையைச் சினைப் பெயராகக் கொள்ளாது இடப் பெயராகக் கொண்டு வணங்காத இடத்து எனப் பொருள் கண்டுள்ளனர். அப்பொருளுக்குக் குறள் முடிபு ஏற்றதாக இல்லை.

அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று. (49)

அஃதும் என்பதற்குத் துறவறமும் என்று பொருள் கொள்வதும் பிறன் பழிப்பதில்லாயின் நன்று என்பதற்கு மற்றவனாகிய துறவறத்தானைப் பழிக்காவிட்டால் நல்லது என்றும் பொருள்கோடல் இலக்கண நெறிக்குப் புறம்பாகும். பிறனைப் பழிப்பதில்லாயின் என்று பொருள் கொள்ளப் பிறற்பழிப்பதில்லாயின் எனப் பாடமிருக்க வேண்டும்.

பிற இலக்கியச் செய்தியைப் புகுத்தல்

திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று (157)

நோநொந்து என்பதற்குப் பிறர் செய்த துன்பத்தை மனத்தில் வைத்து நொந்து கொண்டே யிருந்து எனக் கூறும் நாமக்கல் கவிஞர் உரை இயல்புரையாகும். அதற்குப் பரிமேலழகர், தமக்குச் செய்த துன்பத்தால் பிறர்க்கு நேரும் துன்பத்திற்கு வருந்தி என உரைப்பது இலக்கியங்கண்டு கூறும் நயவுரையாகும். அவ்வுரை எரிவாய் நிரயத்து வாழ்வர்கொல் என்று பரிவதூஉம் சான்றோர் கடன் (58) என்றும் நாலடியார்ப் பாடல் கண்டு கூறியதாகும்.

இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள (223)

இரந்து வந்தார்க்கு என்னிடம் இல்லை என்னும் துன்பச் சொல்லைக் கூறாமல், ஈதல் நற்குடிப்பண்பு உடையானிடத்தே உள்ளன என்பது அக்குறளுக்கு இயல்புரை. ‘தன்னிடத்திலே ஏற்றவன் பிறத்தியிலே போய் எனக்கு என்று சொல்லாதவாறு மிடிதீரக் கொடுப்பது குடிப்பிறந்தார்க்கு வர வித்தை’ என்னும் பரிதி உரைக்கு,

நிற்பாடிய அலங்கு செந்நாப் பிறரிசை நுவலாமை ஓம்பாதீயும் ஆற்றல் எங்கோ (புறம் - 22) என்னும் பாடல் காரணமாகும். இரப்போர் கூறும் துன்பச் சொல்லினைக் கேளா முன்னரே கொடுத்தல் குல மரபுடையான் மாட்டே உளவாம் என்னும் காளிங்கர் உரைக்கு முன்னம் ‘முகத்தினுணர்ந்து இன்மை தீர்த்தல் வன்மையானே’ என்னும் (புறம்-3) பாடலடி அடிப்படை என்னலாம். இங்ஙனம் பிற நூல்களின் கருத்தை ஏற்றிக் குறளுரையாகச் சிலர் கூறியுள்ளனர்.

நடை ஒப்புமை

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர் (395)

செல்வர் முன் ஏழைபோல ஏங்கிக் கற்றவர் தலையாயினார். அங்ஙனம் கல்லாதவர் கடையர் என்பது இக்குறளின் இயல்பான பொருள். ஏக்கற்றும் கற்றார் கடையர், கல்லாதவர் என்பதற்குக் கற்றார் இடத்தராவர் கல்லாதவர் என்றுரைப்பர் மணக்குடவர். கடை என்பதற்கு இடப்பொருள் கொண்டு கடையர் - இடத்தராவர் என்பது அவர் உரை. சோமசுந்தர பாரதியார் உடையார் என்பதைப் பயனிலையாகவும் கற்றார் என்பதை எழுவாயாகவும் கொண்டு உடையார் கற்றார் எனக் கூறுவர். எல்லாம் உடையவர்கள் கற்றவர்கள் என்பது அவர் கருத்து.

உடையார்முன் இல்லார்போல் கற்றார் முன் ஏக்கற்றும் கல்லாதவர் கடையரே என்று மு. அருணாசலம் பிள்ளை கொண்டு கூட்டிப் பொருள் கூறுவர். இக்குறள் கல்வி என்னும் அதிகாரத்தில் உள்ளது. அவர் கூறும் பொருள் கல்லாமையின் இழிவு சுட்டுதலின் கல்வி என்னும் அதிகாரத்துக்குப் பொருந்தவில்லை. மணக்குடவர், பாரதியார், அருணாசலம் பிள்ளை ஆகிய மூவரும் சொல்லை வருவியாது உரை செய்ய முயன்றுள்ளனர். அக்குறள் முதலதிகாரத்தின்

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார் (10)

என்னும் குறள் நடை ஒப்பது. இக்குறளில் பிறவிப் பெருங்கடல் நீந்துவர் யார் எனக் கூறவில்லை. அடி சேர்ந்தார் நீந்துவர் என்பது கருத்தாகலின், சேர்ந்தார் என ஒரு சொல் வருவித்துரைக்க வேண்டும். அதுபோலக் கல்லாதவர் கடையர்; கற்றார் எத்தகையர் எனக் குறள் கூறவில்லை. கற்றார் தலையாயர் என ஒரு சொல் வருவித்துரைக்க வேண்டும். இங்ஙனம் வருவித்துரைப்பதே குறள் நடையாகக் காணப்படுதலின், ஒரு சொல்லை வருவித்துரைத்த உரைகளே ஏற்கத்தகும் இயல்புரையாகும். சொல்லை வருவியாது உள்ள சொற்களைக் கொண்டே உரை கூற வேண்டும் என்ற கடப்பாட்டினால்தான், இக்குறளுக்குப் பல உரைகள் எழலாயின. குறளுரை காணும் நெறிகளுள் நடை ஒப்புமை காண்டலைச் சிறந்த நெறி என்னலாம்.

குறளின் இயல்புரை அறியத் திரும்பத் திரும்பக் குறள் மூலத்தை ஓத வேண்டும். அது குறளின் அடிப்படை நெறிகளை - குறிக்கோள்களை அறிய உதவும். சொற்களைப் பிரிக்கும்போது பொருட் சிறப்பறிந்து பிரிக்க வேண்டும். மூலபாடங்கள் பலவற்றைக் கண்டு நல்லதைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பொருட்பொருத்தமுறக் கொண்டு கூட்டிக் குறளுக்கு உரை காணவேண்டும். குறளெழுந்த காலத்தை உளங்கொண்டு சொற்பொருள் காண்டல் நல்லது. அக்கால மக்களின் நம்பிக்கை, மரபுகள் முதலியவற்றை அறிதலும் இன்றியமையாததாகும். இலக்கண ஒழுங்குக்குப் புறம்பாக உரை செய்தல் கூடாது. தம் கொள்கைகளைக் குறள்களின் மீதேற்றித் திணித்தல் கூடாது. குறளின் நடை ஒப்புமை கண்டு பொருள் காணப் புகின், சில ஐயங்கள் தீர்ந்து, தெளிவுண்டாகும்.

இலக்கிய உயிர்*

க. ஆறுமுகம்

இலக்கியம்

விளங்குதல் அல்லது ஒளிதருதல் என்னும் பொருள் தரும் இலங்கு என்பதன் அடியாகப் பிறந்த சொற்களே இலக்கு, இலக்கம், இலக்கியம், இலக்கணம் ஆகியவை என்று தோன்றுகின்றன. இலக்கம் - ஒளி. எல்லே இலக்கம் என்பது தொல்காப்பியம் (தொல். சொல். இளம். 21.) வாழ்க்கைக்கு ஒளிதரும் உயரிய கருத்துகள், பண்புகள், கொள்கைகள், கோட்பாடுகள், குறிக்கோள்கள், இலக்கு எனப்பட்டன. இவற்றை உணர்த்தும் செய்யுள், உரைநடை, நாடகம், அறநூல், புதினம், சிறுகதை முதலியன இலக்கியம் என வழங்கின. அவ்விலக்கியங்களின் இயல்பினை, மரபினை, அமைப்பினை, மொழிநடையினை ஆய்ந்து கூறுவன இலக்கணம் என வழங்கின.

இலக்கிய உணர்ச்சி

மக்கள் வாழ்க்கை இருவகைப்படும். மனைவி மக்களுடன் வாழும் வீட்டு வாழ்க்கை; சமுதாயத்துடன் பழகும் நாட்டு வாழ்க்கை என்பன அவை. முன்னது அகம் எனவும், பின்னது புறம் எனவும் படும். இவ்விருவகை வாழ்வினையும் இனிது எடுத்தியம்பும் நூல்கள் அல்லது செய்யுள், இலக்கியம் எனப் போற்றப்பட்டன. இலக்கியங்களில் கூறப்படும் பொருள்களை மூவகைப்படுத்துவர் இலக்கண நூலார். மக்கள் வாழ்வு நிகழும் நிலமும் காலமும் முதற்பொருள் எனப்படும். நிலம் காலம் இரண்டையும் முதலாக அல்லது காரணமாகக் கொண்டு தோன்றும் மரம், செடி, கொடி, மக்கள், விலங்கு, புள், தொழில், கலை தெய்வம் முதலியன கருப்பொருள் ஆகும். மனைவியுடன் வாழும் வீட்டு வாழ்க்கை அல்லது அகவாழ்வில் காணும் புணர்தல், பிரிதல் முதலான காதலுணர்வுகளும், சமுதாயத்துடன் பழகும் புறவாழ்வில் காணும் நட்பு, கொடை, வீரம் முதலான புற உணர்வுகளும் உரிப்பொருள் ஆகும்.

உயிரும் உடம்பும்

காதல், வீரம் முதலான உணர்வுகளாகிய உரிப் பொருளே இலக்கியத்தின் உயிராகும். இவ்வுயிராகிய உணர்வுகளைப் படம்பிடிக்கும் கவிதை அல்லது செய்யுளின் பின்னணியாக வரும் நிலமும் காலமும் ஆகிய முதற்பொருளும், மரம் செடி கொடி, மக்கள் புள் விலங்கு

---

* கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத் தமிழியல் துறை அறக்கட்டளைப் பொழிவு * திருச்சிராப்பள்ளி பிசப்ஈபர் கல்லூரி * 24.05.1995

முதலான கருப்பொருளும் இலக்கியம் அல்லது கவிதையின் உணர்ச்சியாகிய உயிரைத் தாங்கி நிற்கும் உடம்பு எனலாம். மக்களின் உணர்வே இலக்கியத்தின் உயிர். ஒரு கவிதை அல்லது இலக்கியத்தின் உயிரை ஆய்ந்து அறிந்து உவகையுறுவதே இலக்கிய இன்பமாகும்.

அறிவால் காண்பது உயிர்

உடலையும் உடலுறுப்புக்களையும் இயக்கி, அவ்வுடலுள் இயங்கும் உயிரை அறிவினாலன்றிக் கண்ணால் காண்டல் இயலாது. காதல் பற்றிய அகவுணர்வுகளையும், நட்பு, கொடை, வீரம் முதலிய புறவுணர்வுகளையும் கவிதை அல்லது இலக்கியத்துள் அறிவினாலன்றிக் கண்ணால் கண்டு இன்புற இயலாது. இராமனது அம்பு இராவணனது உடலின் பல பகுதிகளையும் துளைத்து அவனது உடலுள் புகுந்து அவனது உயிரையும் அவன் சீதைமேல் கொண்ட காதலையும் தேடி அலைந்தமையை,

> வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த
> திருமேனி மேலும் கீழும்
> எள்ளிருக்கும் இடமின்றி உயிரிருக்கும்
> இடம்நாடி இழைத்த வாறோ!
> கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
> மனச்சிறையுள் கரந்த காதல்
> உள்ளிருக்கும் எனத்தேடி உட்புகுந்து
> தடவியதோ ஒருவன் வாளி! - கம்பர்.யுத்த. 38; 23.

எனக் கவிச்சக்கரவர்த்தி கம்பர் வியந்துபாடி இலக்கியமாக்குகிறார். உடலுள் இயங்கும் உயிரை அறிவது போன்ற அருமையுடையதே, கவிதையுள் உறையும் காதல் முதலான உணர்வுகளை அறிவதும் எனலாம்.

உணர்வொத்தல்

மாந்தர் உணர்வுகளில் ஒன்றைக் கவிதை வடிவில் படைக்க விரும்பும் கவிஞன் நெஞ்சம், அவ்வுணர்வால் நிறைதல் வேண்டும். பின்னர் தன் கவிதையில் வரும் இலக்கிய மாந்தரையும் அவ்வுணர்வு மயமாக்க வேண்டும். அதன் பின்னர் அக்கவிதை அல்லது இலக்கியத்தைப் பயின்று இன்புறும் சுவைஞனின் நெஞ்சமும் அவ்வுணர்வால் நிரம்ப வேண்டும். இலக்கியம் படைக்கும் புலவன், அவன் படைக்கும் பாத்திரம் அல்லது இலக்கிய மாந்தர், அக்கவிதையை நுகரும் சுவைஞன் இம்மூவரும் அவ்வுணர்வு மயமாக வேண்டும். இத்தகைய கவிதை அல்லது இலக்கியத்தைப் படைப்போனே உயர்ந்த கவிஞன் அல்லது புலவன் ஆவான். அவன் படைக்கும் இலக்கியம் அல்லது கவிதையே உயிருள்ள இலக்கியம் அல்லது கவிதையாகும்.

உணர்வு மயங்காமை

ஓர் உணர்வைச் சித்திரிக்கும்போது கவிஞன் மனம் திரிந்து, வேறோர் உணர்வில் ஈடுபட்டு, அதனையும் ஆண்டுத் தோற்றுவிப்பின் அக்கவிதைப் படைப்பில் அவன் தோற்றவனாவானன்றி வென்றவனாகான். உரிப்பொருளாகிய இரண்டுணர்வுகள் ஓரிடத்து மயங்கா.

உரிப்பொரு ளல்லன மயங்கவும் பெறுமே
- தொல். பொருள் 1:15

என்பது தொல்காப்பியர் கவிஞர்க்கு விடுக்கும் எச்சரிக்கை. நிலம் காலம் ஆகிய முதற்பொருள் முறையே மற்றொரு நிலம் காலம் ஆகியவற்றுடன் மயங்கலாம். ஒரு நிலத்துக் கருப்பொருளும் மற்றொரு நிலத்துக் கருப்பொருளுடன் மயங்கலாம். இவை மயங்குதலைத் திணை மயக்கம் என்பர் அறிஞர். திணை மயக்கம் இலக்கியங்களில் வரும் ஓர் அழகு ஆகும். ஆயின் ஓர் உணர்வாகிய உரிப்பொருள் மற்றோர் உணர்வாகிய உரிப்பொருளுடன் மயங்குதல் கூடாது. அங்ஙனம் மயங்கின் அஃது உயிருள்ள கவிதை அல்லது இலக்கியமாகாது என்பதாம்.

கவிஞன் தான் படைத்துக் காட்ட விரும்பும் உணர்வை ஒருசில அடிகளில் அல்லது ஒரு சில சொற்களில் அல்லது ஒரு சொல்லில் கவிதையின் ஓரிடத்து அமைத்துக் காட்டுவான். அதற்கு முன்னும் பின்னும் பிற பொருள்களும், பிறவுணர்வுகளும் வருமாயின் அவையனைத்தும் அவர் எடுத்துக்காட்டும் ஒருணர்வைச் சிறப்பிக்க, மிகுதிப்படுத்த வருவனவே எனக் கோடல் வேண்டும்.

வாரேன் வாழிய நெஞ்சே

சங்க நூல்கள் சாவா இலக்கியம். அவற்றுள் வரும் ஒவ்வொரு பாட்டும் உயிர்ப் பாட்டாகும். பாட்டுள் பொலியும் அவ்வுயிரை அறிந்து உவக்கும் இன்பமே அப்பாட்டு நல்கும் அழியாத இலக்கிய இன்பமாகும். இதனையே

நவில்தோறும் நூனயம் - திருக்குறள் 783.

என்பார் வள்ளுவர். நூற்றுக்கணக்கான அடிகளையுடைய நெருடும்-பாட்டைப் பன்முறை பயின்றாலும் நம் உணர்ச்சியைக் கவர்ந்து, உள்ளத்திற்கு உவகை யூட்டி, அறிவிற்பதிந்து, அழியாத இன்பமாக நிலைபெறுவன அப்பாட்டின் ஒரு சில அடிகளே எனலாம்.

தலைவன் ஒருவன் தன் காதலியுடன் வறுமையின்றி வாழ எண்ணினான். இல்லறம் நல்லறமாக நடத்தச் செல்வம் வேண்டுமே. வளம்பல கொழிக்கும் சோழ நாடும், அந்நாட்டில் காவிரி கடலொடு கலக்கும் இடத்துத் திகழும் புகார் நகரமும் அவன் மனக்கண்முன் தோன்றின.

வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி
கரும்பும் நெல்லும், கமுகும் வாழையும்,
மஞ்சளும் இஞ்சியும் மாவும் சேம்பும்
விளைவறா வியன் கழனி;
முக்காற் சிறுதேர் உருட்டும் பொற்காற் புதல்வர்;
கோழி எறியும் கொடுங்குழை மகளிர்;
சோறு வடித்த கஞ்சி ஆறுபோலப் பரந்தொழுகும்
அறச் சாலைகள்;
இறக்குமதி ஏற்றுமதியாகும் துறைமுகம்;
அளந்தறியாப் பல பண்டம்,
இவையன்றியும்
நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு;
ஒவ்வொரு பொருளுக்கும் வெவ்வேறு கொடி;
அவற்றால் வாங்குவோரை வரவேற்கும் கடைவீதி;
விலையை மிகுக்காமல் அளவைக் குறைக்காமல்
பண்டம் விற்கும் பண்புடை வாணிகம்;
காடுகொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம்பெருக்கும் அரசு -பட்டினப்பாலை 9

இங்ஙனம் எல்லாம் பெற்று, வளம்பல கொழிக்கும் முட்டாச் சிறப்பிற் பட்டினம் அப்பூம்புகார்.

ஆயின் அப்பட்டினத்திற்குச் செல்லும் பாலைவழி திருமாவளவன் தெவ்வர்க் கோச்சும் வேலினும் வெய்ய அவனது செங்கோலினும் தண்ணிய தன் காதலியின் தடமென்தோள். பாலை வழியின் வெம்மையும், தடமென் தோளின் தண்மையும் அத்தலைவனைத் தடுத்து நிறுத்தின. பாலை நிலம் மட்டுமா அவனைச் சுட்டது. தலைவியின் தண்ணிய தடமென்றோளை விட்டுப்பிரியும் பாலையும் அவனைச் சுட்டது. பாலை - பிரிவு

நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு எனக் கம்பராமாயணத் தலைவி முன்மொழிந்ததை வழி மொழிபவனாயினான் பட்டினப்பாலைத் தலைவன்

இவ்வாறெல்லாம் எண்ணி, பொருள் வயிற் பிரியத் தன்னை வற்புறுத்திய நெஞ்சினை அழைத்து,

முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
வாரேன் வாழிய நெஞ்சே.................
திருமா வளவன் தெவ்வர்க் கோச்சிய
வேலினும் வெய்ய கான மவன்
தோளினும் தண்ணிய தடமென் தோளே.
- பட்டினப்பாலை 218-220, 299-301

எனக் கூறிச் செலவு தவிர்ந்தான் அக்காதற்றலைவன்.

முந்நூறுக்கு மேற்பட்ட அடிகளையுடைய பட்டினப்பாலையில் இந்த ஆறடிகளில்தான் பாலை அல்லது பிரிவு என்னும் பாட்டின் உணர்ச்சியாகிய இலக்கிய உயிர் இலங்குகின்றது. ஏனைய இருநூற்றுத் தொண்ணூற்றைந்தடிகளும் அப்பட்டினத்தின் முட்டாச் சிறப்பை விளக்க வந்தவையாகும்.

பலவகை வளம் செறிந்த பட்டினத்திற்குச் சென்று தன் தலைவியுடன் வாழும் மனையறத்திற்குத் தேவையான ஓரளவு பொருள் தேடிக் கொணரவே எண்ணினான் அத்தலைவன். அளவற்ற வளஞ்சான்ற அப்பட்டினமே கிடைத்தாலும் வாரேன் என நெஞ்சிற்குக் கூறித் தனது செலவைத் தவிர்த்தான். காரணம் அப்பட்டினத்தின் எல்லையற்ற வளம்பல தரும் இன்பத்தினும், தன் தலைவியின் தண்ணிய தடமென்றோள் வழங்கும் இன்பம் மிக மிகப் பெரிதென உணர்ந்தான். ஆதலின் எவ்வகை வளம் வேண்டினும் தடையின்றி வழங்கும் முட்டாச் சிறப்பிற் பட்டினம், அதனினும் மிகுந்த இன்பம் நல்கும் தலைவியின் தண்ணிய தடமென்றோள் மீது தலைவன் கொண்ட காதலுணர்வை மிகுதிப்படுத்த வந்ததாகும். எனவே அவனது காதலுணர்வைப் புலப்படுத்தும் ஆறடிச் சிறு பகுதியே அப்பாட்டின் உயிராகும். அக்காதலுணர்வைச் சிறப்பிக்க அல்லது மிகுதிப்படுத்த வந்த முட்டாச் சிறப்பிற் பட்டினத்தின் வளங்கூறும் தொண்ணூற்றைந்தடி பெரும்பகுதி அவ்வுயிரைத் தாங்கும் உடம்பாகும். உயிர் சிறிது, உடம்பு பெரிதுதானே.

உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே என்பார் திருமூலர். தம் கவிதையில் உடம்பைப் பெரிதாக்கி உயிரைச் சிறிதாக்கி அவ்வுயிரை ஆய்ந்தறிந்து மகிழ வைக்கும் கவிஞர்களின் படைப்பாற்றல் இதுவாகும். நான்முகன் படைப்பு அழியும், ஆயின் கவிஞர்தம் படைப்பு அழியாதது.

இப்பாட்டின் உயிராகிய உணர்ச்சி அல்லது உரிப்பொருள் யாது? பாலை என்னும் பிரிவுணர்ச்சியேயாகும். பாலை வழியின் வெம்மைத் துன்பப்படும், காதலியின் தடந்தோள் நல்கும் தண்மை யின்பமும் அவனது பிரிவைத் தடுத்து அவள்பால் தங்க வைத்தமையின் இது புணர்தல் அல்லது குறிஞ்சி யாகுமேயன்றி எவ்வாறு பிரிதல் அல்லது பாலையாகும்? - என்னும் ஐயம் எழுதல் இயல்பே. தலைவியை ஆற்றுவித்துப் பின்னர்ப் பிரிவான் ஆதலின் இது பிரிவுணர்த்தும் பாலைத் திணையே யாகும் என விளக்குவார் நச்சினார்க்கினியார். பிரிவு

உணர்ச்சி அல்லது பாலை இப்பாட்டின் உயிர். அதனைச் சிறப்பிக்க வரும் பட்டினம் உடம்பு. ஆதலின் இப்பாட்டினைப் பட்டினப்பாலை என வழங்கினர் சங்கச் சான்றோர்.

பூத்த நெய்தல்

சங்க நூல்களில் மிகக் கடினமான சொல்லும் பொருளும் கொண்டு கடுநடை போட்டுச் செல்வது பதிற்றுப் பத்தென்பர். சேர மன்னர் தம் புரட்சியும் போரும் கூறும் வறட்சி நூல் என இதனை எண்ணத் தோன்றும். அம்மன்னர் ஆற்றிய போர்களின் வெற்றியைக் கூறுவது போன்று அவர்களால் அழிந்து பாழ்பட்ட பகைவர் நாடுகளின் பாழ்நிலையைப் புனைந்து கூறும் கொடிய நூலையும் ஒருவர் நவின்றார்; பன்முறை நவின்றார்; நவில்தொறும் நூனயம் கண்டார். ஒவ்வொரு கவிதையின் உயிரெனத் திகழும் நயம் நிறைந்த சொற்றொடரின் பொருளின்பத்தில் திளைத்தார். அவ்வுயிர்த்தொடர்களால் அப்பாடல்களுக்குப் பெயர் சூட்டி மகிழ்ந்தார் தனக்குப் பேரும் புகழும் வேண்டாத அந்த அறிஞர் என்றால் என்றும் நின்று நிலைத்து வாழும் சங்கப் பாடல்களின் உயிர்ப் பண்பினை அறிஞர் ஒவ்வொருவரும் ஆய்ந்து உணர்ந்து உள்ளத்துக் கொண்டு உவகையுற வேண்டாவா?

பதிற்றுப்பத்தின் கடுநடைப் பாடல்களில் ஒன்று இரண்டாம் பத்தின் மூன்றாம் பாட்டு; இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர் கண்ணனார் பாடியது. அவ்வேந்தன் சிவந்தழித்த நீரழி பாக்கம் உள்ளுநர்ப் பனிக்கும் பாழாயின அவல நிலையையும், அவன் காத்த நாடு பூத்துப் பொலிந்த சிறப்பினையும் புகழ்ந்து கூறுவது அப்பாட்டு.

சேரமான் அழிப்பதற்குமுன் வளம்பெற்று விளங்கிய பகைவர் நாட்டின் சீரிய நிலையினை எடுத்தோதுவது பாட்டின் தொடக்கம். அவன் அழித்துப் பாழ்படுத்துவதற்கு முன்னம் அந்நாட்டில் எத்துணை எத்துணை வளங்கள்; பசுக்கூட்டங்கள் புல்மேயும் கொல்லைகள்; மீன் பல பிறழும் நீர் நிறை வயல்கள்; பன்றிகள் தம் கொம்புகளால் குத்திப் புழுதி யாக்கிய புலங்கள்; அப்புலங்களை உழாமலேயே விதைத்த வயல்கள்; அவ்வயல்களில் அமைந்த கரும்பின் பாத்திகள்; அக்கரும்பு வயலைச் சுற்றிலும் பூத்துப் பொலியும் நெய்தல்கள்; அங்கு மேய வரும் எருமைகள்; அவ்வெருமைகளைத் தடுத்து நிறுத்தும் அந்நெய்தற் பூவின் பெருவளம்; இன்னும் எத்தனை எத்தனை வளங்கள்! சுருங்கக்கூறின் புலவர்கள் பாடுதற்கமைந்த பயன் நிறைந்த நாடு அது எனலாம்.

> தொறுத்த வயல் ஆரல் பிறழ்நவும்
> ஏறுபொருத சேறு உழாது வித்துநவும்
> கரும்பின் பாத்திப் பூத்த நெய்தல்
> இருங்கண் எருமையின் நிரைதடுக் குநவும்
>
> - பதிற்றுப்பத்து 2.3.

என வருகின்றது அந்நாட்டின் வளம்.

இருபத்தெட்டடிகளையுடைய அப்பாடலில் உரையாளரின் உள்ளங்கவர்ந்த உயிர்ப்பகுதி பூத்த நெய்தல் என்னும் சிறு தொடரே யாகும். சேரலாதனால் அழிந்த நாட்டின் பாழ்நிலையோ, அவன் காத்த நாட்டின் வாழ்வளமோ அவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளவில்லை. அழிந்துபோன அப்பகைவர் நாட்டின் பழைய அழகையே எண்ணி எண்ணி உருகுகின்றார் போரையும் புரட்சியையும் அழிவையும் விரும்பாத அவ்வுரையாசிரியராகிய அருளாளர். பகைவர் நாட்டின் பழம்பெரு வளங்களில் ஒன்றுதான் அவர் தம் உணர்ச்சியைக் கவர்ந்தது, உள்ளத்தைத் தொட்டது, அறிவிற் சென்று பதிந்தது. அதுதான் “பூத்த நெய்தல்” என்னும் சிறு தொடர்.

வயலில் வளஞ்சான்ற கரும்புகள் செறிந்துள்ளன. அக்கரும்பு வயலைச் சுற்றி வளர்ந்துள்ளன நெய்தல். அந்நெய்தலை யாரும் அங்குப் பயிராக்கவில்லை. தாமே அங்குத் தோன்றி வளர்ந்துள்ளன. பூத்துப் பொலிவுடன் திகழ்கின்றன. எருமைகள் கரும்பை உண்ண அங்கு வருகின்றன. கரும்பு வயலுள் நுழைவதற்குமுன் அவ்வயலின் புறத்தே பொலியும் அப்பூத்த நெய்தலின் பெருவளம் எருமைகளின் கண்ணையும் மனத்தையும் கவர்கின்றன. இருங்கண் எருமை என்கிறார் புலவர். கரும்பினிடம் செல்லாமல் தேன் சுவைமிக்க அந்நெய்தற் பூக்களையே உண்டு மகிழ்ந்தன அவ்வெருமைகள். எருமைகளைக் கரும்பினிடம் செல்ல விடாமல் தம்மையே உண்ணுமாறு செய்து, அவற்றைத் தடுத்து நின்றன அப்பூத்த நெய்தல். வயல்களில் செழித்து வளர்ந்துள்ள கரும்புகள் எருமைகட்குத் தப்பி உயிர்பிழைத்தன.

பூத்த நெய்தல் எருமையின் உணர்வைக் கவர்ந்ததற்கு மேலாக உரையாசிரியரின் உள்ளத்தைக் கவர்ந்தது. பிறர்க்கு நேரும் தீங்கினைத் தாம் ஏற்று அவர்களைப் பாதுகாப்பர் சான்றோர். சிவபெருமான் நஞ்சினைத் தான் உண்டு தேவர்கட்குச் சாவா மருந்தாகிய அமிழ்தத்தைக் கொடுத்து அவர்களைப் புரந்தான். அதியமான் தனது சாவைப் பொருட்படுத்தாமல் நெடிய வாழ்வை நல்கும் நெல்லிக் கனியை ஔவைக்குக் கொடுத்து அப்பெரும் புலவரை நெடுங்காலம் வாழ வைத்தான். தம் காலச் சமுதாயத்தின் நல்வாழ்விற்காகப் பாடுபட்டு, இறுதியில் பகைவர் கொடுமையாகிய சிலுவையைத் தாங்கி உயிர்த் தியாகம் செய்தார் ஏசுநாதர். பாரத மக்களின் விடுதலையின் பொருட்டு எத்துணையோ இன்னல்களை ஏற்று இறுதியில் ஒரு பகைவனால் சுடப்பட்டு உயிர் நீத்தார் மகாத்மா காந்தியடிகள். பாரதநாட்டு விடுதலையின் பொருட்டு உயிர்கொடுத்த வீரர்களும் வீராங்கனைகளும் இன்னும் எத்துணை பேர்?

ஓரறிவுடைய இந்நெய்தல், தானே அங்குத் தோன்றி வளர்ந்தது; கரும்பினை எருமைகள் உண்ணாதவாறு தம்மையே அவ்வெருமைகட் கீந்து அக்கரும்பு வயலைக் காத்து மாண்டது. கரும்பினது நல்வாழ்வின் பொருட்டுத் தனது பூவையும் தேனையும் தண்டையும் இலையையும்

அனைத்தையும் தியாகம் செய்தது. பிறர் வாழ்வின் பொருட்டுத் தம் உடல் பொருள் ஆவிகளை வழங்கும் உயிர்த் தியாகிகள் போல் திகழ்ந்தது அப்பூத்த நெய்தல்.

கொள்ளையும் கொலையும் அழிவும் பாடும் அப்பாட்டில், கரும்பினைக் காத்தற் பொருட்டுத் தம்மையே வழங்கும் அப்பூத்த நெய்தலின் தியாகமும் வருகின்றது. போரும் பூசலும் நிகழ்த்திப் பிறமக்களைக் கொன்று குவித்து, வெறிக் கூத்தாடிய வேந்தர் பெருமக்களுக்கு எருமைக்குத் தாம் உணவாகிக் கரும்பைக் காத்து மடிந்த இப்பூத்த நெய்தல் என்னும் சான்றோர் அறிவு புகட்ட வேண்டும் என்று ஏங்கியிருப்பார் பதிற்றுப் பத்தின் உரையாசிரியர். பூத்த நெய்தல் போன்று, போரையும் பூசலையும் நிறுத்திப் பொதுமக்களின் உயிர் காக்கத் தம்முயிரையும் வழங்கும் சான்றோர் பலர் தோன்ற வேண்டும் என்று அவ்வருளாளர் கருதியிருப்பார். தம்முயிர் கொடுத்துப் பிறவுயிர் புரக்கும் சான்றோரின் மாண்பினைக் காட்டும் பூத்த நெய்தல் என்னும் இத்தொடரே பாட்டின் உயிரென உணர்ந்தார். அவர் அவ்வுயிரை அப்பாட்டின் பெயராக்கினார். இப்பாட்டைப் பயிலும் உலகோர் அதன் உயிரை, உயிர்ப்பண்பை உணரட்டும், உணர்ந்து திருந்தட்டும், திருந்தி மகிழட்டும், மகிழ்ந்து வாழட்டும் என்று அவ்வுயிர்ப் பெயரை அப்பாட்டின் முடிமணியாக அமைத்தார் போலும்!

மலர்மிசை ஏகினான்

முந்நூற்றோரடிகள் உள்ள பட்டினப்பாலையில் ஆறடிகளில் மட்டுமே பாலை என்னும் பிரிவுணர்ச்சியாகிய இலக்கிய உயிர் அமைந்து இலக்கிய இன்பம் பயத்தல் கண்டோம். பின்னர் இருபத்தெட்டடிகள் கொண்ட பதிற்றுப் பத்தின் சிறுபாட்டில் பூத்த நெய்தல் என்னும் இருசொற்களில், தன்னுயிர் கொடுத்துப் பிறவுயிர் காக்கும் அருளுணர்ச்சியாகிய இலக்கிய உயிரினைக் கண்டு மகிழ்ந்தோம். இவை மட்டுமா? இரண்டடிக் குறும்பாட்டிலுள்ள ஒரு சொல்லிலும், உணர்ச்சி பொங்கும் இலக்கிய உயிரைக் காணலாம். யானையின் பேருடம்பில் மட்டுமா உயிர் உறைகின்றது? எறும்பின் சிற்றுடம்பிலும் உயிர் வாழ்கின்றதே!

திருக்குறள் ஏழுசொற்கள் அல்லது ஏழு சீர்களையுடைய குறும்பாடல்களாகிய குறள் வெண்பாக்களாலான நூல். அக்குறட் பாக்களிலும் உணர்ச்சி பொங்கும் இலக்கிய உயிரினைக் கண்டு உவகை யுறலாம்.

இறைவன் அன்பர்களது நெஞ்சில் குடிபுகத் துடித்துக் கொண்டிருக்கிறான்; அன்பர் நினைக்க வேண்டியது தான்; அவர் நினைத்த அக்கணமே அவர் நெஞ்சிற் சென்று குடிபுகுவான்.

தன்னை நினையாதாரையும் நினைக்கப் பண்ணி அவர் மனத்துட் சென்று தங்குவான் அருளாளனாகிய அப்பெருமான்.

மணிவாசகரது பாமாலையைப் புனைய விரும்புகிறான். அம்பலத்தாடும் இறைவன். அதன் பொருட்டு அப்பெருமான் தன்னை மணிவாசகர் நினைக்குமாறு செய்கிறான். மணிவாசகர் நினைத்த அக்கணமே அவர் நெஞ்சில் சென்று தங்குகிறான் இறைவன். அவ்வன்பரது நினைவை இங்ஙனம் பெற்றபின் மீண்டும் அம்பலத்துள் சென்று நின்று, தன்னை அவர் போற்றிப் பாடுமாறு செய்து, அவரது தேனினும் இனிய திருவாசகப் பாமாலையைப் புனைந்து மகிழ்கிறான் அத்தில்லை நாயகன்.

நினைவித்துத் தன்னையென் னெஞ்சத்
திருந்தம் பலத்துணின்று
புனைவித்த ஈசன் ....
- திருக்கோவையார். 140

என்பது மணிவாசகர் அவனருளாலே அவன்தாள் வணங்கிப் பாடிய திருக்கோவையாகும்.

நினைப்பதற்குத் தகுதி வாய்ந்த மென்னெஞ்சம் பெறாது கன்னெஞ்சம் பெற்றோரையும் அவ்விறைவன் விடுவதில்லை. வன்மைமிக்க கல்லை, மென்மை வாய்ந்த கனியாக மாற்றும் அரிய வித்தையைப் பயின்றாவது, அக்கன்னெஞ்சையும் கனியெனக் குழைவித்து, மென்னெஞ்சாக்கி, தனது பேரருள் அமுதில் தோய்த்து, தன்னை நினைக்குமாறு செய்து, பின்னர் அப்பெருமான் அவர் மனத்துட் குடிபுகுவான்.

கல்லை மென்கனி யாக்கும் விச்சைகொண்
டென்னை நின்கழற் கன்ப னாக்கினாய்
எல்லை யில்லைநின் கருணை......................
- திருவாசகம் திருச்சதகம், 94

எனவும்

கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியன்....
- திருவாசகம் திருவம்மானை, 5

எனவும் தம்நெஞ்சைக் குழைவிக்க இறைவன் பட்டபாடுகளை மணிவாசகர் எண்ணி எண்ணி வியந்துருகிப் பாடுதல் காணலாம்.

இங்ஙன மெல்லாம் வலியச் சென்று அடியார் மனத்துக் குடிபுகுதற்குப் பலவகை முயற்சிகளைப் புரியும் இறைவன், தாமாகவே அவனை நினைக்கும் இயல்புடைய அன்பர் நெஞ்சினுள் எத்துணை விரைவில் சென்று தங்குவான்! அவ்விரைவினை விளக்க முற்படுகிறார் திருவள்ளுவர். அவ்விரைவினை விளக்கும் உவமை ஒன்றும் அவருக்குக் கிடைக்கவில்லை. விரைவு மிகுதியை வாயுவேகம், மனோவேகம் என்பர். கார் எனக் கடிது சென்றான் என மிகுந்த விரைவிற்கு மேகத்தை

ஒப்புக் கூறுவாரும் உளர். ஆயின் தன்னை அன்பால் நினைவாரது மனத்துள் இறைவன் குடிபுக ஆகும் எல்லையற்ற விரைவிற்குக் காற்றும் மனமும் காரும் ஒரு சிறிதும் ஒப்பாகா. இவ்வுவமைகள் இறைவனது எல்லையற்ற விரைவினை உயர்வு படுத்தா, இழிவு படுத்துவனவேயாகும் எனக் கருதுகிறார் வள்ளுவர்.

இறைவன் அடியார் மனத்துட் சென்று தங்கும் கற்பனைக்கும் எட்டாத விரைவினை உவமை முதலான அலங்கார விளக்கங்களால் உணர்த்த இயலாதென உணர்ந்த திருவள்ளுவர் தமது குறட்பாவில் அமைக்கும் ஒரு சொல்லாலேயே, அச்சொல்லின் திரிபாலேயே, அச்சொற்றிரிபில் பொங்கும் உணர்ச்சியாலேயே அவ்விரைவுணர்ச்சியை உணர்ந்து உணர்ந்து இன்புறச் செய்கின்றார். அவ்வரிய திருக்குறள்

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார் - திருக்குறள் 3.

என்பதாகும்.

கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்துள் வரும் பத்துப் பாடல்களின் உயிராகத் திகழ்வது இம்மூன்றாம் குறட்பாவே யாகும், இறைவனது எல்லை யற்ற பேரருட்பண்பினை விளக்குவது இதுவே யாதலின். இவ்வதிகாரத்துள் ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமை யிலான், இறைவன், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமை யில்லாதான், அறவாழி யந்தணன் என இறைவனுக்கு எட்டுத் திருநாமங்களை வழங்குகின்றார் வள்ளுவர். இவ்வெட்டுப் பெயர்களும் அவனது எட்டுக் குணங்களை விளக்குவன வாகும். ஒன்பதாம் திருக்குறளில் இறைவனை எண்குணத்தான் என வள்ளுவர் தொகுத்துக் கூறுதல் காண்க. இவ்வெட்டனுள் இறைவன் அடியார்மாட்டுக் கொண்ட எல்லையற்ற கருணையாகிய பேரருட் பண்பினை விளக்குவது மலர்மிசை ஏகினான் என அவர் கூறும் திருப்பெயரேயாகும்.

தன்னை அன்பால் நினைவாரது நெஞ்சக் கமலத்தின்கண் இறைவன் சென்று குடிபுகும் எல்லையற்ற விரைவுணர்ச்சி மலர்மிசை ஏகினான் என்னும் இத்தொடரில் பொங்கி வழிகிறது. இத்தொடருள்ளும் ஏகினான் என்னும் சொல்லே அவ்விரைவுணர்ச்சியை விளக்குவதாகும்.

நினைவாரது மனத்தில் ஏகுவான் என எதிர்காலத்தில் ஈண்டு வள்ளுவர் கூறவில்லை. நினைவாரது மனத்தில் ஏகினான் என இறந்த காலத்தில் அவர் கூறியிருத்தல் கருதத்தக்கது. நேற்று அழைத்தவர் இல்லத்திற்கு இன்று அல்லது நாளைச் செல்லுதலே இயல்பாகும். இன்று அழைப்பவர் இல்லத்திற்கு நேற்றே சென்று விடுதல் இயற்கைக்கு மாறாகும்.

அடியார்கள் நினைத்தபின் இறைவன் ஏகுவான் என்னாமல் ஏகினான் என்று கூறுகிறார் வள்ளுவர். அன்பர் நினைத்தலும், ஆண்டவன் ஏகலும் ஆகிய இரண்டும் ஓட்டப் போட்டியில் ஈடுபடுகின்றன. அப்போட்டியில் இறைவனது ஏகுதல் தொழில், அடியார்தம் நினைத்தல் தொழிலை முந்துகின்றது. ஏகினான் என்னும் இறந்தகால வழுச்சொல்லில் ததும்பும் விரைவு, நமது மனத்திற்கும் அறிவிற்கும் எட்டாத அளவினதாகும்.

நினைப்பதற்குமுன் இறைவன் அடியார் மனத்துள் செல்லுதல் நாம் அறியும் இயற்கைக்கு மாறாகும். நினைத்தல் காரணம். இறைவன் செல்லுதல் காரியம். நினைத்தலாகிய காரணம் முன் நிகழ, செல்லுதலாகிய காரியம் அதன்பின் நிகழ்தலே முறையாகும். காரணம் காரியத்தின்முன் நிகழவேண்டும் அல்லவா? இங்கு ஏகினான் என இறந்த காலத்தில் கூறப்படுதலின் காரியம் முன் நிகழ்ந்துவிட்டது. காரணமாகிய நினைத்தல் பின் நிகழ்வது போன்று கூறப்படுகின்றது.

எதிர்காலத்தால் ஏகுவான் என்று சொல்ல வேண்டியதை, ஏகினான் என இறந்த காலத்தால் திருவள்ளுவர் கூறியுள்ளமை வழு எனத் தோன்றுகின்றது. வழுவென்று நாம் கருதும் ஏகினான் என்னும் அச்சிறு சொல் உணர்த்தும் உணர்ச்சிப் பெருக்கினை ஏகுவான் என்பது உணர்த்த இயலுமா? இயலாது, இயலாது, இயலாது.

இராமன் சீதையை மணமுடித்தற்பொருட்டுச் சிவதனுசை எடுத்து முறித்த விரைவினைத் தமது சொல்லோவியத்தில் காட்டுகிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர். பல்லாயிரக்கணக்கான மாந்தர் அரிதின் சுமந்து கொணர்ந்த அவ்வலிய வில்லை எளிதின் எடுத்து நிறுத்தி வளைத்து முறிக்கின்றான் இராகவன். சுயம்வர மண்டபத்தில் குழுமியிருந்த மக்களின் வியப்புக்கு எல்லை யில்லை.

தடுத்திமை யாம விருந்தனர்; தாளின்
மடுத்தது, நாணுதி வைத்தது நோக்கார்;
கடுப்பினில் யாரும் அறிந்திலர்; கையால்
எடுத்தது கண்டார்; இற்றது கேட்டார்.

- கம்ப. பாலகாண்டம் - 783.

என்பது கம்பர் காட்டும் விரைவோவியம். இராமன் அப்பெரிய வில்லை இனிதின் எளிதின் எடுத்த செயலைக் கண்டனர் ஆண்டுக் குழுமியிருந்த மாந்தர். அவ்வளவுதான். அதன்பின் அவர்கள் அவ்வில் முறிந்து விழுந்த ஒலியைத்தான் கேட்டனர். இடையில் என்ன நிகழ்ந்தது என்பதை யாரும் அறியார். காரணம் இராமனது விற்றொழிலின் எல்லையற்ற விரைவு.

இராமன் வில்லை எடுத்ததற்கும், அவ்வில் இற்றதற்கும் இடையில் வில்லைத் தாளின் மடுத்தல், நாணேற்றுதல், அம்பு பூட்டுதல், வளைத்தல் முதலான பல செயல்கள் நிகழ்ந்திருக்க வேண்டும்.

அச்செயல்களில் ஒன்றையும் அவர்கள் காணவில்லை. இராமபிரானது வில்லாற்றலையும், அவனது விற்றொழிலின் விரைவாற்றலையும் இனிது புலப்படுத்தும் கம்பர்தம் கவியாற்றல் இதுவென உணர்ந்து மகிழ்வோம்.

வில்லை எடுத்தமை, அது முறிந்தமை என்னும் தொழில்களும், இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட பிற சில தொழில்களும் காரண காரிய முறையிற் பிறழாமல், ஒரு தொழில் மற்றொன்றை முந்தாமல், முறையாக நடைபெற்றன என்பதில் ஐயமில்லை. ஆனால் வள்ளுவரது கற்பனையில், பின் நிகழ வேண்டிய காரியமாகிய ஏகுதல் முன் நிகழ்கிறது. முந்துகிறது; முன் நிகழ வேண்டிய காரணமாகிய நினைத்தல் பின் நிகழ்வது போல் உள்ளது. கம்பர் கற்பனையில் இராமன் எடுப்பதற்குமுன் அவ்வில் முறியவில்லை. ஆயின் வள்ளுவர் கற்பனையில் அன்பர் நினைப்பதற்கு முன் ஆண்டவன் அவர் நெஞ்சினுள் ஏகினான். எனவே இராமன் வில்லை ஒடித்த விரைவினும், இறைவன் அன்பர் நெஞ்சிற் குடிபுகுந்த விரைவு எத்துணை மடங்கு மிகுதியாகும் என்பதை எடுத்துக்கூற இயலாது. கற்பனைக்கும் எட்டாத கடவுளின் இவ்விரைவு மிகுதியைக் காட்டுவது ஏகினான் என்னும் இறந்தகால வழுச் சொல்லே என்பது உணர்தற் குரியது.

பிறிதோரிடத்தில் விரைவு மிகுதியை ஓர் அரிய உவமையால் விளக்குகிறார் வள்ளுவர். அன்பனுக்கு நிகழ்ந்த இடுக்கணைக் கேள்வியுறுகிறான், வேறோர் இடத்தில் இருக்கும் அவனது நண்பன். இந்நண்பன் உடனே துடிதுடித்துக் கடுகிச் சென்று அவனது இடுக்கணைக் களைய முற்படுகிறான். அங்ஙனம் முற்படுகின்ற அவ்வுயிர் நண்பனது விரைவு மிகுதிக்கு வள்ளுவர் ஓர் உவமை தருகின்றார். ஆடை நெகிழ்ந்தவனது கை கடுகிச் சென்று அவ்வாடையைச் சரி செய்து மானங்காக்கும் விரைவு மிகுதியே அவ்வுவமை.

உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு - திருக்குறள் 788

என்பது திருவள்ளுவர் வரையும் கையின் விரைவோவியம். ஆங்கே என்பது அக்கணமே என்னும் பொருள் தரும். ஒருவனது துன்பம் துடைத்தற்கு ஓடும் அவனது உயிர் நண்பனது விரைவு மிகுதிக்கு, இதனினும் சிறந்த உவமை காண்டல் அரிதினும் அரிதாகும்.

நெகிழ்ந்த ஆடையைச் சரிசெய்ய ஏகும் அக்கையின் விரைவை, மேலும் மிகுதிப் படுத்துகிறார் திருக்குறள் உரையாசிரியர் பரிமேலழகர். ஆடை நெகிழப்பெற்ற அவன் தன் அறையின்கண் தனியே இருக்கவில்லை. ஓர் அவையின்கண் ஆயிரக்கணக்கான அறிஞர் முன்னிலையில் அவர் காண மேடையில் நிற்கிறான். தன் அறையில் ஒருவரும் அறியாமல் கிடப்பவனது ஆடை நெகிழ்ச்சியைச் சரி செய்யச் செல்லும் அவனது கையின் விரைவைக் காட்டிலும், அவையின்கண் பலர் காண மேடைமீது நிற்கும் ஒருவனது ஆடைநெகிழ்வைச் சரிசெய்ய

ஓடும். அவனது கையின் விரைவு எத்தனை மடங்கு மிகுதியாகும் என்பதை எண்ணிப் பார்க்கவும் இயலவில்லை. திருவள்ளுவரது கற்பனை வேகத்திலும், பரிமேலழகரது கற்பனை வேகம் மிக மிக உயர்ந்து பறந்து செல்கிறது.

ஆயின் மலர்மிசை ஏகினான் என்பதனுள் ஏகினான் என்னும் இறந்தகால வழுச்சொல் உணர்த்தும் விரைவோ, இவ்வனைத்துக் கற்பனைகளையும் விஞ்சி விரைகிறது. விரைவின் உயரெல்லையை உணர்த்தி நிற்கிறது இச்சொல் என்று கூறி அமையலாமே யன்றி அவ்விரைவுணர்ச்சியைப் பிறவகையால் விளக்குதல் இயலாது. இறைவனது அருளுணர்வின் மிகுதியைக் காட்டும் இவ்விரைவு மிகுதியை உணர்ச்சியால் உணர்ந்து உணர்ந்து இன்புறுதலே நன்று. இவ்வுணர்ச்சியே இக்குறட்கவிதையின் உயிர். இவ்வுணர்ச்சி யின்பமே இலக்கியம் நல்கும் பேரின்பம்.

ஏகினான் என்னும் இவ்வுயிர்ச் சொல்லின் உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்கித் திளைத்தவர் பரிமேலழகர்.

> அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண்
> அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேறலின்
> ஏகினான் என இறந்த காலத்தாற் கூறினார்

என்னும் சுருக்கமான விளக்கம் அவர் உணர்ந்து கூறும் விரிந்த இறையனுபவம் ஆகும். இதற்கு அவர் தொல்காப்பிய இலக்கணமும் காட்டுகிறார்.

> எதிர்காலத்திலோ, நிகழ்காலத்திலோ கூற வேண்டிய நிகழ்ச்சியை இறந்த காலத்தால் கவிஞர் குறிப்பிட்டிருப்பின் அதனை வழு அல்லது குற்றம் என்று தள்ளற்க, இலக்கியத்துள் வரும் விரைவுணர்ச்சியைத் தருதற் பொருட்டே என உணர்க.

என்பது தொல்காப்பிய இலக்கணம்.

உணர்ச்சி வடிவாகிய இலக்கியம் பலவற்றைக் கற்று உணர்ந்து அவற்றில் ஊறித் திளைத்தவர் தொல்காப்பியர். இத்தகைய கால வழுக்கள் இலக்கிய உணர்ச்சியைப் பெருக்கி இன்பம் பயத்தலை அவர் நன்கு அறிவார்.

> வாராக் காலத்தும் நிகழும் காலத்தும்
> ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
> இறந்த காலத்துக் குறிப்போடு கிளத்தல்
> விரைந்த பொருள என்மனார்ப் புலவர் - தொல்.சொல். 241

என்பது விரைவுணர்ச்சியைப் பொழியும் கால வழுக்களுக்கு அமைதி கூறி, அவற்றை இலக்கிய உயிராய், இலக்கிய இன்பமாக்கி அளிக்கும் தொல்காப்பிய நூற்பா.

புலவு வாய்ப் பாண

பெயரடையிலும் உயிர் உறைதல் உண்டு. பொன்னை உருக்கி வார்த்தா லனைய நரம்புகள் செறிந்த பேரியாழைத் தன் இடப்பக்கத்தே தழுவித் திரிகின்றான் பெரும்பாணன் ஒருவன். வெஞ்சுடர் ஞாயிறும், தண் கதிர்த் திங்களும் வலம் வரும், கடல் சூழ்ந்து விரிந்து பரந்த உலகம் இது. இப்பேருலகில் தன் கலைத் திறனை மதித்துப் பாராட்டிப் பரிசு வழங்கித் தன்னைத் தாங்கும் வள்ளல்களைப் பெறாமல் வாடுகின்றான். மழை பெய்யாமல் பொய்த்தமையின், பழுமரம் நாடும் பறவை யினம் போலப் பசியால் துடிக்கும் சுற்றத்துடன் நடந்து திரிகிறான். அப்பாணனைத் தொண்டைமான் இளந்திரையனிடம் பெரும் பரிசு பெற்றுத் தன் சுற்றத்துடன் திரும்பும் மற்றொரு பாணன் எதிர்ப்பட்டு அழைத்துப் பேசுகின்றான்.

> பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
> தொடையமை கேள்வி இடவயின் தழீஇ
> வெந்தெறற் கனலியோடு மதிவலம் திரிதரும்
> தண்கடல் வரைப்பின் தாங்குநர்ப் பெறாஅது
> பொழிமழை துறந்த புகைவேய் குன்றத்துப்
> பழுமரம் தேடும் பறவை போலக்
> கல்லென் சுற்றமொடு கால் கிளர்ந்து திரிதரும்
> புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண!
>
> - பெரும்பாண். 15-22

என்று, பட்டினி கிடந்து பசியால் வாடும் பாணனை விளிக்கின்றான், அரண்மனையில் அரச விருந்துண்டு பரிசில் பெற்று வரும் பாணன். ஈண்டு அப்பட்டினிப் பசியால் வாடும் அவனது சுற்றமும், பழுமரம் தேடும் பறவை போலப் பரிசு வழங்கும் வள்ளலை நாடும் அவர்தம் ஏக்கத்தில் பரிசில் பெற்று வரும் பாணன் வாயிலாகப் புலவர் வருணித்தல் காண்கிறோம்.

புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண! என்பது அவ்வருணனையில் முடிமணியாகத் திகழும் விளித்தொடராகும்.

புலவு வாய்ப்பாண! என்னும் இத்தொடரை ஆழ்ந்து நோக்காமல் மேலாக நோக்கின் புலால் நாறும் வாயினையுடைய பாணனே! எனப் பொருள் கூறத் தோன்றும். பாணர் என்போர் இறைச்சி யுண்ணும் மரபினர். அவர்களில் மீன் பிடித்து உண்டு வாழ்வோரும் இருந்தனர். ஆதலின் அவரது வாயைப் புலால் நாறும் வாய் என்றமை பொருந்துவதே எனலாம்.

ஆயின் பன்னாள் பட்டினி கிடந்து பசியால் உடல் மெலிந்து வாடும் சுற்றத்துடன் திரியும் பாணனைப் புலால் நாறும் வாயன் என விளித்தல் அவனை இழிவுபடுத்துவது போன்று உள்ளது. மேலும்

அவனை விளிக்கும் பாணனும் அவனது சுற்றமுமே இளந்திரையனது அரசு விருந்தினராய்த் தங்கியிருந்து,

கொடுவாள் கதுவிய வடுவாழ் நோன்கை
வல்லோன் அட்ட பல்லூன் கொழுங்குறை
அரிசெத் துணக்கிய பெருஞ்செந் நெல்லின்
தெரிகோ லரிசித் திரணெடும் புழுக்கல்
அருங்கடித் தீஞ்சுவை அமுதொடு பிறவும்

- பெரும்பாண்.471-475

வயிறு புடைக்க உண்டு வருபவர்கள். பல்லூன் உண்ட அவர்களின் வாயைப் புலவுவாய் (புலால் நாறும் வாய்) என்று கூறலாம்.

ஈண்டு வரும் பாணர் சிறந்த இசைக்கலைஞர். யாழ் முதலான கருவிகளை இயக்கித் தம் இசைத்திறனைப் புலப்படுத்தி, வள்ளல்களிடம் பரிசு பெற்று வாழும் பாங்கினர். ஆறலைத்து வாழும் கொலைஞரையும் மயக்கி, அவர்தம் வேல் வாள் ஈட்டி முதலான கொலைக் கருவிகளை நழுவப் பண்ணி, மெய்ம்மறந்து நெஞ்சம் நெகிழ்ந்து நிற்குமாறு செய்யும் நைவளப் பண்பாடும் இசைக்கலைஞர் இவர்கள். கொலைஞர்தம் மருள் நெஞ்சையும் அருள்நெஞ்சாக மாற்றும் இவர்தம் இசைத்திறனை

ஆறலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை பொருந.11-12

எனப் பாராட்டுவர் புலவர்.

பட்டினியால் பன்னாள் வாடிய அப்பாணனது உடல், பொலிவிழந்து புல்லென் யாக்கையாகத் தோன்றினும், அவர்தம் கலை என்றும் தம் பொலிவை இழக்காமல் புகழொடு திகழ்வதாகும். பாணர், கூத்தர், பொருநர், புலவர் முதலான கலைஞர்கள் வறுமையால் வாடினாலும், வறுமையிற் செம்மையுடையராய், தம் கலைத்திறன் பற்றிய பெருமிதம் குன்றாமல் வாழ்பவர். பரிசில் வாழ்க்கையராயினும் வரிசைக்கு வருந்துபவர் சங்க காலக் கலைஞர்.

வரிசை யறிதலோ அரிதே பெரிதும்
ஈதல் எளிதே மாவண் தோன்றல்

- புறநானூறு - 121

என வரிசை யுணராத அரசர்களைக் கடிந்து பாடி வரிசைக்கு வருந்தும் பரிசில் வாழ்க்கை யுடையவர் இக்கலைஞர்.

இங்ஙனம் பெருமிதம் சான்ற யாழிசைக் கலைஞனாகிய பெரும்பாணனை மற்றொரு பாணன் அவனது கலைத்திறனைப் போற்றி விளிக்காமல்,

புலால் நாறும் வாயினை யுடைய
பாணனே!

என அழைத்தல் பொருந்துமா? பொருந்தாது சிறிதும் பொருந்தாது. பெருமித உணர்வுப் பொங்கி வழியவேண்டிய சூழ்நிலையில், இளிவரலாகிய இழிவுணர்வு தோன்றுமாறு அழைப்பது, எதிர்ப்படும் அப்பாணனையும், அவனது கலையாற்றலையும் இழிவுபடுத்துவதாகும்.

புலவு வாய்ப்பாண! என்னும் இவ்விளித் தொடர்க்குக் கற்ற கல்வியை வெறுத்துரைக்கும் பாணனே! எனப் பொருள் உரைத்து, அப்பகுதிக்குச் சூழ்நிலைக்கேற்ற பெருமித உணர்வு ஊட்டி, உயிர் கொடுக்கிறார் உச்சிமேல் புலவர் கொள் நச்சினார்க்கினியர் (புலவு-வெறுத்தல்).

தம் கலைத்திறனை மதித்துப் போற்றிப் பரிசு வழங்கித் தம்மைத் தாங்கும் வள்ளல்களைக் காணாது வறுமையால் வாடும்போது, கலைஞர் தாம் கற்ற கல்வியை வெறுத்துக் கூறும் இயல்பினைச் சங்க நூல்களில் பிற இடத்தும் காணலாம்.

சில்செவித் தாகிய கேள்வி நொந்துநொந்து
ஈங்கெவன் செய்தியோ பாண! - புறநானூறு

என்பதும் பரிசில் பெற்றுவரும் பாணன் ஒருவன், பெறாது வாடும் மற்றொரு பாணனை விளிக்கும் இடமாகும். பலரது செவிகளிலன்றி, ஒரு சிலர் செவிகளில் மட்டுமே சென்று, அவரை மகிழ்விக்கும் அரிய கலையைக் கற்றமைக்கு நொந்து திரியும் பாணன் இவன்.

இடைக்காலத்தில் வாழ்ந்த சில புலவர்களும் வறுமையால் வாடும்பொழுது, தாம் கற்ற கல்வியை வெறுத்துப் பிற தொழில் எதுவும் கல்லாமைக்கு வருந்திப் பாடுவதும் காண்கிறோம்.

அடடகெடுவாய் பலதொழிலும் இருக்கக் கல்வி
அதிகமென்றே கற்றுவிட்டோம் அறிவில் லாமல்
திடமுளமோ கனமாடக் கழைக்கூத் தாடச்
செப்பிடுவித் தைகளாடத் தெரிந்தோ மில்லை
தடமுலைவே சையராகப் பிறந்தோ மில்லை
சனியான தமிழைவிட்டுத் தைய லார்தம்
இடமிருந்து தூதுசென்று பிழைத்தோ மில்லை
என்னசென்ம மெடுத்துலகில் இருக்கின் றோமே.

- தனிப்பாடல் திரட்டு, 1ஆம் பாகம், ப. 225.

பிறதொழில் கல்லாமல் தமிழ் கற்றமைக்குப் பெரிதும் வருந்திப் பாடும் புலவர் ஒருவர் பாட்டு இது. சனியான தமிழ் என்கிறார். வாழ்க்கையில் மிகவும் வெறுப்பெய்தினார் போலும்!

புலவுவாய்ப் பாண! என்னும் இத்தொடர் நச்சினார்க்கினியர் உரையாலும், டாக்டர் உ.வே. சாமிநாதையர் மேற்கோள்களாலும் சூழ்நிலைக் கேற்ற பெருமித உணர்வு பெற்றுச் சாவா இலக்கியமாகத் திகழ்தல் காண்கிறோம். கற்ற கல்வியின் அருமை பெருமைகளைப் புலப்படுத்திப் பெருமித உணர்வைப் பாராட்டுதலின் புலவு என்னும் அடைமொழி ஈண்டு இப்பகுதியின் இலக்கிய உயிராய் நின்று இன்பம் தருதல் காண்கிறோம்.

பெடை மயில் உருவின் பெருந்தகு பாடினி

இசைவல்ல பாடினி, பாணர்குலப் பேரழகி அவள். அவளது உறுப்புக்களைச் சிறந்த உவமைகளாலும், பிற அலங்காரங்களாலும் வருணிக்கிறார் பொருநராற்றுப்படை பாடிய முடத்தாமக் கண்ணியார்.

அறல்போல் கூந்தல் பிறைபோல் திருநுதல்
கொலைவில் புருவத்துக் கொழுங்கடை மழைக்கண்
இலவிதழ் புரையும் இன்மொழித் துவர்வாய்
பலவுறு முத்தின் பழிதீர் வெண்பல்
மயிர்குறை கருவி மாண்கடை யன்ன
பூங்குழை யூசல் பொறைசால் காதின்
நாணடச் சாய்ந்த நலங்கிளர் எருத்தின்
ஆடமைப் பணைத்தோள் அரிமயிர் முன்கை
நெடுவரை மிசைய காந்தள் மெல்விரல்
கிளிவாய் ஒப்பின் ஒளிவிடு வள்ளுகிர்
அணங்கென உருத்த சுணங்கணி யாகத்து
ஈர்க்கிடை போகா ஏரிள வனமுலை
நீர்பெயர்ச் சுழியின் நிறைந்த கொப்பூழ்
உண்டென உணரா உயவும் நடுவின்
வண்டிருப் பன்ன பல்காழ் அல்குல்
இரும்பிடித் தடக்கையின் செறிந்துதிரள் குறங்கின்
பொருந்து மயிர் ஒழுகிய திருந்துதாட் கொப்ப
வருந்துநாய் நாவின் பெருந்தகு சீறடி
அரக்குருக் கன்ன செந்நிலன் ஒதுங்கலின்
பரற்பகை யுழந்த நோயொடு சிவணி
மரற்பழுத் தன்ன மறுகுநீர் மொக்குள்
நண்பக லந்தி நடையிடை விலங்கலின்
பெடைமயி லுருவிற் பெருந்தகு பாடினி

பொருந. 25-47

என வருகின்றது. பாடலழகியின் கேசாதிபாத வருணனை. கூந்தல், நுதல், புருவம், கண், வாய், பல், காது, கழுத்து, தோள், முன்கை, விரல், நகம், மார்பு, முலை, கொப்பூழ், நடு, அல்குல், தொடை, கால், அடி ஆகிய

முடி முதல் அடி வரை உள்ள இருபது உறுப்புக்களையும் ஒன்றுவிடாமல் முடத்தாமக்கண்ணியார் தமது பொருநராற்றுப்படை என்னும் இலக்கியத் திரையில் அழகு ஒழுக எழுதிப் பார்த்திருக்கும் பாடலழகியின் உயிரோவியம் இஃது எனலாம். அழகுணர்ச்சி பொங்கி வழியும் அரிய இனிய இலக்கியம் இது.

இவ்வழகு வருணனையின் முடிவுரையாக அப்பாடினியின் முழு உருவையும் ஓர் உவமையால் புனைந்து கூறுகிறார் அப்பெரும்புலவர்.

பெடைமயில் உருவின் பெருந்தகு பாடினி என்பதுதான் அவ்வுவமை.

மாந்தர்க்கு விலங்கு பறவை முதலியவற்றை உவமை கூறுங்கால் ஆண்கட்கு ஆண்விலங்கு ஆண் பறவைகளையும், பெண்கட்குப் பெண்விலங்கு பெண் பறவைகளையும் பால் மயக்கமின்றி ஒப்புமை கூறலே உவம மரபாகும்.

களிறனையான், பிடியனையாள்;
காளை ஒப்பான், பசு நிகர்ப்பாள்;

எனப் பால் வழுவின்றி உவமிப்பர். ஈண்டும் பாண் மகளின் வடிவிற்குப் பெடைமயில் உவம மரபுப்படி பொருத்த முடையதே எனத் தோன்றும்.

மகளிர்க்குப் பெண் விலங்கு, பெண் பறவைகளை ஒப்புமை கூறல் மரபாயினும், மயிலுவமைக்கு மட்டும் அது விதிவிலக்காகும். அழகிய மகளிர்க்குப் பெண் மயிலை உவமை கூறுதல் மரபன்று, ஆண் மயிலை உவமை கூறுதலே மரபாகும். நீண்ட கூந்தலையுடைய அழகியர்க்கு, நீளமான தோகையை யுடைய ஆண்மயிலையே உவமை கூறுவர் புலவர். தோகையற்ற பெண் மயிலை மகளிர்க்கு உவமை கூறுதல் அவர்களை இழிவுபடுத்துவதாகும். ஆறங்குலக் கூந்தலுடைய அரிவையர்க்கு வேண்டுமானால் தோகையற்ற மயிலை உவமை கூறலாம் எனத் தோன்றுகிறது. அவ்வாறு கூறல் இக்காலத்துச் சில நங்கையர்க்கு ஒரு வேளை பொருத்தமாகலாம். பழங்காலத்தில் ஆடல் பாடல் நிகழ்த்தும் அழகியர் நீண்ட கூந்தலுடையவராய்த் திகழ்ந்தனர். பதிற்றுப்பத்துள் ஒரு பாட்டில் வரும் விறலியரை வியந்து அப்பாட்டிற்கே கூந்தல் விறலியர் என்று பெயர் சூட்டினார் அந்நூலின் உரையாசிரியர். எனவே ஈண்டு வரும் பாடினிக்குத் தோகையற்ற பெண் மயிலைப் புலவர் உவமை கூறியிருப்பது எள்ளி நகையாடுதற்குரியது என்றே தோன்றுகிறது.

முடி முதல் அடிகாறும் அழகிய உவமைகளால் பாண்மகளின் உறுப்புக்களை வருணித்துவரும் புலவர், முடிவாக அவளது முழுவடிவை இங்ஙனம் எள்ளி நகையாடுதற்குரிய பெடைமயில் உவமையால் வருணிப்பாரா? அங்ஙனம் வருணிப்பின் அழகு பற்றித் தோன்றும் உவகையுணர்விக்கிடையே, அதற்கு முற்றிலும் மாறுபட்ட இளிவரல்

உணர்வு விரவி, பாடினியின் அழகைச் சிதைப்பதன்றிப் பாட்டின் அழகையும் சிதைப்பதாகுமே. இங்ஙனம் ஈண்டு இலக்கிய உயிராகிய அழகுணர்ச்சி சிதையும் வகையில் சங்கப் புலவர் பாடுவாரா?

உணர்ச்சியாகிய உரிப்பொருள் மயக்கம் நேரா வகையில் பெடைமயில் என்னும் இத்தொடர்க்கு நச்சினார்க்கினியர் சிந்தித்துச் சீரிய விளக்கம் தருகின்றார்.

> பெடையோடு கூடிய ஆண்மயிலனைய
> உருவினையுடைய பெருமைமிக்க பாடினி

என்பது அவர்தம் விளக்கம். பெடை மயில் என்னும் தொடருள் மயில் என்பதனை ஆண்மயிலெனக் கொண்டு, பெடையை அதற்கு அடையாக்கிப் பெடையோடு நடைபயிலும் ஆண் மயிலனையாள் என அழகுணர்ச்சி ததும்ப உரைவிளக்கம் செய்கிறார் அவர். தனியே செல்வதினும், பெடை அருகில் வர, ஆடல்புரியும் ஆண் மயில், மேலும் அழகு பெறுவதாகு மன்றோ.

நச்சினார்க்கினியரின் இவ்விளக்கம் இலக்கியத்துள் வரும் உவம மரபிற்கு ஏற்றதாயினும், வலிந்து கூறுவது போன்றே தோன்றுகின்றது. காளை மாடு என்பதை ஆண்மாடு என்றே அனைவரும் கருதுவர். காளையைத் தழுவி வரும் பசு என்றும், பசு மாடு என்பதற்குப் பசுவை அணைத்துவரும் காளை என்றும், பெடையன்னம் என்பதற்குப் பெடையோடு கூடிவரும் ஆண் அன்னம் என்றும் யாரும் கூறார்.

ஆயின் ஈண்டு நச்சினார்கினியர் இலக்கிய மரபை, இலக்கிய உணர்வை, இலக்கிய உயிரையே எல்லாவற்றினும் மேலாக மதிக்கிறார். ஓர் உணர்வு வருமிடத்துப் பிறிதொருணர்வு மயங்குதல் கூடாது என்னும் இலக்கிய மரபைப் போற்றுகிறார். முதல் கருப்பொருள்கள் மயங்கிவரினும் உணர்ச்சியாகிய உரிப்பொருள் மயங்குதல் கூடாது என்று தொல்காப்பியர் கூறும் கவிதை மரபு வழுவாமல் பாதுகாக்கின்றார். ஆதலின் இலக்கிய மரபு மாறாமல், சூழ்நிலைக்கேற்ற இலக்கிய உணர்ச்சியை, இலக்கிய உயிரைப் போற்றிப் பாதுகாக்கும் நச்சினார்க்கினியரின் இலக்கியத் திறன் அறிந்து மகிழ்தற்குரியது.

திங்கள் வாள் முகம்

சூழ்நிலைக்கேற்ற உணர்ச்சியைக் காவிய மாந்தரிடம் காட்ட முயலும் கவிஞன் அவ்வுணர்வையே ஆண்டு மிகுத்துக் காட்ட வேண்டும். பிற உணர்வுகள் ஆங்கு மயங்குதல் கூடாது. இவ்விலக்கிய மரபினைக் கவிஞர் சிலர் புறக்கணித்தல் போல் தோன்றுகிறது.

சீவகனைப் பிரிந்து வருந்தும் காந்தருவதத்தையை அவன் தம்பி நந்தட்டன் காணும் நிலையைத் திருத்தக்கதேவர் வருணிக்கிறார்.

திங்கள்வாள் முகமும் நோக்கான்;
திருமுலைத் தடமும் நோக்கான்;
அங்கதிர்க் கலாபம் மின்னும்
அணியல்குல் பரப்பும் நோக்கான்;
செங்கயற் கண்ணி னாள்தன்
சீறடிச் சிலம்பு நோக்கி
எங்குளார் அடிகள் என்னா
இன்னணம் இயம்பி னானே.

- சீவகசிந்தாமணி 1705

என்பது நந்தட்டான் காந்தருவ தந்தையைக் காணும் துயரக் காட்சி. இதற்கு நச்சினார்க்கினியரின் உரை விளக்கத்தைப் பார்க்காமல் இதன் பொருளைக் காண்போம்.

திங்களின் ஒளி திகழும் காந்தருவதத்தையின்
முகத்தையும் பாரான்; அழகு திகழும் அவளது
முலையிடத்தையும் பாரான்; மேகலை மின்னும்
அழகிய அல்குற் பரப்பையும் பாரான்; செங்கயல்
கண்ணினாளாகிய தத்தையின் சீறடியில்
கிடக்கும் சிலம்பை நோக்கிச் சீவக அடிகளார்
எங்குளார் என வினவினான் நந்தட்டன்.

இஃது இக்கவிதை நமக்கு வழங்கும் நேரிய பொருள்.

தந்தையின் சீறடிக்கண் கிடந்த சிலம்பை நோக்கி நந்தட்டன் அவளுடன் உரையாடினான் என்று மட்டும் திருத்தக்க தேவர் கூறியிருப்பின், பண்பாடு குன்றாத, பிரிவு என்னும் துன்ப உணர்வு சிதையாத கவிதையாய் அது விளங்கும். ஆனால் தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவியின் முகத்தையும், முலையையும், அல்குலையும் காதலுணர்வு தோன்ற வருணித்து, அவற்றையெல்லாம் அவன் பார்க்கவில்லை என்று கூறுதல், நந்தட்டனது பண்பாட்டையும், ஆண்டுத் தோன்ற வேண்டிய துயரஉணர்வையும் சிதைப்பதுடன், தேவர் பெருமையையும் குறைப்பதாக அன்றோ தோன்றுகிறது!

அண்ணனை இழந்ததாகக் கருதும் தம்பி, சந்திப்பது அன்னையனைய அண்ணியை அவளும் தன் கணவனைப் பிரிந்து வருந்தும் துன்பச் சூழ்நிலை. திங்கள் வாள்முகம், திருமுலைத்தடம், அங்கதிர்க்கலாப மின்னும் அணியல்குல் பரப்பு - என்னும் இவ்வின்ப உணர்ச்சிகள் எழுதற்குரிய சூழ்நிலை இதுவன்று என்பது தெளிவு.

நந்தட்டன் இவற்றை நோக்கான் என ஆசிரியரே கூறுதலின் இவை அவனுக்குத் தோன்றிய உணர்ச்சிகள் அல்ல. பின் இவை யாருடைய உணர்ச்சியால் எழுந்தவை? திருத்தக்க தேவர் ஈண்டு இத்தகைய துயரச் சூழ்நிலையில் இன்ப உணர்வுகளை விரிவாகக் கூறுதல்

பொருந்துமா? இக்கவிதையில் நோக்கான் என வரும் மூன்றிடங்களிலும் நோக்கும் என்னும் சொல்லை அமைத்துவிட்டால், இஃது அன்புக்காதலர் இருவரின் இன்பச் சந்திப்பாக அன்றோ திகழும்? அத்தகைய இன்பக்காதல் உணர்ச்சியல்லவா இக்கவிதையில் பொங்கி வழிகின்றது?

புலவருடைய உள்ளத்தில் அழகிய காட்சிகளோ மகிழ்ச்சியோ ஏற்படும்போது அவற்றிற்கு ஏற்ப அழகு தரும் சொற்கள் அமைதல் பொருந்தலாம். ஆயின் ஆழ்ந்த துயரம் முதலிய உணர்ச்சி உள்ள இடங்களில் அத்தகைய சொற்கள் அலங்காரமான சொற்கள் அமைதல் எங்ஙனம் பொருந்தும்? அங்ஙனம் அமையின் புலவர் அப்போது உற்ற உணர்ச்சியில் (துன்ப உணர்ச்சியில்) போதிய ஆழம் இல்லை என்று தானே உணர வேண்டும். (மு.வ. இலக்கியத் திறன், பக். 70-71). சிந்தாமணி மணநூலாதலானும், சீவகன் பல மகளிரைக் காதலித்து மணந்த கதை கூறும் நூலாதலானும், காதலரின் இன்பச் சுவையையும், புணர்ச்சியாகிய இன்பச்சுவைப்படப் பாடி இன்புறுகிறாரோ, முற்றத்துறந்த முனிவராகிய திருத்தக்க தேவர் - என்று எண்ணத் தோன்றுகிறது.

காவிய மரபிற்கு மாறாகப் பிரிவாகியத் துன்ப உணர்ச்சியை இன்ப உணர்ச்சி விரவப் பாடியுள்ளமை எவ்வாற்றானும் பொருந்தாதெனக் கருதும் நச்சினார்க்கினியர் தமது உரைத் திறனால் சூழ்நிலைக்கேற்ற உணர்ச்சியை ஆண்டு வலிந்து காட்ட முயல்கிறார்.

"காந்தருவதத்தையின் முன்பு திங்களை ஒக்கும் முகத்தில் இப்பொழுது நிகழ்கின்ற வாட்டத்தையும் நோக்கான்; முன்பு நன்றாகிய முலை இப்பொழுது பசந்த பசப்பையும் நோக்கான்; முன்பு கலாப மின்னும் அல்குலில் இப்பொழுது ஆடை மாசுண்ட தன்மையையும் நோக்கானாய்த் தான் இறைஞ்சி நிற்றலின், அடியின் சிலம்பு ஒன்றையுமே நோக்கி எங்குளார் அடிகள் என்று இப்படி ஒரு வார்த்தை கூறினான் என்க."

காவியச் சூழ்நிலையையும், ஆண்டு நிகழும் உணர்ச்சியையும் ஆய்ந்து, உணர்ச்சியாகிய உரிப்பொருள் மயங்குதல் கூடாது என்னும் இலக்கிய மரபிற்கு ஏற்ப நன்கு ஆய்ந்து நச்சினார்க்கினியர் உரைக்கும் விளக்கம் இது வாகும்.

தேவர் வருணித்த உறுப்பழகுகள் - திங்களை ஒக்கும் முகம், திருமுலைத்தடம், கலாபம் மின்னும் அல்குல் - ஆகியவை அவளது பழைய அதாவது சீவகன் அவளுடன் கூடிவாழ்ந்த பொழுது திகழ்ந்த இன்பக் காட்சிகள். பழைய நிலைகளைக் கூறுவதன் வாயிலாக இப்பொழுதைய, அதாவது சீவகனைப் பிரிந்து வருந்தும் நிலைமை - முகத்தில் வாட்டமும், முலையில் பசப்பும், அல்குலில் மாசுண்ட ஆடையும் ஆகும். இப்பொழுதைய இந்நிலைமை நச்சினார்க்கினியர் உய்த்துணர்வு, திருத்தக்கதேவர் கூறியதன்று. நந்தட்டன் இறைஞ்சி (தலை குனிந்து) நிற்றலின் அவன் கண்ணுக்கு அவளது இத்துன்ப நிலை தோன்றவில்லை, அடியிற் சிலம்பு ஒன்றுமே தோன்ற அதனை நோக்கி உரைக்கின்றான்.

அடியிற் சிலம்பை மட்டும் பார்த்து அண்ணியுடன் பேசும் பண்பாளன் நந்தட்டன் என்பது தேவர் கூற்றாலேயே தெரிகிறது. அத்தகையவன் எப்பொழுதுமே அவளது முகம், முலை, அல்குல் இவற்றின் அழகைப் பார்த்திரான். அவன் பார்க்காத, பார்க்க வேண்டாத, உற்று நோக்கக் கூடாத திங்கள் வாள்முகம், திருமுலைத்தடம், மேகலை மின்னும் அல்குல் இவற்றை அவன் பார்த்திருக்க வேண்டும். ஆயின் பார்க்கவில்லையே எனத் திருத்தக்கதேவர் வருந்துகிறார் போலும்?

நச்சினார்க்கினியரோ தத்தையின் உறுப்புக்களையும், அவற்றின் அழகையும் நந்தட்டன் முன்பெல்லாம் பார்த்திருப்பான் என்னும் கருத்துக் கொண்டு, இப்பொழுது பாராமையின் அவற்றின் வாட்டமும், பசலையும், மாசுண்ட ஆடையும் அவனுக்குத் தோன்றவில்லை என வருந்துகிறார் போலும்.

எவ்வாறாயினும் இன்ப உணர்வு பொங்கும் இப்பாடலைச் சூழ்நிலைக்கேற்பப் பிரிவாற்றாமையாகிய துன்ப உணர்வு மிக்கதாகக் காட்ட வேண்டும் என்று நினைக்கிறார் நச்சினார்க்கினியர். அவ்வாறு காட்டாவிடின் சூழ்நிலைக்கேற்ற உணர்ச்சியில்லாததாய், உயிரற்ற பாட்டாய் நின்று, இலக்கிய மரபிற்கு மாறாகிவிடும். எனவே,

> கணவனைப் பிரிந்து வருந்தும் காந்தருவதத்தையின் நிலைக்கு நெக்குருகி, அவளது பழைய அழகுகளையும், இப்பொழுதைய துயர் நிலையையும் சிந்தித்து, அவ்வழகுகளை வாய்விட்டுச் சொல்லி, அழகு வீற்றிருந்த அவ்விடங்களில் இப்பொழுதுள்ள துயர்நிலைகளைச் சொல்லவும் நாவெழாமல் நிற்கும் ஆழ்ந்த துயர வுணர்ச்சியில் தேவர் இப்பாட்டைப் பாடி, சீவகனது பிரிவால் தத்தையும் நந்தட்டனும் உள்ள பிரிவுத்துயரை அவர் புலப்படுத்துகிறார்

என நச்சினார்க்கினியர் நம்மை உய்த்துணர வைக்கிறார். சூழ்நிலைக்கேற்ற உணர்ச்சியை வருவித்து, இலக்கியமரபைப் போற்றி, இப்பாட்டிற்கு உயிரூட்டும் ஆற்றலில், எந்த அளவு அவர் வெற்றி பெற்றார் என்பதை அறிஞர் உய்த்துணர்வாராக.

வாழிய செந்தமிழ்

பழம் பாடல்களில் அமைந்துள்ள உணர்வுகளாகிய இலக்கிய உயிரை இதுவரை ஆய்ந்து கண்டோம். விடுதலைக்குப்பின் தேசிய ஒருமைப்பாட்டுணர்வே பாரதியார் முதலான கவிஞர் படைப்புக்களின் இலக்கிய உயிராக நாம் காண்கிறோம்.

தமிழ்நாடு நம்நாடு, தமிழ்மொழி நமது மொழி, தமிழினம் நமது இனம் எனக்கூறும் நாடு, மொழி, இன உணர்வுகள் தமிழர் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதன எனலாம். ஆயின் இவ்வுணர்வு குறையாமலேயே நாளடைவில் பாரதம் நம் நாடு, பாரத மொழிகள்

நமது மொழிகள், பாரத மக்கள் நமது இனம் எனக் கூறுமளவிற்கு வளர்ந்து பரந்து விரிதல் வேண்டும் என்பது கவிஞர்களின் கருத்து.

வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித்திருநாடு

என்னும் பாரதியார் கவிதை இவ்வளர்ச்சியை வற்புறுத்துவதாகும் (பாரதியார் கவிதைகள், தேசிய கீதங்கள் - 25).

தேசிய ஒருமைப்பாட்டுணர்வாகிய தமிழிலக்கிய உயிரை மற்றொரு கவிதையில் தெளிவாகக் காட்டுகிறார் பாரதியார். தென்னாட்டுத் தமிழினத் தலைவன், கேரள நாட்டு மலையாள இனத்து இளநங்கையைக் காதலித்து, அவளுடன் வட நாடு சென்று, தேனினும் இனிய தெலுங்குப் பாடலைப் பாடிக்கொண்டு, நிலவொளியில் சிந்துநதியில் தோணி விட்டுத் தேனிலவு கொண்டாடி மகிழ்கிறான்.

சிந்து நதியின்மிசை நிலவினிலே
சேர நன்னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்
தோணிகள் ஓட்டிவிளை யாடிவருவோம்

- பாரதியார் கவிதைகள், பாரத தேசம், 5.

என்பது பாரதி பாடும் தேனிலவுக் கவிதை. இங்குத் தென்னாடு வடநாடு, தமிழினம் மலையாள இனம், தமிழ்மொழி தெலுங்கு மொழி என்னும் வேற்றுமையே ஒற்றுமையாகி, ஒருமைப்பட்டுத் தேசிய ஒருமைப்பாட்டுணர்வு பொங்கி வழிதல் காணலாம். இவ்வுணர்வே இக்கவிதை முழுவதும் நாம் காணும் இலக்கிய உயிராகும்.

யாதும் ஊரே

தேசிய ஒருமைப்பாட்டுணர்வுக்கும் மேலாக உலக ஒருமைப்பாட்டுணர்வும் நமது பழைய இலக்கியங்களின் உயிராகத் திகழ்கின்றது. தமிழ்ப் பெரும் புலவர்கள் தாம் படைக்கும் இலக்கியங்கள் உலக சமுதாயத்தின் நல்வாழ்விற்கு உரியன எனவே கருதினர். அக்கருத்தை வெளிப்படுத்தும் நோக்கத்துடன் உலகம் என்றே தம் இலக்கியத்தைத் தொடங்கிய புலவர்களைக் காண்கின்றோம்.

உலகம் உவப்ப என நக்கீரரும்,
உலகெலாம் எனச் சேக்கிழாரும்,
உலகம் யாவையும் எனக் கம்பரும்,
ஆதிபகவன் முதற்றே உலகு என வள்ளுவரும்

ஞாயிறு (உலக ஒளி) போற்றுதும் என இளங்கோவடிகளும் தமது இலக்கியங்களைத் தொடங்குகின்றமையின், உலக ஒருமைப்பாட்டுணர்வே அவர்கள் படைத்த நூல்களின் இலக்கிய உயிர் என உணரலாம்.

வள்ளலாரின் திருவருட்பாவில் உலக ஒருமைப்பாட்டுணர்வைப் பல இடங்களில் காணலாம்.

ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
ஒருமையுள ராகிஉல கியல் நடத்தல் வேண்டும்

- திருவருட்பா 4082

என அவர் வேண்டுவது உலக ஒருமைப் பாட்டையே எனலாம். ஆன்ம நேய ஒருமை என அவர் கண்டதும் அதுவே.

உலக ஒருமை உணர்விற்கு வித்திட்ட பழம்பெரும் புலவர் ஒரு சோதிட வல்லுநர் என அறிகிறோம். உலக ஊர் அனைத்தும் தம் ஊரே, உலக மாந்தர் யாவரும் தம் உறவினரே எனக் கொள்ளும் நாள் என்றாவது வரும் என, வருவது கூறும் தமது சோதிட நூற் புலமை கொண்டு அவர் கணித்துக் கூறுகிறார். கணியன் பூங்குன்றனார் என்பவரே அப்பெரும்புலவர். அவரது பொன்மொழி.

யாதும் ஊரே யாவரும் கேளிர் (புறநானூறு 192)

என்பதாகும். இதுவரை நாம் கண்ட உணர்வுகளாகிய இலக்கிய உயிரனைத்திற்கும் முடிமணியாகத் திகழும் இவ்வுலக ஒருமை யுணர்வே தமிழிலக்கியம் அனைத்திற்கும் உரிய இலக்கிய உயிர் என உணர்ந்து இன்புறுவோமாக.

தமிழ் - தமிழர் - தமிழ்நாடு : உணர்தலும் வாழ்தலும்*

தமிழ்நாடன்

1. தமிழ்

என் தாய் என்னிடம் முதன் முதலாகப் பேசியமொழி எதுவென அப்போது எனக்குத் தெரியாது. அவள் சொன்ன சொற்களுக்குப் பொருள் தெரிந்தது.

முதலாம் வகுப்பு ஆசிரியர் அ, ஆ, கற்றுக் கொடுத்தார். என் தாய் கற்றுத் தந்த சொற்களை அங்கே இன்னும் தெளிவாக உச்சரிக்கக் கற்றுக் கொண்டேன். தமிழ் இனிமையான மொழி என்று சொன்னார்கள். தன் கணவனோடு சண்டை பிடித்த வேளையில், என் தாய் என்னை மொத்தும்போது தெளித்த வசவுகளில் தமிழ் இனிமையாக இருக்கவில்லை. காதலியின் மொழி இனிமையானது என்று கவிதைகள் கூறின. முதற்காதல் தோல்வியுற்றபோது அவளின் ஒவ்வொரு சொல்லும் சயனைட் கட்டியாகக் கசந்தது.

தமிழ் என்றால் சைவம் என்றது ஒரு கூட்டம். தமிழுக்குத் தந்தை சிவபிரான் என்றார்கள். அகத்தியக் கரடி வேறு. பௌத்தம், சமணம், வைணவம், இஸ்லாம், கிறிஸ்துவம் இவையெல்லாம் (வளர்த்தது) தமிழ் அல்லவா? பழம் இந்திய இலக்கியத்தில் முன்னிலையில் இருப்பது தமிழே. அத்தமிழில் சிறந்த இலக்கியங்களைத் தந்தது பௌத்தம், சமணம் இரண்டும். இடைக்காலத் தமிழ் இலக்கியம் வைணவம் தானே! கிறித்துவமே தமிழுக்குப் புத்துயிர் ஊட்டிற்று.

தமிழ் என்றால் வீரம் எனப் புறநானூற்றுப் பாடல்கள் ஒலிபரப்பின. ஒரு தலைமுறைத் தமிழ் மக்களேனும் போர் அழிவில் சிக்காமல் வாழ்ந்த வரலாறு உண்டா? உள்ளூர்ச்சண்டை, சலிப்புற்றால் அண்டை அயலோடு; இமயத்திலிருந்து கல் கொணர்ந்தோம். கலிங்கத்தை வென்றோம் என்பதெல்லாம் இலக்கியப் பெருமைகள். அவ்வளவே.

தமிழ் எங்கே இருக்கிறது? புலவர் நாவில் தமிழ் இருந்தது ஒரு காலம். ஆறு கோடிக்கு மேலே தமிழர் தொகை. இவருள் பிழையற்ற தமிழ் பேசும் எழுதும் தமிழர் ஓர் ஐம்பது பேர் தேறுவார்களா?

நல்ல தமிழ் நூல்களுக்குள் தமிழ் இருந்தது. சங்க இலக்கியம் போல. ஆனால் இவற்றை எடுப்பவர், படிப்பவர் யார்? எழுத்தறிந்த தமிழ் மக்களுள் ஆயிரத்தில் ஒரு பங்கினர் கூட இவற்றை அறிய மாட்டார்கள். தமிழ் இன்னும் சாகாமல் இருப்பது - புலவர் நாவில் அல்ல. புத்தகங்களில் அல்ல. அரசியலில் அல்ல. தமிழ் பிழைத்திருப்பது கிராமத்துத் தாயின் தாலாட்டில் , நடவுப் பெண்கள் பாட்டில், கூலிக்காரர் பேச்சில்!

---

* சேலம் வேலூர் சுந்தசாமி கண்டர் கல்லூரி அறக்கட்டளைப் பொழிவு
* திருச்சிராப்பள்ளி பிசப் ஈபர் கல்லூரி * 24.05.1997

2. தமிழர் என்னும் அடிப்படை

தாய்மொழித் தமிழர், தந்தை வழித் தமிழர், தமிழ்நாட்டுத் தமிழர், இந்தியத் தமிழர், அயல்நாட்டு (குடியேற்ற)த் தமிழர், குடிதிரும்பிய தமிழர், NRI தமிழர். இப்படி தமிழர் பல்வேறு தலங்களில், தளங்களில் வாழ்வதை எப்படி நிரல்படுத்துவது? (தமிழுக்குத் தொண்டு செய்தோரும் தமிழரே என்பார் ஒரு கிறித்துவத் தமிழ் அன்பர். வீரமாமுனிவரின் வேண்டுகோள் அது)

உலக முழுவதில் வாழும் தமிழர் எல்லாம் தமிழர்தான். அவர்களின் மூதாதையர் தமிழர். அவர்தம் வாழ்வில் தமிழ்ப் பண்பாட்டு எச்சங்களைக் காணலாம். தமிழர்க்குப் பிறந்தவர் அனைவரும் தமிழரே!

மனுதருமம் வித்துதான் முதலாவது மண் அல்ல என்று விதிக்கிறது. அதன்படி தமிழ் ஆடவர் அயல்மொழி, இன, நாட்டுப் பெண்களுக்குப் பெற்ற பிள்ளைகள் மட்டுமே தமிழர். களப்பிரர் தொட்டுக் கும்பினியார் வரை வந்து தமிழரோடு ஊடுருவிக்கலந்து போன ஆண்கள் நம் தமிழ்ப் பெண்களிடத்தில் பெற்ற பிள்ளைகள் தமிழர் ஆகார்.

தம் தாய்மொழி தமிழானவர் தமிழர் இவ்வுண்மைக்கு மாற்றேதும் இல்லை. தமிழர் தாய்மொழிப் பண்பினர்; தந்தை மொழிப் பண்பினர் அல்லர். தம் தந்தை மொழி வேறான மக்களை எப்படி அழைப்பது? குறிப்பாக யவனரும், மாலிக்காபூரின் வீரரும் பெற்ற பிள்ளைகளின் வமிசாவளியினர்க்கு என்ன பெயரிடுவது?

தமிழ்நாட்டில் வாழ்பவர் அனைவரையும் தமிழராய் ஏற்பதில் தாய்மொழித் தமிழர் மற்றும் பூர்வீகத் தமிழர்க்குச் சில சங்கடங்கள் உண்டு. இந்தியத் தேர்தல் ஆணையம் அசாம், காஷ்மீர், பஞ்சாப் இங்கெல்லாம் வாக்காளர்களுக்குப் போட்டோ ஒட்டிய அடையாள அட்டை வழங்க வேண்டும் என வற்புறுத்துவதே பூர்வீக மக்கள் யார் என்ற வினா பலத்த காரணம் தான்.

3. தமிழர் என்னும் உணர்வு

ஒருவர் தாம் தமிழர் என்று உணரும் நிலையில், சில வகைபாடுகளைக் காணலாம். 1. மொழி ஆர்வத்தால் தமிழர் என்று பெருமை கொள்வார் ஒரு சாரார்.

2. தாம் சார்ந்த இயக்கம் அல்லது கட்சியின் காரணமாக அவ்வாறு பெருமை கொள்வார் ஒரு சாரார்.

தமிழ் இலக்கியத்தின் சிறப்புணர்ந்து, தமிழுணர்வு கொள்வோர்க்குச் சிறு வயது தமிழ் பசுமரத்தாணி. அவர்களின் தமிழாசிரியர்கள் பாராட்டுதலுக்கு உரியவர்கள். என்றென்றும் நன்றிக்குரியவர்கள். இன்று அத்தகைய ஆசிரியர்கள் குறைவு. இலக்கியச்

சுவையை விளக்கும் பல தமிழ் ஆசிரியர்களுக்கு இலக்கணம் தெரியாது. பழந்தமிழ் இலக்கியம் அறிந்த சிலரும் தற்காலப் படைப்புகளை மதிப்பாகக் கருதுவதில்லை. தற்கால இலக்கியம் அறிந்தவர்கள் பழந்தமிழ்ப் படித்துச் சிரமப்படுவதில்லை.

இடைக்காலம் தொட்டுத் தமிழ் உணர்வாளராய் தாய்வழித் தமிழர் தாய்மொழித்தமிழர் இல்லாத பலர் மேலே நின்றனர். அவர்க்கு வீட்டுக்குள் தம் மரபு காக்கும் கடமை. வெளியே தமிழ்ப்பணி. அது வாழ்வு. அன்று முதல் இன்றுவரை புகழ் பெற்ற தமிழ்ப் படைப்பாளிகள் பலர் தாய்மொழித் தமிழர் அல்லர். அத்தகையோர் சங்கம் அமைத்தும் தமிழ்ப் பணி ஆற்றினர். தமிழ் அமைப்புகள் பலவற்றில் அவர்களே பெரு விழுக்காடு உறுப்பினர்.

தமிழ் இதழ்கள் பலவற்றின் முதலாளிகள் தாய்மொழித் தமிழர் அல்லர். இதழ் நடத்துவது இன்று முதலீடு, நுணுக்கம், பொறுமை, திறமை, தேவைப்படும் ஒரு பெருந்தொழில். தமிழர் சிலரும் தமிழ் இதழ்கள் நடத்துவர். ஒவ்வொன்றும் ஒரு மளிகைக்கடை. அவற்றில் யாதொன்றும் சிந்தனை வளர்ச்சிக்கு உதவும் சிறப்புப் பேரங்காடி இல்லை.

தமிழ் உணர்வு திராவிடர் தமிழ் எனும் அடிப்படையில் இயக்கமாய் உருப்பெற்றது. இயக்க உறுப்பினர்கள் பெருகினர். இந்தப் பெருக்கம் அரசியல் பற்றாக வளர்ந்து தமிழ்நாட்டு ஆட்சியைக் கைப்பற்றியது. தமிழரினும் மற்றவரே அவ்வெற்றியில் பெரும்பங்கு பற்றினர்.

தமிழ் உணர்வாளர் சிலர் தமிழ் எழுதுவர். பேசுவர். அவர் பணி மொழிப்பணி. தமிழர் வெகுசிலர் வேறுநாடுகளில் வாழும் தமிழனுக்காகப் பரிந்து எழுவர்.

தமிழ் உணர்வாளரின் செயல்பாட்டில் தமிழின் பழம் பண்பாட்டை மீட்டல், காத்தல், வளர்த்தல் என மூன்று நிலைகள், தமிழ்ப் பண்பாட்டை மீட்டோர் ஆங்கிலத்திற்கு எதிராகத் தமிழை நிலைப்படுத்தினர். திராவிடப் பண்பாட்டை நடப்புக்குக் கொணர முயன்றனர். தமிழிசை போலும் தமிழ்க் கலைகளை அரங்கில் அமர்த்தினர்.

தமிழ், தமிழர் பண்பாட்டைக் காத்தல் எனும் பணி அவரவர் வாழ்வில் தமிழராய் நடத்தல், தமிழ்ப் பண்பாட்டை மீட்ட தமிழ்ச் சான்றோர் சிலர் தமிழ்ப் பண்பாட்டைக் காப்பவராயும் ஒழுகினர். தாம் தமிழ்ப் பெயர் ஏற்றனர். மற்றவர்க்குத் தமிழ்ப் பெயர் சூட்டித் தமிழ் இன உணர்ச்சியூட்டினர். அவர்கள் நற்றமிழ் பேசினர். எழுதினர், பரப்பினர். தமிழ்த் திருமண முறையை வலியுறுத்தினர். நடத்துவித்தனர். தம் இல்லத் திருமணங்களில் சடங்குகளில் தமிழராய் நடந்து காட்டினர். தமிழ் நூல்கள் வெளியிட்டனர்.

இவற்றில் முதல் பணி விடுதலைக்கு முன் முற்றுப் பெற்றது. இரண்டாம் பணி விடுதலைக்குப் பிறகான கால் நூற்றாண்டுக் காலம் செயல்பாட்டில் இருந்தது. திராவிட இயக்கமும் அதைச் சார்ந்தும் சாராத தமிழியக்கங்களும் அப்பணியில் தத்தமக்கு உகந்த பணி ஆற்றின.

மூன்றாம் நிலை தமிழ், தமிழர் பண்பாட்டை வளர்த்தலாகும். இப்பணியில் ஈடுபடக் கடந்த அறுபதுகளில் சில தீர முகங்கள் உயர்ந்து வந்தன. அரசியல் ஆளுமை பெறாது ஒரு மொழியை, பண்பாட்டை நிலைபெறச் செய்ய இயலாது. எனவே அத்தீர முகத்தினர் சிலர் அரசியல் ஈடுபாடு கொண்டனர். ஆட்சியிலும் அமர்ந்தனர்.

4. தமிழனின் மானிடவியல் தன்மைகள்

தமிழன் என்றொரு இனம் உண்டு!
தனியே அவனுக்கொரு குணம் உண்டு!

இக்கவிதை எத்தனையோ முறை எழுத்திலும் பேச்சிலும் சொல்லப்படுவதுண்டு.

தெற்கே தக்காணத்தில் வாழ்ந்தோர், தஷ்யூக்கள் என்று கூறப்பட்டவர்கள் எல்லோரும் (திராவிடர்) தமிழர் என்பது வேதகாலக் கருத்து. இரண்டாயிரம் ஆண்டுகாலமாய் அதை ஏற்றும் மறுத்தும் தமிழர் ஓய்ந்தனர். பின்னர் அய்ரோப்பியரின் ஆய்வு.

மேற்கத்தியத் திராவிடவியல் அறிஞர்கள் தமிழர் பற்றிய புதிய ஆய்வுகளை வெளிப்படுத்திய போதெல்லாம் தமிழறிஞர் அந்தக் கருதுகோள்களின் பால் சாய்ந்தனர்.

நூற்றாண்டு தொடக்கம் திராவிடர் செமிட்டியர் என்றனர் சில அறிஞர். செமிட்டியர் ஆப்கான் வழியே இந்தியா வந்தனர்; செமிட்டிக் மொழியில் திராவிட மொழிச் சொற்கள் சில உண்டு என்றெல்லாம் விளக்கினர். தமிழ் அறிஞரும் அதை முழுதுமாய் ஏற்று எழுதினர்.

செமிட்டியர் உயரமானவர், மாநிறத்தவர், வன்மையான உடல்வாகினர். திராவிடர் கறுப்பர், குறளர் என்னும் பொதுக் கருதுகோளுக்கு அது பொருந்துவதில்லை.

கிரேக்கம் உலக மக்களின் அறிவுத்தாய்; ரோம் அரசியல் தந்தை என்ற கருத்து அத்திசை அறிஞர் பலருக்கு, தொழிற்புரட்சிக்குப் பின் உலகமெல்லாம் அய்ரோப்பியர் பரவ நேர்ந்து அக்கருத்து இன்னும் வலப்பெற்றது. திராவிடர் மேற்கிருந்து வந்தவர் எனும் கருத்து அச்சார்பினதே.

சிந்துவெளி நாகரிகம் கண்டறியப்பட்டதும் (1946) அயல் நாட்டு அறிஞர் சிந்துவெளி மக்கள் திராவிடர் என்றனர். உடன் நம் தமிழர் சிந்துவெளி தமிழினத்தின் தொட்டில் என்றெழுதினர். என்றாலும் வாழும் திராவிடர் அம்மக்களை அந்நியராகப் பாவித்துப் பகைத்தனர்.

சிந்துவெளி நாகரிகம் பன்முறை மீண்டும் மீண்டும் அழிந்தது. அந்த அழிவு சிந்துநதி நீர்ப் பெருக்கினால் என்பர். மத்திய ஆசிய மக்களின் தொடர்ந்த படையெடுப்பால் மொகஞ்சதாரோ நகரம் தீக்கிரையாக்கப்பட்டது என்றும் சொல்வர். மத்திய ஆசியர் ருசிய நாட்டவர். தொன்மை ருசிய மக்களா தொன்மை திராவிட/தமிழ் மக்களை உயிரோடு எரித்தவர்கள்?

ஆஸ்திரேலியத் தீவுகளில் வாழும் கறுத்த நிற மக்களே திராவிடரின் ஆதிவேர்கள் என்பதொரு ஆய்வு. அதன்படி தமிழர் கறுப்பர். குட்டையானவர். இவ்கூற்றும் தமிழரின் தொன்மைக்கு விடையளிப்பதில்லை. காரணம் இலக்கிய வழி அறியும் பழந்தமிழரோ இன்று நம்மோடு வாழும் தமிழரோ அவ்வாறு இல்லை.

தமிழர் பூர்விகம் நாவலம் தீவு; லெமுரியாக் கண்டம் என்பர் தமிழ் இலக்கியச் சான்றாளர். தமிழரின் தோற்றம் பல லட்சம் ஆண்டுகள் என்பது அவர் கருத்து. இதை மானிடவியலார் ஒப்புவதில்லை. இது போன்றே தமிழன் தான் ஆதிமானுடன், உலகெலாம் படர்ந்த தாய்க்கொடி தமிழ்க்குடி என்னும் தமிழர் கூற்றையும் ஆய்வு உலகம் ஏற்பதில்லை.

தமிழர் மேற்கும் வடக்கும் இருந்து வந்தவர் என்னும் கோட்பாடு தமிழன் தமிழ் நிலத்திற்கே அந்நியன் என்று பலத்த சப்தமிடுகிறது. தமிழ் மக்களின் தோற்றம் குறித்த கருதுகோள்களில் பலவும் ஒன்றோடு ஒன்று முரண்படுகின்றன. மொழி சார்ந்த கருதுகோள், தமிழ்மொழி முதன்மையானது என்று உரக்கப் பேசுகிறது. மானிடவியல் ஆய்வு அதற்குத் துணைச் சான்று எதுவும் வழங்குவதில்லை. பண்பாட்டியல் ஆய்வு அங்கொரு இங்கொரு சான்றுகளைப் புலப்படுத்துகிறது. எல்லாம் கூடிப் புதிர் வளர்கிறதே தவிர உறுதிப்பாடான விடை தேர்வதில்லை.

5. உண்மைத் தமிழர்

தமிழர் இவர் என அறுதியிடுவதற்கு வழக்கமாய்க் கொள்ளப்படும் நிறம், உடல் அளவு ஆகிய அலகுகள் இன்னும் செல்லத் தக்கதாக இல்லை. பல்வேறு உடல் வண்ணத் தமிழர், பல்வேறு உடல்வாகு, உடல் அளவுத் தமிழர் இன்று. இவை தமிழர் ஒரு mono-lithic இனம் அல்ல என்றெண்ண வைக்கின்றன.

சங்கத் தமிழ்ச் சித்திரிக்கும் தமிழர் வாழ்க்கையை உணர்வோர் இந்தத் தமிழரிடத்தில் இத்தனை வேற்றுமைகள் எப்படித் தோன்றின என்று வியப்பர். வெள்ளையர் வருகையின் போதும் கூட இடங்கை வலங்கைக் கலவரங்கள். ஆங்கில ஆட்சி அக்கலவரங்களை வன்கரத்தால் அடக்கியது. தமிழரின் இந்த இருகையர் பற்றிய ஆய்வுகள் கூட எதுவும் துல்லியமாக இல்லை.

தமிழர் வாழ்வில் திணிக்கப்பட்ட மனுதர்மமும் தமிழர் மீது ஆட்சி செலுத்திய அர்த்தசாத்திரமும் பல்வேறு சாதிகளைப் பட்டியலி-

டுகின்றன. எட்கர் தர்ட்ஸ்டன் என்னும் ஆங்கில அலுவலர் தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் என்றொரு நூல் தொகுத்தளித்தார். அபிசேகர் எனத் தொடங்கி இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட சாதியினரையும் குடிகளையும் அந்நூல் பட்டியலிடுகிறது. அதில் காணும் சாதிப் பெயர்கள் மிகுதியும் பிறமொழிச் சொற்கள். தமிழ்நாடு அரசுக் கல்வித்துறைப் பட்டியலில் கூட வேற்றுமொழிப் பெயர்கள் நிறைந்த சாதிகள் பல. தமிழ்ப் பெயரற்ற சாதிகள் தமிழரின் சாதிகளாகுமா?

தமிழர் சிலர் தங்களை இன்று தலித் என்று அழைத்துக் கொள்கிறார்கள். 1920-களில் அத்தமிழர் தம்மை ஆதி திராவிடர் என்று அழைத்துக் கொண்டனர். 1921-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் முதன்முறையாக அப்பெயர் பதிவு பெற்றது. அப்போது தாழ்த்தப்பட்டோர் தொகை 65 லட்சம். ஆதிதிராவிடர் எனப் பதிவு செய்தோர் 15 ஆயிரம்.

இராமானுசர் அம்மக்களைத் தேவகுலத்தோர் என்றார். ஹரிஜனம் என்றழைத்தார் காந்தி. இவை தமிழர்க்குத் தந்தை கடவுள் என்றன. பொருளாதாரச் சமத்துவத்திற்கு ஒரு பைசா பலன் இல்லை.

தலித் தமிழ்ப் பெயர் அன்று. தலித் எனும் புதுப்பெயர். தாழ்த்தப்பட்ட தமிழர் அனைவருக்குமான பொதுப் பெயர். பாமர, கிராமத்துத் தலித்துகளுக்குக் கவலை பெயர் அல்ல; அன்றாடப் பிழைப்பே.

தலித் எனும் சொல் பொதுவாகப் பொருளாதாரத்தில் நலிந்து போயிருக்கிற (தமிழ்) மக்களைக் குறிக்கும் சொல். அது அம்மக்களின் பண்பாட்டு வாழ்வியலை அர்த்தப்படுத்துவதில்லை.

தமிழ்நாட்டுத் தலித்துகள் அனைவரும் ஒரே இன, ஒரே சாதி. ஒரே மொழி மக்களாய் இல்லை. தமிழ்நாட்டுத் தலித்துகளில் ஒரு பிரிவினர் தமிழ்நாட்டின் பூர்வீகக் குடிகள் அல்லர். ஒரு பிரிவினர் தாய்மொழித் தமிழர் அல்லர். ஒரு பிரிவினர் தமிழ்நாட்டுத் தெய்வங்களைத் தொழுபவர் அல்லர். தமிழ்த் தலித்துகளுக்குள்ளும் தீண்டாமை. வாழ்நிலையில் செழிப்பும் வறுமையும் அருகருகே.

தமிழ்நாட்டு மக்களில் சில இனத்தவரின் தோற்றம் இன்னும் புதிரே! நீலகிரித் தோடர் தொகை சுமார் ஓர் ஆயிரம் ஆனால் அம்மக்களைப் பற்றிய ஆய்வு நூல்கள் அதற்கும் மேலே. இவை யாதொன்றும் தோடர் யார் என்னும் வினாவுக்கு விடை தருவதில்லை. லம்பாடிகள் நான்கு மாவட்டங்களில் வாழ்கின்றனர். அவர்களது தோற்றம் ஆப்கானிஸ்தான் வரையாக மேற்கு இந்தியாவில் கோடிட்டுக் காட்டப்படுகிறது. எனினும், இதுதான் அவர்தம் பூர்வீகம் என்ற உறுதிப்பாடு இல்லை. படகர் கருநாடகத்தவர் என்பர். எனினும் நிறம் கருதி அயல்நாட்டவர் அவர் என்பவர் உண்டு.

தமிழ்நாட்டில் தமிழர் என்று இன்று வாழ்வாரினும் நூறுசதம் வேறுபாடுகளோடு விளங்குவர் இருளர், பனியர். இப்பழங்குடித் தமிழரைத் தம் போலத் தமிழர் என்று சமமாய்ப் பாவிக்கும் மேல்தட்டுத் தமிழர் ஒருவரும் இல்லை.

6. தமிழர் ஆட்சி

முத்தமிழ் சரி. முச்சங்கம்? காலம், இடம், மக்கள் வெவ்வேறு ஆனதால் அவ்வாறு அழைப்பது பொருத்தப்பாடில்லை. மூவேந்தர் நிலையும் அதுவே. முற்றிலும் ஒற்றுமை கெட்ட தமிழர் மூவேந்தர்.

கையளவு நிலத்தை வெற்றி கொள்வதற்காக மலையளவு புகழ் கொண்ட பாரியை வீழ்த்த ஒன்றானவர் அவர். அதைத் தவிர மூவேந்தரும் அய்க்கியப்பட்டு ஆற்றியதாக வரலாற்றில் ஒரு காரியமும் தென்படவில்லை. மூவேந்தர் எனும் வழக்கம் தமிழன் பிரிந்து கிடந்தான். நாளை சிதறித் தவிக்க என்னும் வேற்றுமையின் அடையாளம்.

வேங்கடம் முதல் குமரி வரைத் தமிழ் கூறும் நல் உலகம். இத் தமிழ்நாடு ஒரே ஆட்சி அலகாக ஒருபோதும் இருந்தது இல்லை. பரந்த இந்த நிலம் முழுவதற்கும் மன்னன் ஒருவனே என்ற வரலாறும் இல்லை. பேரரசன் இராசேந்திர சோழன் அப்படித் தனிப் பெருமை ஏற்பவன். வெள்ளையர் ஆட்சியில் கூடத் தமிழ்நாட்டுச் சமஸ்தானங்கள் சில தனியாட்சி நடத்தின.

பிற்காலச் சோழப் பேரரசிற்குப் பின்னால் தமிழ்நாடு இன்றுள்ள நிலப்பரப்பு அளவாக எந்தத் தமிழ் மன்னராலும் ஆளப்படவில்லை. தமிழ்நாட்டின் வடக்கு, வடகிழக்குப் பகுதிகளில் தொடர்ச்சியான தமிழர் ஆட்சி இல்லை. தாம்தான் தமிழ்நாடு என்று இலக்கியவழி அறிவித்துக் கொள்ளும் மதுரை மண்ணும், தஞ்சை பூமியும் கூட வடவர்க்கு ஆட்பட்டன. மதுரையும் தஞ்சையும் உள்நாட்டுத் தலைநகர்கள். எனினும் இவையும் அயலவர்க்கு அடிமைப்பட்டது. வரலாற்று அவலம். கொஞ்சம் இந்தக் காலப்பட்டியலைக் கவனியுங்கள்.

நூற்றாண்டு	ஆட்சியாளர்	மொழி	சமயம்
1, 2 சங்க-காலம்	தமிழர் களப்பிரர் (கி.பி. 250-600)	தமிழ் பிராகிருதம் சமஸ்கிருதம்	
3 - 8	பல்லவர் 11 (575-900)	பிராகிருதம் சமஸ்கிருதம் தமிழ்	சைவம் சமணம் வைணவம்
9 - 11	பிற்காலச்சோழர்	தமிழ்	சைவம்
12, 13	பிற்காலப்பாண்டியர் (1190-1310)	தமிழ்	சைவம்

14, 15	மாலிக்காபூர் படையெடுப்பு (1310) விஜயநகரப் பேரரசு (1336-1565)	பாரசீகம் தெலுங்கு	இஸ்லாம் வைணவம்
16	மதுரை நாயக்கர் (1529-1732)	தமிழ் தெலுங்கு	வைணவம்
17	பீஜப்பூர் சுல்தான் (தஞ்சை) (1663) மராத்தியர் சிவாஜி படையெடுப்பு (செஞ்சி, வேலூர், தஞ்சை) (1678) மைசூரார்	பாரசீகம் உருது மராத்தி கன்னடம்	இஸ்லாம் வைதீகம் சைவம் வீர சைவம்
18	நவாப்புகள் (ஆற்காடு)(1738-51) பிரெஞ்சுக்காரர் (1750) ஆங்கிலர் (ஆற்காடு) 1751	உருது பிரெஞ்சு ஆங்கிலம்	இஸ்லாம் கிறித்துவம் கிறித்துவம்
19	வடசர்க்கார் (1756) கொங்குநாடு (1792)		
20	(1920-) சுப்பராயலு ரெட்டி பனகல் அரசர் முனுசாமி நாயுடு பொப்பிலி அரசர் கூர்மவெங்கட ரெட்டி		
1937	ராஜாஜி ஓ.பி. இராமசாமி ரெட்டி குமாரசாமி ராஜா பிரகாசம்	ஆங்கிலம் தமிழ்	
1947	ராஜாஜி காமராஜர் பக்தவச்சலம் அண்ணாதுரை மு. கருணாநிதி எம்.ஜி.ராமச்சந்திரன் ஜெயலலிதா	தமிழ் ஆங்கிலம் இந்தி	

கடந்த ஆயிரம் வருடத் தமிழர் வரலாற்றில் தமிழ்நாட்டு அரியணையில் மின்னும் தமிழ் முகங்கள் மிகச் சொற்பம்.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழகத்தை ஆண்டவர்களில் சிலர் தமிழ்நாட்டுக்கு அப்பால் வாழ்ந்தவர்கள். சிலர் தாய்மொழித் தமிழர் அல்லர். சிலரது பிறப்பிடம் தமிழ்நாடு அல்ல.

நிர்வாகம், சட்டம், ஒழுங்கு, நீதி இம்மூன்றும் ஆட்சியின் அடிப்படைகள் கடந்த ஐம்பது ஆண்டு காலத்தில் ஒரு சட்டமன்ற பருவ காலம் கூட இம் முத்துறைத் தலைவர்கள் ஒரு சேர தாய்மொழித் தமிழர்களாய் அமைந்தது இல்லை.

7. தமிழ்நாடும் தமிழும்

நம் நாடு தமிழ்நாடு. தமிழ்நாட்டில் தமிழ் அல்லவா நீக்கமற நிறைந்திருக்க வேண்டும்?

சோழர் காலத் தமிழகத்தில் கூற்றம் தோறும் வேதப் பள்ளி; சமஸ்கிருதப் படிப்பு. முகலாயர் காலத்தில் பாரசீகம். பின்னர் உருது. ஆங்காங்கே மதராஸாக்கள், உருது மொழியில் கல்வி. விஜய நகர ஆட்சிக்காலம் தெலுங்கு பாதிரிப் பள்ளிகள் யாவும் பரங்கி மொழிப் பள்ளிகள். கும்பினி ஆட்சியில் ஆங்கிலம். விக்டோரியா மகாராணியின் பிரகடனம் (1858) இந்தியரை இங்லிஷ் நாட்டவர் ஆக்கிற்று. நம் மக்கள் உடலால் இந்தியர்; உணர்வால் ஆங்கிலர் என்றாயினர்.

இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் ஏகதேசம் ஆங்கிலம். அப்போது சிறைப்பட்ட பல நூறு மொழிகளுள் தமிழும் ஒன்று. 1947 இங்கிலாந்து இந்தியாவை உதறி எறிந்தது. இந்திய நாட்டில் தமிழன் மட்டும் ஆங்கிலத்தை உதறி எறியத் தயாராகவில்லை.

தமிழ்நாட்டு மொழி தமிழ் எனில் பொது இடங்களில், அரசு வளாகங்களில் தமிழ் பேச்சும் புழக்கமும் தானே இருக்க வேண்டும். சென்னை விமான நிலையம், துறைமுகம், ரயிலகம் இங்கெல்லாம் பயன்படுத்தப் பெறும் மொழி தமிழா? ஆங்கிலம் அல்லது இந்தியில் முதற்படி எழுதப்பட்டு, மொழித்திறம் அற்றவர்களால் அது தமிழாக்கம் பெற்றுத் தப்பும் தவறுமாய்ப் பயன்படுத்தப்படுவதை நல்ல தமிழ்ச் செயற்பாடு என்று எப்படி ஏற்பது?

தமிழர் பண்பாடு மொழிசார்ந்த பண்பாடு. ஒரு பண்பாட்டை அழிப்பதன் வழியாக ஒரு மொழியை அழிக்க முடியும். தொலைக்காட்சி, வணிகமுறைச் சினிமா, வணிக இதழ் இவை கொலை வாட்கள் எனத்தகும்.

திராவிடக் கட்சியார்க்கு இந்தி வேண்டாம். தமிழ் உணர்வாளர்களுக்கு ஆங்கிலம் வேண்டாம் பின் தமிழன் தனித்துச் சாவதா என்ன?

நமது இந்தி புறக்கணிப்பு முழுமையானதொரு தமிழ் விடுதலை ஆகாது. இந்திக்குச் சமமாகத் தமிழும் ஓர் ஆட்சிமொழி ஆகும் வரைக்கும் நாம் மொழி விடுதலை பெற்றுவிட்டதாகக் கருத இயலாது. ஆங்கிலம் இன்றி உலகமே இல்லை என்ற நிலையில் தமிழ்நாடு என்ன செய்ய? தமிழ்நாட்டில் துணை ஆட்சி மொழி ஆங்கிலம் எனில் அம்மொழியைச் சரியானபடி பயன்படுத்துவதே அறிவார்ந்த காரியம்.

8. தமிழ்நாட்டில் தமிழ்

இந்திய மக்கள் தொகைப் பட்டியலை எடுத்துப் பாருங்கள். குடிமக்களின் தாய்மொழி என்று அதில் ஓரிடம் உண்டு. அதில் தமிழைத் தவிர வேற்றுமொழி பேசுவோர் என்று பாதிக்கு மேல்.

தமிழகத்தில் மா நகரங்கள் ஆறு. அவற்றின் பெருவீதிகளில் உள்ள பெரும் கடைகளில் மூன்றில் ஒன்றில் தமிழ் அல்லாத பிறமொழி கேட்கலாம். மக்களிடையே வணிகம். ஆதலால் அக்கடைகள் நல்ல தமிழ்ப் பெயர் சூட்டிக் கொள்ளும். அதே நேரம் வேறுமொழியில் வணிகம் நடத்தும்.

அன்றைய சென்னை ராஜதானியின் எச்சம் இன்றைய சென்னை. ஆதலின் சென்னை ஒரு தென்னிந்தியா போல. சிலநேரம் கிழக்குக்கரை இந்தியா போலத் தோற்றம் தரும், பேசும். ஆற்காட்டைச் சூழ்ந்த அனைத்து ஊர்களிலும் உருது, சேலம் மாவட்டத்தில் எவ்விடத்திலும் கன்னடம் கோவை மாவட்டத்தில் நீக்கமறத் தெலுங்கு. அந்நகரமெங்கும் மலையாளம் மதுரை நகரில் சவுராஷ்டிரம் கன்னியாகுமரியில் மலையாளம்.

பெருநகரங்களின் மொழி நிலவியல் படத்தில் தமிழ்ப் பேசுவோர் பகுதியைக் குறிக்க இடம் தென்படுவதில்லை. இப்போது நாம் தமிழ்நாட்டில் இல்லையோ என்ற உணர்வைத் தரும் தமிழ்நாட்டுக் கிராமங்கள் பல.

தமிழ் நாட்டின் மொழி தமிழ். ஆதலின் தமிழ் புழங்கும் மொழி. ஆனால் தமிழ் மட்டுமே ஒரே செலாவணி மொழியா எனில் இல்லை. **தமிழ்நாட்டில் தமிழே பெருமொழி. ஆனால் தமிழ்நாடு ஒருமொழி நாடாக இல்லை.**

9. தமிழ்நாடு தமிழர் நாடா?

தமிழ்நாடு தமிழர்க்கு மட்டுமே உரிமையுடைய நாடாக இல்லை. தற்காலத் தமிழ்நாடு ஓரின மக்களின் நாடு அல்ல. இருபது நூற்றாண்டுக் காலமும் பல்வேறு மக்களும் வந்து போகச் சிலர் தமிழகத்திலேயே தங்கி வாழத் தமிழகம் கலப்பின பூமி ஆனது. இன்று தமிழ்நாட்டில் தூய, உண்மையான, மூல இனத் தமிழனைத் தேடித்தான் கண்டுபிடிக்க வேண்டும்.

சென்னை தமிழ்நாட்டின் தலைநகர். இங்கே தமிழரைவிடச் சென்னை தமதே என்று உரிமை பாராட்டும் ஆந்திரரே அதிகம். ஆற்காடு, வேலூர், ஆம்பூர், வாணியம்பாடி முக்கிய நகர்கள். இங்குக் காணும் செக்கச் செவேலென உடல்கொண்ட மக்கள் தமிழரா? இது சேலம் இங்குத் தமிழர் எத்துணை பேரோ அவ்வளவு பேர் கருநாடகர். இது கோவை. இந்த மாவட்டம் முழுவதும் ஆந்திரர். அவரோடு போட்டியிட்டுப் பெருகும் கேரளியர். இது மதுரை. நகரமெங்கும் சௌராட்டிரர். இது தஞ்சை. நகரம் முழுவதும் மராட்டியர். இது கன்னியாக்குமரி காணும் இடமெங்கும் கேரளியர்.

சென்னை அண்ணாசாலை மாநகர் வணிகத்தின் முதுகெலும்பு. இதன் நடைபாதையே சென்னை வாழ் ஏழைத் தமிழர்க்குத் திருத்தலம். இங்குள்ள சிற்றுண்டிச் சாலை பெட்டிக் கடைகளுக்கு முதலாளிகள் நம் தமிழர். பெரும் உணவு விடுதிகளுக்கும் பேரங்காடிகளுக்கும் உடைமையாளர் தமிழர் அல்லர்.

வெள்ளையர் ஆட்சியில் சென்னை, வேலூர், சேலம், திருச்சி, கோவை, மதுரை எனப் பல நகரங்கள் மாவட்டத் தலைநகர்கள் ஆயின. அங்கிருந்த கோட்டைகள் ஆட்சியர் தலைமையிடங்கள் ஆக்கப் பெற்றன. அருகே இருந்த வணிக அமைப்புகள் ஏற்றுமதி, இறக்குமதி வாய்ப்புகளோடு பெரும் பேட்டைகளாக வளர்ந்தன. கோட்டைகளில் தமிழரை ஆள்வோர், பேட்டைகளில் தமிழரால் வாழ்வோர் இருவரும் தமிழர் அல்லாதார்.

தமிழ்நாடு தமிழர் நாடு அல்லாமல் பலவகையாக ஆக்கப்பட்டது.

நந்திவர்ம பல்லவன் காலம்: கிருஷ்ணா-கோதாவரி நதிகளுக்கு இடைப்பட்ட பகுதியிலிருந்து கோத்திரத்துக்கு ஒரு குடும்பம் என்று 1300 பிராமணக் குடும்பங்கள் அரச மரியாதையோடு தமிழ்நாட்டில் குடியமர்த்தப்பட்டன.

வாளின் வலிமையை விட நெருப்பின் ஆற்றல் அளவற்றது என்றுணர்ந்தவன் மாலிக்காபூர். அவன் தமிழ்நாட்டில் குவித்த சாம்பல் மேடுகள் பலவற்றில் இன்னும் நெருப்பும் உண்மையும் உறங்குகின்றன.

விஜயநகர ஆட்சிக்காலம்:: இரவில் குதிரை வீரர் தீப்பந்தம் தாங்கித் தமிழர் கிராமத்தைச் சூழ்ந்து ஒவ்வொரு வீட்டையும் அவ்வீட்டின் பெண் பிள்ளையையும் அது சார்ந்த நிலபுலன்களையும் தமதாக்கிக் கொண்டனர்.

கருநாடகத்தின் வீரசைவ எழுச்சியின் போது (12நூ) எதிரெதிர் கலகங்களால் சமயப்பற்றாளரும் பொது மக்களும் தமிழகத்தில் தஞ்சம் புகுந்தனர். பின் மைசூர் மன்னன் கந்திருவ நரசராயன் தமிழகத்தின் மீது படையெடுத்தான். மைசூர் வீரர் தாம் வந்த வழியெங்கும் தமிழ் மக்களின் மூக்குகளை அறுத்துப் போட்டனர். இந்த மூக்கறுப்புப்

போருக்குப் பின் வட தமிழ்நாட்டின் கடைசி தமிழ் அரசான தாரமங்கலம் கெட்டிமுதலி அரசு முற்றாக மறைந்தது. கொங்கு நாட்டில் கருநாடகா குடியேற்றம் பெருகிறது.

இப்படியெல்லாம் வந்த மக்கள் தமிழ்நாட்டில் நிரந்தரமாக வாழ்பவராகி வளமை பெற்றனர். உற்பத்தி மூலங்களைக் கையகப்படுத்தினர். புதுத் தொழில்களில் ஈடுபாடு. ஆங்கில அரசின் வணிக முயற்சிகளுக்கு இசைந்த உற்பத்தி ஆகியவை இம்மக்களை உயர்த்தின. இவர்கள் உழைப்பால் சென்னைப் பட்டணம் எனும் கிராமம் ஒரு பெரிய ராஜதானியின் தலைநகர் ஆனது. சேலம் மாவட்டம் தமிழகத்தின் கைத்தறிக் கூடம் என்றானது. கோயமுத்தூர் தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று பெயர் ஈட்டியது.

எனினும் வந்த மக்களிடம் பெருமளவு உள்ள ஊர்களில் வாழும் தமிழர் அண்டிப்பிழைக்க வேண்டியிருந்தது. ஒரு குறிப்பிட்ட தொழிகள் வந்தவர்கள் வசம் இருப்பதால் சில ஊர்களில் சில நேரங்களில் தமிழர் அடங்கி வாழ வேண்டியிருக்கிறது. தமிழ்நாட்டில் தமிழனின் வாழ்வு இப்படி அவலம்..

10. தமிழுக்குப் பகை

தமிழ்நிலத்தில் நீர்மாசு, ஒலிமாசு, காற்றுமாசு. தமிழர் வாழ்வில் மொழி மாசு.

தமிழை அழிப்பது தமிழே! இன்று தமிழென வழங்கும் தமிழின் வகைமொழிகளே தமிழுக்குப் பகை. அவை மேடைத் தமிழ், திரைத் தமிழ், தொலைக்காட்சித் தமிழ், இதழியத் தமிழ்.

அரசியல் மேடையில் எந்தப் பேச்சாளராவது பொருள் அறிந்து பேசுகிறார்களா? முற்றுப் புள்ளியே இல்லாது அரைமணி நேரத்திற்கு பொழியும் அவர்களது சொற்கோவைக்கு இலக்கணம் உண்டா?

தமிழ்த் திரை ஒரு காலத்தில் தமிழ் இலக்கியங்களைப் படம் பிடித்துக் காட்டியது. அழகு தமிழ் பேசியது. நல்ல தமிழ்க் கவிஞர்களின் கவிதைகளைப் பாட்டாக்கி இசைத்தது. இன்றைய தமிழ்த் திரை வெளிச்சரக்குகளை அப்படி இப்படிக் கலந்து, பிரம்மாண்டமாய்க் காட்சிப்படுத்தித் தமிழரை வசியப்படுத்துகிறது. அவற்றில் தமிழ், தமிழர் பண்பாடு இருப்பதில்லை.

தமிழுக்கும் தமிழர்க்கும் அந்நியமான பலவற்றைத் தமிழ்த் தொலைக்காட்சி வலிந்து திணிக்கிறது. நம் தொலைக்காட்சிகளின் பெயர்களில் கூடத் தமிழ் இல்லை. எனினும் அவை தமிழர் நலம் முழங்கும். தமிழ்நாட்டுத் தமிழன் தமிழ்த் தொலைக்காட்சியில் தமிழ் தேடி மாய்கிறான். அதுவோ உலகத் தமிழனுக்காகக் கலவைத் தமிழில் சிணுங்குகிறது.

வீட்டுப் பெண்பிள்ளைகளுக்கும் தொலைக்காட்சியின் இனிப்பு மொழி தொற்றிவிட்டது. பள்ளித் தமிழை மறந்து தமிழ்ச் சிறுவர் இப்பாழ் தமிழையே பின்பற்றுவர். தமிழ் இதழ்களும் தமிழ்த் திரையும் உன்னால் நான் கெட்டேன் என்னால் நீ கெட்டாய் என்பதான உறவுள்ளவை.

ஒரு பெரும் பண்பாட்டுப் புரட்சி நிகழ்ந்தால் ஒழிய திரைத் தமிழரும் தாள் தமிழரும் நல்ல தமிழர்களாய்த் திசை திரும்பும் சாத்தியம் இல்லை.

சிறந்த மேடைப்பேச்சாளர் அரசியல் தலைவராய் ஆவதும் புகழ்பெற்ற திரை நாயகர் அரசியலைக் கைப்பற்றி நாட்டுத் தலைமை ஏற்பதும் தற்காலத் தமிழர் வரலாறு. தமிழ், தமிழர், தமிழ்நாடு என முழங்கிய மேடைகளில் நம் தலைவர்கள் உருவாயினர். அவர்களது எழுச்சிக்குத் திரைப்படங்களும் இதழ்களும் உதவின. அவை இன்று முரண்பட்டுத் தமிழ், தமிழர் நலனுக்கு எதிராக நிற்கின்றன. தமக்குக் கருவி இவை என நம் தலைவர்கள் இவற்றைக் கையிலெடுத்தனர். அவை பெருவணிக முறையென வளர்ந்த காலத்தில், தாமும் அவற்றின் வணிகர் ஆயினர்.

11. தமிழ் வாழ்தல்

இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள பல்வேறு மொழிகளிலும் தமிழ் மொழியின் கூறுகள் காணப்படுவது தமிழின் பழமைக்கும் பரப்புக்கும் சான்று. இது பெருமைக்குரியது என்றாலும் தமிழ்மொழி தனித்து விடப்பட்டு விட்டது போல ஒரு நிலை. வடக்கே போய் வந்தார்க்கு இது புரியும்.

தமிழ்மொழி ஆட்சிச் சூழலில் சமபலம் அற்றிருக்கிறது. (ஆட்சி மொழி எனத் தகுதிபெற்ற மொழியே மொழி, மற்றவை ஊமையின் ஒலி) ஆதலின் நடப்பு வாழ்க்கையில் தத்தளித்துத் தவிக்கிறது தமிழ்.

உலக இலக்கியம் எனும் பொதுச் செல்வத்தில் தமிழ் ஒரு பிளாட்டினச் சுரங்கம். ஆனால் என்ன செய்ய? இன்றைய நிலையில் தமிழ் இலக்கியம் பயன் கருவியாக இல்லை. தமிழ் பயன் மொழியாகவும் இல்லை. ஆர்வலர் சிலர் அறிவியல் தமிழ் முயல்வர். அவை மொழியாக்கம் கட்டுரை ஆக்கம் என்பதாகவே காணப்படுகின்றன.

அறிவியல் தமிழ் என்பது தமிழில் அறிவியல் சிந்தனை, அதன் எழுத்து வடிவம். தமிழில் அறிவியல் சிந்தனை என்பது நம் தாய் மொழியில் அறிவியல் சிந்தனை என்பதே.

தமிழ்நாட்டின் முதல் பல்கலைக்கழகம் தோன்றி 140 ஆண்டுகாலம் ஆனது என்றாலும் தமிழ்நாட்டில் ஒரு பல்கலைக் கழகத்திற்காவது விஞ்ஞானியின் பெயர் இல்லை. தமிழரின் அறிவியல் நோக்கத்தின் வறுமைக்கு இது ஒரு சிற சான்று.

தமிழ்நாட்டின் அறிவியல் துறைத் தலைவர்கள் சிலர் தமிழுணர்வு மிக்கார். புகழ்மிக்கார். அயரா உழைப்பினர் என்றாலும் அவர் தம் அறிவியல் அவர்களது படிப்பினால், அனுபவத்தினால் திரண்ட அறிவு தான். இன்றைய தமிழகத்தில் indigenous கண்டுபிடிப்பு என்பது அபூர்வம்.

தமிழ்நாட்டு அறிவியலார் ஓரிருவர். இவர்கள் தமிழ்ச் சிந்தனையாளர் என்று நாம் பெருமை கொள்ள முடியாது. அம்மேதைகள் தமிழர், தமிழ்நாட்டினர். ஆயினும் அயல்மொழியில் செயல்பட்டவர்.

அறிவியல் மொழியில் தமிழுக்குச் சமநிலை வாய்த்திடவில்லை. அறிவியல் உலகிற்கும் தமிழ் அறிவியலுக்கும் உள்ள இடைவெளி வானுக்கும் மண்ணுக்கும் போல. நடப்பு உலக அறிவியல் அறிவை அறிந்து கொள்வது என்று நாம் முனைந்து செயல்படுவோம். அதற்குள் மேற்கு இன்னும் பல புதுமைகளைச் சாதித்துவிட்டு என்னை நெருங்க முடியுமா என்று சவால் விடும்.

தொன்மை சான்ற மொழி தமிழ். தமிழின் சிறப்புகளை, தமிழரின் குணநலன்களை வியந்து போற்றிய அயல்நாட்டவர் நிறைய. 22 நாடுகளில் தமிழர் வாழ்கின்றனர். இவற்றைக் கொண்டு தமிழை உலகத்தவர் அறிவார்கள் என்று கருதுகிறோம். ஆனால் **இன்றைய உலகம் தமிழ்மொழியை அறியாது என்பதொரு உண்மை.** இன்டர்நெட் காலத்தில் இப்படிச் சொல்லலாமா என்று சிலர் கோபிக்கலாம். இங்கே, **அறிதல் என்பது ஓர் அறிவியல் மொழிக்கு இணை அல்லது துணை பயன் மொழியாகத் தமிழ் அமைவது என்னும் பொருளில். தான் சந்திக்க நேரும் அறிவியல் மொழியை வெல்லும் எதிர்ப்பாடு அல்லது உயர்வினை எதுவும் தமிழ் மொழியிடம் இல்லை.**

12. தமிழர் வாழ்தல்

இன்றைய உலகம் தமிழை அறியாது என்றாலும் தமிழரை அறியும். வேலை தேடியும் அபயம் இறைஞ்சியும் அலையும் தமிழர்க்கு அரபுப் பாலைவனமும் துருவப் பனியும் ஒரு பொருட்டாய் இல்லை. இன்றைய தமிழன் பூமிக்கோளத்தின் இருதுருவங்களிலும் கிழக்கும் மேற்கும் படர்ந்திருக்கிறான்.

அந்நிய ஆட்சியர் காலத்தில் தமிழ் நாட்டிலேயே தமிழன் அடிமை. ஆள்வோர்க்குப் பிரதிநிதி, சொல்வது செய்யும் ஏவலாள்.

பிரிட்டிஷ் இந்தியத் தமிழன் கூலி, மண், மானம், மரபு எல்லாம் இழந்து வெறும் சோற்றுக்கு வந்த பஞ்சத்தினால் தமிழன் அலைகடல் மரமாக இந்துமாக்கடல் தீவுகளில் பரவினான். தமிழன் உலகில் பரவியது அதிகாரத்தோடு அல்ல, பலமிழந்து, வாழ்வு தேடி, ஆதலின் புகுந்த புது நாடுகளில் தமிழனுக்குச் சம மரியாதை, சம உரிமை கிடைத்திடவில்லை.

அயலகம் போய்ச்சேர்ந்த தமிழன் அதிகாரத்திற்கும் அரியணைக்கும் லட்சியம் கொண்டதாகச் சான்று இல்லை. வட இந்தியாவில் காணும் தமிழ்க் கல்வெட்டு எதுவும் தமிழ் மன்னரது வெற்றிச்சாசனம் அல்ல. கிழக்காசியாவை ஆண்ட இனம் தமிழ் இனம் என்று சில நூல்கள் கதை கூறும். சயாம், சுமத்திரா, சீனம், பர்மா இங்கெல்லாம் தமிழ்க் கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. ஒன்றேனும் தமிழரை அரசராய், ஆள்பவராய்க் காட்டவில்லை. கல்வெட்டுப் பொறித்தவர் தமிழர், வணிகர். கல்வெட்டுக் கூறுவது அவர்கள் செய்வித்த கோயிற் பணிகள் மற்றும் தான தருமங்கள்.

வலியது வெல்லும் என்பது மனித விலங்கிற்கும் பொதுவே. ஆதிகுடிகள் சிறுபான்மை, வந்து புகுந்தோரில் தமிழர் பெரும்பான்மை என்னும் நிலைகளில் தமிழன் முகம் பெரிதாய்த் தெரியக்கூடும். வந்து புகுந்த பலருள் தமிழரும் ஒருவராய் ஆன நிலங்களில் தமிழன் வாழ்வு நிதம் நிதம் போராட்டம், இழப்பு, நிச்சயமற்ற நிலை.

13. சமகாலத் தமிழர் வாழ்தல்

தமிழரின் சமகாலப் பொது வாழ்க்கையில் மூன்று முகங்கள். ஒன்று சர்வதேசியம் பேசும் முற்போக்கு முகம். இரண்டாவது தேசிய வாதம் சோசலிச முகம். மூன்றாவது திராவிடம் பேசும் தமிழ் முகம்.

வெளிப்பார்வைக்கு இவை தனித்தனி முகங்களாகத் தெரிகின்றன. ஆனால் ஒன்று மற்றொன்றாக உருமாறும் தந்திரம் அறிந்தவை. தேர்தல் நேரத்தில் இந்த உருமாறிகளைப் பார்த்துத் தமிழ்மக்கள் தம்மை அறியாது. தம்மை இழந்து உளம் மாறுவது வழக்கம்.

முதலிரண்டு முகங்களுக்கும் சர்வதேசியம், தேசியவாதம் என்பன கோட்பாடுகள். மூன்றாம் முகத்திற்கோ தமிழ் - தமிழர் - தமிழர் நலன்; தமிழில் ஆட்சி - தமிழர் ஆட்சி என்பன கோட்பாடு. ஆனால் அயல்நாட்டினர் மதத்தினர், இனத்தினர், மொழியினர் என்று தமிழ்நாட்டை ஆளும் எவரும் தோராயமாகத் தோற்றம் தரும் அக்கோட்பாட்டினை எடுத்தாள முடியும். அவ்வாறாகத் தமிழரை, தமிழ் நாட்டவரை ஒட்டு மொத்தமாக வசப்படுத்த முடியும்.

புதிய தமிழகத்தில் இதுவரை மூன்று கட்சிகள் ஆட்சி நடத்தியுள்ளன. அவை துல்லியமான வடிவமற்ற தமிழ், தமிழர் நலம் என்பவற்றைத் தம் சாதனைக் குறிக்கோளாகக் கொண்டன. தேர்தல் அறிக்கைகளிலும் குறிப்பிட்டன. ஆனால் இவ்வறிக்கைகளில் காணப்பட்டவை ஒரு போதும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை.

விடுதலை பெற்ற முதல் பத்தாண்டு காலம் தடுமாற்றம். மொழிவாரி மாநிலம் (1956) அமைந்த பிறகு தமிழ்நாட்டு ஆட்சி தமிழர்க்கான ஆட்சியாக அமைந்திருக்க வேண்டும். ஆனால் மையத்தில்

இருந்த கட்சியொன்றுக்கே கடமைப்பட்டதாக முழுத்தேசமும் நடந்தது. 1965-ல் தமிழ் மாணவர் நடத்திய இந்தி எதிர்ப்பு மைய அரசின் எதேச்சதிகாரத்தை எதிர்த்த போராட்டமும் கூட. 1967-ல் அண்ணாவின் ஆட்சி தமிழ் - தமிழர்க்கான ஆட்சியாக நிலைபெறும் வாய்ப்புப் பெற்றது.

இந்தியப் பேராட்சி தமிழரின் செயல்திட்டங்களைக் கட்டுப்படுத்திற்று. தமிழ்நாட்டுத் தலைவர்களும் தாங்கள் ஏற்றுள்ள அதிகாரம் என்னும் அரிதாரம் நிரந்தரமான அலங்காரம் என்னும் கற்பனையில் மூழ்கித் திளைத்தனர். தமிழர் வாழ்க்கையை விடவும் அவர்களுக்குத் தம் வாழ்க்கையே முக்கியத்துவம் ஆகிப் போனதால் சமகால வரலாற்றை எதிர்த்து நிற்கும் வல்லமை அற்றுப் போயினர்.

நடப்புக் கால் நூற்றாண்டில் இந்தியத் தலைவர்கள் ஓரிருவர் மதம், திசை, இனம் சார்ந்து ஆட்சி நடத்தியது கண்கூடு அவர்களில் சிலர் மாஃபியாக் கும்பலை விட மோசமானவர்கள் உலகத் தமிழரின் நலம் பேசுவோர் இத்தகைய நல்லார்களுக்கு அஞ்சியே எதுவும் செய்ய வேண்டியதாயிற்று.

தமிழ்மொழி உணர்வில் சிக்கலான ஓர் அம்சம் தமிழே ஆதிமொழி என்னும் நிலைப்பாடு. தமிழே திராவிட மொழிகளின் தாய் என்னும் கால்டுவெலின் ஆய்வு முடிவை மற்றுள்ள திராவிட மொழியார் ஏற்பதில்லை இப்போது.

தமிழ் ஆட்சிமொழி. தமிழ் அலுவல் மொழியாக இருக்கிறதே தவிர அதிகார மொழியாக இல்லை. தமிழ் நெஞ்சத்தின் தாய்மொழிப் பற்றுக்குப் பிரிவினை வாதம் என்று பொருள் உரைக்கிறது தேசியவாத அரசியல் அகராதி.

ஆதித் தமிழரே தமிழ்நாட்டில் முதல் மரியாதைக்கு உரிமையாளர். ஆனால் அவர்கள் இருக்க வேண்டிய இடத்தில் இருக்கும் 'தமிழர்' வேறு. ஏழைத் தமிழன். கூலித் தமிழன், சேரித் தமிழன், கிராமத்துத் தமிழன், தாழ்த்தப்பட்ட தமிழன், பழங்குடித் தமிழன் இவர்கள் எல்லாம் வாழ்வது பெயருக்கு. ஏதோ பிழைப்பு அவ்வளவே. இன்னும் ஒருசார் தமிழர்க்கு வாழ்வு என்பதே இல்லை. வளமாய் வாழும் தமிழர் பரம்பரைச் செல்வர், புதுப்பணக்காரர், தமிழர் தம் அரசியல் தலைவர்கள் என்று மேலே நிற்போர் இவர்களே.

தமிழ் தமிழர் தமிழ்நாடு எனும் அடிப்படையில் தமிழ் உணர்வாளர்கள் கொள்ளும் அவா இவை:

1. தமிழ்மொழி முதன்மைப்பட வேண்டும்.
2. தமிழர் வாழ்வு நலம்பட வேண்டும்.
3. தமிழ்நாடு வளமான நாடாதல் வேண்டும்.

அப்பரும் அவிநயமும்*

இரா. கலைக்கோவன்

வரலாற்றின் பல முகங்களுக்கும் அடிப்படைச் செய்திகளை வழங்கவல்ல கருவூலங்களாய்த் திருமுறைகள் விளங்குகின்றன. குறிப்பாகச் சிற்பக்கலை, வார்ப்புக் கலை, ஆடற்கலை, இசைக்கலை ஆகிய நுண்கலைகளின் சில நூற்றாண்டுப் படப்பிடிப்பை இந்த இறையிலக்கியங்கள் புதையலாய்ப் பெற்றிருக்கின்றன. தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர் என்ற சொற்றொடர்கள் வாழ்க்கைக்கு மட்டுமல்ல வரலாற்றாய்விற்கும் அடிப்படைகளாய் விளங்கவல்லவை.

ஆதி சைவராய், அந்தணராய்ப் பிறக்காத காரணத்தாலேயே சுந்தரர், சம்பந்தர் அளவுக்குக் கடவுளாலும் சேக்கிழாராலும் கொண்டாடப்படாத அப்பரடிகள் பல முதல்களுக்கு உரிமையாளர். தமிழக வரலாற்றில் உண்ணாநோன்பை அறப்போராட்ட வித்தாக முதன்முதல் ஊன்றிய பெருமைக்குரியவர் அப்பர்.[1] அந்தப் போராட்டமும் பிற சமயிகளின் ஆதிக்கத்திலிருந்து இறைக்கோயிலை மீட்கவே நிகழ்த்தப்பட்டு வெற்றிக் கனி பறித்தது. அந்த வகையிலும் அப்பருக்கு முதல்வர் மதிப்புண்டு. தேய்ந்த உடலும், தேயாத உள்ளமுமாய் இறையைத் தேடிய முதல் மனிதரும் அப்பர்தான். களபம், கஸ்தூரி கேட்டவர்களுக்கெல்லாம் கண்ணிமைக்கும் நேரத்தில் தோன்றி மகிழ்வளித்த சிவபெருமான், ஊர் ஊராய் அலைய வைத்துக் காட்சி தந்த ஒரே மனிதரும் அப்பர்தான். தாம் ஓயாமல் பாடிய பின்பே திறந்து, சம்பந்தரின் ஒரு பாட்டுக்கு மூடிக் கொண்ட திருமறைக் காட்டுக் கதவுப் பின்னணியில் சிவபெருமான் நிகழ்த்திய திருவிளையாடலுக்குப் பிறகும், 'உன் பணி பிழைத்தாரைப் பெருமானே புளியம் வளாரால் மோதுவி'[2] என்று வணங்காரை அடிக்கச் சொல்லி, அடித்தால்தான் இந்தச் சமுதாயம் திருந்தும் என்பதை அப்போதே புரிந்துகொண்டு, இறைவனுக்கே வன்முறை வேண்டுகோள் வைத்த முதல் கவிஞரும் அப்பர்தான். ஆடற் செய்திகளைச் சம்பந்தரும், ஆடற்களம் பற்றிய செய்திகளைக் காரைக்கால் அம்மையும் அள்ளி வழங்கிய போதும் அவற்றோடு அவிநயக் குறிப்புகளையும் அளவாய்க் கலந்து நிறைவாய்த் தருபவர் அப்பரடிகள்தான். அந்த வகையில் அவிநயத்தின் அனைத்து முகங்களையும் விரிவாய்க் காட்டும் முதல் இலக்கியங்கள் அப்பரின் திருமுறைகள்தான்.

அவிநயம்

அறிவனாரின் பஞ்சமரபும், சாத்தனாரின் கூத்தநூலும் ஆடல், இசை விளக்கும் கலை நூல்கள். இவ்விரண்டனுள், பஞ்சமரபு

* சேலம் வேலூர் கந்தசாமி கண்டர் கல்லூரி அறக்கட்டளைப் பொழிவு
* திருச்சிராப்பள்ளி பிசப் ஈபர் கல்லூரி * 25.05.1997

காலத்தால் மிக முற்பட்ட நூலென்று அதற்கு அண்மைக்காலத்தே உரையெழுதி வெளியிட்டிருக்கும் இசையாய்வுப் பேரறிஞர் வீ.ப.கா. சுந்தரம் குறிப்பிடுகிறார்.[3] இந்நூலில் உள்ள யாழ், வங்கியம், கண்டம், கூத்து, தாளம் என்னும் ஐந்து மரபுகளுள் கூத்துமரபு அவிநயவியலை உள்ளடக்கியிருக்கிறது. இந்த இயலில் பதின்மூன்று வெண்பாக்கள் உள்ளன. இவை கை, கால் தொழில் பற்றி மட்டுமே பேசுகின்றன.[4] இப்பதின்மூன்று வெண்பாக்களின் எந்தவொரு அடியும் அவிநயமென்றால் என்னவென்று வரையறுத்துக் காட்டவில்லை. மாறாகக் கால், மரபுகளைச் சுட்டியதன் மூலம் அவையே அவிநயத்தின் தோற்றுவாய்களென்று காட்டியுள்ளன.

கூத்தநூலின் காலத்தைப் பற்றியும், அதன் உண்மைத்தன்மை பற்றியும் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், கூத்து பற்றிப் பேசும் முழுமையான நூல் அது. சுவை நூல், தொகை நூல் என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கும் அந்நூலின் அவிநயம் பற்றிய அடிகளுக்குத் திரு ச.து.சு. யோகியார் தந்திருக்கும் விளக்கங்கள் நாட்டிய சாத்திரச் சிந்தனைகளின் பின்னணியில் எழுந்தவை.

> "ஆட்டம் பாட்டம் அவிநயம் என்ன
> மூவகை என்பர் கூத்தின் முறைமை[5]"

> "ஆட்டம் பிறந்தது பாட்டம் பாட்டம்
> அதனிடைப் பிறந்தது அவிநயக் கூத்தே[6]"

ஆடல் முதலிலும் தொடர்ந்து பாடலும் பிறகு அவிநயமும் தோன்றின. வேராகிய ஆட்டத்தினின்று பாட்டாகிய மரம் கனியாகிய அவிநயத்தைத் தந்தது.

> "ஆட்டம் தட்டாம் பாட்டம் பண்ணாம்
> யாப்புக் கூத்தின் அவிநயம் என்ப[7]"

இவ்வடிகளுக்கு உரையெழுதும் இடத்தே 'பொதுவாக அவிநயம் மன உணர்ச்சிகளை உடலின் உறுப்புகள் யாவற்றாலும் காட்டுவதாயினும், சிறப்பாகக் கைகளாலேயே அவை விளக்கம்பெறும். யாப்பு யாப்பது; சொற்களால் ஆனது. அவிநயம் அச்சொற்களின் பொருளைச் செயலாக வெளிப்படுத்துவது, என்கிறார் திரு. யோகியார்.[8]

> " சொல்பொருள் எல்லாம் கைமெய் துலக்கி
> நிற்பது பாட்டு அவி நயம் என நிறுத்து[9]"

'பாட்டாகிய யாப்பின் உரைமூலம் வெளிப்படும் உள்ளக்கிடக்கையைப் பொதுவாக ஆங்கிகத்தாலும், சிறப்பாக அஸ்த முத்திரைகளாலும் அவிநயிப்பது. முக்கியமாக இதில் வார்த்தா பாவமும், அர்த்த பாவமும், அஸ்த பாவமாக உருக்கொள்ளும்'. வார்த்தாபாவம், அஸ்தபாவம் இரண்டும் முறையே வாசிக அவிநயம், ஆங்கிகா அவிநயம் என்று

பெயரிடப்பட்டுள்ளன. கூத்தநூலின் கூற்றையும் அதற்கு உரைகாரர் தரும் விளக்கத்தையும் ஏற்றுக் கொண்டால் அவிநயம் என்பது கூத்தில் பாடப்படும்பாடல் அல்லது பேசப்படும் உரையாடலின் பொருளை உடலால், குறிப்பாகக் கைகளால் வெளிப்படுத்திக் காட்டும் வல்லமை என்று முடிவு கொள்ள நேரும்.

ஆடல் குறித்த பல செய்திகளைத் தரும் சங்க இலக்கியங்கள் அவிநயம் பற்றி நேரடியான கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளாமற்போனாலும், அந்தநாள் ஆடல்களிலும் அவிநயம் பெரும்பங்கு வகித்ததை ஆங்காங்கே உவமைகளால் எடுத்தோதிச் செல்கின்றன.

"கடியுண் கடவுட் கிட்ட செழுங்குரல்
அறியா துண்ட மஞ்ஞை ஆடுமகள்
வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்கும்[10]"

அவிநயம் என்ற சொல்லை நேரடியாகப் பயன்படுத்தும் முதல் தமிழ் இலக்கியமாகச் சிலப்பதிகாரத்தைக் குறிப்பிடலாம். ஊர்காண் காதையில் தலைக்கோல் அரிவையின் மலைப்பரும் சிறப்புக்களைப் பட்டியலிடும் இளங்கோ அவளை,

"நால்வகை மரபின் அவிநயக் களத்தினும்
ஏழ்வகை நிலத்தினும் எய்திய விரிக்கும்"

வல்லமையுடையவளாகப் படம்பிடிக்கிறார்.[11] நால்வகை மரபின் அவிநயக் களங்களாய் அரும்பத உரைகாரரும், அடியார்க்கு நல்லாரும் நிற்றல், இருத்தல், கிடத்தல், இயங்கல் என்னும் நான்கு நிலைகளைக் குறிக்கிறார்கள்.[12]

"நிற்றல் இயங்கல் இருத்தல் கிடத்த லென்று
அத்தகு நான்கே அவிநயக் களனே"

என்னும் நூற்பா மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது. இந்த நூற்பாவிற்குரிய நூல் எதுவென்று தெரியவில்லை.

அரும்பத உரைகாரரும், அடியார்க்கு நல்லாரும் அவிநயம் என்ற சொல்லைப் பல இடங்களில் பயன்படுத்துகிறார்கள். அவிநய நாடகம், அவிநயக் கூத்து என்பனவும் சுட்டப்படுகின்றன. சாந்திக் கூத்து நான்கனுள் ஒன்றாகக் குறிக்கப்படும் அவிநயக்கூத்து கதை தழுவாது, பாட்டின் பொருளுக்கேற்பக் கைகாட்டி வல்லபம் செய்யப்படும் கூத்தாகக் காட்டப்படுகிறது.[13] கதை தழுவும்போது அது அவிநய நாடகமாய் அமைகிறது.[14] அவிநயம் முகம், மார்பு, கை, கால்களால் காட்டப்படுவதாகவும் கைகளை ஒற்றையும், இரட்டையுமாக்கிக் காட்டப்படுவதாகவும் அடியார்க்கு நல்லார் சொல்கிறார்.[15] புறக்கூத்துகளில் ஆடல் நிகழுமிடத்து இந்த அவிநயம் நிகழாதென்றும், அவிநயம் நிகழுமிடத்து ஆடல் நிகழாதென்றும் இருவருமே கூறுகிறார்கள்.[16]

பதினான்கு விலக்குறுப்புகளுள் ஒன்றாக வைத்தெண்ணப்படும் அவிநயத்தைப் பாவனையென்று பொருள் சுட்டி, அதன் இருபத்து நான்கு வகைகளையும் காட்டும் அடியார்க்கு நல்லார், சுவைகள் ஒன்பதையும் அவிநயமே வெளிக்கொணர்வதாய்க் கூறுவது குறிப்பிடத்தக்கது.[17]

மணிமேகலை, 'ஆடற்கூத்தினோடு அவிநயம் தெரிவோர்' என்ற அடியின்[18]மூலம் அவிநயத்தைத் தனிப்பெரும் கலையாகக் காட்டுகிறது. அவிநயம் இல்லாமலே ஆடற்கூத்து நிகழ்ந்ததையும், அவிநயமே தெரியாமல்கூட ஆடற்கூத்தர் இருந்ததையும் இந்த அடியால் உணர முடிகின்றது. இதனால் அவிநயமற்ற கூத்தான சொக்கம் மணிமேகலைக் காலத்தில் சிறப்புற்று விளங்கியதையும், அவிநயம் கற்றோர், பாடலுக்கேற்ற அவிநயம் காட்டும் நிருத்தத்தையும் (அவிநயக் கூத்து), கதை தழுவிய அவிநய நாடகத்தையும் நிகழ்த்தி மகிழ்ந்தனரென்பதையும் அறிகிறோம்.

பஞ்சமரபு, கூத்தநூல், அரும்பத உரைகாரர் மற்றும் அடியார்க்கு நல்லாரின் குறிப்புகள் அவிநயம் பற்றிப் பேசும் செய்திகளைத் தொகுத்துப் பார்க்கையில், ஆடற்கலைஞர் ஆடலுக்கான பாடலின் அல்லது கதையின் பொருளைப் பார்ப்போருக்கு விளங்கவைக்கத் தம் உடலின் உறுப்புகளால் மேற்கொள்ளும் முயற்சிகளின் தொகுப்பே அவிநயம் என்று முடிவுகொள்ளலாம்.

நாட்டிய சாத்திரம்

காலத்தால் மிகப் பழமையானதாகப் பல அறிஞர்களால் கருதப்படும் நாட்டிய சாத்திரம் இந்த முடிவிலிருந்து வேறுபடுகிறது. அவிநயத்தை நான்காகப் பகுத்துக் காட்டும் நாட்டிய சாத்திரம், ஆடலின் மையக் கருத்தை அதன் நிகழ்பொருளைப் பார்வையாளர்கள் புரிந்து கொள்ளுமாறு வெளிப்படுத்தும் நிலையே அவிநயமென்று வரையறுப்பதுடன்,[19] இந்த நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளையுமே அவிநயத்துள் அடக்கிக் காட்டுகிறது. அதன் காரணமாகவே அவிநயத்தை ஆகார்யம், ஆங்கிகம், வாசிகம், சாத்விகமென்று நான்காய்ப் பகுக்கிறது நாட்டிய சாத்திரம்.[20] இவற்றுள் ஆகார்யம் ஆடற்கலைஞர் கொள்ளும் ஒப்பனை, கருவிகள், அணிகலன்கள், உடை ஆகியவற்றுடன் களம், ஒலி, ஒளி முதலியவற்றையும் உள்ளடக்கும்.[21] உரை, மற்றும் பாடலால் ஆடலின் பொருளைப் பார்வையாளர்க்கு உணர்த்துவது வாசிகம்.[22] உடலின் உறுப்புகளால் பாடலின் அல்லது கதையின் பொருள் வெளிப்படுத்தப்படும் போது அது ஆங்கிகம்.[23] இதைத்தான் அரும்பத உரைகாரரும் அடியார்க்கு நல்லாரும், பஞ்சமரபு ஆசிரியரும், கூத்தநூலாரும் அவிநயமென்று காட்டுகிறார்கள்.

ஆடற் பொருளால் ஆடுநரின் உள்ளத்தெழும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் கலையே சாத்விக அவிநயம்.[24] இதற்கு ஆடுநர் தாம் மேற்கொண்ட ஆடலின் கருவோடு ஒன்றிப் போகவேண்டும். தானே அதுவாகி ஆடுநர் ஆடும்போதுதான் சாத்விக அவிநயம் இயலுவதாகும். அவிநயத்தின் குறிக்கோளே ஆடலைப் பார்ப்பவர் அதை விளங்கிக் கொள்ள வேண்டுமென்பதும், அவ்வாடல் எந்தக் களத்தில் எந்தக் கருவை மையமாக்கி நிகழ்த்தப்படுகிறதோ, அந்தக் களத்தில் அந்த நிகழ்வில் பார்ப்பவர் தாமும் ஒருவராகி ஒன்றிப் போகுமாறு செய்வதும்தான். அடியார்க்கு நல்லார் சுவைகள் ஒன்பதையும் அவிநயமே வெளிக்கொணரும் என்பதும் இதன் அடிப்படையில்தான். சுவை சுந்தரமாய் வெளிப்படும்போது சாத்விகம் தானே மலர்கிறது.

நாட்டிய சாத்திரச் சிந்தனைகளின் பின்னணியில் சொக்கத்தையும் நிருத்தத்தையும் பார்க்கும்போது ஆகார்யம் இரண்டுக்கும் பொதுவானதாக அமைகிறது. ஆங்கிகத்தின் நிருத்தக் கைகள், கால் நிலைகள், உடல் நிலைகள் மூன்றும் சொக்கத்திற்கும் உண்டு. இவற்றோடு ஆடல் முத்திரைகளும் பிற உறுப்புகளின் வழியிலான அவிநயமும் சேர்ந்த ஆங்கிகம் நிருத்தத்திற்காகும். வாசிகம் சொக்கத்திற்கில்லை. சாத்விகம் இரண்டிற்கும் உண்டு.

திருமுறை ஆசிரியர்களின் பதிகங்களைப் பயிலும்போது நாட்டிய சாத்திரப் பின்னணியில் அவர்களின் ஆடற்சிந்தனைகள் அமைந்திருக்குமோ என்று கருதத் தோன்றுகிறது. திருமுறைகளில் பயிலப்பட்டிருக்கும் ஆடற்கலைச் சொற்களுள் சில நாட்டிய சாத்திரத்தை நினைவுபடுத்துகின்றன. திருமுறைகளில் இறையாடல் குறித்து மிகுதியும் பேசுபவை அப்பர், சம்பந்தர் பதிகங்களே. இருவருள்ளும் சாத்விகம் பற்றிப் பெயர் சுட்டாது, ஆனால் பல இடங்களில் அது பற்றிய கருத்தோட்டங்களைக் காட்டிச் செல்பவர் அப்பரடிகளே. அதனால்தான் அப்பர் காட்டும் அவிநயம் ஆய்வுக்களமானது.

நான்காய் அவிநயம் பகுக்கப்பட்டிருந்தாலும் சுவைஞர் கண்முன் ஆடுநர் தோன்றியதும் முதலில் தெரிவது ஆகார்ய அவிநயம்தான். விலகிய திரையின் பின்னே மேடைக் களத்தின் பின்னணிகளும் எதிரே நிற்கும் ஆடுநரின் தோற்றப் பொலிவுமே முதற்காட்சிகள். அதனால்தான் நான்கு வகை அவிநயங்களுள் மூன்று திருமுறைகளிலும், ஆகார்ய அவிநயம் பற்றியே அப்பர் அதிகம் பேசியுள்ளார். அரங்கு, ஒளி, ஒலி என்னும் மூன்றும் சேர்ந்தமையும் ஆடற்களம் பற்றிப் பாடியவர்களுள் காரைக்கால் அம்மையை விஞ்ச யாராலும் முடியாது. அடிகள் குறைவாக இருந்தாலும் மூத்த திருப்பதிகங்கள் காட்டும் களம் பற்றிய செய்திகள் செறிவானவை. அம்மைக்கு அடுத்த நிலையில் களம் பாடிய கவிஞராய் அப்பரே சிறக்கிறார். அம்மை ஆலங்காட்டுக் களம் மட்டும் காட்டினார். அப்பரோ காட்டுடன், நாட்டையும் களமாக்கிக் களிக்கிறார்.

அரங்கம்

இறைவன் ஆடல் உகக்கும் காடு மழையால் செழித்த மரங்கள் நிறைந்த பசுமைக் காடல்ல. இறந்தவர்களை எரியூட்டும் பிணக்காடு, அம்மை சொல்வதுபோல்,

"எட்டி இலவம் ஈகை சூரை
காரை படர்ந்தெங்கும்
சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி
சோர்ந்த குடர்கௌவப்
பட்ட பிணங்கள் பரந்த காடு[25]"

இந்த மயானத்தைச் சரிகாடு, புறங்காடு, இடுகாடு, சுடுகாடு, பெருங்காடு, ஈமக்காடு, பிணக்காடு, பரந்தகாடு, கள்ளி முதுகாடு, சுள்ளிக்காடு, வெங்காடு எனப் பலவாய்ச் சொற்கள் பெய்து சிறப்பிக்கும் அப்பரடிகள் ஆடுகளத்தின் சூழல்களையும் வரிகளால் விளக்குகிறார். இறைவன் ஆடி மகிழும் களம் நரிகள் விரவும் காடு. பிரிய விரும்பாமல் அவை தங்கி மகிழும் காடு. வயிற்றுப் பசிக்கு உணவும் பார்வைப் பசிக்கு ஆடலும் இடையறாது கிடைக்கும் களமாதலால் அவை அங்குத் தங்குதலை விரும்புகின்றன. இந்த நரிகள் இறைவனுக்குக் கருவிகள் தந்து உதவுகின்றன.

இடுபிணக் காட்டில் ஓரி கடித்துத் தந்த ஓட்டை வெண்தலையே இருளாடும் இறைவன் திருக்கையில் வாழ்க்கையின் விளக்கமாய் ஒளி வீசுகிறது. இறைவன் ஆடலுக்கு அமையும் இன்னிசைக் கூட்டியத்தில் இந்த நரிகளே குழலாசிரியர்கள். இவை குறுநரிகள்தான். இருந்தாலும் வாசிப்பவையோ நீடுகுழல்கள். கருவியெடுத்து இசையெழுப்பும் தேவையில்லாமல் கண்டத்திலேயே கருவி கொண்ட கலைஞர்கள் இவர்கள். வாயைத் திறந்தால்போதும் இசை முழக்கம்தான். ஒரு நரிக்கே காடு தாங்காது. ஆனால் அப்பரோ குறுநரிகள் கூட்டமாய்க் கூடி குதூகலித்துத் தொடர்ந்து குழலிசைத்ததாய்ப் பாடுகிறார். அதனால்தானோ என்னவோ பூமியே நெளிந்தது.

"..குறுநரிகள்
நீடும் குழல்செய்ய வைய நெளிய[26]"

நரிகளுக்குத் துணையாய் இந்தக் காட்டில் பேய்களும் உண்டு. பிறை போல் வளைந்த பல்லும் பறைபோல் குழிந்த கண்ணும் பேழாய்ப், பிலவாய் அகன்ற வாயும் கொண்ட இப்பேய்கள், காட்டில் தங்கிப் பின் நயந்து, சூழ்ந்து, இருப்பிடம் பிடித்துப் போனதால் இதையே வாழிடமாக்கிக் கொண்ட வன்பேய்கள். வந்து போகும் நரிகளே குழலெடுக்கத் துணிந்த பிறகு வாழ்ந்துவரும் பேய்க்கணங்கள்

சும்மாயிருப்பதா! பரந்து பல்பேய் கூடி, முழவுகள் தேர்ந்து கொட்டத் தொடங்கின. தாளம் சேர்ந்தது.

களத்தில் கள்ளியும் சுள்ளியும் காரையும் சூரையும் பின்புலமாக, நரியும் பேயும் நகர்வனவாயின. இந்தக் களத்தில் இரவும் பகலும் எந்த நேரமும் ஆடல் உண்டு. என்றாலும் சிறப்பான காட்சிகள் இரவில் மட்டும்தான். அதனால்தான் 'எல்லி மாநடமாடும்' என்று அந்த இரவாட்டம் புகழப்படுகிறது. நள்ளிருளில், எங்கும் எதுவும் தெரியாத துஞ்சிருளில் களத்துக்கு ஒளி வேண்டாமா? ஆடுபவரே நீள் எரியாய் நிமிர்ந்தவர்தான். ஆடும்போது அவர் கையில் கொள்வதும் எரிதான். ஆடுமிடம் கூடப் பல நேரம் பிணம் எரியும் சுடலைதான். அந்தத் தீயோடு தீயாய் ஒளியுமிழ்ந்து அவர் ஆடும்போது வேறு வெளிச்சமும் களம் காட்டத் தேவையா? ஆடும் களத்திலிருந்தே நெருப்பெடுத்துக் கையில் கொண்டு ஆடியதால் அதுவே ஒளியாயிற்று ஆடும் களமும் ஒளி தந்தது. அதனால்தான் 'துஞ்சடை இருள் கிழியத் தூங்கெரி ஆடுமாறே' என்றார் அப்பர்.

இந்த எரிகள் இல்லாதும் இறைவன் ஆடுவதுண்டு. அந்த நேரங்களில் களத்திற்கு ஒளியூட்டப் பொன் தீ மணி விளக்குகளைப் பூதங்கள் தூக்கி நிறுத்தின. தண்டலை மயில்களாடக் கம்பரின் தாமரைகள் விளக்கேந்தவில்லையா! திண்டி வயிற்றுச் சிறுகண் பூதங்களான இவைதான் ஆடுகளத்தின் முதன்மை இசைக் கலைஞர்கள். நாடகத்தின் தொடக்கத்தில் கட்டியங்காரன் பாடுவதைப்போல், இறையாடலுக்கு முன்னால் இந்தக் குள்ளச் சிறுபூதங்கள் குடமுழவம், வீணை, தாளம் சுறுசுறுப்பேற்றும். இவற்றுள் சில குழலும் கொக்கரையும் ஊதிப் பார்க்கும். களம் சரியாக இருக்கிறதா என்று தாளம் தப்பாமல் ஆடியும் பார்க்கும். தங்கள் பங்கிற்குப் பேய்களும் வெள்ளோட்டம் காணும். ஆடியும், இசைத்தும், பாடியும் களத்தின் ஒலியமைவு காணும் பூதங்களும் பேய்களும் ஆடற்கலைஞராம் இறைவனின் பிரிக்கவியலாத் துணைகள். அதனால்தான் பிணக்காட்டில் பேயோடு ஒன்றுபவராகவும் பூதநாதராகவும் பூதப்படையராகவும் இறைவனை அப்பர் படம்பிடிக்கிறார்.

மூன்று திருமுறைகளிலும் பல்வேறு பதிகங்களில் ஆடுகளமாய்க் காட்டை வண்ணிப்பவர் அவ்வப்போது நாட்டுக்களமாய்த் தில்லையையும் காட்டுகிறார். அணியார் தில்லை, மஞ்சடை சோலைத் தில்லை, சிறைகொள் நீர்த் தில்லை என்று களத்தின் பெருமைகளைக் கோயில் பதிகங்களில் எல்லாம் பாடல்தோறும் பட்டியலிடும் அப்பரடிகள் 'ஞாலமாம் தில்லை தன்னுள் நீலஞ்சேர் கண்டனார்தாம் நீண்டெரி ஆடுமாறே'[27] என்று பாடி, தில்லையை ஞாலமாக்கிக் களத்தின் சிறப்பைச் சிகர உச்சிக்கு ஏற்றுகிறார். இறைவன் பொற்பாதம் தூக்கி ஆடியதாலேயே ஞாலமான தில்லையில், அந்தப் பெருநடம் நிகழ்ந்த நிகழ்ந்த அம்பலம் அணியம்பலமாகவும், மணியம்பலமாகவும்

வண்ணிக்கப்படுகிறது. இறைவன் தாமே விரும்பித் தமக்கு அணுக்கமானவர்கள் சூழத் தாம் கிளர்ந்தெழும் நேரங்களில் எல்லாம் ஆடி மகிழ்ந்த இடமாதலால் அவர் உகந்த காட்டரங்கைப் பேரம்பலமாய்க் கொள்ளலாம். அதனால்தான் அதைப் பெருங்காடென்றும் ஆடுநரைக் காட்டில் நின்றாடல் பேணும் கருத்தினையுடையவரென்றும் இட்டமாய் இடுகாட்டு எரியாடுவாரென்றும் அப்பர் பாராட்டினார். கேட்டார்க்கு ஆடிய இடமாதலால், கேள்விக்கு இரங்கிய நிலையென்பதால் தில்லையம்பலம் சிற்றம்பலமானது. அப்பரடிகள் தில்லை யம்பலத்தைக் குறிக்கும்போது சிற்றம்பலமென்றே சொல்கிறார்.

அரங்கத்தில் ஒளியூட்ட எரியும் சுடலையும், பூதங்கள் ஏந்திய பொன் தீ மணி விளக்குகளும் போதாவென்று எரிகின்ற கொள்ளிகளும் இருந்தாற்போல், ஆடும் ஆடலுக்குப் பொருத்தமாக இசையெழுப்ப, வழக்கமான கருவிகளுடன் பல அரிய கருவிகளும் கூட்டியக் குழுவிடம் குடிபுகுந்திருந்தன. கொடுகொட்டி, கல்லவடம், கல்லலகு, சச்சரி, பிடவம் என்பன அவற்றுள் குறிப்பிடத்தக்கன. இக்கருவிகள் சங்க இலக்கியங்களிலோ, அடியார்க்கு நல்லார் தரும் தோற்கருவிப் பட்டியலிலோ இடம் பெறாமையால், திருமுறையாளர் காலத்தில் மட்டுமே பயிலப்பட்டவையோ என்று கருத வேண்டியுள்ளது. இந்தக் கருவிகளைத் தேவைக்கேற்ப இயக்க நன்கு பயின்ற இசைஞானப் பூதங்கள் இருந்தன. அதனால்தான் அப்பரடிகள்,

'பாரிடங்கள் பலகருவி பயிலக் கொண்டார்[28]'

'பாடல் பயின்றபல் பூதம் பல்லா யிரம்கொள் கருவி[29]'

என்றெல்லாம் பாராட்டிப் பேசுகிறார்.

தோற்றம்

களத்தில் தொடக்கநிலை ஏற்பாடுகள் முடிந்ததும் கலைஞர் தோற்றம் தருவது தானே முறை. தோழியரோடு தலைவி வருவது போலப் பூதங்கள் சூழ இறைவன் களத்திற்குள் நுழைகிறார். அந்தக் கங்குல் வாய்க் கணங்களோடு, சுந்தரர் துணைக் கவரி வீச,[30] குடமுழவு நந்தீசன் வாசகனாக,[31] இறைவன் பேசிக் கொண்டும், பாடிக் கொண்டும் வட்டணைகள்பட நடந்து வருகிறார். இந்த வட்டணை என்ற சொல் அப்பரடிகளால் இறைவனது அழகிய ஆடல் நடையைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இடமிருந்து வலமாகவும், வலமிருந்து இடமாகவும் சுழன்று நடந்து வட்டமிட்டாற்போல் வருவதே வட்டணை நடையென்று பேரகராதி பேசுகிறது.[32] இந்த வட்டணையை நான்காய்ப் பகுக்கும் பஞ்சமரபில் அவற்றிற்கான விளக்கங்கள் தெளிவாகத் தரப்படவில்லை.[33] மேலப்பெரும்பள்ளத்தில் உள்ள பிச்சையுகக்கும் தேவரின் செப்புத் திருமேனியை வட்டணைபட நடந்த நாயகராய்ச் சில ஆய்வர்கள்

காட்டியுள்ளனர். வட்டணைக்குரிய நடையமைப்பே இல்லாமல், பாதங்களை முன் வைத்து நடை பயில்வது போல் உள்ள இந்தத் திருமேனியை விட, சீனிவாசநல்லூர் திருக்குரக்குத்துறைப் பெருமானடிகள் திருக்கோயில் பிச்சைத்தேவர் வட்டணைநாயகர் பட்டத்திற்குப் பெரிதும் ஏற்றவராய்க் காட்சி தருகிறார். சுழன்று இடப்புறமாய்த் திரும்பிய கால்கள். திரும்புவதற்கான தொடக்க நிலையில் மேலுடலும் முகமும். இடைக்குக் கீழ் சுழற்சியின் முழு வீச்சைத் திறம்படக் காட்டியிருக்கும் சோழச் சிற்பாசிரியர்கள் அதற்கேற்பவே பூதகணத்தின் நடையையும் அமைத்துள்ளனர்.

வட்டணைகள் பட நடந்து மாயம் பேசி வரும் இறைவன் அரங்கிற்குள் நுழைந்ததும் சிறிது சிறிதாய் அவரது முழுத் தோற்ற அழகையும் தலைமுடி முதல் திருவடி ஈறாகத் தேர்ந்தெடுத்த தமிழ்ச் சொற்களால் தொகுத்தளித்து மகிழ்கிறார் அப்பர் பெருமான்.

பொன் போன்ற புரிசடைகள் இறைவனிடும் வட்டணைகளால் அங்குமிங்குமாய் அசைந்தாட, வேறு வேறாய் விரிந்த அந்தச் சடைகளில் ஆர்த்து வந்து அமர்ந்திருக்கும் அலை புனலாள் கங்கையின் நீர்த் திவலைகள் தெறித்தெங்கும் தெளிக்கப் பார்வைகளின் தொடக்க மலர்வாய் இறைவனின் செஞ்சடைக் காட்சிதான். இந்தச் சடை முடிகளைச் சம்பந்தர் போல அப்பரும் காதலித்து வண்ணிக்கிறார். அந்த முதிர் சடைமுடிகளில்தான் எத்தனை பொருட்களின் அடைக்கலம்! மூழ்கும் இளநாகம், வளரும் இளம்திங்கள், வடுவிட்ட கொன்றை, சுழிப்பட்ட கங்கை, கொக்கின் தூவல், கூவிளங்கண்ணி, பல்லாடு தலை மற்றும் கரந்தை, எருக்கு, வன்னி, மத்தம், தும்பை, செண்பகம், மல்லிகை என மலர்களின் நீண்ட பட்டியல். இவை தவிர இண்டை புனைந்து சிரமாலையும் கொள்வாராம். இந்தச் சிரமாலை மூரல் வெண்சிரமாலையாம். இவையெல்லாம் சூடிய சடைகளை மகுடமாய்ச் சுற்றிக் கட்டிவிட்ட சடையராயும் வருவதுண்டு. விரித்த சடைகள் திசைகள் பாய வீறு கொண்டும் வருவதுண்டு.

ஆடற்கலைக்கு அந்த நாட்களில் அழகு ஓர் அடிப்படைத் தகுதியாய்க் கருதப்பட்டதைச் சிலம்பு பேசும்.[34] அந்த அழகை மேலும் அழகுபடுத்திக் கொள்வது ஒப்பனையில் சேரும். மாதவி ஆடலுக்கு முன் தன்னை எப்படியெல்லாம் அழகு செய்துகொண்டாள் என்பதைக் கடலாடு காதை காட்டும்.[35] மேடைக்கு வரும் பூதநாயகரின் ஆடை, அணிகலன்கள், அவர் கைக்கருவிகள் மற்றும் திருமேனி எழில் பற்றி அப்பர் குறிக்காத இடங்கள் குறைவு.

கட்டங்கம், மழு, சூலம், தண்டு, வலிக்கோல், கொலைவேல், கங்காளம் போன்ற கருவிகளும் மான், பாம்பு போன்ற உயிரினங்களும் யாழ், வீணை, கொடுகொட்டி, கல்லலகு, பறை, துடி, தக்கை போன்ற இசைக் கருவிகளும் வாழ்க்கையின் நிலையாமையை உணர்த்தும் கனல், செத்தவர் தலைமாலை, தலையோடு போன்றவையும் சுரை, குண்டிகை,

புத்தகம் போன்ற தவம் தொடர்பான பொருட்களும் இறைவன் திருக்கைகளில் ஆடலின்போது இடம் பெறுவதுண்டு. இவற்றுள் ஒவ்வொன்றையும் பதிக அடிகளில் பலபடப் பாராட்டி அடைகள் தந்து சிறப்பிக்கிறார் அப்பர் பெருமான். வெண்மழு, கொடுமழு, வெய்யமழு என்று மழுவையும், இரும்பார்ந்த சூலம், முத்தீ அணையதோர் மூவிலை வேல், சின்மணிய மூவிலைவேல் என்று சூலத்தையும் ஐந்தலை நாகம், ஒற்றைக் கதநாகம், பொங்கும் ஆடரவு, இரை உண்டறியாப் பாம்பு என்றெல்லாம் பாம்பையும் பெருமைப்படுத்தும் அப்பரடிகள், கனல் பற்றிப் பேசும்போது மெய்சிலிர்த்துப் போகிறார். இறைவனையே தீத்திரளன் என்றழைத்தவரல்லவா! அதனாலோ என்னவோ அவர் கை நெருப்புகூடத் தீத்திரளாய், ஆரழலாய்க் காட்சி தருகிறது அப்பருக்கு.

அணிகலன்கள் இறைவனுக்குத் தனித்தன்மையனவாகவே அமைந்துவிடுகின்றன. தலையில் சூளாமணி; சுற்றிலும் முடித்தணிந்த சண்டைமகுடம். செவிகளில் ஒருபுறம் புதுவிரி பொன்செய் ஓலை; மறபுறம் நின்று புரளும் சுரிசங்கம். இந்தப் பொன் தோடு தோள்களை வருடும் அளவு பெரியதாம். காட்சிக்குக் காட்சி அணிகலன்களில் மாற்றம் வேண்டாமா? அதனால் குறைவனின் அடுத்த வருகையில் அவர் செவிகளில் சதுர் வெண் பளிங்குக் குழையும் பொறி அரவமும்; சிவந்த நெற்றியில் தலைமாலை. இரண்டு தோள்களிலும் ஒத்த வடத்து இளநாக உருத்திர பட்டங்கள். சில நேரங்களில் இவற்றுக்கு மாற்றாக வலம் சூழ்ந்த வள்ளிமண்டலமாய் அமைந்த கொடிக்கருக்குக் கங்கணங்கள் நிலாக் கதிர்போல் அந்த நீள் திண்தோளில் வெண்நூல் உண்டு. கழுத்தில் இறைவனின் பேராண்மை காட்டும் பன்றிக் கொம்பு, ஆமை, எரி அரவம். இவற்றோடு முத்து, அக்கு, பளிக்கு இவற்றாலான வடங்கள், கொன்றை, மாலை, பூவணிமாலை. இவையில்லாமல் பட்டவர் அங்கமும், மாண்டார் எலும்புகளும் கழுத்தணிகளாகி இறைவனின் மயான விளையாட்டுக்கு முகவுரை எழுதும். கைகளில் நாக வளைகள், இடுப்பில் கடிசூத்திரம்; அதன்மேல் கபாலவடம்; சில நேரங்களில் பாம்புப் பின்னல், இது ஒரு தலை நாகமாகவும் அமையும். ஐந்து தலைகள் கொண்டு சீற்றத்தோடு படம் விரித்துச் சினம் கொப்பளிக்கப் பொங்கும் ஆடரவமாகவும் அமையும்.

திருக்கால்களில் பாதம் நெருங்கும் முன்பே கணுக்கால் கட்டாய் வீரக் கழல்கள். பாதங்களின் மேல் படர்ந்தனவாய்ச் சிலம்பு, செறிபாடகம், செழுங்கிண்கிணித்திரள். இத்தனை நகைகளும், இதற்கு மேலாய் இதழ்களில் இளநகையும் கொண்ட எம்பெருமான் ஒப்பனைப் பூச்சும் கொள்கிறார். புன்புலால் நாறு காட்டின் பொடிதான் மேனியெங்கும் பூச்சாய்ப் புதுமணம் தந்து பரவி நிற்கிறது. வெந்த இவ்வெண்பொடியும் சுடுநீறும் பூசிய பின்பு, சிறிது சுடலைசேர் சுண்ணமும், ஆங்காங்கே சந்தனச் சாந்தும் கொள்வார்.

பொடி பூசி நகையணிந்த மாலைகள் புரளும் அந்தத் திருமார்பில் அம்மையின் கொங்கை இணை அமர்பொருது கோலம்

கொண்ட தழும்பும் காட்சியாம். அன்பில் விளைந்த அந்த ஆனந்தத் தழும்பின் பின் காஞ்சிப்புராணக் கதையொன்று வளர்ந்து, திருச்சத்திமுற்றம் வரை படர்ந்து, அங்கே அழகியதோர் தழுவல் சிற்பம் அமைந்திடக் காரணமாயிற்று.[36] லிங்கமேனியை ஆரத் தழுவிய அன்னையின் கண்களில் அளவற்ற அன்பும் இலேசாய் அச்சமும், லிங்கத்தில் அழுந்திப் பக்கங்களில் தளரும் எழிலார்ந்த மார்பகங்களில் இயல்பான படப்பிடிப்பு என அமைந்திருக்கும் இந்தத் தழுவல் குழைவைப் பார்க்கக் கண்கோடி வேண்டும். அப்பர் தவப்பேறு செய்தவர்.

காட்சிக்குக் காட்சி மாறும் ஆடைகள் பார்வைகளைப் பரவசப்படுத்தும். புலித்தோல் வீக்கி,. ருத்திராக்க அரையணியை அதன்மேல்பெய்து ஆணழகராய் இறைவன் வருவது ஒரு காட்சி. உமாவை அச்சுறுத்தி உரித்தெடுத்த யானைத் தோலைப் போர்வையாய்ப் போர்த்து நாகக் கச்சையுடன் நடமாடி வருவார் சில நேரம். கருமானின் உரி, புள்ளியுழைத்தோல், பட்டாடை, அரவத்துகில், வண்ணஉரிவை என்று இன்னபிற ஆடைகளும் உண்டு. இவையில்லாமல் துகில் கிழிக் கோவணக் கீள் மட்டுமே பூண்டு வருவதும் உண்டு. இந்தக் கீள்தானே அமர்நீதி நாயனாரை அடையாளம் காட்டி அமரர் உலகுக்கு அழைத்துச் சென்றது.[37]

கீளும் இல்லாமல் நிர்வாணியாய் வருபவரை நக்கன் என்கிறார்கள் திருமுறை ஆசிரியர்கள். ‘சொக்கமது ஆடியும் பாடியும் பாரிடம் சூழ்தரும் நக்கர்’ என்ற சம்பந்தரின் அடிக்கேற்ப இறைவன் நக்கராய் நின்று ஆடும் கோலத்தில் மேலைக் கடம்பூர் அமிர்தகடேசுவரர் திருக்கோயிலில் ஒரு செப்புத் திருமேனி இருக்கிறது. பாலா மரபுப் படிமமான இதில் இறைவன் யோகியாகவும், போகியாகவும் ஒரே நேரத்தில் காட்சி தருகிறார்.[38]

பொன் போன்ற மேனி, தூண்டு சுடர்போலத் திருமேனி, சொக்கணைந்த சுடரொளி என்றெல்லாம் பதிக அடிகள் கொண்டாடும் இந்தப் பரஞ்சுடரின் சிவந்த மேனியில் கண்டம் மட்டும் நஞ்சிருளாய். இந்தச் சுந்தரவடிவம் அம்மையப்பராகவும் சங்கர நாராயணராகவும் கூட வருவதுண்டு. ஆனால் சங்கர நாராயணர் கோலத்தில் ஆடல் இல்லை. மூவர் உருவில் சாலவுமாகி, சமயங்கள் ஆறின் உருவமுமாகியும் வரும் இறைவன் ஆடல் கொள்ளும்போது தாமாய் மட்டுமே நட்டமிடுவார். தம் துணையின் துணையுடனும் தம்மில் பாதியைத் துணைக்குத் தந்தும் கூட ஆடல் செய்வார்.

ஆடல்

ஆகார்ய அவிநயத்தின் அத்துணைப் புலங்களையும் முழுமையாய்க் கொண்ட இறைவன் ஆடரங்கிற்குள் நுழைந்து பூர்வரங்கமாய்க் கரணங்கள் காட்டுகிறார். இதைத் தான் தாண்டவ லட்சணமென்று பரதரும், சொக்கம் பயின்றீர் என்று அப்பரும்

குறிக்கிறார்கள். இங்கேதான் ஆங்கிகா அவிநயத்தின் முதற்படி மலரத் தொடங்குகிறது. வட்டணைகளிட்டு வரும்போதே ஆடலுக்குத் தயாராகிவிடும் உடற்கட்டு, பூர்வரங்கத்தில் அழகான அசைவுகளிட்டுக் கரணஞ் செய்கையில் இறுக்கம் நீங்கி எந்த இயக்கத்திற்கும் இசைந்து கொடுக்கிறது. ஆடற்கைகள் கரணங்களின் ஓரங்கம். இந்தக் கைகளின் அசைவுகளுக்குப் பொருளில்லை. ஆனால் அழகுண்டு. ஆடலின் அடிப்படையே அழகுணர்ச்சிதானே. அதில் தொடங்கிப் பின் தொடர்பவை தானே கருத்து, பாடம், படிப்பினை எல்லாம்.

இறைவன் தோள்கள் மட்டித்தாட கழலாடு திருவிரலால் கரணம் செய்து மாநடம் தொடங்கியதாய் அப்பர் குறிக்கிறார்.[39] எழிலாரும் தோள்வீசி நடமாடிய இறைவன் மணிதிகழும் அம்பலத்தே மன்னிக் கூத்தாடியதாகவும் சொல்கிறார்.[40] குண்டைப் பூதம் கொடுகொட்டி கொட்டிக் குனிந்துப் பாட, இறைவன் திண்தோள்கள் ஆயிரமும் வீசி நின்று, திசை சேரநடமாடி, அவனி தலம் பெயர நின்ற நிறைவுடையராய்க் காட்சி தருகிறார்.[41]

சுற்றி நின்ற பூதங்களும் பேய்களும் இசை முழக்கில் தமை மறந்து இறைவனைச் சூழநின்று ஆர்த்து மிக மகிழ்ந்து ஆடத் தொடங்குகின்றன. ஆடல் பிச்சாடலாகின்றது.[42] பாதம் நோவ இட்டெடுத்துச்[43] சதுரநடம் காட்டுகின்றார்[44] சங்குக் குழையர். குடமுழவச் சதிவழியே கூத்தாடும் இறைவனின்[45] பெருமையைப் ‘பூதகணம் ஆட ஆடும் சொக்கர்[46] எண்டோள் வீசி அருந்திறல் மாநடம் ஆடும் அம்மான்’[47] என்னும் அடிகளில் மகிழ்வோடு பதிவு செய்கிறார் அப்பர் பெருமான். கொட்டும் முழவுகள் கொட்டி நின்று லயங்கள் ஆடிக் களித்தவர்கள் படுதம் பெயர்ந்தாடினர்[48] இந்தப் படுதக்கூத்தைச் சம்பந்தரும் குறிக்கிறார்.[49]

கால் அதிர் கழல்கள் ஆர்ப்பக் கனல் எரி கையில் வீசி, ஞாலம் குழிய நின்று மேலவர் முகடு தோய, விரிசடை திசைகள் பாய, ஆயிரம் தோளும் மட்டித்தாடி, ஆயிரம் அடியும் வைத்த பெருமான் ஆடிய ஆடலைச் செய்தற்கரிய திருநட்டமாய்க் குறிக்கும் அப்பர், அத்தகு அரிய ‘திருநடம் செய்த கால்களை ஆடிய பொழுதோடு சேர்த்து அந்தி நாடகக்கால்’[50] என்று சிறப்பிக்கிறார். நாடகம் என்ற சொல் தொல்காப்பியர் காலத்தில் இருந்ததைப் போலவே அப்பரின் காலத்தும் ஆடலைக் குறிக்கும் பொதுச் சொல்லாகப் பயின்றுவந்தது இதனால் உணரப்படும்.

ஆங்கிகத்துள் ஒன்றான கால்நிலைகள் பற்றித் திருமுறை ஆசிரியர்கள் ஆங்காங்கே குறிப்பு காட்டுகிறார்கள். அந்தக் கால்நிலைகளுள் ஒன்றான எடுத்த பாதம் அப்பரால் பலபடப் பாராட்டப்பட்டுள்ளது. ‘சிற்றம்பலத்து நட்டம் ஆட எடுத்திட்ட பாதமன்றோ நம்மை ஆட்கொண்டதே’[51] என்று அப்பர் மனமுருகும் நேரம், அதை அண்டம் உற வீசிய காலாகக் காண்பார்

காரைக்காலம்மையார்.[52] அம்மை பாடியது விஷ்ணு கிராந்தம். அப்பர் பாடியது புஜங்கத்ராசிதமா, ஊர்த்வ ஜானுவா? மண்ணை நீங்கும் பாதம் விண் சார்ந்த கால்நிலைகளுள் ஒன்றாய் ஆங்கிகா அவிநயத்துள் அடங்கிப் போகும். அந்த எடுத்த பாதம் வீசப்பட்டால் புஜங்கத்ராசிதம்; உயர்த்தப்பட்டால் ஊர்த்வ ஜானு. அப்பரின் காலத்தே புஜங்கத்ராசிதமே இருந்திருக்க வேண்டும். ஏனென்றால் இறைவனாடிய புயங்கராக மாநடத்தைச் சம்பந்தரின் அடிகள் பதிவு செய்துள்ளன.[53] பாடலில் மட்டுமல்லாது சிற்புமாகவும் கிடைப்பது புஜங்கத்ராசிதம்தான். தொடக்கப் பல்லவர்காலக் கோயில்கள் எதிலும் இறைவனின் ஊர்த்வ ஜானு இல்லை. அதே காலக் கட்டத்தில் எழுந்த பாண்டியர், முத்தரையர் குடைவரைகளிலும் ஊர்த்வ ஜானுவில் சிவபெருமானைப் பார்க்க முடிவதில்லை. கலை வரலாற்றில் ஊர்த்வ ஜானுவின் முதற்பதிவு ராஜசிம்மப் பல்லவர் காலத்தில்தான் நிகழ்கிறது. அதனால் அப்பர் பாடியது ஆனந்தத் தாண்டவமாய்ப் பின்னாளில் மலர்ந்த புஜங்கத்ராசிதத்தையே என்று உறுதி கொள்ளலாம். சகளாதிகாரமும் இந்தத் துணிவுக்குத் துணையாகும்.

பாடல்

ஆகார்யமும், ஆங்கிகத்தில் சிலவும் கொண்ட சொக்கம், வாசிக அவிநயம் சேரும்போது ஆங்கிகத்தின் முழுமையுமேற்று நிருத்தமாகும். இதே அப்பரே அடிக்கோடிட்டு எழுதுகிறார்.

இரிக்கும் பறையொடு பூதங்கள் பாடக் கழுமலவன்
நிருத்தம் பழம்படி ஆடும்[54]

அப்பரின் இந்த அடிகள் ஆடற்கலை வரலாற்றின் வைரவரிகளாம். அவர் காலத்தில் நிருத்தம் சில மாறுதல்களை ஏற்றுப் புதிய வடிவம் கொண்டதாலேயே இறைவன் ஆடிய நிருத்தத்தை அப்பர் பழம்படியுள் சேர்த்தார். கோலம் பல அணிந்து குழகனார் ஆடிய இந்த நிருத்தத்திற்குத்தான் எத்தனைபேர் பாடியுள்ளனர்!

'பாடும் பறண்டையும் ஆந்தையும் ஆர்ப்ப'[55]

'......................... பாரிடம் பலவும் கூடிக்
குடமுடை முழவமார்ப்பக் கூளிகள் பாட நாளும்
நடுநவில் அடிகள் போலும்'[56]

'பக்கம் பூதங்கள் பாட'[57]

'பூதம் பாடநின் றாடும் புனிதனார்'[58]

'முகைவளர் கோதைமாதர் முனிபாடுமாறும்
எரியாடுமாறும் இவர்கைப்
பகைவளர்நாகம் வீசி மதிமயங்குமாறும்'[59]

'அங்கை ஆரழல் ஏந்திநின் றாடலவன்
மங்கை பாட'[61]

'பாலை யாழொடு செவ்வழி பண்கொள'[61]

'பேய்பாட நடமாடும் பித்தன்'[62]

'...கூளி பாடக்
குறட்பூதம் கூத்தாட நீயும் ஆடி'[63]

'புடை சூழ்ந்த பூதங்கள் வேதம் பாடப்
புலியூர்ச் சிற்றம்பலத்தே நடமாடுவார்'[64]

'கிளரும் பேரிசைக் கின்னரம் பாட்டறா'[65]

பறண்டை, ஆந்தை, பூதம், பேய், கூளி, கின்னரங்கள் பாட ஆடியவர் உமை பாடவும் ஆடினார். அம்மை முனிபாட அத்தன் எரியேந்தி ஆடச் செவ்வழி, கொல்லி, காமரம், பஞ்சமம் என்று பண்களின் வரிசைகளையும் தருகிறார் அப்பர். பிறர் பாட ஆடிய பெம்மான் தாமே பாடியும் அதற்கேற்ப இசைக்கருவிகளைக் கூடத் தாமே இயக்கியும் ஆடுகின்ற அழகையும் அப்பர் பாடல்களில் பார்க்க முடிகிறது.

'.. உகப்பார் காணப்
பண்ணாரப் பல்லியம் பாடி னான்காண்'[66]

'கொடுகொட்டி தாளம் உடையார் போலும்'[67]

'குழையாடக் கொடுகொட்டி கொட்டாவந்து'[68]

'கொடுகொட்டி கொண்டதோர் கையான்தன்னை'[69]

'கல்லலகு பாணி பயின்றார் போலும்'[70]

'பண்ணார்ந்த வீணை பயின்றான் தன்னை'[71]

'பண்மேலே பாவித் திருந்தாய் போற்றி
பண்ணொடியாழ் வீணை பயின்றாய் போற்றி'[72]

'சாமத்தின் இசைவீணை தடவிக் கொண்டார்'[73]

இறைவனே பண்ணாகவும் பண்ணின் திறமாகவும் இருப்பதாகக் கூறும் அப்பரடிகள் அவர் காலத்தே இருந்த இசைநூலின் பெயரொன்றையும் தருவதோடு அவ் இசையிலக்கண நூல் இறைவன் இயற்றியது என்பது போல் குறிப்பும் காட்டுகிறார்.

'பரமாணு வாய்ப்பழுத்த பண்கள் ஆகி'[74]

'கந்திருவ பாட்டிசையிற் காட்டுகின்ற
பண்ணவன்காண் பண்ணவற்றின் திறலா னான்காண்'[75]

எண்ணிறந்த பண்கள் இருந்தபோதும் இறைவன் விருப்பமாய்ப் பாடியது காமரம். அவர் திரிதரும் நேரம்கூடக் காமரமே பாடியதாய்ப்[76] பேசும் அப்பர் இறைவன் வண்ணங்களும் பாடிவந்து நின்றதாகக் குறிக்கிறார்.[77]

பாடியும், பாடலுக்கேற்பக் கருவிகளை இயக்கியும், அந்த இசையொலிக்கு ஆடியும் மகிழும் இறைவனை ஞானக்கூத்தனாய்க் காண்கிறார் அப்பர். பெருமான் ஆடும் கூத்து அரங்கிடை நூலறிவாளரால் அறியப்படாத ஒரு கூத்தென்கிறார்.[78] இந்தக் கூத்தை மாநடம், பெருநடம் என்றெல்லாம் போற்றுபவர் இது காளி காண ஆடிய பெருங்கூத்தென்று சில இடங்களில் பேசி மகிழ்கிறார்.[79]

ஆகார்ய, ஆங்கிக, வாசிக அவிநயங்கள் கலந்து ஆடும் இறையாடலைக் காளி மட்டுமா கண்டவர்? மானேர் நோக்கி வாள்முகத்தாள் காம்பாடு தோள் உமையன்னை அமர்ந்து கண்டார். அலையார் புனல் கங்கை நங்கையும் கண்டாள். அமரர் கணம் உட்படப் பதினெண்கணமும் கண்டன. பாரோரும் விண்ணோரும் பார்த்தனர். அப்பரும் பார்த்தார். 'நிருத்தம் நான் காண வேண்டி நிருத்தனார் நிருத்தம் செய்ய' என்ற அடிகள் இதை உறுதிப்படுத்தும்[80].

சாத்விகம்

அவிநயம் நான்கனுள் அற்புதமானது சாத்விகம். இதைச் சத்துவம் என்பார் அடியார்க்கு நல்லார்.[81] ஆடும் ஆடலில் ஆடற்கலைஞர் தோய்ந்து போகக் காண்பவர் யாவரும் அதுவேயாகி மாறிப்போவது சாத்விகம். ஆடுபவர் இறைவன். எது நோக்கி ஆடுகிறாரோ அந்த நோக்கத்தின் தோய்வில்லாமலா ஆடல் அமையும்? அதனால்தானே அப்பரும் சிற்றம்பலத்துக் கூத்தனில் கூத்து வல்லார் உளரோ என்று அறைகூவல் விடுக்கிறார். ஆடியவர் ஆடலில் இருந்த சாத்விகம் அதைக் கண்டவர் மாட்டு எழுந்ததா?

குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயில் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே[82]

என்ற நிலையில் அல்லவா பார்த்தவர் மயக்கம் பாடலாய் மலர்கிறது. இறைவனின் பாடலையும் அவர் ஆடலையும் கேட்டும் பார்த்தும் நின்றவர்கள் தம்மை மறந்து தாமும் பாடியாடியதைக் 'கின்னரர்கள் பக்தர்கள் பாடியாட'[83] என்னும் பதிக அடியில் பதிவு செய்கிறார் அப்பர் பெருமான். உமையின் ஊடலை ஒழிக்க வேண்டிச் சாமவேதம் பாடிப்பின் பாடிய பாணியால் ஆடிய[84] இந்த அழகரின் ஆடலில் தோய்ந்துருகிப் போன தோகையர் சிலர், அவர் உமையிடம் காட்டிய காதலைத் தம்மிடம் கொண்டாற் போலுணர்ந்து கசிந்துருகியதை,

'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்' என்று சொல்லத் தொடங்கிப் பல்வேறு அகச்சுவைப் பாடல்களால் அப்பெண்களின் அவத்தைகளை விளக்கிப் 'பேர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்' என்று முடித்து வைக்கும் அப்பரின் பதிகங்கள் காட்டும் சாத்விக அவிநய எதிரொலிகளை வேறெந்தத் திருமுறையிலும் காணமுடியாது.

காணும்போது மட்டுமல்லாது கண்ட காட்சிகளை நினைக்கும் போதே மெய்சிலிர்க்க வைத்து, நீர்மல்க வைத்து, நெஞ்சுருக வைக்கும் ஆடலாய் இறையாடல் அமைந்துவிடுகிறது. அதனால்தானே,

'உயிரா வணமிருந் துற்று நோக்கி
உள்ளக் கிழியின் உருவெழுதி
உயிரா வணம் செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப்படுவாரோ டொட்டி வாழ்தி'[85]

'நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையாதொரு போதும் இருந்தறியேன்'[86]

என்றெல்லாம் அப்பரடிகளால் பாட முடிந்தது. இறையாடலில், ஆட எடுத்த அந்தத் திருப்பாதத்தில் எந்த அளவிற்கு அவர் தம்மை இழந்திருந்தால் திருவையாற்றுக்கு வரும்போது,

'வட்டமிட்டு ஆடாவருவேன்
முரித்த வியலங்கள் இட்டு முகமலர்ந்து ஆடா வருவேன்'[87]

'பாடியும் ஆடா வருவேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்'[88]

என்றெல்லாம் பாடி நெக்குருகியிருப்பார். இது சத்துவமில்லாமல் வேறென்ன?

நாட்டிய சாத்திரம் காட்டும் அவிநயத்தின் நான்கு முகங்களைப் போல அவிநயக் களங்களாய் நான்கைச் சிலம்பின் உரை சுட்டுகிறது. இவற்றுள் நிற்றல், இயங்கல் என்னும் இருகளத்தும் இறைவன் ஆடி அவிநயித்ததை நின்றாடியதாகவும், சுழன்றாடியதாகவும் அப்பர் குறிப்பார். இருத்தல், கிடத்தல் நிலைகளில் இறைவனுக்கு ஆடலோ அவிநயமோ ஆறு திருமுறைகளில் எந்தவொரு பதிகத்திலும் பதிவாகவில்லை. அம்மையும் இவ்விருநிலை குறித்துப் பேசவில்லை. ஆனால் இருத்தல் நிலையில், இறைவன் அவிநயத்தின் சில கூறுகள் காட்டிச் சொக்கம் ஆடியதைப் பல்லவச் சிற்பிகள் சிற்பங்களாய்க் காட்டியுள்ளனர். அத்யந்தகாமர் கற்றளிகள் அனைத்திலும் இந்த இருத்தல் களம்காட்டும் குஞ்சிதக் கரணச் சிற்பங்கள் தவறாது இடம்பெற்றுள்ளன. கிடத்தல் நிலையில் இறையாடல் காட்டும் சிற்பம் எதுவும் இதுவரை கிடைக்கவில்லையெனினும் அக்களத்தும் இறைவன் சொக்கம் ஆடியதாகத் தண்டுவழி அறிகிறோம்.[89]

குறிப்புகள்

1. இரா. கலைக்கோவன், அப்பர் பாடிய ஆறை வடதளி, கலை வளர்த்த திருக்கோயில்கள், கழக வெளியீடு, சென்னை - 600 018, 1984, பக். 9-26.
2. நான்காம் திருமுறை, தருமபுர ஆதீனப்பதிப்பு, 1957, ப. 687.
3. வீ.ப.கா. சுந்தரம், பஞ்சமரபு, கழக வெளியீடு, 1991, ப. 40.
4. மேற்படி. பக் 385-403.
5. கூத்த நூல், ச.து.சு. யோகியார் உரை, ச.து.சு. யோகியார் வெளியீடு, 1968, ப. 149.
6. மேற்படி. ப. 149
7. மேற்படி. ப. 150
8. மேற்படி. ப. 157
9. மேற்படி. ப. 317
10. குறுந்தொகை, உ.வே.சா. பதிப்பு, 1937, பாடல் எண். 105.
11. சிலப்பதிகாரம், தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்பு, தஞ்சாவூர், 1985, ப. 361. அடி. 152.
12. மேற்படி. பக். 361, 378-379.
13. மேற்படி. ப. 80
14. மேற்படி. ப. 80
15. மேற்படி. ப. 191
16. மேற்படி. பக். 57, 60, 79.
17. மேற்படி. ப. 83
18. மணிமேகலை, உ.வே.சா. வெளியீடு, 1931, ப. 209, அடி 79.
19. Natyasastra, English Translation with critical notes by Adya Rangacharya, IBH Prakashna, Bangalore 560 009, 1986, p. 53.
20. Ibid. p. 53
21. பத்மா சுப்ரமணியம், பரதக் கலை (கோட்பாடு), வானதி பதிப்பகம், சென்னை - 600 017, 1985, ப. 118.
22. கார்த்திகா கணேசர், காலந்தோறும் நாட்டியக் கலை, கார்த்திகா ஆடற்கலையக வெளியீடு, 1979, ப. 66.
23. மேற்படி. ப. 66
24. பத்மா சுப்ரமணியம், பரதக் கலை (கோட்பாடு), 1985, ப. 136
25. பதினோராம் திருமுறை, சைவ சித்தாந்தப் பெருமன்றப் பதிப்பு, சென்னை-600004, 1990, ப. 5.
26. நான்காம் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1957, ப. 636.
27. மேற்படி, ப. 194.
28. ஆறாம் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1963, ப. 715.
29. நான்காம் திருமுறை, ப. 26.
30. ஆறாம் திருமுறை, ப. 714
31. மேற்படி, ப. 718
32. மதுரைத் தமிழ்ப் பேரகராதி, இ.மா.கோபாலகிருஷ்ணக்கோன் வெளியீடு, இரண்டாம் பாகம், ப. 466
33. பஞ்சமரபு, ப. 381
34. சிலப்பதிகாரம், ப. 57, அடி 8
35. மேற்படி, ப. 177-180
36. இரா. கலைக்கோவன், தழுவக் குழைந்த இறைவனும், தவமிருந்த தேவியும், கலை வளர்த்த திருக்கோயில்கள், பக். 27-34.
37. இரா. கலைக்கோவன், பூவார் அடிச் சுவடு - கட்டுரை, கலைமகள், திங்கள் இதழ், சனவரி 1985, சென்னை 600 004.
38. இரா. கலைக்கோவன், பாலா நடராசர், அமுதசுரபி, தீபாவளி மலர், 1984, சென்னை - 600 001, பக். 291-294.
39. ஆறாம் திருமுறை, ப 31

40. மேற்படி, ப. 247
41. மேற்படி, பக். 309, 325
42. மேற்படி, பக். 362, 396
43. மேற்படி, ப. 422
44. மேற்படி, ப. 552
45. மேற்படி, ப. 606 நந்தீசரின் குடமுழவச் சதிகட்கு இறைவன் திருநடம் செய்யும் அரிய சிற்பக் காட்சியைத் திருச்சென்னம்பூண்டி திருச்சடைமுடி மகாதேவர் திருக்கோயில் முகமண்டபத்தின் வடசுவர் வேதி பாதத்தில் பார்க்கலாம். இவ்வாடல் சிற்பம் முனைவர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தால் அடையாளம் காணப்பட்டு வெளிப்படுத்தப்பட்டது.
46. ஆறாம் திருமுறை, ப. 634
47. மேற்படி, ப. 612
48. ஐந்தாம் திருமுறை, தருமபுர ஆதீனப் பதிப்பு, 1961, ப. 105.
49. இரா. கலைக்கோவன், முதல் திருமுறையில் ஆடற்குறிப்புகள், வரலாறு-1, முனைவர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மைய வெளியீடு, திருச்சிராப்பள்ளி - 620 017, ப. 90
50. நான்காம் திருமுறை, ப. 686
51. மேற்படி, ப. 564
52. பதினோராம் திருமுறை, ப. 33
53. முதல் திருமுறை, தருமபுர ஆதீனப் பதிப்பு, 1953, ப. 250.
54. நான்காம் திருமுறை, ப. 568
55. மேற்படி, ப. 636
56. மேற்படி, ப. 451
57. ஐந்தாம் திருமுறை, ப. 184
58. மேற்படி. ப. 94
59. நான்காம் திருமுறை, ப. 73
60. ஐந்தாம் திருமுறை, ப. 124
61. மேற்படி, ப. 82
62. ஆறாம் திருமுறை, ப. 537
63. மேற்படி, ப. 453
64. மேற்படி, ப. 369
65. நான்காம் திருமுறை, ப. 120
66. ஆறாம் திருமுறை, ப. 65
67. மேற்படி, ப. 74
68. மேற்படி, ப. 72
69. மேற்படி, ப. 218
70. மேற்படி, ப. 160
71. மேற்படி, ப. 314
72. மேற்படி, ப. 415
73. மேற்படி, ப. 717
74. மேற்படி, ப. 198
75. மேற்படி, ப. 374
76. மேற்படி, ப. 211
77. மேற்படி, ப. 67
78. நான்காம் திருமுறை, ப. 24
79. மேற்படி, ப. 465
80. மேற்படி, ப. 193, 196
81. சிலப்பதிகாரம், ப. 84
82 நான்காம் திருமுறை, ப. 557
83. மேற்படி, ப. 258
84. மேற்படி, ப. 222
85. ஆறாம் திருமுறை, ப. 186
86. நான்காம் திருமுறை, ப. 9
87. மேற்படி, ப. 30
88. மேற்படி, ப. 33
89. இரா. கலைக்கோவன், புதிய பார்வையில் சார்ங்கபாணி கோயிற்கரணங்கள், மகாமகம் மலர், 1992.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை – 600 113

அண்மை வெளியீடுகள்

தமிழின் பா வடிவங்கள்	35. 00
சங்க இலக்கியம் – கவிதையியல் நோக்கு	110. 00
நாடக மேடை நினைவுகள்	160. 00
சின்னணைஞ்சான் கதை	65. 00
தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள்	110. 00
நன்னூல் மூலமும் கூழங்கைத்தம்பிரான் உரையும்	65. 00
யாப்பருங்கலம்	170. 00
மண்டல புருடர் வழங்கிய சூடாமணி நிகண்டு	65. 00
தமிழ் நாடகமேடை முன்னோடிகள்	40. 00
காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில் – ஓர் ஆய்வு	60. 00
திருக்குற்றாலநாத சுவாமி கோயில் வரலாறும் பண்பாடும்	60. 00
வெள்ளுடை வேந்தர் தியாகராயரின் வாழ்வும் பணியும்	65. 00
தமிழ்நாட்டு வரலாற்றில் இலக்கிய ஆதாரங்கள்	100. 00
இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள், தொகுதி – 1	100. 00
கதிர்வேற்பிள்ளை – தமிழ்ச் சொல்லகராதி, மூன்று பாகங்கள்	600. 00
சங்க இலக்கியத்தில் கலையும் கலைக்கோட்பாடும்	65. 00
சதாசிவப் பண்டாரத்தார் ஆய்வுக் கட்டுரைகள்	40. 00
பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள், தொகுதி–1	50. 00
பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள், தொகுதி–2	40. 00
நாட்டிய நன்னூல்	25. 00
கன்னடத்தில் காரைக்காலம்மையார் வரலாறு	20. 00
கபிலர்	70. 00
சங்கத் தமிழர் வாழ்வியல்	75. 00
வேதகிரியார் சூடாமணி நிகண்டு	65. 00
தமிழக மேடை நாடகப் பெண் கலைஞர்கள் – குறிப்பேடு	25. 00
Studies in Tamil Prosody and Poetics	45. 00
Persona in Tolkapiyam	50. 00
A Grammar of Contemporary Literary Tamil	80. 00
Cilappatikaram (மொ.நூ.ம.ப)	100. 00
Tani pacura togai (மொ.நூ.ம.ப)	30. 00
Dedication (மொ.நூ.ம.ப)	25. 00
Temple chimes (மொ.நூ.ம.ப)	20. 00
Nala venba (மொ.நூ.ம.ப)	45. 00
Tamil Heroic Poems (மொ.நூ.ம.ப)	40. 00
Six Long Poems From Sangam Tamil (மொ.நூ.ம.ப)	30. 00
Kurinci-p-pattu-Muttollayiram (மொ.நூ.ம.ப)	40. 00